1461

1259

Introduction into the Holy Ministry
by
GUSTAVUS JENSEN.

9 MAR 1932

குஸ்தாவு ஜென்சன் ஐயர்

எழுதிய

# மேய்ப்பர் கண்ணாடி

கனம். D. பேக்சல் அத்தியட்சரின் அனுமதியால்
தமிழ்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது.

Printed at the Ev. Luth. Mission Press,
Tranquebar
for the E. L. M. Publishing House, Tranquebar.

Price 7 as. 1932 விலை 7 அ.

Cat. No. 248. 1000 Copies.

Q6
N32
184824

8 MAR 1932

**Introduction into the Holy Ministry**

by

GUSTAVUS JENSEN.

8 MAR 1932

நார்வே தேசத்து கிறிஸ்தியானியா
பட்டணத்தில் போதகரும் வேதசாஸ்திர
பண்டிதருமாயிருந்த

## குஸ்தாவு ஜென்சன் ஐயர்

எழுதிய

# மேய்ப்பர் கண்ணாடி

கனம். D. பெக்சல் அத்தியட்சரின் அனுமதியால்
தமிழ்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது.

Printed at the Ev. Luth. Mission Press, Tranquebar
**for the E. L. M. Publishing House, Tranquebar.**

Price 7 As. 1932 விலை 7 அ.

Cat. No. 248. 1000 Copies.

184824
சென்னை-600 008

Q6
N32

8 MAR 1932

# முகவுரை.

"மேய்ப்பர் கண்ணாடி" எனத் தமிழில் பெயர் வாய்ந்த இப்புத்தகத்தின் ஆக்கியோன் ஜி. ஜென்சன் (G. Jensen) என்னும் போதகர். இவர் கிறிஸ்தியானியா (Christiania) நகரின் கிறிஸ்து தொண்டருள் பிரதம ஸ்தானம் வகித்தவரும் (Dean) அந்நகர சர்வகலாசாலையின் வேதசாஸ்திரப் பகுதியில் வேதபோதகசாதனை சாஸ்திரப் பண்டிதருமாயிருந்தவர். இப்புத்தகம் நார்வே (Norway) தேச பாஷையில் எழுதப்பட்டு, "குருவுக்குரிய ஊழியம்" (Introduction into the Holy Ministry) என்னும் பெயர் பெற்று, ஐரோப்பாக் கண்டத்தின் பல பாஷைகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு, வேத சாஸ்திர மாணவரின் பாடப்புத்தகங்களில் ஒன்றாக (Text-Book) ஸ்தானம் பெற்றுள்ளது. இந்நூல் நம்மைத் திருத்தொண்டின் தூய பரிசுத்த ஸ்தலத்தினுள் அமைத்து, அதன் இன்றியமையா ஞானஜீவ மேம்பாட்டை வெளிப்படுத்துகிறது. ஜென்சன் போதகர் மரித்தும் தமது மாணவருக்குக் கிறிஸ்துவுக்குள் தகப்பனாயிருப்பதுடன் இந்நூல் வாயால் இன்னமும் பேசி அவர்களை ஜெபம், தியானம், தற்சோதனை வழியால் ஞானஜீவனில் வளர்த்துவருகிறார். ஆதலின் மேய்ப்பர் கண்ணாடி என்னும் இந்நூலால் போதகர் எவரும், அனுபோகம் அற்றவரும் உற்றவரும்கூட, ஆசீர்வாதம் பெறுவர் என்பது திண்ணம்.

என் பழைய நண்பரும், உடன் ஊழியரும், தற்போது தன் ஜெனன தேசமாகிய எஸ்த்லாண்டில் (Esthland) இருப்பவருமான ஆர். ஒப்மன் ஐயர் (Rev. R. Hoffmann) இப்புத்தகத்தை முதலில் தமிழ்பாஷையில் திருப்பும் சிரமம் ஏற்றார். அவ்வேலையில் சங். S. ஞானாச்சரியம், சங். S. ஞானமாணிக்கம் ஐயர்மார் தொடர்ந்து உதவினர். தரங்கம்பாடியிலுள்ள சில சிநேகிதர் எழுத்துப்பிரதியையும், அச்சுப்பிரதியையும் திருத்தினர். தற்போது சென்னையிலிருக்கும் சிறப்பு வாய்ந்த ஸ்ரீமான் **டேவிட் அதிர்ஷ்டம் எம்.ஏ., பி.எல்.** என்பவரின் பரோபகார பொருளுதவியால் அச்சிடப்பட்டுள்ளது.

தமிழில் வாய்ந்த இப்புத்தகமும் தேவநாமமகிமைக்கும் திருத்தொண்டின் ஆசீர்வாதத்துக்கும் ஏதுவாக! 1 கொரி. 4, 1. 2.

Trichinopoly,
March 1932.

D. BEXELL
அத்தியட்சர்.

# ஜெபம்.

ஆண்டவராகிய கடவுளே, பரலோகத்திலுள்ள அருமையான பிதாவே, உம்முடைய மகிமையைப் பிரசங்கிக்கவும் உம்முடைய சபையை விசாரிக்கவும் நான் தகுதியான ஊழியனல்ல. ஆயினும் நீர் என்னை மேய்ப்பனும் வசனத்தைப் போதிக்கிறவனுமாக வைத்திருக்கிறபடியாலும் ஜனங்களுக்குச் சத்திய போதனை அத்தியாவசியமானபடியாலும் நீர் உமது பரிசுத்த தூதர்களை என்னிடம் இருக்கச்செய்து எனக்கு ஒத்தாசை புரிந்தருளும். என்னுடைய கீர்த்திக்கென்றுமல்ல, மனுஷர் கீர்த்திக்கென்றுமல்ல, உமது மகிமைக்கென்றே நீர் என் வேலையை வாய்க்கப்பண்ணப்பிரிய சித்தமாயிருந்தால், நான் உம்முடைய வார்த்தையைச் சரியாய் அறிந்துகொள்ளவும் முக்கியமாய் அதின்படி செய்யவும் உமது சுத்த கிருபையாலும் இரக்கத்தாலும் எனக்கு உதவி செய்யும். இயேசு கிறிஸ்துவே, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனே, எங்கள் ஆத்மாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரே, என்னோடு வேலையை நடப்பிக்கவும் உமது தெய்வீக வல்லமையினால் எனக்குள் "மனதையும் செய்கையையும் உண்டாக்கவும்" உமது பரிசுத்த ஆவியை எனக்குத் தந்தருளும். ஆமேன் (Luther).

# 1. தேவ ஊழியம் ஆண்டவர் ஏற்படுத்தியது.

**1.** *அப்போது இயேசு சேர்ந்து, அவர்களுடனே பேசிச் சொன்னதாவது: வானத்திலும் பூமியிலும் எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் போய், சகல சாதிகளையுஞ் சீஷராக்க, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கற்பித்தெல்லாவற்றையுங் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள். இதோ, நான் லோக முடிவுமட்டாகச் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமேன்.* மத். 28, 18–20.

---

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, தேவரீர் துவக்கம் முதல் உமக்கென்று ஊழியரை அழைத்து, எல்லா ஜாதிகளையும் உமது சீஷராக்கும்படி அனுப்பி, இந்நாள் வரைக்கும் ஓயாமல் கிரியை செய்து வருகிறீர்! ஆண்டவரே, திருச்சபையின் எல்லா ஊழியருக்காகவும், உம்மை அறியாதவர்கள் நடுவில் உழைக்கிற எல்லா சாட்சிகளுக்காகவும், இந்த ஜனத்துக்குள் உமது சுவிசேஷ ஊழியத்தை நடப்பிக்க நியமிக்கப்பட்டிருக்கும் அடியேனுக்காகவும் தேவரீரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறேன்; எங்கள் ஊழியத்தை நிறைவேற்றவும், உமக்கென்று சீஷரை ஆதாயப்படுத்தவும் எங்களெல்லாருக்கும் பரிசுத்த ஆண்மையையும் பற்றி எரியும் வைராக்கியத்தையும் கொடுத்தருளும்; பெலன் ஒடுங்கி தைரியம் குன்றும்போதோ விசேஷமாய் எல்லாரிலும் அற்பனாகிய என்னுட பெலன் ஒடுங்கும்போது, நாங்கள் தனித்தவர்கள் அல்ல, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் பெற்ற தேவரீர் எங்களோடு கூட இருந்து நடத்துகிறீர் என்பதை எங்களுக்கு நினைப்பூட்டியருளும். கர்த்தராகிய இயேசுவே, தேவரீர் என்னை உமது சீஷனாக்கி, உமது சீஷர் கூட்டத்திலிருந்து ஞானஸ்நானத்தின் மூலமாகவும் வசனத்தைக்கொண்டும் சகல விதமான திரு ஊழியத்தைச் செய்யும் பொருட்டு அடியேனை அழைத்தீரே; நான் பக்தியோடும் பரிவோடும் தேவரீரின் கட்டளைப்பிரகாரம் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்குத் தேவரீர் கற்பித்ததை எல்லாம் அவர்கள் கைக்கொள்ளும்படிக்கு நான் போதிக்கத்தக்கதாக என் உள்ளத்தையும் உதடுகளையும் உமது ஆவியால் அபிஷேகித்து, யாரும் உமக்குச் சீஷராவதை நான் எந்தவிதத்திலும் தடை செய்யாமல், இந்தச் சபையிலே தேவரீருக்கு அநேகம் பேரைச் சேர்த்து, சகல விஷயத்திலும் உமது சபையின் உத்தம ஊழியனாயிருக்க எனக்குக் கிருபை செய்தருளும், சுவாமி. ஆமேன்.

---

நமது கர்த்தராகிய கிறிஸ்துவின் வெளிப்படையான சித்தப்படியே ஜாதிகளுக்குள்ளும் அவருடைய திருச்சபையிலும் நடந்து வரவேண்டிய ஊழியத்தில் நிற்பதே ஒரு தேவ ஊழியனுடைய பெலனுக்கும் நம்பிக்கைக்கும் ஒன்றான ஆதாரம். அவ்வூழியம் உண்டான சரித்திர வரலாற்றைக் குறித்து அபிப்பிராயப் பேதகங்கள் இருக்கக் கூடுமானாலும் அது ஆண்டவருடைய சித்தத்தின்படி ஏற்பட்டதைச் சந்தேகிக்கக்கூடாது. நாம் இந்த ஊழியத்தில் நிற்பதே ஆண்டவருடைய விருப்பத்திலும் வேலையிலும் நிற்பதாகும். அப்படி நம்முடைய பாதங்கள் கெட்டியான அஸ்திபாரத்தின் மேல் நிற்கிறது. ஆண்டவரது சித்தமும் கிரியையும் அசையாமல் நிற்கும்; ஆதலால் அதற்கேற்ப ஊழியம் செய்கிறவர்களும் உறுதியாய் நிற்கிறார்கள். இவ்வுலகத்தில் இதைப் பார்க்க பத்திரமான ஸ்தலமுண்டா?

"தேவ ஊழியம் தூதருக்கும் பெரும் பாரம்" என்னும் பூர்வ முதுமொழி உண்மையே. இது பாரம் என்பதை ஒருவன் கொஞ்சமும் உணராதிருந்தால் அவன் இவ்வூழியத்தை உண்மையாய்ச் செய்கிறவனென்று சொல்ல முடியாது. ஆயினும் பாரம் மட்டுமல்ல நன்மையும் அத்தோடு உனக்குக் கிடைத்திருக்கிறதைப் பார்: 1) சகல ஜாதிகளையும் இயேசுவின் சீஷராக்கும் வேலையில் நீ பங்கு பெறுகிறாய். 2) வல்லமையும் அன்பும் நிறைந்தவருமாய் அவர் உன்னோடு இருக்கிறார். இவ்வாறு உன் ஊழியம் ஒரு "லேசான சுமை" யுமாகும் (மத். 11, 30).

"நான் உங்களுக்குக் கற்பித்த தெல்லாவற்றையும் அவர்களுக்குப் போதியுங்கள்" என்று மாத்திரம் இயேசு நாதர் சொல்லியிருந்தால் குருவாயிருப்பது மகா இலேசாயிருக்கும். அவரோ "நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாவற்றையும் 'கைக்கொள்ள'ப் போதியுங்கள்" என்றார். தேவ ஊழியரின் வேலை பக்திக்கடுத்த சில சடங்குகளை மட்டும் செய்வதல்ல; ரோமான் சபையார் இவ்வபிப்பிராயத்தை அணுகக்கூடியவர்களே. அந்தத் திருவேலை ஜாதிகளுக்கு இரட்சிப்பின் வழியைப் போதித்துப் பிரசங்கம் செய்வதுமாத்திரமுமல்ல; புரொட்டெஸ்தாந்த சபையார் இவ்வபிப்பிராயத்தை அணுகக்கூடியவர்களே. திருச்சடங்குகள், போதனை இவ்விரண்டும் திரு ஊழியத்தில் இன்றியமையாதவைதான். "அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களைப் போதிப்பதினால் அவர்களை என்னுடைய சீஷராக்குங்கள்" என்று இயேசு நாதர் சொன்ன வாசகத்திலும் இவ்விரு விஷயங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. "நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாவற்றையும் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்கள்" என்று அதோடு சேர்த்துச் சொல்வதினால் அவர் இன்னொரு விசேஷித்த காரியத்தை வற்புறுத்துகிறார்: ஒரு பட்சத்தில் குரு தான் பீடத்திலும் பிரசங்கத் தொட்டியிலும் செய்யும் ஊழியத்தைத் தகப்பனடைவான ஆவியோடு

செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறார்; மறு பட்சத்தில் குரு மேற்கூறிய பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து வெளியேறி, இயேசுநாதர் தாம் கற்பித்த தெல்லாவற்றையும் கைக்கொள்ளத் தமது முந்தின சீஷரை எப்படி வளர்த்து வந்தாரோ அப்படி குரு நாள்தோறும் சபையில் பெலவீனசீஷர் நடுவே ஊடாடி வரும்படி கட்டளையிடுகிறார். இப்படியாகத் தெய்வ ஊழியம் முழுவதும் ஒரு பூரண மேய்ப்ப ஊழியம், அது ஒரு தகப்பன் தன் பிள்ளைகளைத் தானே வளர்க்கும் வளர்ப்பாகும். குருவையும் சபையாரையும் ஒருவரோடொருவரை முகமுகமாக இணைக்கும் ஊழியமாகும். கடவுளுக்குக் கீழ்ப்படியும் பிள்ளைகளை எழுப்புவது நமது கடமையென்று நாம் எப்போதும் நம்முடைய ஊழியத்திலே நமது கண்முன் நிறுத்துவோமானால், “உலக முடிவுமட்டாக சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன்” என்று கர்த்தர் நமக்குச் சொல்லுவது எவ்வளவு அவசியமென்று சரியாய் உணருவோம்.

---

**2.** நாம் அனைவருங் கிறிஸ்துவின் நிறைவான வளர்த்தியின் அளவாய்த் தேறின ஒரு புருஷனாகி, ஏகவிசுவாசத்திற்கும் பராபரனுடைய குமாரனை அறிகிற ஏக அறிவுக்கும் வந்து சேருமட்டும், அவரே பரிசுத்தவான்களின் சீர்பொருந்தலுக்கும், கிறிஸ்துவினுடைய சரீரம் ஊன்றக்கட்டப்படும் ஊழியத்தின் கிரியைக்கும், சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் சிலரைச் சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் கட்டளையிட்டார். நாம் இனி மனுஷருடைய சூதும் மோசம் போக்குகிறதற்கு வகையான தந்திரமுமாகிய சகலவித போதகத்தின் காற்றினாலும் அடிபட்டு அலைகிற குழந்தைகளாயிராமல் சிநேகத்திலே உண்மையாயிருந்து தலையாகிய கிறிஸ்துவுக்குள்ளாக எல்லாத்திலும் வளருகிறதற்குத் தானே. எபே. 4. 11 – 15.

---

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, பரமேறிய இரட்சகரே, இந்நாள்மட்டும் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் என்கிற சகலவித ஈவுகளைச் சபைகளுக்குக் கொடுத்ததற்காகத் தேவரீருக்குப் புகழ்ச்சியையும் வணக்கத்தையும் செலுத்துகிறோம். தேவரீர் அவர்களுடைய உள்ளங்களைச் சிறைப்பிடித்து நீர் ஏறியிருக்கிற இடத்திற்கு அவர்களை நடத்தி சபைக்கு அவர்கள் நல்லீவுகளாகத் தக்கதாக அவர்களைப் புதிதாக்குகிறீர். உம்மது சபைக்கு அவர்களைக் கொடுத்த தேவரீர் தோத்தரிக்கப்படத்தக்கவர். அவர்கள் வாயிலே வசனத்தையும் கையிலே சாக்கிரமெந்துகளையும் கொடுத்தீரே. உமது ஈவுகளாகிய அவர்களுக்கு உலகம் காட்டும் அசட்டையைத் தேவரீர் போக்கி, உம்முடைய ஊழியக்காரர் இந்த அசட்டையின் கொடுமையை உணர்ந்துகொள்ள நேரிடும் சமயத்தில் அவர்கள் உமது நிமித்தம் நிந்தை சுமக்கப் பெற்றிருப்பதனால் சந்

தோஷப்படும்படி செய்யும்; சொல்லி முடியாத ஈவாகிய தேவரீரே, நீரும் அசட்டை செய்யப் பட்டீர். உம்முடைய கிறிஸ்தவர்களும் அவர்களை உயர்வாய் மதித்து அவர்கள் ஊழியத்தால் ஊன்றக் கட்டப்பட அருள் செய்யும். அப்போது தங்கள் பேதமையை விட்டு புருஷபக்குவம் அடைவார்களே. உம்முடைய ஊழியக்காரர் தங்கள் மந்தைகளுக்கு உம்முடைய உபகாரங்களாய் இருப்பதற்குப் பதிலாக அவர்களை அதிகாரம் பண்ண விரும்பித் தங்களுக்குக் கேவலமான பேரைக் கொண்டுவராதபடிக்கு தேவரீருடைய இரக்கங்களை முன்னிட்டு அவர்களுக்கு ஒத்தாசை செய்தருளும். உம்மால் பிடிபட்ட எவன் ஆள விரும்புவான்? எவன் ஊதியம் பெறும் சிந்தையாயிருப்பான்? ஒன்றான ஆண்டவரே, அவர்கள் உமது சபையில் உமக்கூழியஞ் செய்யத்தக்கதாக அவர்களை முழுவதும், ஆவியையும் ஆத்மாவையும் சரீரத்தையும் ஆண்டு கொள்ளும்; சகல நல்லீவுகளையும் அளிப்பவரே, அவர்களுக்குச் சொந்தமான சகல உடைமையையும் அவர்களை விட்டு எடுத்துப்போடும்; உம்முடைய ஆவியின் வரங்களையும் பரம பொக்கிஷங்களையும் அவர்களுக்குத் தாரும். இப்படி தாங்கள் உம்முடைய அருமையான சபைக்கு நீர் கொடுத்த ஈவுகளென்று அவர்கள் உணர்ந்தறியக் கிருபை புரிந்தருளும். ஆமேன்.

---

ஆண்டவர் மனுஷருக்குக் கொடுக்கிற நன்கொடைகளாகிய தேவ ஊழியர் உயர்விலும் மகிமையிலும் வித்தியாசப்பட்டவர்கள். சிலர் முழுத் திருச்சபைக்கும் அடிப்படைப் போடக்கூடிய அப்போஸ்தலர். வேறு சிலர் தேவ இராச்சியத்தின் அதிசயங்களை ஆவி நிறைந்த வார்த்தைகளால் பேசும் தீர்க்கதரிசிகள். வேறு சிலர் பெருங் கூட்டங்களைத் தங்கள் பிரசங்கங்களால் திரட்டக்கூடிய வரம் மிகுத்த சுவிசேஷகர், தேசாந்தர பிரசங்கிகள், மிஷனெரிமார். வேறு பலர் தனித்த சபைகளை ஊன்றக் கட்டுகிற மேய்ப்பர், போதகர். இவர்களுக்குள்ளிருக்கும் வித்தியாசம் பெரியதே. கிறிஸ்தவ தேசங்களெங்கும் பிரசித்திப் பெற்றுத் தன் வேலையினால் முழுத்திருச்சபைக்கும் பிரயோசனமாயிருக்கிற அப்போஸ்தலனுக்கும், பூமியின் ஓர் மூலையிலே யாருக்கும் பேர் ஊர் தெரியாதவனாய் வேலைசெய்து மரித்துப் போகிற ஒரு அற்ப ஊழியனுக்கும் எவ்வளவோ பெரிய வித்தியாசம். வித்தியாசம் பெரிதாயினும் ஒற்றுமையுமுண்டு. அவர்கள் எல்லாரும் ஒரே ஊழியத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள்; அவர்கள் எல்லாருக்கும் ஒரே பொதுவான பெயருண்டு: அவர்கள் திருச்சபைக்கு ஆண்டவர் அளித்த ஈவுகளே. மகா சிறியவனாகிய போதகனும் இந்த மகா நாமத்தைத் தரித்துக்கொள்ளலாம். எந்த ஈவும் தன்னிலேயே மதிப்புள்ளது. நீயோ யாருடைய ஈவாயிருக்கிறாயென்றும் யாருக்குக் கொடுக்கப்பட்டாயென்றும் யோசித்துப்பார்.

திரு ஊழியத்தை அற்பமாக எண்ணி, தேவ ஊழியரையும் அவமதிக்கிற கிறிஸ்தவர்கள் அவ்வூழியத்தையும் ஊழியரையும் தள்ளிவைப்பதினால் தாங்கள் தேறினவர்களும் விடுதலையுள்ளவர்களுமாவோமென்று எண்ணிக் கொள்ளுகிறார்கள். ஆயினும் தின அனுபவத்தைக் கவனித்தால் எதிர்மாறானதே நடக்கிறது. அவர்கள் சுயாதீனராகாமல் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். கட்சிகளும் பலவகைப் போதகக் காற்றுகளும் (வ. 14) அவர்கள் முன்னுக்கு வராதபடி தடுப்பது சகஜம். ஏனென்றால் சபை குழந்தைத் தன்மையினின்று புருஷபருவத்திற்கு வரும்படிக்கே ஆண்டவர் தேவ ஊழியரையும் அவர்கள் ஊழியத்துக்கு வரங்களையும் கொடுத்திருக்கிறார். சபையார் சுயாதீனத்தை ஆசித்து அதற்கென்று அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய தெய்வ ஈவுகளைத் தள்ளிப்போடுகிறார்கள். கற்றுக்கொள்ளவும் கீழ்ப்படியவும் மனதில்லாதவர்கள் ஒருபோதும் சுயாதீனமடைய மாட்டார்கள்.

ஆயினும் ஆத்துமாக்கள்மேல் அதிகாரம் செலுத்தவேண்டும் என்றிருக்கிற தேவ ஊழியர் எவ்வளவு அநியாயம் செய்கிறார்கள் என்பதும் இவ்வார்த்தைகளால் தெளிவாம். அவர்கள் தங்களையே தேறின புருஷர் என்று பிறரால் மதிப்புப் பெற விரும்பி, சபையார் வாய்திறவாமல் தாழ்ந்து கிடப்பதை ஆசிக்கிறார்கள்; சபையிலிருக்கிற வரங்களும் பெலன்களும் பிரயோஜனமற்றுப்போகிறது. இந்த தேவ ஊழியருடைய ஊழியம் முற்றிலும் மாறுபாடானதே. எப்படியென்றால் சபை அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஈவாக இராமல், அவர்களே சபைக்குக் கொடுக்கப்படும் ஈவுகளாயிருப்பதனால் சபை வளர்ந்து ஊன்றக் கட்டப்பட்டு முன்னேறிச் செல்லவேண்டும். சபை ஒன்றுமறியாத குழந்தைபோல் இனி இராமல், கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்த்தியின் அளவாய் ஞானசுவாதீனத்திற்கும் புருஷபிராயத்திற்கும் வரும் பொருட்டு வேலை செய்யவே சபையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். சபையாருக்கு இருக்கிற வரங்களைக் கண்டுபிடித்து அவைகளை அப்பியாசப்படுத்தவும் பிரயோஜனப்படுத்தவும் வழிவகைகளை யோசிப்பது அவர்களுடைய வேலை. முழு தேகமும் ஒரே தேகமாக வேலை செய்வது இயற்கை. அப்படியிராமல், அதற்குப் பதிலாக தெய்வ ஊழியனாகிய ஒரே அவயவமட்டும் வேலை செய்தால் தேகம் வியாதிப்படுமே.

இப்படி கர்த்தருடைய வசனத்தின் பிரசங்கமும் சாக்கிரமெந்தின் பரிமாறுதலுமாகிய ஊழியத்திற்கு எத்தனை பெரிய இலக்கு குறித்திருக்கிறது: "நாம் அனைவரும் கிறிஸ்துவின் நிறைவான வளர்த்தியின் அளவாய்த் தேறின ஒரு புருஷனாகி, ஏக விசுவாசத்திற்கும் தேவனுடைய குமாரனை அறிகிற ஏக அறிவுக்கும் வந்து சேருமட்டும் கிறிஸ்துவின் சரீரம் ஊன்றக் கட்டப்படவேண்டும்."

இது கைகூடுவதற்கு வெகுகாலம் பிடிக்கும் என்பதாய்த் தோன்றினாலும், இதற்கான ஆரம்பம் நமது நடுவிலே பார்க்கிறோம். தேவ ஊழியராகிய நாம் இந்த இலக்கை அடைய ஒத்து உழைக்கும்படி விசேஷித்த அழைப்புப் பெற்றோம். நமது அன்றாடக அலுவலின் அற்பசொற்ப விஷயங்களை விட்டு நமது கண்களை நமது இலக்குக்கு நேராக உயர ஏறெடுப்போம்.

---

**3.** *நீங்கள் உங்கள் மேலும் பராபரன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட அவருடைய சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை அனைத்தின்மேலும் கவனிப்பாய் இருங்கள். நட. 20, 28.*

---

பரம பிதாவே, தேவரீர் உமக்குச் சொந்தமான சபையிலே என்னை வைத்திருக்கிறீர். தேவரீருக்குச் சொந்தமானதின் பேரில் இருக்கவேண்டிய நேசத்தையும் பயபக்தியையும் எனக்குத் தாரும். உமக்குச் சொந்தமான எந்த ஆத்மாவும் ஓநாயினால் விழுங்கப் படாதபடிக்கும், அது தனக்குத் தானே கேடுண்டாக்கிக்கொள்ளாதபடிக்கும், அது எனக்கே சொந்தமாக நான் பாவிக்காதபடிக்கும் நான் இச்சபையின் மேய்ப்பனாக அதைக் கரிசனத்தோடு மேய்க்க எனக்குச் சகாயம் செய்தருளும்.

கர்த்தராகிய இயேசுவே, இந்த சபையைத் தேவரீர் உமது சொந்த இரத்தத்தால் சம்பாதித்தீர். இம்மந்தைக்கு நான் உண்மையுள்ள மேய்ப்பனாக ஆசிக்கிறேன். ஆதலால் "தன் ஜீவனைக் காக்க வேண்டுமென்றிருப்பவன் அதை இழந்துபோவான்", "தன் ஜீவனை என்னிமித்தம் இழக்கிறவனோ அதை நித்தியமாய்க் கண்டடைவான்" என்பதை என்னுடைய இந்த ஊழியத்தில் நினைத்துக் கொண்டு உமது உத்தம ஊழியனாகக் கஷ்டத்தைப் பாராமல் என்னுடைய ஊழியத்தில் என் பெலன்களைச் செலவழிக்க எனக்கு ஒத்தாசை செய்தருளும்.

கர்த்தராகிய பரிசுத்த ஆவியே! தேவரீர் இச்சபையைக் கண்காணிக்க என்னை நியமித்திருக்கிறீர். ஆத்மாக்களுக்காக அளவில்லாத கவலைகொண்டிருக்கிற தேவரீர் உமது ரட்சிப்பின் வேலையை நடத்தக் கையாடும் எத்தனங்களைக்கொண்டே நான் உம்மைச் சேவிக்கிறேன். இந்தப் பெரிய ஊழியத்துக்குத் தேவையான சாமர்த்தியம் எனக்கு இல்லை, ஆண்டவரே, நீர் அதை எனக்குக் கொடும். ஆத்மாக்களுக்காக அக்கறைப்படும் பெலனும் கீழ்ப்படிதலுமுள்ள இருதயத்தையும் உணர்வுள்ள மனச்சாட்சியையும் எனக்குத் தாரும். என்னையும் என் சபையையும் ஊன்றக் கட்டத்தக்கதான உமது

வரங்களையும் பெலன்களையும் தந்தருளும். நீர் இவைகளையெல்லாம் தராவிடின் நான் என் ஊழியத்தில் உதவாதவனுவேன்.

திரியேக தேவனே, என்னையும் முழுச் சபையையும் கண்ணோக்கிப் பாரும். உன்பேரிலும் மந்தை அனைத்தின் பேரிலும் கவனிப்பாயிரு என்ற புத்திமதி எக்காலமும் என் காதுகளில் தொனிக்கப்பண்ணும். ஆமேன்.

---

"பரிசுத்தாவி உங்களைக் கண்காணிகளாய் வைத்திருக்கிறார்:" இவ்வார்த்தைக்கு இரண்டுபக்கமுண்டு: 1) கர்த்தராகிய இயேசு விரும்பியதும் சபை நடுவே பரிசுத்தாவியானவர் இரட்சிப்பின் வேலையை நடத்திவரும் எத்தனமுமாகிய வசனம், சாக்கிரமெந்து என்றவைகளின் ஊழியத்தை இந்த வார்த்தை குறிக்கும். இதின்படி திருச்சபையில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சாக்கிரமெந்தைக் கிறிஸ்துவின் கட்டளைப்படி பரிமாறுகிற ஒவ்வொரு குருவும் தான் பரிசுத்தாவியினுலேயே தன் சபையில் வைக்கப்பட்ட கண்காணி என்று சொல்லலாம். 2) மேலும் அந்த வார்த்தை மெய்யான தெய்வ ஊழியராகிய ஆட்களையும் குறிக்கும். பரிசுத்தாவியானவர் தங்களைப் பரிசுத்தமாக்க இடங்கொடுத்து ஊழியத்துக்கு வேண்டிய திறமையையும் ஆவிக்குரிய கிருபை வரங்களையும் அவரிடம் பெற்றுக்கொள்ள ஆசிக்கிறவர்களைப்பற்றி இவ்வார்த்தை சொல்லப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்டவர்கள் மட்டும் பரிசுத்தாவியினுல் சபையிலே வைக்கப்பட்டவர்கள். மேற்கண்ட முதலாம் சங்கதியை மாத்திரமல்ல இரண்டாம் சங்கதியையும் உன்னைக் குறித்துச் சொல்லலாமா? உன்மேல் **கவனிப்பாயிரு.** பரிசுத்த ஊழியத்திற்கும் பரிசுத்தமாக்கப்படுகிற ஊழியருக்கும் பரிசுத்த ஆவியில் இணைபிரியாச் சம்பந்தமுண்டு.

தேவன் தம்முடைய சுய இரத்தத்தினுல் சம்பாதித்த சபை பெங்கெல் (Bengel) சொன்னபடி "மிகவும் விலையேறப் பெற்ற மந்தையே".

31ம் வசனத்தையும் சேர்த்தால், இந்த அதிகாரத்தில் மேய்ப்ப ஊழியத்தைப் பற்றிய போதனை மூன்று முக்கிய பாகங்களாக சுருக்கிச் சொல்லியிருக்கிறது: 1) உன்மேல் கவனிப்பாயிரு. 2) மந்தை அனைத்தின் மேலும் கவனிப்பாயிரு. 3) அவனவனுக்குப் புத்தி சொல்ல ஓயாதே (வ. 31).

"மந்தையனைத்தின் மேலும் கவனிப்பாயிரு": தற்காலத்து வைத்தியர் சொல்லுகிறதென்ன வென்றால்: வைத்தியர் அந்தந்த தனித்த வியாதிக்காரரை மாத்திரம் கவனித்து அவர்களைச் சுகப்படுத்த முயலுவது போதாது. ஏனென்றால் ஒரு வியாதி ஆரம்பித்துவிட்டால் அது வளரும்; வளர்ந்து எப்படி முடியும் என்று யாருக்கும் தெரியாது. ஆதலால் அவர்கள் தனி வியாதிஸ்தனைச் சுகப்படுத்தத்

தங்களால் கூடிய பிரயாசப்படுவதுந் தவிர ஜன சமூகத்தின் சுகத்தையும் சுத்தத்தையும் அதிக முக்கியப்படுத்துருகிர்கள். இதின்படி அவர்கள் தொத்துவியாதிகளைத் தடுக்கவும் அவ்வியாதிகளை உண்டாக்கும் கிருமி முதலானவைகளை அழிக்கவும் ஏற்பாடு செய்கிறார்கள். நல்ல காற்று, சுத்தமான தண்ணீர், வசதியான வீடு முதலியவற்றிற்காகக் கவலைப்படுகிறார்கள். இவ்வாறு ஜனசமூகத்தின் சுகம் விர்த்தியாகும், சுகாதார நிலையும் தேர்ச்சி அடையும். பற்பல வியாதிகள் தடுக்கப்படும் அல்லது பெலனற்றுப் போகும், சில நாளுக்கு நின்றாலும் சீக்கிரம் ஓடிவிடும்.— இதே விதமாய் ஆத்ம வைத்தியசாலையாகிய கிறிஸ்தவ சபையிலும் அந்தந்தத் தனிச்சபைகளிலும் நடக்கிறது. தனித்த ஆடுகளை ஓயாமல் தேடிக் கண்டு பிடிப்பதைத் தவிர (லூக். 15, 4) மந்தை அனைத்தின் மேலும் கவனிப்பாயிருப்பதும் போதகனின் ஒரு முக்கிய வேலையே. எல்லாரும் ஞான ஜீவனில் முன்னுக்கு வரும்படியான ஒழுங்குகளையும் ஏற்பாடுகளையும் உண்டாக்கப் பிரயாசப்படுவது அவசியமே. தேவ ஊழியத்துக்கடுத்த போதனையில் இவ்விஷயம் திரும்பத் திரும்ப வற்புறுத்தப்படும்.

இது நடைபெறுவது எவ்வாறு? முந்த முந்தமுழுச் சபைக்கும் தனித்த ஆடுகளுக்கும் செய்யவேண்டிய ஞானப் பிரசங்க ஊழியமும் சாக்கிரமெந்துக்களின் பரிமாறுதலும் என்ற பொதுவான ஆத்ம விஜாரணையினாலே தான். அத்துடன் 1) சபையில் விதைக்கப்பட்ட நல்ல விதையை எல்லாம் பயிராக்கவும் சத்துரு விதைத்த விதையை அழிக்கவும் நடைபெறுகிற பாவவழக்கங்களுக்கு எதிர்த்து நிற்கவும் பிரயாசைப்படுவதினாலும் 2) சபைகளைத் தாங்கி அவற்றுக்குக் காற்றும் ஜலமும் போலிருக்கும் சகல ஏற்பாடுகளையும் சுத்தமும் கறையுமற்றதாகக் காத்துக் கொள்வதினாலும் (ஞானஸ்நானம், ஞானப்பெற்றோர், பாடசாலை, திடப்படுத்தல், பரிசுத்த ராப்போஜனம், பாவசங்கீர்த்தனம், சமுசாரமார்க்கம், குடும்பசந்திப்பு, குடும்ப ஆராதனை, தேவாராதனை, சபையின் கண்டனை தண்டனை) 3) சபையிலே மறைந்திருக்கிற மனோ பெலன்களையும் வரங்களையும் கண்டுபிடித்து அவைகள் பிரயோஜனப்படவும் அப்பியாசிக்கப்படவும் முயற்சிப்பதினாலும் (சபையிலும் ஆராதனையிலும் சபையார் செய்யக்கூடிய பலவிதமான வேலைகள்) 4) சபைக்குள் நுழையப் பார்க்கிற திருச்சபைக்கு விரோதமானதும் கட்சிப்பிரிவினையை உண்டாக்குவதும் அவிசுவாசத்துக்கு ஏதுகரமானவையுமான கிளர்ச்சிகளைத் தடுப்பதினாலுந் தான் நடைபெறும்.

கூட்டுறவு தனித்த ஆட்களின் ஜீவியத்தில் வேலை செய்கிறது. ஓரளவாக சகலரிடத்திலும் இது விளங்கும். பக்குவ நிலையடையாத வெகு பேர் தங்கள் ஊர் ஜனசமுதாயமும் கூட்டுறவும் எவ்வாறோ

ஏறக்குறைய அவ்வாறே இருக்கிறார்கள். ஒரு சிறு சபையில் சுத்த ஆவியும் நல்ல காற்றும் உண்டாகும்படி ஏற்பாடு செய்கிற ஒரு குரு அதினாலேயே எல்லாருக்கும் பிரயோஜனப்படக்கூடும்; அந்தச் சிறு கூட்டத்துக்கு அவன் செய்வது அவன் நினைப்பதற்கு மேலாக வெகு பேருக்குப் பிரயோஜனமாகும். அனேகருக்கு அவன் வேறெந்த விதமாயும் பிரயோசனப்பட முடியாது.

---

**4.** எங்களை அவனவன் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரரும் பராபரனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரருமாக எண்ணிக்கொள்ளக் கடவான். அப்புறம் ஒருவன் உண்மையுள்ளவன்என்று கண்டு பிடிக்கப் படுவதே உக்கிராணக்காரரிடத்தில் தேடப்படுகிற காரியமாயிருக்கிறது. நானோ உங்களாலே, அல்லது ஒருமனுஷ நியாயநாளின் விசாரிப்பினாலே நியாயந்தீர்க்கப்படுவது எனக்கு வெகு அற்ப காரியமாயிருக்கிறது; ஆனால் என்னை நானே நியாயந்தீர்க்கிறதும் இல்லை. ஏனென்றால் நான் என்னில் ஒரு குற்றத்தையும் அறியாதிருந்தாலும், இதினாலே நான் நீதிமானாகிறவன் அல்ல; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரானவர் (I கொரி. 4, 1–4).

---

கர்த்தராகிய கடவுளே, தேவரீர் எனக்குப் பெரிய உக்கிராண வேலையைக் கொடுத்திருக்கிறீர்! உமது சுவிசேஷத்தின் இரகசியங்களைப் பிரசங்கிக்கவும் கண்காணிக்கவும் எனக்கு ஒப்புவித்திருக்கிறீர். என்னை நீர் இத்தனை பெரிய விஷயத்துக்குக் கையாடுவதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆயினும் சமயத்தில் என் உக்கிராணவேலையைக் குறித்து நான் உமக்குக் கணக்குச் சொல்ல வேண்டிய கடைசி நாளில் என் கதி என்னமாயிருக்குமோ! எனக்குப் பயமாயிருக்கிறது. ஆ, கர்த்தராகிய தேவனே, நான் என் உக்கிராணவேலையில் உண்மையாயிருந்து கிறிஸ்துவின் நேர்மையான ஊழியனாயிருக்க எனக்கு ஒத்தாசை பண்ணும். என்னில் ஒரு குற்றத்தையும் நான் அறியாதவன் என்று உமது அப்போஸ்தலனைப் போல் நான் சொல்ல முடியாதே. அதற்குமாறாக மாமிசத்தோடும் இரத்தத்தோடும் யோசனை பண்ணுவதிலும் மனுஷருடைய புகழ்ச்சியையோ இகழ்ச்சியையோ கவனிப்பதிலுமே என் மனம் செல்லுகின்றதே. என் செய்வேன், ஆண்டவரே. அதனால் தான் உமக்கு விரோதமான அதிக உண்மைத்தாழ்ச்சி உற்பத்தியாயிற்று என்பதையும் நான் நன்றாய் அறிந்தவன். இது பயங்கரமான பாவமாயினும் இயேசு கிறிஸ்துவினிமித்தம் எனக்கு மன்னியும். நான் இனிமேல் வேறொருவரையும் கவனியாதபடி, என் தேவனாகிய நீரே எனக்கு ஒத்தாசை பண்ணும். நான் கடைசியிலே உமக்கு முன்பாக நிற்கவேண்டிய போது எனக்கு மனுஷப் புகழ்ச்சியினால் ஆவதென்ன இகழ்ச்சியி

ஞல் அழிவதென்ன? ஆகையால் நான் மனுஷரை அல்ல, என்னைக் கொண்டு தேவரீர் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்பதைப் பார்க்கும்படியான கண்களை எனக்குத் தாரும். அவகீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும் இதை நிறைவேற்றி என்னை நியாயம் விசாரிக்கும் உமக்கு முன்பாக உண்மையுள்ளவனுகக் கண்டுபிடிக்கப்படவும் என் ஊழியத்தின் முடிவிலே "நல்லதாச்சுது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரா, நீ கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தாய், உன்னை அநேகத்தின்மேல் அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி" என்ற மன இரக்கமும் பாக்கியமுமான வார்த்தையை உமது வாயால் கேட்கவும் தக்கதாக நான் அவகீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும் என் ஊழியத்தை நிறைவேற்ற எனக்கு மனப்பூர்வமான நிலையுள்ள சித்தத்தைத் தாரும். ஆமேன்.

---

"கிறிஸ்துவின் ஊழியக்காரன்" என்பதில் நாலு சங்கதிகள் அடங்கியிருக்கும்: 1) இவ்வூழியத்தின் ஆதிக்கமும் நியாயமும்: உன்னுடைய மாமிசமும் இரத்தமும் வெறுக்கும் ஒரு காரியத்தை நீ செய்யப் போகும் போது, நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று உனக்குள்ளே சொல்லிக்கொள். நியாயம் உன் பக்கத்திலிருக்கிறதே. நீ மெய்யாய் மனுஷருக்குப் பயப்படத் தேவையில்லையே. 2) ஊழியக்காரனின் தாழ்மை: எஜமான் எவ்வளவு பெரியவர், ஊழியக்காரன் எம்மாத்திரம்! 3) ஊழியத்தின் மகிமை: ஒரு ராஜாவுக்கு மந்திரியாகிறது (Minister) சின்ன காரியமல்லவே. கிறிஸ்துவின் ஊழியன் (Minister) ஆவதோ எத்தனைக்கதிகம்! 4) கிறிஸ்துவின் முழு மாதிரியையும் பின்பற்றுவது: இந்த எஜமானின் ஊழியக்காரன் தன் எஜமானைப்போல் இருக்கவேண்டுமே.

அந்த நாளிலே உன்னுடைய பெரிய சிறிய வரங்களைக் குறித்தாவது, உன் வேலையினுல் உண்டான அரிய பெரிய பலன்களைக் குறித்தாவது, மனுஷர் உன் ஊழியத்தைக் குறித்துச் சொல்லும் எவ்வித அபிப்பிராயத்தைப் பற்றியாவது ஆண்டவர் கேட்கப் போகிறதில்லை. நீ உண்மையாய் இருந்தாயா என்ற ஒரே கேள்வி கேட்பார். எல்லாவற்றிற்கும் மகா பெரிய மேன்மையுள்ளது இந்த ஊழிய உண்மையே. இதுவே கேட்கப்படும் என்பதை சொற்ப பலன் பெற்று, வெகு அற்ப வரங்களுடையவராய் மனுஷருடைய அங்கீகாரம் இல்லாமல் மறைவிலே பிழைக்கும் ஊழியன் மனதில் வைப்பது நலம். இவ்விஷயங்களில் பெரிய பங்கைப் பெற்றவனும் கடைசி நாளில் கேட்கப்படப்போகிற ஒன்றுன மகாப் பெரிய கேள்வியிலுள்ள ஊழிய உண்மையை தன் வரங்களால் உண்டாகக்கூடிய பெருமையினுல் இழந்துவிட்டுத் தன்னைத் தான் வஞ்சிக்காதபடி இதை மனதில் வைப்பது நலம். கிறீசொஸ்தொமுவின்

(Chrysostom) ஒரு வாக்கு பல தலைமுறைகளாக குருமாருக்குச் சொல்லப்பட்டு வருகிறது: நான் அஜாக்கிரதையாக அல்ல, யோசனையோடு சொல்வது என்னவென்றால் குருமாரில் வெகு பேர் மோட்சத்தில் பிரவேசிக்கமாட்டார்கள். அவர்களில் வெகுபேர் நித்திய ஆக்கினைக்குள் போவார்கள் என்பதே.

உண்மையாய் இருக்க முடியுமா? விசுவாசமுள்ள எந்த ஊழியனும் சிற்சில விஷயங்களில் தவறக்கூடியதாயிருந்தாலும் உண்மையாய் இருக்கவேண்டும் என்னும் ஆசை குடி கொண்டவனாய் இருக்கிறான். இவ்விஷயத்தில் ஒருபோதும் தேறிவிட்டவனாகத் தோற்றிக் கொள்ளாமல், பயத்திலும் நடுக்கத்திலும் மன்னிப்பை வாஞ்சிக்கும் உறுதியான ஜெபத்திலும் தேர்ச்சியை நாடி முயல்வான். இதைப் பூரணமாய்அடைந்துவிட்டேன் என்று ஒருவன் எண்ணினால் அப்போதே அவன் அதை இழந்தான். உண்மை முற்றுப் பெற்றதும் முற்றுப் பெறாததுமாயிருக்கிறது. அது தெய்வ கிருபையாலும் நம்மை உற்சாகமாக விசுவாசத்தில் ஒப்புக்கொடுப்பதினாலும் உண்டாகும் உள்ளான பலன்; ஆகையால் அது முற்றுப்பெற்றது. அதின்படி நடக்க முயலும்போதோ, திரும்பத் திரும்ப மீறுதல் உண்டாகிறபடியால் அது முற்றுப் பெறாதது. ஆனபடியால் பவுல் தன் ஆத்மத்தின் உள்ளான வாஞ்சையைக் குறித்து : "நான் என்னில் ஒரு குற்றத்தையும் அறியாதிருந்தாலும்" என்றும், அதின்படி நடக்கிற விஷயத்திலோ: "கர்த்தர் என்னை உண்மையுள்ளவன் என்று எண்ணி ஊழியத்திலே வைத்தார்" (1 தீமோ. 1, 12) என்றும் சொல்லுகிறான். அவன் "எண்ணி" என்றது நான் முன்னும் பின்னும் செய்த பல தவறுதல்களையும் பாராமல் பொறுமையாய் என்னை மன்னித்து என்று அர்த்தங்கொள்ளும்.

பவுல் அப்போஸ்தலனிடம் நாம் பின்வரும் இரண்டு காரியங்களைக் கற்றுக்கொண்டால் எவ்வளவு நலம்! நாம் எப்போதும் தேவனுக்கு முன்பாக நிற்பதினால் மனுஷருடைய தீர்ப்பை அற்ப காரியமாக எண்ணுவது ஒன்று. மனுஷர் நம்மிடத்தில் நம்பிக்கைக் கொள்ளுவதையும் நேசமுடையவர்களாயிருப்பதையும் சுவிசேஷத்தினிமித்தமும் ஐக்கியத்தினிமித்தமும் மிகவும் அருமையாக மதிப்பது மற்றொன்று. இவ்விரண்டும் ஒரு கிறிஸ்தவனில் கூடியிருப்பதே அவன் கிறிஸ்துவில் புருஷப்பிராயம் அடைந்ததற்கு ஓரடையாளம். இதைக் குறித்து யோசனையில்லாமல் பேசக்கூடாது என்பதும் ஒவ்வொருவனுக்கும் தெரிந்த விஷயம்.

உலகச் சிந்தையுள்ளோர் ஒரு தேவ ஊழியனை குருட்டு பக்தன் என்றும், தங்களைப் பலத்த பரிசுத்தராக எண்ணியிருப்போர் அவனை உலகச் சிந்தையுள்ள பிரசங்கி என்றும் நிந்திப்பாரானால் அதுவே இத்தேவ ஊழியனின் உண்மைக்கு நல்ல அத்தாட்சியாம்.

இதோ, ஆண்டவருக்கும் யோவான் ஸ்நானகனுக்கும் இப்படி நடந்ததே (மத். 11, 18 ஆ). இந்த இருவிதமான தீர்ப்பும் நேர்மையுள்ள தெய்வ ஊழியருக்கு வருவது மிகவும் சகஜம். ஒரு பக்கத்தாருக்கு மிதமிஞ்சின கண்டிப்புக்காரராகவும் வேறு பேருக்கு இளக்காரம் கொடுப்பவர் போலும் தோன்றுவது இயற்கை.

---

**5.** இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்குக் கொடுத்த பராபரனாலே இதெல்லாம் உண்டாயிற்று. ஏனெனில் பராபரன் கிறிஸ்துவுக்குள்ளிருந்து லோகத்தாரின் பாவங்களை அவர்கள்மேல் சுமத்தாமல், லோகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக்கொண்டு, ஒப்புரவாக்குதலின் வசனத்தை எங்களுக்குள்ளே வைத்தார். ஆனபடியினாலே பராபரன் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறதாய் நாங்கள் கிறிஸ்துவுக்காகத் தானாதிபதிகளாயிருந்து: பராபரனோடு ஒப்புரவாகுங்களென்று கிறிஸ்துவுக்குப் பதிலாக வேண்டிக்கொள்ளுகிறோம் (2 கொரி. 5, 18—20).

---

கர்த்தராகிய பராபரனே, தேவரீர் எங்கள் பாவங்களுக்த்கு தக்கதாக எங்களுக்குச் செய்யாமல், இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மோடு எங்களை ஒப்புரவாக்கும் ஒப்புரவாக்குதலை அளித்திருப்பதற்காக உமது சபையிலே உம்மை வணங்கித் துதிக்கிறோம். கடைசியிலே எங்கள் கண்களை மூடி நித்திய வாழ்வுக்குள் போகுமட்டும் நாங்கள் எங்களுடைய ரட்சிப்பின் இந்த அஸ்திபாரத்தில் நிலைத்திருக்கும்படி கிருபை செய்யும். இதுவே நாங்கள் தேவரீரைக் கெஞ்சி மன்றாடும் விஷயத்திலெல்லாம் ப்ரதமமானது. இது எங்களிலும் எல்லாரிலும் நடந்தேறும்படி தேவரீர் எங்களுக்கு ஒப்புவித்திருக்கிற ஒப்புரவாக்குதலின் வசனம் உமது பரிசுத்த ஆவியால் எங்கள் உள்ளங்களில் ஆழ்ந்து பதியவும் அது பூமியின் கடைசிபரியந்தம் பரவி ஒப்புரவாக்குதலைக் கொண்டுவரவும் தேவரீரைப் பிரார்த்திக்கிறோம். ஒப்புரவாக்குதலைப் பிரசங்கிக்கும் உமது ஊழியக்காரர் உமது பெலத்திலே எல்லாருக்கும் புத்தி சொல்லவும், உமது ஆழ்ந்த அன்பினால் எல்லாரும் ஒப்புரவாக்குதலை விசுவாசிக்கவும், முடிவுபரியந்தம் அதிலே நிலைத்திருக்கவும், எல்லாரையும் வருந்தி அழைக்கவும் அவர்கள் வாயைத் திறந்தருள வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஆண்டவரே, ஒப்புரவாக்குதலைப் பிரசங்கிக்கும் வசனத்தை எனக்குக் கொடுத்தீர். தேவரீர் எனக்குக் கொடுத்திருக்கிற ஊழியம் ஒப்புரவாக்குதலின் ஊழியமானதால், மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற நான் தானே தள்ளுண்டு போகாதபடிக்கு நானே முந்த உம்மோடு ஒப்புரவாக உதவி செய்யும். நான் என் ஊழியத்தில் இந்த

சுவிசேஷத்தின் எல்லைக்குப் புறம்பே தடுமாறி அலையாமல் அதன் பிரதான பொருளிலே உறுதியாய் நிற்கவும் "தேவனோடு ஒப்புரவாகுங்கள்" என்று எல்லாமனுஷரையும் கெஞ்சவும் வருந்தவும் எனக்கு ஒத்தாசை செய்தருளும். இந்த வேலையைத் தேவரீரே கொடுத்திருக்கிறபடியால் அதிலே தைரியமாய் நிற்கவும் நீர் எனக்கு ஒத்தாசை செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்று எல்லாக் காரியத்திலும் என்னைத் தேற்றிக்கொள்ளவும் துணை செய்தருளும். என்னை ஒரு ஆளுகைக்கென்று அல்ல, ஒரு ஊழியத்துக்கென்று தேவரீர் அழைத்திருக்கிறபடியால் நான் என் சொந்த கனத்தைத் தேடாமல் என்னைத் தாழ்த்தி என் ஆத்மாவின் பெலன்களையும் ஜீவியத்தையும் பலியாக நிறுத்தி, உமக்கும் உமது சபைக்கும் உமது குமாரனுடைய சுவிசேஷத்தில் ஊழியம் செய்ய இயேசுவினிமித்தம் எனக்கு உதவி செய்தருளும். ஆமேன்.

---

வேத ஒழுங்கு இதுவே: ஒப்புரவாக்குதல், ஒப்புரவாக்குதலின் வசனம், ஒப்புரவாக்குதலைப் பிரசங்கிக்கும் ஊழியம். "அதேனெனில்" என்கிற வார்த்தையைக் கவனிக்கவும் (வ. 19.). இவை மூன்றும் உள்ளான சம்பந்தமுடையவை; ஒப்புரவாக்குதலானது அதைப் பற்றிய வசனத்தைப் பிறப்பித்தது; ஒப்புரவாக்குதலின் வசனத்திலிருந்து அதைப் பிரசங்கிக்கும் ஊழியம் பிறந்தது. இம்மூன்றும் கடவுளினின்று உண்டானதால் ஒன்றுசேர்ந்திருக்கும். ஒப்புரவாக்குதலையும் அதைப்பற்றிய வசனத்தையும் கொடுத்த கடவுள் அதைப் பிரசங்கிக்கும் ஊழியத்தையும் கூட ஸ்தாபிக்கச் சித்தமானார். ஆகையால் கடவுள் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைக் கொடுத்தார் என்று சொல்லியிருக்கிறது. கடவுள் எங்களுக்கு ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைக் கொடுத்தார் என்று அப்போஸ்தலர் விசேஷித்த பிரகாரம் சொல்லக் கூடியவர்களாயினும், யதார்த்தமான மனதோடு இத்திரு ஊழியத்தில் பிரவேசித்து ஒப்புரவாக்குதலுக்கும் ஒப்புரவாக்குதலின் வசனத்துக்கும் ஊழியம் செய்ய விரும்புகிற யாவரும் இவ்வாறே சொல்லலாம். கடவுள் தவிர வேறெவரும் இப்படிப்பட்ட ஊழியரைக் கொடுக்கமுடியாது. அவரே அவர்களை ஆயத்தப்படுத்தி அவர்கள் உள்ளத்தின் ஆழத்திலே இவ்வூழியத்துக்கான அழைப்பைக் கொடுத்துத் திருச்சபையின் மூலமாகவும் அவர்களை அழைக்கிறார். இதை அவர்கள் அறிந்து கொள்ள எவ்வளவுக்கு ஆண்டவர் அவர்கள் கண்களைத் திறப்பாரோ அவ்வளவுக்கு அதிகமாய் பரிசுத்த பயத்தோடும் பரிசுத்த சந்தோஷத்தோடும் கடவுள் எங்களுக்கு ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைக் கொடுத்தார் என்று சொல்லுவார்கள்.

மறுபட்சத்தில் ஒப்புரவாக்குதலின் ஊழியம் ஒப்புரவாக்குத லோடும் ஒப்புரவாக்குதலின் வசனத்தோடும் சமநிலை உடையதல்ல. அவ்வூழியத்தின் தன்மை வேறு. அது ஒப்புரவாக்குதலைப் போல வும் ஒப்புரவாக்குதலின் வசனம் போலவும் தனித்து நிற்கமுடியாது; நித்தியமானதுமல்ல, அது நீங்கிப்போகக்கூடியது. அது பானம் அடங்கிய பாத்திரம் போலத் தன்னில் தானே ஒன்றுமற்றது. ஒப் புரவாக்குதலின் ஊழியர் தங்களை மறந்து தேவகிரியையையும் வச னத்தையும் கொண்டுவருவதற்கென்றே அவர்கள் அவ்வூழியத்தை தேவனால் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் தங்களை மறவாமல் தங்களை உயர்த்துவதினால் தங்கள் பெருமையையும் தங்கள் ஊழி யத்தின் பெருமையையும் நாடுவார்களானால் ஊழியத்தின் தெய்வீ கத் தன்மையைக் கெடுப்பார்கள். அதிலுள்ளவர்கள் தங்களையும் தங்களுக்கு வரக்கூடிய லாபத்தையும் வசனத்தினிமித்தம் மறந்து போவதே அதன் தெய்வீகத்துக்கு அடையாளம். ஆகையால் மகா வைராக்கியத்தோடு இவ்வுத்தியோகத்தின் தெய்வீகத்தன்மையை வற்புறுத்திப் போராடின பலர் தங்களுக்கே தெரியாமல் அதை லௌகீகமாக்கி-விட்டார்கள். ஊழியர் தங்களை மறந்து ஒப்புரவாக் குதலின் சுவிசேஷத்துக்காக உழைக்கிறதினாலேயே இவ்வூழியத் தின் தெய்வீகத்தன்மை ரூபிக்கப்படும்.

பொல்லாத ஊழியர் உத்தியோகத்தைக் குறித்துப் பாராட்டும் கர்வம் மகா அவலட்சணமும் பரிதபிக்கப்படத்தக்கதுமாம். நீயோ உன் ஊழியத்தைச் செய்து உன் ஜீவனையும் அதற்காகக் கொடு. அப்போது தேவவசனம் காரியத்தை நடத்தும்; உனக்குத் தேவை யானதுக்கு மேலாக வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றுக் கொள்வாய். நீ ஆளவேண்டுமென்றால் ஊழியம் செய்.

இவ்வூழியத்தின் பொருளென்ன? தேவனோடு ஒப்புரவா குங்கள் என்ற பிரசங்கமே. அதன் அதிகாரம் என்ன? தேவன் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறார் என்பதே. அதன் இலக்கு என்ன? கிறிஸ்துவை மகிமைப்படுத்துதலே.

நம்முடைய பிரசங்கங்கள் அடிக்கடி ஒப்புரவாக்குதலைப்பற்றிய தியானங்களே. ஆனால் அவை அதிகாரம் பெற்ற புத்திமதியும் ஊக்கமான சிநேகத்தில் பிறந்த வேண்டுதலுமாயிருக்க வேண்டுமென்று அப்போஸ்தலன் சொல்லுகிறான். உன் பிரசங்கங் களில் புத்திமதியும் வேண்டுதலும் இருக்க வேண்டுமென்பதை மற வாதே. அப்போது உனக்கு வல்லமையும் ஆதிக்கமும் கிடைப்பது நியாயம். ஆயினும் உன் பக்தியினிமித்தமும் உன் சுய வெறுப்பினி மித்தமும் இவை உனக்குக் கிடைக்குமென்று எண்ணாதே. உனக்கு உத்தரவாதமாய்க் கொடுபட்டிருக்கும் தெய்வ ஊழியத்துக்கே இவை

கிடைக்கிறது. இதை நீ பயமில்லாமல் ஆசீர்வாதமுண்டாக உபயோகிக்கக் கூடியவனுவாய்.

---

**6.** ஆனால் வரங்களின் வித்தியாசங்கள் உண்டு, ஆவியோ ஒருவர். ஊழியங்களின் வித்தியாசங்களும் உண்டு, கர்த்தரோ ஒருவர். பெலன்களின் வித்தியாசங்களும் உண்டு, எல்லாவற்றையும் எல்லாருக்குள்ளும் நடப்பிக்கிற பராபரனே ஒருவர். 1. கொரி. 12, 4–6.

---

அன்புள்ள கர்த்தராகிய கடவுளே, தேவரீர் எனக்கு ஒப்புவித்திருக்கிற வரங்கள், ஊழியம், பலன் முதலிய யாவும் என்னிடத்திலிருந்தல்ல உம்மிடத்திலிருந்தே வருகிறது. ஒன்றும் என்னுலானதல்ல. ஆதலால் அதிலெதையும் நான் திருடிக் கெடுக்காதபடிக்கும் என்னையும் அத்தோடு அழிவுக்குள்ளாக்காதபடிக்கும் என்னைக் காரும். எல்லாரும் ஊன்றக்கட்டப்படுவதற்கு நீர் பலருக்கும் பலவிதமானவைகளைக் கொடுத்துவருகிறீர். இதை அறிந்திருக்கிற நான் தேவரீர் எனக்குக் கொடுத்த பங்கில் திருப்தியற்றுப்போய் அதிகமாய்ப் பெற்றுக்கொண்ட மற்றவர்கள்பேரில் பொறாமைப்படுகிற பெரிய நிர்ப்பந்தத்துக்கு என்னை விலக்கிக் காரும். நான் உம்முடைய உத்தம ஊழியரைப் பற்றி மகிழ்ச்சி கொண்டு உம்மை அவர்களுக்குள்ளே புகழ்ந்து அதிசயிக்கக் கிருபை செய்யும். தேவரீர் கொடுத்திருப்பதிலே நான் திருப்தியாயிருந்து என்னுடைய வரத்துக்கும் பெலத்துக்கும் தக்கதாக சபை ஊன்றக் கட்டப்படும்படி நான் உமக்கு உண்மையாய் ஊழியம் செய்யவும், இந்த என்னுடைய ஊழியத்தினுல் நித்தியமாய் சகல கனத்துக்கும் பாத்திரமான தேவரீரைப் பெரியோரும் சிறியோரும் மகிமைப்படுத்தவும் கிருபை செய்யும். ஆமேன்.

---

ஞானவரங்கள் ஆவியினுல் உண்டானவை. ஆவியானவர் அவைகளை உள்ளத்திலே உண்டாக்குகிறுர். ஊழியங்களும் கர்த்தரால் உண்டானவை. திருச்சபைக்கு அரசராயிருக்கிற அவர் தம் அரசஆதிக்கத்தின்படி அவைகளை ஏற்படுத்துகிறுர். பெலன்கள் பிதாவினுல் உண்டானவை. அவர் அவைகளில் தமது சர்வவல்லமையைக் காண்பிக்கிறுர். இது தேவனுடைய திரித்துவத்தைக் காட்டும் ஒரு ஆச்சரியமான வார்த்தை. அதிலும் அதிக ஆச்சரியமாய் அவர் சபையைச் சிநேகித்து அதன் ஊன்றக் கட்டப்படுதலுக்காகக் கவலைப்படுகிறுர் என்பதைக் காட்டும்.

நீ உன் வரங்களையும் ஊழியத்தையும் ஊழியத்தினுல் உண்டாகும் பலன்களையும் குறித்து பின்வரும் வார்த்தைகளை நினைத்துக்கொள்: “நீ பெற்றிராதது எது உனக்கு இருக்கிறது? நீயும்

பெற்ருயேயாகில் பெற்றிராதவனைப் போல் (நீயே உண்டாக்கிக் கொண்டது போல்) ஏன் பெருமை பாராட்டுகிருய்?" இவ்வார்த்தையை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் தெய்வ காரியத்தின் ஜெயத்துக்கும் எல்லாக் காரியங்களின் சித்தி பேற்றுக்கும் நிலைவரமான வழியைக் கண்டு கொண்டார்கள்.

இது தவிர, உன்னிலும் பெரிய வரங்களைப் பெற்று, தங்கள் சபையில் தங்கள் முயற்சியினால் பெரும் பலன் அடைந்தவர்களை நீ பார்த்தால் நீ வருத்தமடையாமல், அதற்காகக் கடவுளுக்கு நீ நன்றியறிந்த தோத்திரம் செலுத்து. இது பழைய மனிதனுடைய போங்கேயல்ல. பெரியோருக்கிருக்கிற பெலவீனங்களைக் கண்டு, அவர்களைக் குற்றஞ்சாட்ட நீ வழிபார்த்ததுண்டு. அவர்கள் குற்றங்களைப் பற்றிப் பேசுவது கேவலம் என்று நினைத்து உன் நாவை நீ அடக்கிக் கொண்ட போதிலும் அவர்களுக்குக் கிடைத்த வரங்கள், கனம், பலன்கள் இவைகளினிமித்தம் நீ கடவுளுக்குத் தோத்திரம் செலுத்தினதே கிடையாது. இது தான் பழைய மனுஷனுடைய இயல்பு. கிறிஸ்துவின் ஊழியக்காரனுடைய மேன்மையான சிந்தை இது: சிறந்தவர்கள் தங்கள் உயர்ந்த உத்தியோகத்தை என் கர்த்தரிடம் தான் பெற்றிருக்கிருர்கள். அவர்கள் கர்த்தர் என் கர்த்தர். நான் ஊழியம் செய்கிற சபைக்கே அவர்களும் ஊழியம் செய்கிருர்கள். என் ஊழியத்திலே நான் காண்கிற பல பெரிய குறைவுகளை அவர்களே நிறைவாக்குகிருர்கள். கிறிஸ்துவின் மெய்யான ஊழியருக்கு இருக்கும் இச்சிந்தை உனக்கு இருக்கும்படி நீ முயற்சித்துப் புருஷனுய்ப் போராடு.

உற்சாகமான வாலிப ஊழியரின் பெலன்களுக்கு இடம் கொடுத்து, அவர்கள் ஊக்கமான வேலையினால் சந்தோஷப்பட்டுத் தங்கள் வயதுக்குத் தகுந்த பிரகாரம் மறைவான இடத்தில் தாங்கள் வைக்கப்படுவதற்கு இடம் கொடுக்கிற விருத்தாப்பிய குருக்களே கர்த்தருடைய பார்வையில் பெரியவர்கள். "அவர் பெருகவும் நானே சிறுகவும் வேண்டியது." தங்களோடு வேலைசெய்யும் முதியோரினிமித்தம் ஊழிய வைராக்கியத்தையும் வாலிப அனலையும் பெரிதாக் எண்ணுமல் தாழ்மையைக் காட்டுகிற வாலிப குருக்களும் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவர்கள். வயது சென்ற தலைமைகுருவுக்கும் வாலிப உதவிகுருவுக்கும் நற்சிநேகம் இருந்தால் சபைக்கும் பெரும் ஆசீர்வாதம்; சமாதானமில்லையானுல் பெரிய இடறல்.

உன் சபையில் பலத்த கிரியைகளைச் செய்யவும் முழுச் சபையையும் தூக்கத்திலிருந்து எழுப்பி, மெய்யான சபையாகக் கூட்டவும், சபையின் உதவி ஆட்களைப் புதுப்பிக்கவும் நீ பிரயாசப்படுகிருய். இது வெகு நல்லதே. பலத்த கிரியைகளைச் செய்கிறவர் தேவன் தானே என்று நீ விசுவாசித்தால் தான் உன் முயற்சி வாய்க்கும்.

# II. தேவ ஊழியத்தின் மகிமையும் உத்தரவாதமும்.

**7.** *அவர் எங்களைப் புது உடன்படிக்கையின் ஊழியராயிருக்கவும் சமர்த்தராக்கினர்; எழுத்தினுடைய ஊழியக்காரராயிருக்க அல்ல, ஆவியினுடைய ஊழியக்காரராயிருக்கத் தானே. ஏனெனில் எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது. கல்லுகளில் பதிந்து, எழுத்துக்களில் அடங்கிய மரணத்தின் ஊழியம் . . . . மகிமையுள்ளதாயிருந்ததேயானல் எத்தனை அதிகமாய் ஆவியினுடைய ஊழியம் மகிமையுள்ளதாயிருக்கும் . . . . ஏனெனில் வாங்கிப்போகிறது மகிமையோடிருந்ததானல் வெகு அதிகமாய் நிலைநிற்கிறது மகிமையுள்ளதாயிருக்கும்.* 2 கொரி. 3, 6 – 11.

---

கர்த்தராகிய இயேசுவே, தேவரீர் எங்களை அழைத்த ஊழியத்தைக் குறித்து அப்பேர்ப்பட்ட மகத்துவமான வார்த்தைகளைக் கேட்கையில் நாங்கள் திகிலடைந்து ஒவ்வொருவரும் உமது பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, என்னை விட்டுப் புறப்படும்; ஏனெனில் பாவியான மனுஷனுயிருக்கிறேன் என்று கதறுகிறோம். நாங்கள் உமக்குப் பயத்தோடு ஊழியம் செய்து, நடுக்கத்தோடு களிகூரும்படி அப்படிப்பட்ட கூக்குரல் எங்களுக்கு ஒருபோதும் தூரமாக வேண்டாம்.

எங்கள் பாவ நிர்ப்பந்தத்தில் எங்களுக்கு ஆறுதலாயிருக்கிற அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, தேவரீர் மனுஷருக்கு உயிர்ப்பிக்கும் ஆவியை அளித்து, அவர்களுக்கு நித்திய நீதியைக் கொடுக்கிற சுவிசேஷத்தின் மகிமையான வேலையை எங்களுக்கு ஏற்படுத்தியிருப்பதற்காக மிகவும் அதிகமாய் உம்மைத் துதிக்கிறோம். இந்த ஊழியத்தை உமது அப்போஸ்தலனுகிய பவுலைப்போல் முழு இருதயத்தினுலும் உயர்த்தவும் மேன்மைப்படுத்தவும் அவ்வூழியத்துக்குச் சமமாக எதையும் மதியாமல் இருக்கவும் துணை செய்யும்.

எங்கள் பாவ நிர்ப்பந்தத்தில் எங்களை ஆற்றித் தேற்றுகிற கர்த்தாவே, எங்களெல்லோரையும் உம்முடைய ஊழியத்துக்கென்று அழைத்திருக்கிற தேவரீர், நாங்கள் பேர் பேராக அதற்குப் பொருத்தமானபடி மெய்யான ஆவியின் சந்தோஷத்தாலும் தைரியத்தாலும் அதில் நிலைத்திருக்கவும் இப்பேர்ப்பட்ட சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் எங்களை ஒரு பொருட்டாக எண்ணின உமக்குத் துதி செலுத்தவும் உதவி செய்தருளும். எங்களை வாதிக்கிற சந்தோஷமற்ற ஆவியை எங்களை விட்டுத் துரத்தி உமது ரட்சிப்பின் சந்தோஷத்தால் எங்களை நிரப்பியருளும். நாங்கள் ஆவிக்கும் ஜீவனுக்கும்

நீதிக்கும் ஊழியராய் இருக்கிறோம். எங்கள் ஜெபத்தைக் கேளும். ஆமேன்.

---

நியாயப்பிரமாணத்தின் ஊழியத்துக்கு ஒரு மகிமை இருக்கிறது. அது ஆத்மாக்களுக்குள் மின்னல் போல் பாய்ந்து அவைகளை மரணம், சாபம் என்றவைகளுக்குள் அடைத்துப் போடுவதால் கடவுளுடைய பரிசுத்தத்தின் மகிமையை விளக்கும். சீனு மலையின் மகிமை பயங்கரமானதே. அதனால் நீ மரிக்கிறாய், சபிக்கப்படுவாய். நீ அதனால் மரித்தாலும் கர்த்தரைத் தரிசித்தாயிற்று. நீ அதனால் குற்றவாளியாகத் தீர்க்கப்படுகிறாய்; நீயும் உன்னைக் குற்றவாளியாகத் தீர்த்து மனச்சோர்வு அடைகிறாய். ஆயினும் தேவன் விரும்பும் மனுஷீகத் தன்மையின் மகிமை உன் உள்ளத்துக்கு உதயமாயிற்று.

உயிர்ப்பிக்கிற ஆவி கொல்லுகிற எழுத்தை விட எவ்வளவு மகிமைப் பொருந்தியதோ அவ்வளவு புதிய உடன்படிக்கையின் ஊழியம் மகிமை பொருந்தியது. மரணத்தையும் சாபத்தையும் விட ஜீவனும் நீதிமானுக்குதலும் எவ்வளவு மகிமையுள்ளதோ அவ்வளவு புதிய ஏற்பாட்டின் ஊழியம் மகா மகிமை உடையதே. ஆதலால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நாம் எவ்வளவாய்ப் புகழ வேண்டும்; சுவிசேஷ ஊழியத்தை உயர்த்தவும்:பிரஸ்தாபிக்கவும் எவ்வளவு ஆவலாயிருக்க வேண்டும்! சுவிசேஷத்திலும் நாம் கர்த்தரைக் காண்கிறோம். ஆயினும் அத்தால் நாம் மரிக்காமல் பிழைக்கிறோம். ஏனென்றால் அது கிறிஸ்துவின் ஒப்புரவாகுதல் மூலமாய் பாவங்களின் மன்னிப்பை நமக்கு அறிவித்து, உள்ளான புதுச் சிருஷ்டிப்பையும் மறுபிறப்பையும் உண்டாக்கும் ஆவியை நமக்கு அளிக்கிறது. தேவனுக்குப் பிரியமான மனுஷீகத்தின் மகிமையைச் சுவிசேஷத்திலும் நாம் காண்கிறோம். ஆனால் ஆவியானவர் அதை நமது உள்ளத்துக்குள் கொண்டுவந்து காட்டி, நமக்கு அதைக் கொடுத்தவருக்கு நேராக நாம் வளரும்படிச் செய்கிறார்.

இந்நாட்களுக்குப் பிற்பாடோ நாம் இஸ்ரவேல் வீட்டோடே பண்ணப் போகிற உடன்படிக்கையாவது: நாம் நம்முடைய நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே கொடுத்து, அதை அவர்கள் இருதயத்தில் எழுதி அவர்களுக்குப் பராபரனுயிருப்போம், அவர்கள் நமக்கு ஜனமுமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மேலும் நாம் சுவிசேஷ ஊழியம் செய்வதால் நிலைநிற்கிற கரியத்துக்காக உழைக்கிறோம். ("ஒரு நித்திய சுவிசேஷம்" அறி. 14, 6). தேவராஜ்ய சரித்திரத்தில் நியாயப்பிரமாணத்தின் ஏற்பாடு ஒரு குறித்த காலத்துக்கென்றே அதன் வேலையைச் சுவிசேஷம் பிடித்துக் கொண்டது. தனி ஆத்மாவின் சரித்திரத்திலும் நியாயப்பிரமாணத்தின் வேலை சில காலத்துக்கென்றே. சுவி

சேஷம் அதைத் தொடர்ந்து செய்யும். சுவிசேஷத்தின் இடத்தை வேறெதுவும் எக்காலமும் பிடித்துக் கொள்ளமுடியாது. சுவிசேஷம் எல்லாவற்றையும் முற்றிலும் ஜெயித்து முழு நியாயப்பிரமாணத்தையும் நிறைவேற்றுமட்டாக நிலைநிற்கும். அதற்குப் பின்பு அது முடிவற்றது.

நமது ஊழியத்தின் மகிமை ஜீவனையும் நீதிமானுக்குதலையும் கொண்டுவருகிற நித்திய சுவிசேஷமே. ஆகையால் நீ உன் ஊழியத்தைக் கனம்பண்ணி மகிமை பொருந்திய சுவிசேஷத்தைப் பிரசங்கி அதை நீ இருண்டதும் உப்புச்சப்பற்றது மாக்கிப்போடுவதினல் அதைக் கெடுத்து விடாதே. நாம் நியாயப்பிரமாணத்தையும் சுவிசேஷத்தையும் கலந்து பிரசங்கித்தால் இரண்டும் பெலனற்றுப்போம், மகிமை இல்லாமல் போகும். அப்படியானல் நீ உன் சபைக்குக் கர்த்தரை அவருடைய பரிசுத்தத்தில் காட்டு. தேவனுக்குப் பிரியமான மனுஷீகத்தின் மகிமையை அவர்கள் பார்த்து மனச்சாட்சியில் அத்தோடு தங்களை ஒத்துப்பார்க்கட்டும். ஆயினும் நீ உன் ஊழியத்தைச் சரியாய்ச் செய்ய வேண்டுமானல் நியாயப்பிரமாணத்துக்குரிய இம்மகிமை நீங்கிவிடும் மகிமையே என்பதை வற்புறுத்திப் போதிப்பது அவசியம். ஏனெனில் உன் விசேஷித்த ஊழியம் என்னவென்ருல் நித்திய சுவிசேஷத்தையும், நிறைவும் தாராளமும் இனிமையும் அளவிடக் கூடாததுமான அதின் மகிமையையும் பிரசங்கிப்பதே. நித்தியமாய் ஜீவனையும் நீதிமானுக்குதலையும் உண்டாக்குவதே இச்சுவிசேஷத்தின் மகிமை. இம்மகிமையான பிரசங்க வேலையை நீ நிறைவேற்ருமலும் அதில் உறுதியாய் நிலைநிற்காமலும் போனல் நீ உன் ஊழியத்தைச் செய்கிறவனல்ல.

நியாயப்பிரமாணத்தை அதன் மகிமையில் பிரசங்கிப்பது மேன்மையான மனுஷீக தன்மை. நியாயப்பிரமாணத்தையும் சுவிசேஷத்தையும் கலந்து சாரமற்ற பேச்சுப் பேசுவது பரிதபிக்கப்படத்தக்க மனுஷீகத்தன்மை. சுவிசேஷத்தை அதன் மகிமையிலே பிரசங்கிப்பதே தெய்வீகமானது. ஆகையால் தேவனே "எங்களைப் புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கவும் எங்களைச் சமர்த்தராக்கினர்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிருன்.

---

**8.** இப்போதும், ஆசாரியர்களே, இந்தக் கற்பனை உங்களுக்குச் செல்லும். நீங்கள் கேளாமலும், நமது நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படிக்கு, இதை மனதிலே வைக்காமலும் போனல், நாம் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களைச் சபிப்போமென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிருர். ஆம், நீங்கள் இதை மனதிலே வைக்காமல் போனல், அவைகளைச் சபிப்போம்...ஏனெனில் ஆசாரியனின் உதடு

கள் அறிவைக் காக்கவேண்டும், வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே ; ஏனென்ருல் அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன். நீங்களோ வழியை விட்டு விலகி, அநேகரை வேதத்தில் இடறப்பண்ணினீர்கள் ; லேவியின் உடன்படிக்கையைக் கெடுத்துப் போட்டீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறுர். ஆனது கொண்டு நீங்கள் நம்முடைய வழிகளைக் கைக்கொள்ளாமல், வேதத்திலே முகமாட்டம் பார்க்கிறபடியினுலே, நாமும் உங்களை எல்லா ஜனத்திற்கும் எண்ணமற்றவர்களும் தாழ்ந்தவர்களுமாக்கினேம். மல். 2, 1 – 2. 7 – 9.

---

அநேகரை இடறப்பண்ணினபடியால் உண்மையற்ற ஆசாரியரைக் கண்டிப்பாய்ப் பயமுறுத்தி மற்றவர்களுக்கு முன்பாக தண்டிக்க விரும்பும் கர்த்தராகிய தேவனே, தன் சபைக்கு ஜீவவழியைப் போதியாமலும் அவர்களுக்கு முன்சென்று வழிகாட்டாமலும் இருக்கிற உண்மையற்ற ஆசாரியனைப் பார்க்கிலும் நிர்ப்பந்தமான சிருஷ்டி வேறெதுவும் இல்லை என்று உமது ஊழியக்காரர் உட்கருத்தாய் எண்ணும்படி செய்தருளும். நான் மற்றவர்களைக் குறித்து எண்ணுவானேன் ; என்னைக்குறித்தே நான் கவனிக்க வேண்டிய போதுமான சங்கதி இருக்கிறதே. ஆ, மனிதருடைய இருதயங்களை ஊடுருவிப் பாயும் உமது வார்த்தைகள் என்னைக் கலங்கச் செய்கிறதே! என்னுடைய அசட்டையும் அக்கிரமமும் ஒன்றின் பின்ஞென்ருய் என் முன் எழும்பி என்னைக் குற்றப்படுத்துகிறதே. நான் எந்தப் பக்கம் திரும்புவேன் என்றறியேன். என் ஆண்டவரே, உம்மண்டைக்கே அடியேன் ஓடிவருகிறேன். எனக்கு மன்னியும், என்பேரில் தயவாயிரும், எனக்குச் சகாயம் செய்யும் என்று கிறிஸ்துவினிமித்தம் உம்மை கெஞ்சுகிறேன். உம்முடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்பு என் பேரில் வாராதபடி என்னைப் பொறுத்தருளும். நான் நிர்ப்பந்தனுயிருக்கிறேனே. இரக்கத்தின் ஒரு அதிசயத்தை என்னில் செய்து என் கால்களை மலையின்மேல் நிறுத்தியருளும். "கலங்காப்படிக்குக் காரும், நிலைநிற்கும் வரந்தாரும்". ஆமேன்.

---

தேவ ஊழியன் ஓயாமல் தேவவசனத்தைக் கையாடுகிறுன். அவனுடைய ஊழிய சம்பந்தமாக ஜீவனின் வழி அவனுக்கு நீளைப் பூட்டுதலாகிறது. மனுஷருக்கு நன்மை செய்ய அவனுக்குக் கிடைக்கும் சமயங்கள் ஏராளம். இதெல்லாம் அவனுக்கு பெரிய ஆசீர்வாதம். உண்மையில்லாத ஊழியனுக்கோ இதெல்லாம் சாபமாய் முடியும் என்பதை அனுபோகத்தில் தெளிவாய்ப் பார்க்கிறேம். அவன் மற்றவர்களுக்குப் போதிப்பதைத் தன் மனதில் பதிய வைத்துக் கொள்ளாதிருந்தால் அதனுல் அவன் இன்னும் அதிகமாய்க் குருடனும் நிர்விசாரியும் குணப்பட மனமற்றவனும் ஆகிக் கொண்டே போகிறுன்.

ஜீவனையும் நீதிமானுக்குதலையும் கொண்டுவருகிற நித்திய சுவி சேஷத்தை தேவ ஊழியன் பிரசங்கிப்பதினாலும் மனுஷருக்குத் தேவனைப் பற்றிப் போதித்து விடுதலையின் நிறைவாகரமான நியா யப்பிரமாணத்துக்கு அவர்களை அழைப்பதினாலும் அவன் "கர்த்தரு டைய தூதன்" ஆகிறான். அதனால் அவன் ஊழியம் மகிமையாகி றது; அதினாலே அவனுடைய உத்தரவாதமும் பெரிதாகிறது. ஆண் டவர் மனுஷருக்கு அனுப்புகிற செய்தியாகிய வசனத்தைப் புரட்டி அதைச் சோம்பலும் தாமதமுமாகப் பிரசங்கிக்கிறவனைப் போலக் கஷ்டத்தோடு கணக்கு ஒப்புவிக்கப்போகிறவன் யார்? "எவனுக்கு அதிகம் கொடுக்கப் பட்டிருக்கிறதோ அவனிடம் அதிகம் கேட்கப் படும்". சுவிசேஷத்தினால் அல்லாமல் ஒருவனும் தேவனை அறியவும் அவருடைய பரிசுத்த பிரமாணத்தின்படி பிழைக்கவும் முடியாதே. இவ்வளவு மகத்தான சுவிசேஷத்தின் ஊழிய உத்தரவாதத்துக்கும் பெரிதான உத்தரவாதம் எதுவும் உண்டோ?

ஒரு குரு தேவனுடைய தூதனின் வேலையைத் தன் சபையில் எவ்வளவு உண்மையாய்ச் செய்வானோ அவ்வளவே சபையின் ஞான ஜீவியம் உருவாகும். ஆனது பற்றியே அவனுக்குச் சபையின் தூதன் என்றும் பெயர் (அறி. 2, 1). முழுத் திருச்சபைக்கும் கண்டனையா கவோ ஆறுதலாகவோ சொல்லுவதெல்லாம் அவனுக்கே செல்லும்

"நீங்களோ அநேகரை இடறப்பண்ணுகிறீர்கள்": இப்பேர்ப் பட்டவர்களை எண்ணுபவன் யார்? தேவனுடைய வசனம் என்று அழைக்கப்படும் தங்கள் குருவின் பிரசங்கத்தைக் கேட்க வந்தார்கள்; இதோ, மனுஷ போதனையைப் பெற்றுக் கொண்டார்கள்; உள்ளத் தில் பெலன் செய்யாத உப்புச்சப்பற்ற மேலெழுச்சியான அலப்புத லைக் கேட்டுப் போனார்கள். தங்கள் குருவின் ஜீவியத்தைக் கவனித் தார்கள்; இதோ, பல இடறலான விஷயங்களைப் பார்த்தார்கள்; இல்லாவிடினும் மிச்சமான உலக மனுஷரைப்போன்ற பரிசுத்தம் என்பதே இல்லாத நடக்கையைப் பார்த்தார்கள். ஞாயிற்றுக்கிழமை யில் அனலும் பக்தியுமுள்ள அவனை வல்லமையாய்ப் பிரசங்கிக்கக் கேட்டார்கள்; மற்றக் கிழமைகளிலோ அவனிடத்தில் அனலைக் காணோம், பக்தியைக் காணோம், வன்மையைக் காணோம். இம்மாய் மாலத்தை உணர்ந்து நிர்விசாரிகளும் மாய்மால நடத்தைக்காரருமா கிறவர்கள் பலர். சிலரோ கிறிஸ்து மார்க்கம் வெறும் மாய்மால மென்று இகழ்ந்து தள்ளுகிறார்கள். இவ்வாறு அவர்களுடைய நித்தி யத்துக்கான ஜீவியமே, அவர்களுடைய பக்தியும் ஒழுங்குமான ஜீவி யம் சின்னாப்பின்னமாய்ப் போகிறது. குருமாரின் ஜீவியத்தால் அசட்டைக் குள்ளாவது தெய்வவசனம்தான். "நீங்கள் அநேகரை வேதத்தில் இடறப்பண்ணினீர்கள்".

ஒழுங்கற்ற உலக சிந்தையுள்ள குருக்களைப்போல இனி இகழ்ச்சி பண்ணப்படுபவர் வேறெவரு மில்லை என்பதற்குப் பல அடையாளங்கள் உண்டு. அவர்களுக்கு இப்போதே பத்திரிகைகளிலும் புஸ்தகங்களிலும் சகல ஜனங்களுக்கும் முன்பாக வசைச் சொல் வருகிறது. திருவூழியர் இனிமேல் தங்கள் அசுத்தத்துக்கு மூடலாகத் தங்கள் ஊழியத்தை உபயோகிக்க முடியாது. நாம் இதைக் குறித்து முறையிட நியாயமில்லை. இது முந்த ஆண்டவருடைய நியாயத் தீர்ப்பு: நாமும் உங்களை எல்லா ஜனத்திற்கும் எண்ணமற்றவர்களும் தாழ்ந்தவர்களுமாக்கினேம் என்கிறார். இது இரண்டாவதாக நமக்கு உதவியானது: பரிசுத்தமாகுதலை நடப்பிக்க ஆண்டவர் நம்மை இதனால் ஏவுகிறார்.

---

**9.** புத்தியைக் கற்றுக்கொடுத்தவர்கள் ஆகாச மண்டலத்தின் ஒளியைப் போலேயும், அநேகரை நீதிக்குள்ளாக்கினவர்கள் நட்சத்திரங்களைப் போலேயும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களாய்ப் பிரகாசித்திருப்பார்கள். தானி. 12, 3.

அப்போது பிரதான மேய்ப்பர் வெளிப்படுகையில், மகிமையின் வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். 1 பேது. 5, 4.

---

கர்த்தராகிய கடவுளே, தேவரீர் உம்முடைய ஊழியரை ஊக்கத்துக்கும் உண்மைக்கும் ஏவும்படியாகவும் அவர்கள் களைப்பிலே தேற்றும்படியாகவும் இந்தப் பெரியதும் பாக்கியமுமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறீர். அவர்கள் நாள் முழுவதும் வெய்யிலில் படும் கஷ்டத்தால் தவிக்கும் போதெல்லாம் நித்திய ஜீவனின் நம்பிக்கையிலே அவர்களுக்கு முசிப்பாறுதலைத் தாரும். அவர்கள் துக்கப்படுகிறவர்களாயிருந்தாலும் அவர்களை எப்போதும் சந்தோஷமாயிருக்கச் செய்தருளும். தேவரீர் அவர்களுக்குக் "கேடயமும் மகா பெரிய பலனும்" ஆயிருக்கிறீரே. அவர்கள் தங்கள் வாயில் சுவிசேஷம் என்னும்வெளிச்சத்தினாலும் தங்கள் ஜீவியத்தில் பரிசுத்தம் என்னும்வெளிச்சத்தினாலும் இவ்வுலகில் உமது மகிமைக்கென்றும் மனுஷருடையஇரட்சிப்புக்கென்றும் பிரகாசிக்கும் தீபங்களாயிருக்கும்படி உமது ஊழியரை உமது ஆவியினால் உத்தம ஆசாரியரும் போதகருமாக்கியருளும். புது வானமும் புது பூமியும் வந்த பிறகு பல விதமாய்ப் பிரகாசிக்கிற நட்சத்திரங்களாக அவர்களை அமைத்தருளும். அப்பேர்ப்பட்ட ஊழியர் இருளிலே அடிக்கடி தீங்கனுபவித்து உள்ளும் புறம்பும் பல விதத்தில் போராடுவதைப்பார்க்கிற கர்த்தராகிய தேவனே, அவர்கள் அவ்விருளில் நிர்பந்தத்தை மிகவும் சகிக்கும் போது தேவரீர் வரப்போகிற மகிமையின் வெளிச்சக் கதிர்கள்

அவர்களுடைய ஆத்மத்திற்குள் வீசச் செய்து அவர்கள் பரலோகத்திலிருந்து மனுஷர்பேசக் கூடாததும் வாக்குக் எட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டு உணர்ந்துகொள்ளச் செய்தருளும். அன்புள்ள ஆண்டவரே, அற்ப விளக்காகிய என்னில் மங்கி எரிகிற சிறு திரியை அவிந்து போகாதபடி மூட்டிவிடும். உமது பரலோக வீட்டு வாசற்படியிலே உட்கார்ந்து சந்தோஷப்படுவதற்கு நான் உமது பெரிய கிருபையினால் என்னைப் பாத்திரனாக மதித்தருளும். கர்த்தாவே, மகா அற்பனாகிய என்னையும் கூட உமது வெளிச்சத்திலே சந்தோஷிக்கச் செய்தருளும், ஆமேன்.

---

இம்மையில் வெளிச்சமாயிருப்பதற்கும் மறுமையில் வெளிச்சமாயிருப்பதற்கும் சம்பந்தமுண்டு. நீ ஒரு நித்திய வெளிச்சமாயிருக்க விரும்பினால், இப்போதே நீ "எழும்பி வெளிச்சமாகு. ஏனென்றால் உன் வெளிச்சம் வருகிறது. கர்த்தருடைய மகிமை உன்மேலே உதிக்கிறது." இது முந்தினது. இரண்டாவதோ: ஒரு மனுஷன் மற்றவர்களுக்காக எவ்வளவு வெளிச்சமாயிருப்பானோ, எவ்வளவு தன் வார்த்தைகளினாலும் ஜீவியத்தினாலும் மற்றவர்களை வெளிச்சத்தண்டை இழுத்து நடத்துவானோ, அவ்வளவு துலாம்பரமாகவும் மகிமையாகவும் நித்திய காலமாய் அப்படிப்பட்டவன் பிரகாசிப்பான்.

ஏதோ ஒரு வகையில் ஒரு ஆத்மாவுக்கு நித்தியத்துக்கான சகாயம் செய்வது ஒரு உத்தம தேவ ஊழியனுக்குக் கைகூடினால் அவனுடைய முகம் இங்கேயே சந்தோஷத்தால் பிரகாசிக்கிறதே. எத்தனைக்கதிகமாய் அவன் எண்ணியதுக்கு மேலாக கர்த்தர் தன்னை அநேக விஷயங்களுக்காக உபயோகித்தார் என்று மறுமையில் தான் கவனிக்கும் போது அவனுக்குள்ளிருக்கும் சந்தோஷம் பொங்கி வடியும்.

நாம் மோட்சபாக்கியத்தில் சேர்ந்த உடனே நமக்குச் சத்தியமாய்த் தேவனுடைய வழிகளைப் போதித்தவர்களைச் சந்திப்பது நிச்சயம். நாம் அவர்களுக்கு நன்றியறிதலான வார்த்தைகளைச் சொல்லும் போது அவர்கள் வெளிச்சம் சொல்லற்கரிய மகிமை பொருந்திய சந்தோஷத்தோடு பிரகாசிப்பதைப் பார்ப்போம். அவர்களோ ஒன்றான வெளிச்சமும் வெளிச்சத்தின் நித்திய ஊற்றுமானவரை நமக்குக் காட்டி: "ஆசனத்தின் மேல் வீற்றிருக்கிற நமது தேவனும் ஆட்டுக் குட்டியுமானவருக்கே ரட்சிப்பின் புகழ்ச்சி உண்டாகக் கடவது" என்று சொல்வார்கள்! அவர்கள் பேரில் அவர் உட்கருத்தான மகிழ்ச்சிகொண்டு அவர் நமது பேரில் வைத்த அன்பினால் அவர்களை மகிமைப்படுத்துவார்.

மறுமையிலும் போதகர் இருப்பார்களா? போதகன் இவ்வுலகில் முயன்றும் பல சமயங்களில் அடையாத சந்தோஷம், சகல வெளிச்சமும் பாக்கியமும் குடிகொண்ட மறுமையில் அவனுக்குப் பூரணமாகக் கிடைக்காதா? அதற்குத்தாரமாக: அவர்கள் இவ்வுலகில் கிறிஸ்துவின் நாளைக் கண்டிராத கணக்கில்லாத புறமதஸ்தரைப் போதிப்பார்கள் என்று எண்ணுகிறவர்கள்சிலர்; சரீரப்பிரகாரமாகவும் ஞானப்பிரகாரமாகவும் பூரணப்படாத கிறிஸ்தவராய் மரித்த வெகுபேரைப் போதிப்பார்கள் என்று நினைப்பவர்கள் பலர். வாலிபவயதில் போதகத் தொழிலினின்று திடீரென்று எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு வேத சாஸ்திரியை லுத்தர் சாஸ்திரியார் கண்டு: "தேவனுக்கு அவருடைய மோட்ச ராஜ்யத்தில் கூட நல்ல சாஸ்திரிகள் தேவை" என்று சொன்னாராம். நமக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாவிட்டாலும் நாம் அறிந்தது ஒன்றே: அங்கே பெரியோர் எவரும் தமது சுய மகிமைக்கென்று பிரகாசிக்காமல், எல்லாருடைய நன்மைக்கும் சந்தோஷத்துக்கும் பிரகாசிப்பார்கள். "உங்களில் பெரியவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருப்பான்" என்று கிறிஸ்து சொன்ன வார்த்தை அப்போது பூரணமாய் நிறைவேறும். அவர்கள் அதிலேயே தங்கள் பாக்கியத்தைக் கண்டு கொள்ளுவார்கள்.

இம்மையிலேயே போதகர் ஆண்டவருடைய வலது கரத்தில் ஏந்தப்பெற்ற நட்சத்திரங்கள் (அறி. 1, 16. 20). நீ அவருடைய கையிலேயே நிலைத்து, உன்னை அவர் கரம் உபயோகிப்பதற்கு இடம் கொடு. இல்லாவிட்டால் நீ விடிவெள்ளியானாலும் வானராஜ்யத்தினின்று விழவே விழுவாய். நீ அவர் கைக்குள்ளாக இரு. அவர் உன்னை உபயோகிக்க இடம் கொடு. அப்போது நீ பிரகாசம் பொருந்திய நட்சத்திரமாய் ஒளிவீசும்படி அவருடைய கை உன்னை உயர்த்தும்.

---

**10.** மனுப்புத்திரனே, உன்னை இஸ்ரவேல் வீட்டாருக்குக் காவற்காரனாக வைத்தோம். நீ நம்முடைய வாயினாலே வார்த்தையைக் கேட்டு, நம்முடைய நாமத்திலே அவர்களை எச்சரிப்பாயாக! சாகவே சாவாயென்று நாம் ஆகாதவனுக்குச் சொல்லுகையில் நீ அவனை எச்சரிக்காமலும், நீ ஆகாதவனைத் தன் ஆகாதவழியில் இராதபடிக்கு, எச்சரிக்கத் தக்கதாகவும் அவனை உயிரோடே காக்கத் தக்கதாகவும் அதை அவனுக்குச் சொல்லாமலும் இருந்தால், அந்த ஆகாதவன் தன் அக்கிரமத்திலே சாவான். ஆனால் அவன் இரத்தப்பழியை உன் கையிலே கேட்போம். நீ ஆகாதவனை எச்சரித்தும், அவன் தன் ஆகாத்தியத்தையும் தன் ஆகாதவழியையும் விட்டுத் திரும்பாதே போனானேயாகில் அவன் தன் அக்கிரமத்திலே சாவான்; நீயோ உன் ஆத்

மத்தைத் தப்பப் பண்ணினாய். அப்படியே நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதி கேடு செய்யும் போதும் நாம் அவன்முன் இடறை வைக்கும் போதும் அவன் சாவான். நீ அவனை எச்சரிக்காதபடியினால் தன் பாவத்திலே சாவான். அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை. அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்போம். நீயோவென்றால் நீதிமான் பாவம் செய்யாதபடிக்கு நீதிமானை எச்சரித்த பிறகு அவன் பாவம் செய்யாவிட்டால் அவன் பிழைக்கவே பிழைப்பான். ஏனெனில் எச்சரிக்கப்பட்டுப் போனான். நீயும் உன் ஆத்மத்தைத் தப்பப் பண்ணினாய் என்றார். எசே. 3, 17-21

---

ஆ, கர்த்தாவே, எத்தனையோ முறை இவ்வார்த்தைகள் என் மனதில் வந்தது, எவ்வளவு கலக்கத்தை உண்டாக்கிற்று. அப்பேர்ப்பட்ட ஒரு பட்டயம் என் தலைமீது தொங்கப்பெறுவதைப் பார்க்க என் வேலையை விட்டுவிடுவதே நல்லது என்று அடிக்கடி எண்ணினேன் என்பதை நீர் அறிவீர். ஆனாலோ உமது ஆவிக்கு மறைவாக எங்கே போவேன், உமது முகத்துக்கு மறைவாக எங்கே ஓடுவேன். ஆகையால் நான் உம்மண்டை தரிப்பதே எனக்கு நலம். என் சபையிலே மரித்துப் போனவர்கள் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுவிடும் படி அவர்களை எச்சரிக்கச் சமயம் இருந்தும் நான் அவ்வாறு எச்சரிக்காமல் போய்விட்டதை நினைக்கும் போது என் மனதுக்கு எவ்வளவோ கசப்பு. ஜீவனுள்ளவர்களை நினைக்கும்போதும் நான் உம்முடைய நிமித்தம் ஏற்கனவே அவர்களைக்கண்டிக்க வேண்டியவனாயிருந்தும் நான் அவர்களிடம் இன்னம் போகவில்லையே என்று வெட்கமடையவேண்டியது. சபையில் நான்செய்யும் பிரசங்கத்தை நினைக்கும் போதும் நான் எங்கும் பார்க்கிற பாவத்துக்கும் தெய்வ பயமின்மைக்கும் எதிரான சாட்சி கொடுக்கும்படியான தெய்வீக திடனும் பரிசுத்த வைராக்கியமும் எவ்வளவு அதிகமாய் என்னில் குறைவாய்த் தோன்றுகிறது. ஆ, கர்த்தாவே, நான் போக்குச் சொல்ல முடியாதே. உமது வார்த்தை எனக்கு விரோதமாயிருப்பதுமே நியாயம். அது இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைப்பார்க்கக் கருக்கானதும் அது ஊனையும் கணுக்களையும் பிரிக்குமட்டாக உருவிப் போகிறதுமாயிருக்கிறது. கர்த்தாவே என் பேரில் கிருபையாயிரும். நொறுங்குண்ட இருதய முடையவனாய்க் கெஞ்சுகிறேன். என் அக்கிரமம் நீங்க என்னைக்கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்; என்னிமித்தம் ஒரு ஆத்துமாவும் கெட்டுப்போக வேண்டாம். என்கையிலே ஒரு சகோதரனுடைய இரத்தப்பழியையும் கேட்கும்படியாய் நேரிடவேண்டாம். அதை நான் தாங்கமுடியாதே. உமது பரிசுத்தாவியை எனக்குக் கொடும். நான் பாவத்தை முழுப்பகையாய் பகைக்கச் செய்யும். தேவரீர் மீட்டுக்கொண்டவர்களை எவ்விதப் பாவமும் கெடுப்பதை நான் சகிக்காதபடி உமது பரிசுத்த ஆவி

யை எனக்குத்தாரும். நான் உள்ளக்கனிவாய் நேசிக்கும் பொருட்டு என் மாமிசமானவர்களுக்கு வருத்தமென்று பயந்து உண்மையற்ற இரக்கம் பாராட்டி என் இருதயத்தை விலக அடைத்துக் கொள்ளா தபடிக்குப் பற்றி எரிகிற உமது அன்பின் ஆவியை எனக்குத்தாரும். நான் என் சபையிலே இடறலாக நடவாமல், ரட்சிப்புக்கான ஊழி யம் செய்வதற்காக இரகசியமாகவும் வெளியரங்கமாகவும் எச்சரிக்கும் மேய்ப்பச் சிந்தையையும் காவல்காரன் சத்தத்தையும் எனக்குத் தந்து என் சொந்த ஆத்துமாவை ரட்சியும். ஆமேன்.

---

இவ்வார்த்தை எல்லா வார்த்தைகளிலும் அதிகக்கஷ்டமானதே; இதை நினைத்து முழங்கால் முடக்காத குரு உண்டா? அது கணுக் களையும் ஊனையும் உருவக் குத்தும். நான் இவ்வளவு உத்தரவாதத் தை நிறைவேற்ற முடியாது, அது மனுஷ பலத்துக்கு மேற்பட் டது, இம்மாதிரியாக என் சபையிலுள்ள ஆயிரக்கணக்கான பேரைக் கிட்டுவது முடியாது என்ற எண்ணங்கொண்டு இந்த உத்தரவாதத் தை விலக்கப் பிரயத்தனப்படலாம். இப்படி எண்ணிக்கொள் வது மாய்மாலமாகவும் துன்மனச்சாட்சியின் அறிகுறியாகவும் இருக் கிறது. காரியம் அப்படி யிருக்காது. அதுக்கு மாறாக, நீ உன்னாலா னதைச் செய்கிறாயோ, உன் மனச்சாட்சி உனக்குச் சொல்வதைப் பின்தொடருகிறாயா என்பதே கேள்வி. நீ மாமிசத்தோடும் இரத் தத்தோடும் யோசனைபண்ணாமல் உனக்குக் கிடைத்த ஒவ்வொரு பிரத்தியேகமான சமயத்திலும் ஆண்டவருடைய சத்தியத்தைக் கண் டிப்பும் அன்புமாய்ச் சொல்லியிருந்தால், பாவம் செய்த ஒரே ஆத்து மாவைமட்டுமல்ல, உன் பிரசங்கத்தைக்கேட்ட ஜனங்களை மட்டுமல்ல, வேறே பலரையும் எச்சரித்திருப்பாய். உன் ஊழியமானது உன் னிடத்திலிருந்து எட்டிப்போய்ப் பலவிதமாய் ஒருவர் பின்னொருவ ராய் ஆருக்கு அவசியமோ அவருக்கு உதவிசெய்து, அதிலுமதிகமாய் உன் சிறுசபையின் ஆவியைப் படிப்படியாய் பிடித்து, கடைசியாக அந்த ஆவியேயும்கூட உனக்கு உதவியாக சபையாருக்குப் புத்தி சொல்லும்.

மற்றவர்களை எச்சரிக்க வேண்டிய சமயங்களில் அதைச் செய் யாமலிருப்பதற்குப் பல சாக்குப் போக்குகளை வெகு திறமையாய்ச் சொல்லிக்கொள்ளுகிறோம். "அது பயன் படுமோ என்பதே சந்தே கம்; ஒரு வேளை அதனால் கசப்பு மிகுந்து காரியம் பின்னும் கேடாய்ப் போமோ" என்ற கேள்வி நமக்குள் உண்டாகலாம். அதற்குக் குரு சொல்ல வேண்டிய பதில்: நீ அதைக் கர்த்தருடைய கவலைக்கு விட்டு விட்டு, நியாயமானதைச் செய். முன்னொரு சமயத் தில் உன் கடமையை நிறைவேற்றியதால் பிறத்தியானுக்குச் சகாயம் கிடைக்கவும் உனக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகவும் கர்த்தர்

உன் போக்கை ஆசீர்வதித்தாரே, அதை நீ மறந்து போனாயோ! இன்னமும் ஒரு கேள்வி நீ போடக்கூடும்; அதாவது "இத்தருணத்தில் என்னைத் தப்பிதமாய் எண்ணவும் என்பேரில் வருத்தங்கொள்ளவும் என்னைப் பகைக்கவும் இடம் உண்டாகாதோ?" என்பாய். இதற்கு உத்தரவாக: "எனக்குப் பிறகே போ சாத்தானே, நீ தேவனுக்கு அடுத்தவைகளை அல்ல, மனுஷருக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறாய்" என்று சொல். "நாளைக்குப் போய் புத்தி சொல்லுவேன்" என்று சொல்லுவாயோ? சோம்பேறியே, பயங்காலியே, நேற்றும் அப்படித்தான் சொன்னாய். இதுவே காலம்; நீ தாமதம் செய்தது போதும். அவனோடு அதைப்பற்றிப் பேசுவதற்கு ஆண்டவர் ஒரு வேளை எனக்குக் கொடுக்கக்கூடிய நற்சமயத்தை நான் உபயோகிப்பேன் என்பாயோ? நல்ல சமயத்தைக் குறித்து ஆண்டவர் எசேக்கியேலுக்கு என்ன சொல்லுகிறார்? யோவான் ஸ்நானகனிடமும் விசேஷமாய்க் கர்த்தராகிய கிறிஸ்துவிடமும் கற்றுக்கொள். எழுந்திரு, தீவிரி, போ, சத்தியமும் அன்பும் உன்னை ஏவுவதற்கிசையச் செய். நான் கிறிஸ்துவின் ஊழியனே என்று வழியிலே ஜெபத்தோடு சொல்லிக்கொள். அப்போது கர்த்தர் தாமே உனக்கு முன்னாகப் போய் வாசலைத்திறப்பார். ஆமேன்.

'"உன் சபையின் இரத்தப்பழியை உன் கைகளில் வாங்குவோம்". இதினாலே உங்களுடைய குரு தன் தீர்ப்பை அறிய மனதானால் அறிவான். அதாவது அவன் உங்களில் ஒருவனுடைய ஆத்ம ரட்சிப்புக்காகக் கவலைப்படாமல் போனால், அவன் யாருக்காகக் கவலைப்படாமல் போகிறானோ, அவர்களைவிட அவன் தாழ்வான நரகத்தில் கிடந்து, அவர்கள் அவனுக்கு விரோதமாய்ச் செய்யும் கூப்பாட்டைக் கேட்க வேண்டியதாகும்: "நீ எங்களுக்காக எப்படிப்பட்ட குருவாய் இருந்தாய். நீ எங்களுக்கு ஒரு பிசாசாய் இருந்தாய், நீ குருவாய் இருந்ததில்லை. ஏழைப் பேதைமையான குடியானவர்களாகிய எங்களை விட உனக்கு அதிகம் தெரிந்திருந்தது, அல்லது தெரிந்திருக்கவேண்டும். நீ ஒன்றுமே ஆராய்ச்சி செய்யவில்லை. எங்களுக்கு நன்மையைப் போதிக்க நீ எவ்வளவு கஷ்டமும் எடுத்துக் கொள்ளவில்லை; உன் வயிற்றை நிரப்பிக்கொள்ள மட்டுமே நீ கவலையாயிருந்தாய்; எங்கள் ரட்சிப்பைக் குறித்து உனக்கு அக்கரையே இல்லை. விபசாரத்திலும் வெட்கக்கேடான ஜீவியத்திலும் நாங்கள் பிழைக்க எங்களை விட்டு விட்டாய். நாங்கள் நன்மையைப் பின்பற்றவும் ஜீவியம் மாறவும் எங்களை எச்சரித்ததே இல்லை. எங்களாலே நீ நித்தியகாலமாகச் சபிக்கப்பட்டவன். நீ எங்கள் குருவாய் இருந்ததை விட ஒரு விரியன்பாம்பாய்ப் பிறந்திருந்தால் நலம்! நாங்கள் உலகத்தில் பிறந்ததுக்கும் உன்னை எங்கள் குருவாக அடைந்ததுக்கும் ஐயோதான் கூறவேண்டும் என்று புலம்புவார்

கள். அவன் உங்கள் ஆத்ம ரட்சிப்பைக் கவனிக்காதிருந்தால் "அவனுடைய பூச்சி சாகாமலும் அவனுடைய அக்கினி அவியாமலுமிருக்கும்", அவன் மனச்சாட்சி அவனைக் கண்டிக்கும், நித்தியமாய் வாதிக்கும்; ஆகையால்தான் அவன் உங்கள் ஆத்ம விஜாரிப்புக்காரன் என்று பெயர் பெறுகிறான்; அவன் உங்களுக்காக எப்படிக் கவலைப்படுகிறான் என்பதைப் பற்றிக் கவனமாயிருப்பானாக! பேதுரு பல்லாதியுவின் (Peder Palladius) சபைவிசாரணைப்புஸ்தகத்திலிருந்து).'

---

**11.** நாங்கள் பராபரனுடன் வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் பராபரனுடைய பண்ணையும் பராபரனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள். 1 கொரி. 3, 9. என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதை நான் கேட்பதிலும் அதிகச்சந்தோஷம் எனக்கு இல்லை. 3 யோ. 4.

---

கர்த்தராகிய இயேசுவே, என் சொந்த நிர்ப்பந்தத்தினிமித்தமும் உலகம் உம்முடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளாததினிமித்தமும் நான் அடிக்கடி மனந்தளர்ந்து தடுமாறுவதைத் தேவரீர் கண்டிருக்கிறீர். ஆயினும் தேவரீர் ஒவ்வொரு சமயத்திலும் எனக்கு ஒத்தாசை பண்ணி, என்னைத் தேற்றி, என் ஆத்துமாவைப் பூரிப்பாக்கினீர். என்னுடைய முழு உத்தியோக காலத்திலும் உமது ஆவியின் உற்சாகம் என்னைச் சந்தித்தது. என் பேரிலும் என் உத்தியோகத்தின் பேரிலும் உமது கிருபையைப் பெரியதாக்கினீர். ஆகையால் நான் இப்போது திரும்பவும் உமக்குத் துதியையும் ஸ்தோத்திரத்தையும் எப்போதும் போலச் செலுத்துகிறேன். உமது சுவிசேஷத்தின் அருமையான உத்தியோகத்தை அன்றி நான் பூமியிலே விரும்பக் கூடிய எதையும் அறியேன் என்று ஆசீர்வாதக் கர்த்தராகிய தேவரீருக்கு முன் அறிக்கையிடுகிறேன். மெய்யாகவே நான் தனித்தவனல்லவே. மகிமையின் கர்த்தராகிய தேவரீரே என்னோடு உழைக்கிறீர். என்னாலே ஆகாதது உம்மாலே ஆகுமே. விழுந்ததும் கெட்டுப் போனதுமான மனுஷ ஜாதியிலிருந்து உமக்கென்று ஒரு புதிய மனித ஜாதியைச் சிருஷ்டிக்கவும், பரதீஸில் தேவரீர் கொடுத்ததைப்பார்க்க மகிமையும் நித்தியமும் பரிசுத்தமானதுமான ஜீவியத்துக்கென்று அவர்களை மறுபடியும் ஜெனிப்பிக்கவும் தேவரீர் ஏற்படுத்திய உத்தியோகத்தில் நான் நிற்கிறேன் என்பதை எண்ணும்போது என் ஆத்மா என் உத்தியோகத்தைக் குறித்துக் களிகூருகிறது. உலகத்துக்கென்று புது மனிதன் பிறக்கும்பொருட்டு பிரசவ வேதனைப்படுவதில் எனக்குப் பங்கு இருப்பது எனக்குப் பிரியம். உம்முடைய ஜனம் பூமியின்

தூளிலிருந்து எழும்பி மகிமையான வஸ்திரம் அணிந்து புது பூமிக்கு நேராக முன்னேறிப் போவதை நான் கூடக்காணும் பாக்கியத்தைக் கொடுக்கமாட்டீரா? ஆதலால், நேர்த்தியான இடங்களிலே வீதம் எனக்குக் கிடைத்தது; உலகத்தின் சகல ஐசுவரியத்தையும் அதன் மகிமையையும் எனக்குக் கொடுத்தாலும் உமது வீட்டிலுள்ள என் வேலையை மாற்றிக்கொள்ள மாட்டேன். எனக்கு இருமடங்காய் ஆண்டவராயிருக்கிறவரே, எல்லாக் காலத்திலும் உமக்கு நான் உண்மையாய் ஊழியம் செய்யவும் உமக்குப் பொருந்தியபடி உம்மைச் சேவிப்பதிலேயே சந்தோஷமடையவும் எனக்கு ஒத்தாசை செய்தருளும். ஆமேன்.

---

நாம் தேவனது உடன் வேலையாட்கள் என்பது குருக்களின் மகிமையும் சந்தோஷமும் பலமுமாம். நீ இந்த உலகத்தால் அற்பமாய் எண்ணப்படும்போது இந்த மகிமையால் உன்னை ஆறுதல் படுத்திக் கொள். நீ பகலின் பாரத்தையும் வெய்யிலையும் சகிக்கும்போது இச்சந்தோஷத்தால் உயிர்ப்பு அடைந்துகொள். உன் பலவீனத்தையும் தனிமையையும் உணரும்போது இதனால் உன் பலத்தைப் புதுபபித்துக் கொள்.

"என் பிதா இதுவரைக்கும் கிரியையை நடப்பிக்கிறார். நானும் கிரியையை நடப்பிக்கிறேன்" என்று இயேசு நாதர் (யோ. 5, 17.) சொல்லுகிறார். நாம் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உடன்வேலையாட்களாயிருக்கிறபடியால் (மத். 16, 20), நாம் இவ்வேலையை இடைவிடாமலும் இளக்கரியாமலும் செய்யக்கடமைப்பட்டுள்ளோம். அதைச் செய்வது நமக்குச் சந்தோஷத்தையும் அளிக்கும். ஆனாலோ நாம் மனச்சோர்வினால் நமது வேலையைச் செய்யாமல் விடுவது நம் சந்தோஷத்தைக் கெடுக்கும். அதுபோல் நாம் உறுதியற்று நமது வேலையை மனம்போன போங்கில் செய்வதினால் அச்சந்தோஷம் கெட்டுப்போம்.

நாம் உடன்வேலையாட்களாய் இருக்கும் தேவனுடைய வேலை என்ன? சீர்கெட்ட பரிசுத்தமற்ற நிர்ப்பாக்கியமான உலகத்தினின்று புதியதும் பரிசுத்தமும் பாக்கியமுமான மனுஷ ஜாதியை எழுப்புவதே. உலகம் ஒரு செழிப்பான நிலம்; அது களை மண்டிக் கெட்டுப் போய், ஒரு பயிர்பச்சையும் தலை எடுக்காதபடித் தடுக்கிறது. தேவனே பரிபூரண ஜீவன் நிறைந்த நித்தியவார்த்தையாகிய விதையை அதில் விதைக்கிறார்; விதையாகிய இயேசு கிறிஸ்துவே களையை மேற்கொள்ளவும் நித்திய அறுப்புக்கு வெண்மையான பயிர் நிலமாக்கவும் கூடியவர். உலகம் ஒரு அலங்காரமான மாளிகை; அதன் அஸ்திபாரமோ சேற்றில் அழுந்தியிருக்கிறது. அதன் விலையேறப் பெற்ற கற்கள் இங்கும் அங்கும் சிதறிக்கிடக்கின்றன. தேவனே முந்தினதைப் பார்க்க

விலையேறப்பெற்றதும் உரமானதும் புதியதுமான ஒரு அஸ்திபாரம் போட்டிருக்கிறார். பல இடங்களிலும் சிதறுண்ட கற்களைச்சேர்த்து, இந்த அஸ்திபாரத்தின்மேல் தாம் நித்திய காலமாய்க் குடியிருக்க விரும்புகிற தேவாலயமாகக் கட்டுகிறார். இந்தத் தேவனுடைய வேலையில் நாம் உடன் வேலையாட்கள். தேவனுடைய பண்ணையில் சிரமப்பட்டுக் குனிந்து அவருக்கு உண்மையாய் வேலை செய்கிறவனே, உனக்குச் சமாதானம்! ஆண்டவருடைய கட்டடத்தில் கொற்றனாகவும் சிற்றாளாகவும் வேலை செய்பவனே, ஆண்டவரால் உன் ஆத்துமாவுக்குச் சந்தோஷம் உண்டாக! மற்றவர்களெல்லாம் வீணுக்கு உழைத்தாலும் உங்கள் வேலை விருதாவாகக்கூடாது. நிலத்திலே பயிர் செழித்தோங்குவதையும் முற்றுவதையும் கட்டடம் உங்கள் கைவேலையால் எழும்புவதையும் இம்மையிலேயே பார்க்கப்பெறுவீர்கள். குறைவான விளைச்சலையும் வறண்டுபோன வசந்த காலத்தையும் கவனிப்பானேன். கட்டடத்தை மறைக்கிறசாரத்தையும் வேலைநடந்தேறும் பொதுவான விர்த்தியையும் வேலையிலே கறைப்பட்டுப்போகிற வஸ்திரங்களையும் பார்க்க மட்டுமே கண்ணுயிருக்கிறாய். இவைகளெல்லாவற்றினாலும் பின்னாலே உண்டாகக் கூடியதையும் கவனிக்கவேண்டுமே. தேவனுடைய உடன் வேலையாட்களே, தேவனுடைய பண்ணையின் பலனையும் கட்டடத்தையும் பாருங்கள்.

குருமாராகிய நாம் அடிக்கடி அற்பரும் நிர்ப்பந்தருமாகக் காணப்படுகிறோம். நமது பெரிய வேலையின்மேல் நமது பார்வை அதிகமாய்ச் செல்லுமானால், நாம் மிகப்பெரியவைகளைச் செய்ய ஆவியிலே வளர்ந்து பெலனடைந்து சமர்த்தராவோம்.

தன்பிள்ளைகள் வளர்ந்து முன்னுக்கு வரக்காண்பது ஒரு தகப்பனுக்குப் பெருஞ் சந்தோஷம். ஞான ஆவிக்குரிய விஷயங்களில் தகப்பனாயிருக்கிற குருவின் சந்தோஷமோ அதை விடப் பெரியது. என்னால் திடப்படுத்தப்பட்டவன் உத்தமமான கிறிஸ்தவ விசுவாசத்தின் வழியிலே நடப்பதையும், என்பிரசங்கத்தைக் கேட்டவர்களிலொருவன் கிறிஸ்துவின் அன்பைப்பார்க்கும் பார்வையைப் பெற்று அவருடைய வெளிச்சத்திலே நடப்பதையும், நான் சந்தித்த வியாதியஸ்தரிலொருவன் மரணத்திலே சந்தோஷமான அறிக்கை செய்வதையும் நான் பார்க்கும்போது யோவானோடு சேர்ந்துகொண்டு: "என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதை நான் கேட்பதிலும் அதிகச்சந்தோஷம் எனக்கு இல்லை" என்று சொல்லுவோம்அல்லவா?

"திரித்துவத்தின் பண்டிகைக்குப் பிந்தின 3ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷ வாக்கியத்தைப்பற்றிய பிரசங்கத்தின் மூலமாய் ஆதாயப் படுத்தப்பட்ட ஒரே பாவியின் பேரிலாவது பரலோகத்தில் சந்தோஷம் இல்லாமல் போகாது என்பதை அற்பமான தானிய

மணி போன்ற இவ்வாறுதல் வெகு காலத்துக்கு ஒரு விசை மட்டும் நமக்குக் கிடைத்தாலும், அது அசாதாரணமான உயிர்ப்பு அளிப்பது என்று ஒவ்வொரு குருவும் அறிந்திருக்கவேண்டும்'' என்று பெஙெல் (Bengel) சொல்லுகிறான்.

---

**12.** போடப்பட்ட அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்து என்ற அஸ்திபராமே அல்லாமல் வேறு அஸ்திபாரத்தை ஒருவனும் போடக்கூடாது. ஆனால் ஒருவன் இந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கல்லுகள், மரங்கள், புல்லு, தாளடியைக் கட்டினால் அவனவனுடைய கிரியை வெளியாம், நாளானது அதைத்தெரியப்படுத்தும்; ஏனெனில் அக்கினியினால் வெளியாக்கப்படும். அவனவனுடைய கிரியை எப்படிக்கொத்ததென்று அக்கினியானது சோதிக்கும். ஏறக்கட்டின ஒருவனுடைய கிரியை நின்றால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவனுடைய கிரியை வெந்து போனால், அவன் நஷ்டப்படுவான்; தானேவெனில் ரட்சிக்கப்படுவான். ஆகிலும் அக்கினியில் அகப்பட்டுத் தப்பினதுபோல் தானே. நீங்கள் பராபரனுடைய தெய்வாலயமாயிருக்கிறீர்கள் என்றும் பராபரனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியீர்களோ. ஒருவன் பராபரனுடைய தெய்வாலயத்தைக் கெடுத்தால், அவனைப் பராபரன் கெடுப்பார்; ஏனென்றால் பராபரனுடைய தெய்வாலயம் பரிசுத்தமாயிருக்கிறது, அது நீங்களே. 1 கொரி. 3, 11 – 17.

---

கர்த்தாவே, தேவரீர் இந்த என்னுடைய சபையிலே பரிசுத்த ஞானஸ்நானத்தாலும் பற்பல காலங்களில் உமது போதகர் கர்த்தராகிய கிறிஸ்துவைக் குறித்துச் செய்த உண்மையான போதனையினாலும் ஏற்கனவே சரியான அஸ்திபாரம் போட்டிருக்கிறீர். இந்த அஸ்திபாரத்தின்மேல் ஏறக்கட்ட என்னை நியமித்திருக்கிற தேவரீர் என் ஜெபத்தைக்கேளும். போடப்பட வேண்டிய இந்த ஒரே அஸ்திபாரத்தைப் பெயர்த்து ஒருக்காலும் எனக்கும் என் சபைக்கும் கேடு வருவித்துக் கொள்ள விடாதேயும். இது என் முந்தினவிண்ணப்பம். இந்த என்னுடைய பெரிய விண்ணப்பத்தைக் கேளும். என் சொந்த விஷயத்திலும் சபையின் நடுவில் என் வார்த்தையிலும் செய்கையிலும் சிலுவையிலறையுண்டு உயிரோடெழுந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின் மேல் நிலைக்க உமது பரிசுத்த ஆவியைத்தாரும். நான் இந்த அஸ்திபாரத்தின்மேல் ஏதோ மனுஷ எண்ணங்களையோ அரைகுறையான போதனைகளையோ கட்டாதபடி என்னைக்காரும். இல்லாவிட்டால் என் சபையார் உறுதியற்றவர்களும் உண்மை தப்பினவர்களுமாகி கிறிஸ்தவர்கள் ஆவார்களே. அவர்கள் இங்கேயும் கர்த்தருடைய வருகையின் நாளிலும் அக்கினிச்சோதனையிலும்

நிற்கமாட்டார்களே. ஆண்டவரே, நான் சரியான அஸ்திபாரத்தின் மேல் நிலைக்கவும் உமக்கே உழைக்கவும் சித்தமுள்ளவனுனதினுல் அக்கினிக்குத் தப்பினது போல் நான் ரட்சிக்கப்படக் கூடும்; என்றாலும் எனக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆத்துமாக்களை என் ஊழியத்தின் பலனுக உமது சமுகத்துக்குக் கொண்டுவராமல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே என்புகழ்ச்சியை இழந்தும் உமக்கு முன்பாகத் தனியே பிரவேசிக்க வேண்டுமானுல் நான் அதை எப்படிச் சகிப்பேன். ஆதலால் அஸ்திபாரத்தின் மேல் சத்தியமும் கலப்பற்றதுமான தெய்வ வசனத்தின் போதகத்தால் கட்ட எனக்கு உதவி செய்யும். நான் ஆவிக்குரிய ஞானத்தாலும் விடாமுயற்சியினுலும் தைரியத்தினுலும் கட்டுவேனுக! அதனுல் என் சபையார் உத்தமரும் இங்கும் அங்கும் அக்கினிச் சோதனைக்கு நிற்பவரும் கிறிஸ்துவின் நாளில் புகழ்ச்சிக்கும் பலனுக்கும் இருப்போருமாவார்களாக. இதோ, இதற்கே நான் துணிந்து உம்மைக் கெஞ்சுகிறேன். அது எவ்வளவு பெரிய விண்ணப்பமாயிருந்தாலும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கப்படுவேன், ஆமேன்.

---

தெய்வ ஊழியத்துக்கு வரக்கூடிய மூன்று விதமான முடிவை இங்கேபார்:

1) சரியான அஸ்திபாரத்தின்மேல் நிற்காமையாலும் சரியாய்க் கட்டாமையாலும் ஊழியக்காரனுக்கும் ஊழியத்தின் பலன்களுக்கும் கேடு. ஒருவன் தேவனுடைய தேவாலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார்.

2) அஸ்திபாரத்தின்மேல் தான் நின்றும் சபையில் சரியான விதமாய்க் கட்டடவேலை செய்யாமையால் (அக்கினியில் அகப்பட்டுத் தப்பினதுபோல்) குரு ரட்சிக்கப்பட்டும் அவனுடைய வேலையின் பலன் கெட்டுப்போகிறது.

3) அஸ்திபாரத்தில் ஊன்றிச் சபையிலே சரியாய்க் கட்டட வேலை செய்வதினுலே குருவுக்கும் அவனுடைய கிரியைக்கும் ரட்சிப்பு உண்டு.

குருக்களாகிய நம்மிலெத்தனை பேர் முதல்வகுப்பார், இரண்டாம் வகுப்பார், மூன்றும் வகுப்பார்? நான் எந்த வகுப்பில் இருக்க விரும்புகிறேன்? அது எனக்குத் தெரியுமே. கர்த்தாவே, எனக்கு உதவிசெய்யும்.

ஒரு குரு தேவனுடைய தேவாலயத்தைக் கெடுக்கக் கூடும். தேவனுடைய தேவாலயத்தின் பாகமும் சாயலுமாகிய தனிச் சபையைக் கெடுக்கக் கூடும். உண்மையற்ற குரு சபையை எவ்வித நிலைமையில் விடக்கூடும் என்பதை நடுக்கத்தோடு பார்க்கிறோம். அச்சபையில் பெரும்பாலார் உற்சாகமும் பலமுமற்றவர்கள். கொஞ்

சமாய்க் காணப்படுகிற கிறிஸ்தவ ஜீவியமும் வரவரக் கெட்டுப்போய் கட்சிப் பிரிவினைகளுக்கு இடமாய்ப் போகிறது. அப்படிப்பட்ட ஒரு குருவின் வேலையினால் தலைமுறை தலைமுறைக்கு எப்பேர்ப் பட்ட விதை முளைக்கிறது? அவனுக்குப் பின்வரும் குருக்கள் அவன் பேரில் ஐயோ கூற ஏவப்படுகிறார்கள்! அவன் கர்த்தருக்கு முன்பாக நிற்கப் போவதை யோசிக்கும்போதோ அப்படிச் செய்யத் துணியார்கள்.

அந்த அஸ்திபாரத்தின்மேல் மரம், புல், தாளடி இவைகளைக் கட்டுவதற்கு இவ்விடம் சில திருட்டாந்தங்கள் சொல்லுவேன் : மறு பாஷையாய்ப் பேசுவதுபோல் மனுஷருக்கு விளங்காதபடி ஒருவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை மனுஷ ஞானத்தோடும் சாதுரியத்தோடும் சம்பந்தப்பட்டதாய் அறிவித்தால் அது எவ்விதப் பலனும் செய்யாமல் போகிறது. பாவம் அவ்வளவு பயங்கரமல்ல என்கிறாப்போல், சத்தியத்தைக் குறைக்கும் விதமாகக் கிறிஸ்துவிலுள்ள கிருபையைப் பிரசங்கிக்கிறதும், மனுஷன் தன் கிரியைகளினால் தன்னை இரட்சிக்கக் கூடுமென்கிறாப்போல் கிருபையைக் குறைக்கும் விதமாகக் கிறிஸ்துவிலுள்ள சத்தியத்தைப் போதிக்கிறதும் உதவாது. சுத்த போதகத்துக்கான வைராக்கியம் மிதமிஞ்சி உடையவர்களாய்க் கிறிஸ்து கற்பித்ததை எல்லாம் கைக்கொள்ளப் போதிப்பதைப் பிரசங்கியின் கடமையாக்காமல், கிறிஸ்து கற்பித்ததை மனுஷருக்குப் போதிப்பதே பிரசங்கியின் கடமை என்று எண்ணுவதும் சபையைப் பாழாக்கும். ஆத்மாக்களைக் கண்டிப்பாய் எச்சரிக்காமல், போதகர் அவர்களைத் தமது பக்கம் வசப்படுத்துவது ஒரு மோசமான சாமர்த்தியம். போதகத்திலும் பிரசங்கத்திலும் ஆத்ம விஜாரிப்பிலும் மூன்றும் பிரிவை மறக்கிறதும் சாக்கிரமெந்துக்களை உபயோகியாமலிருப்பதும் சபைக்குக் கேடாகும். ஒரு குரு பல வேலைகளைத் துவக்கி ஒன்றிலும் உறுதியாய் நிலைநிற்காமலிருந்தால், அவன் சபை பாழாய்க்கிடக்கிற ஊர்போலாகும். அப்பேர்ப்பட்ட குருவின் ஆத்மவிஜாரணை பாழ், அவனது கிறிஸ்தவ முயற்சிகள் பாழ், பிரசங்கம் பாழ். கிறிஸ்துவின்பேரில் இத்தன்மையான குருவுக்கு விசுவாசம் இருக்கக்கூடும், ஆனால் ஊழியத்திலோ உண்மையைக் காணோம். இப்படிப்பட்ட ஊழியத்தின்பலன் என்ன? தனித்த ஆட்களைக் கவனித்தாலும் சபையைப் பார்த்தாலும் பலவீனமான உறுதியற்ற போலிக் கிறிஸ்து மார்க்கமே. உபத்திரவமாகிய அக்கினியில் அது ஒழிந்தேபோம் (மத். 13, 21). போலிக் கிறிஸ்தவர்களையும் உத்தம கிறிஸ்தவர்களையும் பிரிக்கப்போகிற கர்த்தருடைய நாளின் அக்கினியை அப்பேர்ப்பட்ட கிறிஸ்தவர்கள் எப்படிச் சகிப்பார்கள்?

எத்தனை குருமார் இரட்சிக்கப்பட்டும் அவர்கள் மரணம் அக்கினிக்குத் தப்பினதுபோலாகும். "ஒரு குரு இரட்சிக்கபட்டவராய் மரிப்பினும் அவன் மகிழ்ந்து மரிப்பது அரிதாகும்". "மகிழ்ந்து மரிப்பது அரிதாகும்" என்பதை நாம் முற்றிலும் ஒத்துக்கொள்ளாதே போனாலும் இதில் அடங்கியிருக்கிற நல்ல எச்சரிப்பை யோசிப்பது உசிதம்.

கர்த்தர் தமது வசனத்திலே பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் முதலியவைகளைக் கட்டுவதற்கென்று உனக்குக் கொடுக்கிறார். போரிலும் சமாதானத்திலும் பரிசுத்த ஆவியானவருடைய நடத்துதற்படியே அவைகளால் மட்டுமே கட்டு, முழுவதுமே அவைகளால் கட்டு. நீ கட்டிவருவதை இப்போது அறியமாட்டாய். உன் சபையின் ஆத்மாக்கள் புதிய எருசலேமில் கர்த்தருடைய நித்திய தேவாலயத்தில் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களாகும்படி நீ மனுஷருடைய உள்ளங்களை ஊன்றக் கட்டுகிறாய். இப்படிச் செய்வாயானால் தேவன் விரும்பும் பிரகாரம் உன் சொந்த ஜீவியத்தையே கர்த்தருடைய சித்தத்துக் கிசைந்த ஆவிக்குரிய மேன்மையும் பாக்கியமும் நிறைந்த ஜீவியமாக்குகிறாய்; உன் போதக நிலையையும் நீ ஊன்றக்கட்டி, கர்த்தரின் கரத்தில் போதகனுக்குரிய பலனைப் பெறுகிறாய்.

---

# III. ஊழியனுடைய அழைப்பு.

**13.** அப்போது இயேசு சீமோனுடனே: பயப்படாதே, இது முதல் மனுஷரைப் பிடிக்கிறவனாய் இருப்பாய் என்றார். லூக். 5, 10.

அவர்கள் அசனம் பண்ணின பிற்பாடோ, இயேசு சீமோன் பேதுருவுடனே: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் என்னைச் சிநேகிக்கிறாயோ என்றார். அவன் அவருடனே: ஆம், ஆண்டவரே, உம்மைச் சிநேகிக்கிறேன் என்கிறதை நீர் அறிவீர் என்றான். அவர் அவனுடனே: என் ஆட்டுக்குட்டிகளை மேய் என்றார். மறுபடியும் இரண்டாந்தரம் அவனுடனே: யோனாவின் குமாரனாகிய சீமோனே, என்னைச் சிநேகிக்கிறாயோ என்றார். அவன் அவருடனே: ஆம், ஆண்டவரே, உம்மைச் சிநேகிக்கிறேன் என்கிறதை நீர் அறிவீர் என்றான். அவர் அவனுடனே, என் ஆடுகளை மேய் என்றார். மூன்றாந்தரம் அவனுடனே: யோனாவின் குமாரனாகிய சீமோனே, என்னைச் சிநேகிக்கிறாயோ என்றார். மூன்றாந்தரம் தன்னுடனே: என்னைச் சிநேகிக்கிறாயோ என்று அவர் சொன்னபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு அவருடனே: ஆண்டவரே, நீர் எல்லாத்தையும் அறிந்திருக்கிறீர்; உம்மைச் சிநேகிக்கிறேன் என்கிறதை நீர் அறிவீர் என்றான். யோ. 21, 15–17.

அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, தேவரீர் உமது ஆடுகளை ஆருடைய நம்பிக்கைக்கு ஒப்புவித்திருக்கிறீரோ அவர்களால் சிநேகிக்கப்பட விரும்புகிறீர். மேய்ப்ப ஊழியத்துக்கு ஆயத்தமான என்னையும்: நீ 'என்னைச் சிநேகிக்கிறுயோ' என்று கேட்கிறீர் என்பதாய் என் உள்ளத்தில் உணர்ந்துகொள்ளுகிறேன். என் உள்ளம் உமக்குமுன்பாகத் திறந்து கிடக்கிறது. என் இளவயதின் பாவங்களை தேவரீர் அறிந்திருக்கிறீர். என்னில் எவ்வளவு மந்தகுணம் இருக்கிறது என்றும் என் சிந்தனை எவ்வளவு சிதறிக் கிடக்கிறது என்றும் தேவரீர் அறிவீர். ஆதலால் தேவரீர் என்னை நோக்கிப்பார்த்து, அப்படிக் கேள்விகேட்கும்போது நான் கலங்குகிறேன். ஏனெனில் சந்தோஷமாய் நான் உத்தரவு சொல்ல முடியாது. ஆயினும் கர்த்தாவே, தேவரீர் இந்த என் நிலைமையை அறிந்தும் என்னை முழு இருதயத்தாலும் நேசிக்கிற உம்மை நான் நேசிக்க விரும்புகிறேன் என்று அறிவீர். தேவரீர் எனக்குமுன்பாய் மெத்தனவும் இரக்கமும் நிறைந்தவராய் நின்று, பாவ மனுஷனுகிய எனக்கு மன்னிப்பளிக்கவும் என்னைத் தேற்றவும் என்னைப் பலப்படுத்தவும் என்னை உபயோகப்படுத்தவும் எனக்கு நேராய் உமது கரத்தை நீட்டுகிறீர். ஆதலால் நான் உமது திருப்பாதங்களில் விழுந்து அழுது: கர்த்தாவே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் 'உம்மைச் சிநேகிக்கிறேன்' என்பதை நீர் அறிவீர் என்று துணிந்து சொல்லுகிறேன், ஆமேன்.

---

'இதுமுதல்' என்பது என்னுடைய கிருபையைப்பற்றியும் உன் பாவத்தைப்பற்றியும் நீ இந்த அனுபவங்களை அடைந்ததுமுதல் என்ருவது என் வார்த்தை நடப்பிப்பதை நீயே மீன்வேட்டையினுல் கண்டு கொண்டதுமுதல் என்ருவது 'பாவியான மனுஷனுயிருக்கிறேன் என்பதை நீ அறியப்படித்தது முதல் என்ருவது ஆண்டவரே என்னைவிட்டுப் புறப்படும் என சொல்லியும் என் பாதங்களண்டையில் நிலைத்திருந்தது முதல் (நீ மனுஷரைப் பிடிக்கிறவனுய் இருப்பாய்)என்ருவது பொருள்படும்.'இதுமுதல்' என்பதில் கொஞ்சமாவது அறியாமல், தேவ ஊழியத்தில் நாம் பிரவேசிக்கக்கூடாது. இந்த வார்த்தையின் பொருளை அதிகமதிகமாய் உணர்ந்துகொள்ளக் கற்ருலன்றி தேவ ஊழியத்தில் நாம் நிலைத்திருக்கக்கூடாது. உன் அழைப்புக்கு இதுவே அஸ்திபாரம். இதைக்குறித்துக் கிஞ்சித்தும் அறியாதவன் அழைப்பைப் பெற்றவனே அல்ல என்பது நிச்சயம்.

இதோ, தங்களை அபாத்திரராக உணர்ந்து பயந்து: 'என்னை விட்டுப் புறப்படும்' என்றும் 'நான் உம்மை விடமாட்டேன்' என்றும் சொல்லுகிற ஊழியரை ஆண்டவர் எவ்வளவோ தய

வாய் ஏற்றுக்கொள்ளுகிறார். 1) 'பயப்படாதே!' 2) 'இதுமுதல்' 3) 'நீ மனுஷரைப் பிடிக்கிறவனாய் இருப்பாய்' என்று அவர்களுக்குச் சொல்லுகிறார். இது ஒப்பில்லாத ஆறுதலும், பலமும் வாக்குத்தத்தமுமாம்.

'இது முதல்' என்பதைத் தன் ஜீவியத்தில் கொஞ்சமாவது உணர்ந்தவன் அடுத்தவர் பேரில் அதிசய வல்லமை உடையவன். அவன் தன்னை உணர்ந்தவன், தேவனண்டை வந்தவன். ஆதலால் அவன்மனுஷரைப் பிடிக்கத்தக்கவன். தன் தொழிலின்பேரில் விசேஷித்த பிரீதியில்லாமல் அப்பியாசத்தினால் மாத்திரம் அதைக் கற்றுக்கொண்ட ஒரு தொழிலாளி தான் திறமையற்றிருப்பதினால் கடைசியிலே வெட்கத்துக்குள்ளாகக் கூடியதுபோல் அவன் வெட்கத்துக்குள்ளாக மாட்டான்; அவன் வேலை நிச்சயமாய் வாய்க்கும்.

நாம் தேவ ஊழியத்தில் பிரவேசிக்கு முன் கொடுக்கவேண்டிய பரீக்ஷைகளில் தேறினும் நமக்கு இன்னொரு முக்கிய பரீட்சையும் உண்டு: 'யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னைச் சிநேகிக்கிறாயோ' என்பதே அது. அது ஒரு விசை மாத்திரமல்ல மூன்று விசை பேதுருவுக்குப் போடப்பட்டதினால் விபரிக்கமுடியாத அன்பு நிறைந்த இந்தச் சிறந்த பரீக்ஷைக் கேள்வி உள்ளத்தில் மிகவும் ஆழ்ந்து ஊடுருவிப்போக வேண்டியதும் செம்மையும் சத்தியமுமான பதிலை எதிர்பார்ப்பது மாயிருக்கிறது என்று அறிந்துகொள்ளக் கடவோம். தவிரவும் நமது வேலையைக் குறித்து மனுஷர் எவ்விதமாய்ப் புகழ்ந்தாலும் இப்பரீட்சை நின்று போகாமல் நமது முழு ஊழியத்திலும் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பதையும், அது உண்மையான தேவ ஊழிய சித்தியின் ஆழ்ந்த இரகசியம் என்பதையும் இயேசுநாதர் இக்கேள்வியை மூன்று விசை கேட்டதினால் நாம் அனுமானிப்போமாக.

கர்த்தர் தாம் சிநேகிக்கிறவர்களைத் தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு ஒப்புவிக்கிறார். மற்றவர்கள் சீக்கிரத்தில் களைத்துப்போய் (யோ. 10, 12) உண்மை தப்பிப்போவார்களே. அவரைச் சிநேகிக்கிறவர்களோ அவருடையவர்கள் யாவரையும் சிநேகித்து ஆடுகளுக்காகப் படும் கரிசனத்தில் அன்பினால் பிறந்த உண்மை, நிலைவரம், ஞானம் ஆகியவற்றை இழந்தேபோக மாட்டார்கள்.

நீ நிச்சயமாக உபயோகிக்கக்கூடிய ஒன்றைப் பேதுருவிடத்திலும் கற்றுக்கொள். நான் உம்மைச் சிநேகிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்று நீ முழுவதும் சரியாய் பதில் சொல்ல முடியாதே போனாலும், கர்த்தர் உனக்குள்ள சொற்பத்திலும் திருப்தியடைந்து "ஆம் ஆண்டவரே உம்மைச் சிநேகிக்கிறேன் என்கிறதை நீர் அறிவீர்" என்று சொல்லுகிற உன்னை ஏற்றுக்கொள்வார். நமது அன்பு மிகவும் குறைவுள்ளதாயும் பலவீனமுள்ளதாயும் இருக்கிறது என்று

துக்கத்தோடு அறிக்கையிட்டு ஆண்டவர் அதை உத்தமமும் நித்திய மும் மான அன்பாக மாற்றக் கூடியவர் என்றும் இம்மாறுதலினிமித்தமே அப்பலவீன அன்பை அங்கீகரிப்பார் என்றும் சந்தோஷப்படு.

---

**14.** இதுகளை நீ சகோதரருக்குச் சொல்லி வந்தால், நீ விசுவாசத் தின் வார்த்தைகளிலும் நீ பின்சென்ற நற்போதகத்தின் வார்த்தைகளிலும் வளர்ந்தவனாயிருந்து இயேசு கிறிஸ்துவினுடைய நல்ல ஊழியக்காரனாயிருப் பாய். 1 தீமோ. 4, 6.

நீயோவெனில் கற்று மெய் என்று உணர்ந்ததுகளில் நிலைத்திரு; ஏனெ னில் ஆராலே கற்றாய் என்கிறதும் இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவா சத்தினால் உன்னை இரட்சிப்புக்கு ஞானமுள்ளவனாக்கப் பலனான பரிசுத்த எழுத்துக்களைச் சிறுவயது துவக்கி அறிந்திருக்கிறாய் என்கிறதும் உனக் குத் தெரியும். 2 தீமோ. 3, 14. 15.

---

அன்புள்ள கர்த்தாவே, தேவரீர் என் சிறுவயது முதல் உமது வசனத்தின் பாக்கியமான அறிவுக்கு என்னை நடத்தி, நான் கல்வி கற்கும்போது என்னை உமது வசனத்தின் தெளிந்த ஊற்றண்டை நிறுத்தி, நான் அதின் பெருக்கிலே மொள்ளவும் வானராஜ்யத்துக் கென்று படித்துத் தேர்ந்த சரியான வேதபாரகனாகவும் கிருபை செய்ததற்காக உம்மைத் தோத்திரிக்கிறேன். இவ்வளவு தயவைச் செய்த தேவரீர் என்னை வீண் சிந்தையும் பெருமையுமான வால வயது ஜீவியத்துக்கும் பொய்ப் போதகத்துக்கும் விலக்கிக்காரும். நான் உம்முடைய பரிசுத்த ஆசாரியக் கூட்டத்தில் இருக்கத்தக்க தாக உம்முடைய வசனத்தை என் உள் மனிதனுக்குப் போஜன மாக்கி, என்னில் விசுவாசமும் பரிசுத்தமும் நற்கிரியையும் விர்த்தி அடையும்படி உமது பரிசுத்த ஆவியின் மூலமாய் எனக்கு ஒத்தாசை பண்ணும். உமது பரிசுத்த ஆவியின் மூலமாய் இயேசுவினிமித்தம் இதை எனக்குச் செய்தருளும். இதோ உம்முடைய பரிசுத்த சபை யில் விசேஷித்த ஆசாரிய ஊழியத்துக்கென்று என்னை ஆயத்தம் செய்கிறேனே. ஆதலால் நான் விசுவாசத்தின் வார்த்தையிலும் நற் போதகத்திலும் ஆழ்ந்துபோகவும் உமது சுவிசேஷத்தின் பாக்கிய மான இரகசியத்தை அறிந்துகொண்டு பழையவைகளிலும் புதியவை களிலும் எனக்கு ஒரு பொக்கிஷத்தைச் சேர்த்து உமது சபையின் உண்மையுள்ள உக்கிராணக்காரனாக ஊழியம் செய்யவும்என் அறி வைத் தெளிவாக்கி என்சித்தத்தைச் சுத்திகரித்தருளும். கர்த்தரா கிய தேவனே, நான் என் ரட்சிப்பைக் குறித்தே நிச்சயமுடையவ னாகவும் உம்மண்டைக்கு நடத்துகிற ஜீவனும் சத்தியமுமான வழியை

மற்றவர்களுக்குப் போதிக்கத் தக்கதாகவும் உம்முடைய வார்த்தையை நான் கையாடும்படி எனக்குத் துணைசெய்யும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, ஏற்கனவே சபையின் குருக்களாய் இருந்து வந்திருக்கிறவர்களும் எங்களுக்கு ஒத்தாசை வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளுகிறவர்களும் காலத்தின் அடையாளங்களைக் கவனிக்கிறவர்களுமாகிய நாங்கள் ஊழியத்துக்கென்று தங்களை ஆயத்தப்படுத்துகிற வாலிபருக்காக உம்மை நோக்கி வேண்டுதல் செய்கிறோம். அவர்களை உம்முடைய இருதயத்துக்கேற்ற வல்லமையும் பரிசுத்தமும் பொருந்திய ஆசாரியக்கூட்டமாக்கியருளும். உமது சபைக்கும் உலகத்துக்கும் அவர்களை வெளிச்சமாக்கும், உப்பாக்கும்! அவர்களுடைய போதகருக்காகவும் வழிகாட்டிகளுக்காகவும் நாங்கள் கெஞ்சுகிறோம். தேவரீர் அவர்களை உம்முடைய ஆவியாலும் ஞானத்தாலும்நிரப்பி, அவர்கள் சத்தியத்தின் அஸ்திபாரத்தை இளமையான உள்ளங்களில் போடவும் எல்லா விஷயங்களிலும் பரிசுத்தத்துக்கும் விர்த்திக்கும் ஏவிக்கொண்டேயிருக்கிற ஜீவனுள்ள பிள்ளைகளைப் பெறக்கூடிய ஞானப் பெற்றோராகும்படி கிருபை செய்தருளும் சுவாமி. ஆமேன்.

---

தேவ ஊழியத்துக்கென்று சரியான ஆயத்தம் இரு பங்கானது. 1) விசுவாசத்தின் வார்த்தைகளிலும் நற்போதகத்திலும் வளர்ந்திருப்பது 2) "நீ அவைகளைப் பின்சென்றாய்" என்பது, இவைகளே ஆளுக்கடுத்த நேரான அழைப்புக்கு ஆதாரம். இவைகளே அவ்வழைப்பை ஊழியக்காலமெல்லாம் நிலையான அழைப்பாக்கும்.

"விசுவாசத்தின் வார்த்தைகளில் வளர்ந்தவன்" என்பது ஆரைபற்றிச் சொல்லலாம். அப்போதைக்கப்போது மாத்திரம் வசனத்தைக் கையாடுகிறவனைப்பற்றி அல்ல, அறிவைப் பெற அதை ஊன்றிப் படித்துவருகிறவனைப்பற்றி அல்ல, கடமைக்கென்று அதைப் படித்துவருகிறவனைப் பற்றியுமல்ல, தேவவசனத்தால் ஞான ஜீவியத்தில் வளர வேண்டுமென்றே அதை தனக்கு ஆத்ம ஆகாரமாக உபயோகிக்கிறவனைப் பற்றியே. இப்படிப்பட்டவன் கிறிஸ்துவின் நல்ல ஊழியக்காரனுவான். இத்தேவவசனம் அவனுடைய முழு உள்ளத்திலும் இரத்தம்போல் பாய்ந்து அவனில் எங்கும் மாறுதலை உண்டாக்கும்; ஓரளவாய்ச் சுகமுள்ள சரீரத்தம் சுகத்துக்கேற்ற மாறுதலைச் சரீரத்தில் செய்யுமாப்போல், ஒரு பலனுள்ள இருதயம், தெளிவுள்ள கண், ஆயத்தமான வாய், புத்தியும் தீவிரமுமான எண்ணம் இவைகளை உண்டாக்கும். அவன் அனுதின ஜீவியத்தில் அதை உபயோகிப்பதினால் அவன் ஆத்ம ஜீவியத்திலும் அது பலன் செய்து அவனை வசனத்தின் ஊழியனுக்குகிறது.

முற்காலத்தில் நான் வேதத்தில் ஒருபாகத்தை தினந்தோறும் வாசிப்பேன் என்று குருக்கள் ஆணையிடவும்கூடக் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். தற்காலம் நாம் அவ்வளவு தூரம் போகாதேபோனாலும் ஒவ்வொரு குருவும் அதைச் சுயாதீனமாய்ச் செய்வது அவனுடைய கிறிஸ்தவ ஜீவியத்துக்கும் குரு ஜீவியத்துக்கும் உதவியாயிராதா?

வசனத்தை ஒரு குரு மூன்று விதமாய்க் கையாடலாம்; அவை களாவன: 1) சொந்த எழுப்புதலுக்காக சிறு பாகங்களை வாசித்தல் 2) முழு வேதத்தின் ஆவியிலும் அவைகளின் சரித்திர சம்பந்தத்திலும் புகுந்துவரும்படி வேதத்தை ஆகமங்கள் ஆகமங்களாக வாசித்தல் 3) பிரசங்க ஆயத்தமான படிப்பு அல்லது சாஸ்திர பயிற்சிக்கான ஆராய்ச்சி. ஆயினும் வார்த்தையை எவ்வளவுக்குப் பின் செல்லுவானோ (1 தீமோ. 4, 6) அவ்வளவாக அது ஆத்மாவுக்குள் பாய்ந்து, அவன் தேவனுடைய மனுஷனாகவும் கிறிஸ்துவின் நல்ல ஊழியனாகவும் அவன் தேறிப்போகச் செய்யும். 'பின்செல்லுதல்' என்பது யாதெனில் வார்த்தைக்காகத் தன்னைத் திறந்து வைத்து இருதயத்தில் அதைத் தியானிப்பதோடு சொன்னபடி செய்யவேண்டுமென்னும் விசேஷித்த பொருளடங்கியுள்ளதாம். "நீங்கள் இவைகளை அறிந்திருக்கக் கொள்ள இவைகளைச் செய்தீர்களானால் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள்" (ஜீவனுள்ளவர்கள், அதிஷ்டசாலிகள், சாமர்த்தியவான்கள்) என்று கர்த்தர் சொல்லுகிறார். அன்றியும் வேதாராய்ச்சி அடைந்திருந்தாலும் அதின்படிச் செய்யாமலிருத்தலே விசேஷமாகக் குருக்களுக்கும் வேதசாஸ்திரிகளுக்கும் ஆபத்துள்ள மோசமாம்.

"நீ யாரால் (பவுலால் தானே) கற்றாய் என்கிறது உனக்குத் தெரியும்". "உன்சிறு வயதுமுதல் (தாயும் பாட்டியும் போதிக்க) பரிசுத்த எழுத்துக்களை அறிந்திருக்கிறாய்." 2 தீமோ. 1, 5. தேவனுக்குள்ளான நமது ஜீவியத்துக்கும் தேவனுக்குச் செய்யும் ஊழியத்துக்கும் நமக்குத் தூண்டு கோலாயிருந்த மனிதரை நினைவுகூருவது ஒரு பெரிய பலன் தரும். அவர்கள் ஆவியிலிருந்து நமது ஆவிக்கும் அவர்கள் இருதயத்திலிருந்து நமது இருதயத்துக்கும் ஒரு பலத்த வெள்ளம் பாய்ந்தது. அவர்கள் மூலமாய்ப் பெற்றுக்கொண்டதை நமக்குள்ளதிலெல்லாம் சிறந்ததாக் மதிக்கிறோம். அவர்களைப் பற்றி நாம் எண்ணும்போது அவர்களுடைய ஜீவன் நம்முள் உயிர்த்து அவர்களுக்கும் நமக்குமுள்ள இலக்குக்கு நேராக முன்னேறுகிறது. நாம் அவர்களை நினைக்கும்போது நாம் கற்றுக் கொண்டவைகளில் நிலைத்திருக்கும்படியாக நாம் சமர்த்தராகிறோம்.

**15.** நான் உன்னண்டைக்குச் சீக்கிரமாய் வருவேன் என்று நம்பியிருக்கிறேன். தாமதித்தேனேயாகில் சத்தியத்தின் தூணும் அஸ்திபாரமுமாகிய தேவனுடைய வீட்டில் எப்படி சஞ்சரிக்க வேண்டியதென்று நீ அறியும்படிக்கு இவைகளை உனக்கு எழுதுகிறேன். 1 தீமோ. 3, 14. 15

எல்லாவற்றையும் அவர் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, அவரை எல்லாவற்றுக்கும் மேலான தலையாகச் சபைக்குக் கொடுத்தார். இது எல்லாரிலும் எல்லாவற்றையும் நிரப்புகிற அவருடைய நிறைவான சரீரமாயிருக்கிறது. எபே. 1, 22–23.

---

பிதாவாகிய ஆண்டவரே, தேவரீர் பூமியிலுள்ள உமது சபையை நீர் வாசம் பண்ணுகிற உமது சொந்த வீடென்று அழைக்கிறீர். ஊழியம் செய்ய அதிலே பிரவேசிக்கிற யாவரும் அதன் மகிமையைக் காணவும் அதன் அழகை உணரவும் செய்யும். அது அசுத்த மனுஷரின் நடக்கையால் பரிசுத்த குலைச்சலாவதைப் பார்க்கும்போது உம்முடைய வீட்டை இன்னுமதிகமாய்ச் சிநேகித்து, கர்த்தராகிய கிறிஸ்துவிடத்தில் பற்றி எரிந்த பக்திவைராக்கியத்தை உமது வீட்டுக்கென்று காட்டவும் துணை செய்தருளும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் உமது சபையின் தலை. அது உம்முடைய சரீரம். உம்முடைய ஜீவனாலும் புண்ணியத்தாலும் அதை நிரப்புகிறீர். ஆழ்ந்த வசனத்தின்பேரில் கொஞ்சமேனும் எண்ணமில்லாத நிர்ப்பந்த காலத்தில் இருக்கிறோம்; தேவரீர் இந்த இரகசியத்தை அதிகமதிகமாகத் திருச்சபையின் எல்லா அவயவங்களுக்கும் விசேஷமாய் சபைக்கு ஊழியம் செய்ய வேண்டிய எங்களுக்கும் திறந்து காட்ட விரும்புகிறீர். நாங்கள் சபையோடு பிழைக்கவும் உமது சரீரமாகிய அதுக்குத் தாழ்விலும் வாழ்விலும் ஊழியம் செய்யவும் எங்களுக்குத் துணைசெய்யும்.

பரிசுத்த ஆவியானவரே, தேவரீர் சபையைத் தெய்வ வீடும் கிறிஸ்துவின் பரிசுத்த சரீரமுமாக்க அதிலே வேலை செய்கிறீர். உம்முடைய அக்கினியோடு இந்த வீட்டுக்குள் வாரும். அதை நிரப்பும், சுத்திகரியும். உம்முடைய வரங்களோடும் பலன்களோடும் இந்தச் சரீரத்துக்குள் வந்து அதனைப் பலப்படுத்தியருளும். எங்களை அதிலே பணிமுட்டுகளாக உபயோகித்தருளும்.

திரியேக தேவனே, ஐக்கியம், அன்பு, ஒற்றுமை விஷயத்தில் எங்கள் நிலை பரிதவிக்கப்படத்தக்கதே; தேவரீர் சமீபகாலத்தில் எங்களுக்கு அனுப்புகிற எழுப்புதலின் காலம் திருச்சபைக்கு எழுப்புதலாயிருப்பதாக. சீக்கிரமே அது வரட்டும். ஆமேன்.

---

திருச்சபையின் வேலைக்குள் பிரவேசிக்கிறவன் திருச்சபையைச் சிநேகித்து அதன் தன்மையை அறிந்திருப்பது அவசிய

மல்லவா? திருச்சபையைக் குறித்த அந்த ஆச்சரியமான வேதவசனங்கள் அவனுக்கு வெறும் வார்த்தைகளாயிராமல் அவனுடைய சொந்த ஜீவியத்துக்கும் உத்தியோகத்துக்கும் முக்கியமாகி, அவனுக்கு பொருள் மிகுத்த வார்த்தைகளாயிருக்க வேண்டியதில்லையா?

ஆயினும் பற்பல விதமான சபைகள் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் திருச்சபையைச் சிநேகிப்பதும் அதற்கு ஊழியம் செய்வதும் அதைத் தேவனுடைய வீடாகவும் கர்த்தருடைய சரீரமாகவும் சத்தியத்தின் தூணும் அஸ்திபாரமாகவும் நோக்கிப்பார்ப்பதும் நமக்கு எவ்வளவு கஷ்டமானதாகத் தோன்றுகிறது. நன்மையும் தீமையும் சுயாதீன சித்தமும்அதிகாரமும் பலவந்தமும், கலந்திருக்கிற இந்த விபரீதமான கலப்புக்கு அப்பேர்ப்பட்ட சிறந்த பெயர் கொடுக்க என்ன நியாயம் இருக்கிறது? நியாயமில்லை யென்போருண்டு. ஒருபக்ஷத்தில் "பக்திக்காரரைப்" போல் சபையையும் அதன் ஊழியத்தையும் விட்டு விட்டு ஆட்களை மாத்திரம் ரட்சிக்க முயன்று காணப்படாத சபை போதுமென்றிருப்பார். மறுபக்ஷத்தில் சபையை ஏற்படுத்துவதும் சபையை நிலை நிறுத்துவதுமான கர்த்தருடைய கிருபையின் எத்தனங்களால் உண்டாகிற காணப்படும் சபைக்குப் பதிலாக வேறொரு சபையை ஏற்படுத்தத் துணிவார். இவ்விதமாய் யோசித்தால் திருச்சபை என்பதும் உலகம் என்பதும் ஒன்றுபோலாகிச் சபையின் சரியான லட்சணம் மறைந்தே போகும். இந்த இரண்டு அபிப்பிராயங்களில் எது உண்மை என்று தெரியாமல் மிச்சமான கிறிஸ்தவர்களும் குருக்களும் தங்கள் தின ஜீவியத்தில் தயங்கி, தங்கள் சபைவேலையில் ஊன்றி நிற்க இடம் காணாமல் போகிறார்கள்.

அந்த மேன்மையான பெயர்களை நீ எப்படி நானா ஜாதிச் சபைக்குக் கொடுக்கலாம்? அப்பெயர்களை நீ எப்படி அப்போஸ்தல ஆவியிலே மெய்யான அன்போடு கொடுக்கக் கூடும்? இதோ கர்த்தருடைய பரிசுத்தவான்கள், தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் வெளுத்தவர்கள், பிதாவாகிய தேவனுக்கு முன்பாக ஆசாரியரும் ராஜாக்களுமானவர்கள். இதோ அவர்கள் திருச்சபையில் கர்த்தருடைய வசனத்திலும் ஞானதிரவியங்களிலும் தங்கள் ஜீவ ஊற்றைச்சுற்றிக் கூடிவருகிறார்கள். தங்கள் போராட்டத்தை இங்கே போராடுகிறார்கள். தங்கள் ஓட்டத்தை இங்கே முடிக்கிறார்கள். அறியப்பட்டவர்களாகவோ, அறியப்படாதவர்களாகவோ அவர்கள் ஒரு தேசத்தின் முழுத் திருச்சபையிலும் இங்கும் அங்கும் பிழைத்து, அதை ஒரு பரிசுத்த ஸ்தலம் ஆக்குகிறார்கள். இவர்கள் திருச்சபையில் இருக்கிறபடியினாலேயே அது கிறிஸ்துவின் சரீரம், தேவனுடைய வீடு, ஜீவனுள்ள தேவனுடைய சபையாகும். அவர்கள் இங்கே கர்த்தருடைய கிருபையெத்தனங்களோடு இருக்

கிறபடியால் அந்தச் சபை சத்தியத்தின் தூணும் அஸ்திபாரமுமாயிருக்கிறது. ஆனல் தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொண்டும் ஆவியின் அபிஷேகம் பெறுத வெகுபேர் இருக்கிறார்களே என்பாய். அவர்களுடைய இந்த நிலைமையை நினைத்து நீ பெருமூச்சுவிட்டு அருவருப்படைவது ஒருபக்கத்தில் நியாயமே. ஆயினும் அவர்கள் அப்பேர்ப்பட்டவர்களாயிருந்தும் அவர்களில் ஒரு மேன்மை உண்டென்று மறவாதே; அவர்கள் கரடுமுரடான கற்கள்; ஒழுங்காய் வெட்டப்படாத கற்கள், அவைகளிலெடுத்துத்தான் தேவனுடைய வீடு கட்டப்படும். அவர்கள் கர்த்தருடைய சரீரம் வளரவேண்டிய மனுஷீக தளவாடங்கள். இதிலுமதிகமாக இந்தக் கற்கள் கர்த்தருடைய ஆவி என்கிற கல்தச்சனல் தயாரிக்கப்படும். இந்த மனுஷீக தளவாடங்கள் கர்த்தருடைய சரீரத்திலிருந்து வரும் ஜீவபலன்கள் மூலமாய் வர வர உருவடையும். திருச்சபையைச் சத்தியத்தின் தூணும் அஸ்திபாரமுமாக்குகிற கர்த்தருடைய கிருபையெத்தனங்கள் அவர்களுக்குள் பலன் செய்துகொண்டே இருக்கிறது. எந்த வளர்ச்சிக்கும் அவசியமான சத்துப்பொருட்களைக் கிரகிப்பதும், கழிவு பொருட்களை அகற்றுதலுமாகிய இவ்வித வேலை இங்கேயும் நிறைவேறும். திருச்சபை நிலைத்திருப்பதுடன் அது வளர்ந்துகொண்டேயுமிருக்கும். பெரும்பாலார் பேரில் மகா பணிந்த இருதயத்திலிருந்து பெருமூச்சுவிடு. ஆயினும் அவர்களிடத்திலும் ஆகவேண்டிய திருச்சபைக்கு அன்பையும் மகிமையையும் ஊழியத்தையும் செலுத்து. சத்தியத்தின் தூணுலும் அஸ்திபாரத்தாலும் அவர்கள் பலவிதத்திலும் சுமக்கப்படுகிற வாறே சுமக்கப்படட்டும். இன்னம் கட்டிமுடியாத தேவனுடைய வீட்டை அவர்கள் சேர்ந்தவர்களாயிருக்கட்டும். வளர்ந்துகொண்டே இருக்கிற கிறிஸ்துவின் சரீரத்துக்கும் ஜீவனுள்ள தேவனுடைய சபைக்கும் அவர்கள் சொந்தமானவர்களாகட்டும். அவர்களைத் தமக்கென்று சொந்தமாக்கவோ அப்புறப்படுத்தவோ அவர்களிடத்தில் தெய்வீக ஜீவ பலன்கள் வேலை செய்கிறதே.

இருக்கிறதும் ஆகப்போகிறதும் ஆகப்போகிறதிலேயே இருக்கிறதுமான திருச்சபையை நாம் பார்த்தால் நாம் இந்த மேலான நாமங்களை இந்தத் தேசச்சபைக்குக் கொடுக்கலாம், அப்போஸ்தல ஆவியிலே மெய்யான அன்போடு அவைகளை நாம் கொடுக்கக்கூடும். அதற்கு நம்மைத் தடைப்படுத்துவது நமக்குள்ள பலக்குறைவுதான், அன்புக்குறைவுதான், நமது ஒடுக்கமனமும் நோயகொண்டதுமான சிந்தைதான். ஆயினும் அதைத்தவிரத் தேசச்சபைகளுக்கு ஒரு பகிரங்கமான காயம் உண்டாயிருக்கிறது: திருச்சபையின் விசுவாசத்தை வாயினல் அறிக்கையிட்டு நடக்கையினல் திருச்சபையின் ஜீவியத்தை மறுதலிக்கிறவர்களும் திருச்சபையின் எல்

லைக்குள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருக்கிற பிரகாரமாகத் தற்காலத்தில் இருக்கிற சபைக்கோ, ஆகப்போகிற சபைக்கோ சொந்தமாயிராவிட்டாலும் அவர்களைப் பிரித்துவைக்க திருச்சபைக்கு அதிகாரம் கிடையாது. இது ஒரு திறந்த காயமே; கடமைப்படியும் அன்பினாலும் தன்னுடைய கெட்டுப்போன பிள்ளைகளின் குணப்படுதலுக்கென்றும் ரட்சிப்புக்கென்றும் செய்யவேண்டிய உதவியைத் திருச்சபை செய்கிறதில்லை. அநேகர் தொத்து வியாதிபோன்ற பாவத்தில் அமிழ்ந்திருந்தால் சபையிலுள்ள நல்லவர்களும் அவர்களாலே கெட்டுப்போவதினிமித்தம் தெய்வ நாமம் உலகத்தில் அர்ச்சிக்கப்படாததினால் சபைக்கு ஓயாத ஒரு பெரிய நஷ்டம் உண்டாகும். இதனால் நமக்கு ஒரு கெட்ட மனச்சாட்சி இருக்கும். திருச்சபையின் தன்மையும் மகிமையும் நமக்கு மறைவாய்ப் போகிறது. இதையல்லாமலும், இந்தக் காயம் ஆறியிருந்தாலும் தேவனுடைய வீட்டுக் கட்டடத்தில் வேலை நடக்கும்போது கிறிஸ்துவின் சரீரத்தில் ஏற்கனவே தீர்ந்ததும் உருவடைந்ததுமான பாகம் மறைந்திருக்க முடிவாகாததும் உருவடையாததுமான பாகம் இப்போது அதிகமாய்ப் புலப்படுவது இயல்பானதென்று நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். முழுக் கட்டடத்தின் மாதிரி தெளிவாகவும் மகிமையாகவும் எல்லாருடைய கண்களுக்கு முன்பாக இருந்த திருச்சபையின் ஆரம்பக்காலத்தில் அந்த மகிமையான பெயர்களைக்கொடுப்பது லேசாயிருந்ததுபோல் சொந்தப்படுத்தவும் கழித்துப்போடவும் வேண்டிய தளவாடங்கள் குறைவடைந்து கட்டடம் தன் பூரண நிலைக்குச் சமீபிக்கும்போதும் மகிமையான இந்தப் பெயர்களைக் கொடுப்பது லேசாயிருக்கும். குவிந்து கிடக்கும் தளவாடங்களினூடேயும் முழுச்சாரத்தினூடேயும் தெளிந்த கண்ணோடு பார்க்கிறவனுக்கு மாத்திரம் உள்ள விஷயம் தெரிகிறது. திருச்சபை பல காலங்களிலும் பல தொகையுடையதாயிருந்தாலும், அது தன்மையிலோ அதே சபைதான் என்றும், அப்போஸ்தல காலத்துச்சபையும் உலக முடிவுகாலத்துச் சபையும் தற்காலத்துத் தேசச் சபையும் அதேசபைதான் (இருக்கிற சபைதான், ஆகப்போகிறசபைதான்) என்றும், கிறிஸ்துவினுடைய சரீரம், தேவனுடைய வீடு, ஜீவனுள்ள தேவனுடைய சபை, சத்தியத்தின் தூண், சத்தியத்தின் அஸ்திவாரம் என்கிற மகிமையான பெயர்கள் அதற்கு நியாயமாய்க் கிடைக்கிறதென்றும் அவன் பார்த்தறிவான். இந்தத் தெளிவுள்ள கண் முந்த முந்த கிறிஸ்தவ சபையின் ஊழியருக்கு வேண்டியது. அவர்கள் வேலைக்கு அது அவசியம்.

**16.** ஒருவன் கண்காணிப்பை விரும்பினுல், நல்ல வேலையை விரும்புருன் என்கிறது உண்மையான வார்த்தை. 1 தீமோ. 3, 1.

---

கர்த்தராகிய கிறிஸ்துவே, தேவரீர் கட்டாயத்தினுல் உமக்கு ஊழியரைச் சம்பாதிக்கிறதில்லை. உம்முடைய சபையில் உழைப்பதற்கென்று சுய இஷ்டமாய்த் தங்களைப் பிரதிஷ்டை செய்ய மனமுடையவர்களை விரும்புகிறீர். நான் சபை குருவாக வேண்டியபடியால் இந்த அருமையான வேலைக்கடுத்த என் வாஞ்சை சுத்தமானதாகவும் உமக்குப் பிரீதியானதாகவும் இருக்கவேண்டும் என்று என் உள்ளத்தில் வெகுவாய் விரும்புவதைத் தேவரீர் பார்க்கிறீர். உம்முடைய சபையின் ஊழியத்துக்கென்று படித்தவன் என்றதினுலும் அல்ல, மனுஷரிடத்தில் அதனுல் மதிப்பை நாடும் விருப்பத்தினுலும் அல்ல, நான் உம்முடைய ஊழியத்தை ஊழியத்திற்காகவே விரும்புவதை நான் தேவரீருக்குச் சொல்லியிருக்கிறேன். ஆ, கர்த்தாவே, உம்மையும் உமது சபையையும் அன்பினுல் சேவிக்க என்னிலே ஒரு ஆசை இருப்பதை நான் கவனிக்கிறேன். இவ்விதமாக என் ஜீவனை உமது மகிமைக்கும் மனிதரின் ரட்சிப்புக்கும் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்று எண்ணும் போதே என் உள்ளம் அனல் அடைகிறது. இது சீக்கிரம் அவிந்து போகக் கூடிய வாலிப வயதுக்கடுத்த உற்சாகமாயிராமல், என் ஜீவநாளெல்லாம் ஒரு பரிசுத்தமும் அமைதலுமான அக்கினியாய் என் உள்ளத்தில் காக்கப்படும்படி உம்மைக் கெஞ்சுகிறேன். ஆண்டவரே, ஊழியம் செய்வித்துக்கொள்ள வராமல் ஊழியம் செய்யவும் உம்முடைய ஜீவனை அநேகரை மீட்கும் பொருளாக தரவும் வந்த தேவரீருக்கு இருந்த பரிசுத்த வாஞ்சையை எனக்கும் தாரும். இந்தப் பரிசுத்த வாஞ்சையினுல் நிரைந்தவனுக உமது சபையில் உழைக்க விரும்புகிறேன்; எனக்கு மகா முக்கியமான இந்த நாட்களில் உமது பரிசுத்த ஆவியினுல் அதற்கென்று எனக்கு உதவி செய்தருளும், ஆமேன்.

---

தேவ ஊழியத்துக்கான அழைப்பு குருவாக வேண்டுமென்ற உள்ளான ஏவுதலாலும் ஆசையினுலும் பூரணப்படும். தேவன் குழந்தைப் பருவமுதல் நம்மை நடத்தின நடத்துதல்கள், குணம், வரம், மனுஷரால் உண்டான மாறுதல், தெய்வவசனத்தின் கையாடுதல், படிப்பு, விசுவாச ஜீவியம். இவைகளெல்லாம் கூடிப் பரிசுத்த ஊழியத்தை விரும்புகிற ஆசையை உண்டாக்க வேண்டும்.

இந்த ஊழியத்தின் மேலிருக்கிற உள்ளாசையைக் குறித்து உன்னை ஆராய்ந்து பார். ஒரு குருவாயிருந்துகொண்டும் ஒரு மிராசு

தாராகவும், ராஜீயவாதியாகவும், ராஜாங்க உத்தியோகஸ்தனாகவும் நீ பிழைக்க விரும்புகிறதில்லையா? இப்படி விரும்பினால் கர்த்தருடைய சபை சின்னாபின்னமாகும். உன் ஆசையைச் சோதித்துப்பார். அது உத்தியோகத்திலுள்ள சில்லறை விஷயங்களாகிய நிச்சயமான வேலை, செல்வாக்கு அல்லது நன்மை செய்யக்கூடிய சமயம் முதலானதின் மேலுள்ள ஆசையா? செல்வாக்கின் மேலுள்ள ஆசை தேவத்துரோகமாயிருப்பதால் அதைவிலக்கிவிடு என்று பெங்கெல் (Bengel) சொன்ன வார்த்தையை விசேஷமாய் நினைத்துக்கொள். அல்லது உத்தியோகத்தின் பேரிலேயே அதனுடைய உள்ளான தன்மையினிமித்தமே உள்ள ஆசையா? தேவமைந்தன் தம்முடைய சுயரத்தத்தினால் சம்பாதித்த சபையை மேய்க்கவும் ஊழியஞ் செய்வித்துக்கொள்ளாமல் ஊழியம் செய்யவும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசித்திசெய்யவும் ஆசையா?

அம்புரோஸியு (Ambrosius), கல்வீன் (Calvin) முதலான பிரசித்திபெற்ற ஊழியர் சிலரும் பிரசித்திபெறாத பலரும் இந்த அருமையான வேலைக்கு ஒருவித கட்டாயத்தினாலே அல்லது மகா சந்தேகத்தோடே வந்தும் அவர்கள் சரியான அழைப்புப்பெற்ற ஊழியர் என்று பிற்பாடு விளங்கிற்று. அவர்களுக்குள்ளேயும் இந்தப் பரிசுத்த ஊழியத்துகான ஆசையும் ஆவலும் அவர்களில் அசாதாரண விதமாய்ப் போராடிப் பலனுக்கு வந்ததென்று அனுமானிக்க வேண்டியது.

ஒருவன் குருவேலைக்கு மனுசெய்தலுக்கு 1 தீமோ. 3, 1ல் உறுதியான ஆதாரம் உண்டு என்று லேயெ (Loehe) சொல்லுகிறான். ஒருவனுக்கு இவ்வேலையின் மேல் உண்மையுள்ள ஆசை இருக்க அவன் தன் கையைத் தேவ ஊழியத்துக்கென்று நீட்டுவது அப்போஸ்தலன் குற்றப்படுத்தத்தக்கதென்று பாராமல் அதை இயல்பானதாகவே பாராட்டுகிறான். மனுசெய்யும் வழக்கம் இப்படித் தன்னைத் தான் ஒப்புக்கொடுத்தலையும் சுவாதீன சித்தத்தையும் பொறுத்தது, சொந்த உத்தரவாதத்தையும் பொறுத்தது. ஒருவன் இதற்கென்று தானே முந்திக்கொள்ளாமல், சரியான திருச்சபை அதிகாரிகளால் அழைக்கப்படும் போது அவனுக்குத் தெய்வ அழைப்புஅதிக பலமாயும் நெருங்கியதாயும் வந்ததாகத் தோன்றும். ஆயினும் ஜெபத்தோடும் சோதனையோடும் உண்மையுள்ள சிந்தை உள்ளவனாய்த் தன்னை ஆராய்ந்து பார்ப்பவன் எவனோ, அவன் தனக்கு நலமாகவும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாகவும் இருக்கக்கூடிய இடத்துக்குக் கர்த்தராலே நடத்தப்படுவதாக நிச்சயிக்கக் கூடும்.

தேவ ஊழியம் அவ்வளவு நன்மையும் அருமையுமாயிருக்குமானால், ஊழியத்துக்கு அவமானமுண்டாக்காத சரியான ஆட்கள்

அதற்குத் தேவை. ஆகையால் "ஒரு கண்காணி குற்றச் சாட்டில்லாதவனுமாய் இருக்கவேண்டும்". 1 தீமோ. 3-ல் இதுவே முதல் இரண்டு வசனங்களுக்குமுள்ள சம்பந்தம். "நல்ல வேலை நல்லோருக்கே."

---

**17.** நீ வெகு சாட்சிகளின் கூட்டத்திலே என்னிடத்தில் கேட்டதுகளை மற்றவர்களையும் உபதேசிக்கச் சமர்த்தராயிருக்கும் உண்மையுள்ள மனுஷருக்கு ஒப்புவி. 2 தீமோ. 2, 2.

நீ குறை காரியங்களைச் செவ்வைப்படுத்தி, பட்டணந்தோறும் நான் உனக்குத் திட்டம் பண்ணினபடி மூப்பரை வைப்பதற்காக உன்னைக் கிரேத்தாவிலே விட்டு வந்தேனே. தீத்து 1, 5.

---

கர்த்தராகிய தேவனே, நானே என் சொந்த இஷ்டப்படி தெரிந்துகொண்ட வழியில் போகாமல், உமது சபையில் உம்மைச்சேவிக்க உமது சபையின் ஒழுங்குள்ள அழைப்பை எனக்குக் கொடுத்ததற்காக முழு இருதயத்தினாலும் உம்மைத் தோத்திரிக்கிறேன். என்பேரில் ஒரு கஷ்டமான உத்தரவாதம் விழுந்தபோது எத்தனை சமயம் இது எனக்குத் தைரியம் கொடுத்தது, நான் தளர்ச்சி அடையத் துவக்கியபோது எனக்குள் புது வைராக்கியத்தை எழுப்பிற்று, நான் கீழே தள்ளப்பட்டபோது எனக்கு ஆறுதலைக் கொடுத்தது. நான் உம்முடைய சபையின் அழைப்பைச் சரியாய் மதிக்கவும், அதை எப்போதும் என் ஞாபகத்தில் வைக்கவும், துன்னளிலும் நன்னளிலும் அதிலிருந்து ஒத்தாசையையும் புத்திமதியையும் பெற்றுக்கொள்ளவும் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். இந்த வேலை எவ்வளவு பெரியதும் உத்தரவாதம்பொருத்ததுமாக இருக்கிறது என்றும், ஒருகுருவுக்குப் பிசாசும் உலகமும் சொந்தமாமிசமும் எவ்வளவு கொடிய சத்துருக்கள் என்றும் நான் உணருகிறேன். நான் தேவரீர் என்னைவைத்து உபயோகிக்க விரும்புகிற சரியான இடத்திலே உம்முடைய பரிசுத்த சபையில் அழைக்கப்பட்ட ஊழியனயிருக்கவும் அதிலடங்கிய எல்லா உதவியையும் புத்திமதியையும் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவும் எனக்கு அருள் புரியும் என்று கெஞ்சுகிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நான் இப்போது உம்முடைய சபையின் அழைப்பைப் பெற்றிருக்கிறபடியாலும் அதன் விசேஷித்த ஊழியத்தில் நான் பிரவேசித்திருக்கிறபடியாலும் நான் இம்மட்டும் செய்ததைவிட உமது சபையைப் பின்னும் அதிகமாய்ச் சிநேகிக்கவும் கனம் பண்ணவும் அருள் செய்யும். நான் கபடற்ற சித்தத்தோடும் நல்ல மனச்சாட்சியோடும் உமது வசனத்தின் பிரகாரமும் திருச்சபையின் நல்ல அறிக்கை பிரகாரமும் எல்லாவற்றையும் செய்ய எனக்குத் துணை செய்தருளும். ஆமேன்.

---

கிறிஸ்து தமது கிருபை யெத்தனங்களையும் அவைகளைக்கையாடுகிற ஊழியத்தையும் ஒரு விசேஷித்த ஆசாரிய வகுப்புக்குக் கொடுக்கவில்லை. ஒவ்வொரு தனித்தனி கிறிஸ்தவனும் அவைகளுக்குச் சொந்தக்காரன் அல்ல, ஒரு ஐக்கிய அமைப்பு அல்லது ஒரே சரீரமான சபைக்குக் கொடுத்திருக்கிறார். ஆதலால் கிறிஸ்துவின் ஊழியக்காரனாயிருக்க விரும்புகிற ஒவ்வொருவனும் சபையின் ஊழியனாயிருக்கவும் வேண்டும்; கிறிஸ்துவின் அழைப்பை விரும்புகிற ஒவ்வொருவனும் சபையின் அழைப்பையும் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அந்தந்த காலத்தில் இருக்கிற சபை கர்த்தருடைய சபையாக நடந்து கொள்ளாவிட்டால் தமது சபையினிமித்தம் இந்தப் பொதுப் பிரமாணத்தைத் தள்ளிவைக்க அவர் ஒருவரே உரிமையுடையவர்.

திருச்சபையின் ஒழுங்குள்ள அழைப்பில் உனக்குக் கொடுக்கப்படுவதைக்கவனி: 1) ஒருவருக்கும் அஞ்சாத தைரியம். நீ உனக்குக் கொடுக்கப்பட்ட இடத்தில் இருக்கிறாய்; அதற்கான வல்லமையுடையவரால் வைக்கப்பட்டிருக்கிறாய்; இந்த வேலை உன்னுடையது. இது அசைக்கப்படாத நிச்சயமும் எதிர்பேச முடியாததுமாயிருக்கிறது. ஆதலால் தேவனோடேபோ, சிந்தையில் சந்தோஷமாகவும், உத்தியோகத்தில் நிலையுள்ளவனாகவும்போ. உலகமும் உன் சொந்த உள்ளமும் உன்னைக்குற்றம் பிடிக்க ஒட்டாதே. நீ நடத்துகிற விஷயம் உன்னுடையதல்ல, கர்த்தருடையது, அவருடைய சபையினுடையது. 2) கடமையின் அவசியம் (1 கொரி. 9, 16). ஆவிக்குரிய பெலவீனம் போராட்டம் புறம்பான அவதிகள் துன்பங்கள் முதலிய காரணங்களினால் உன் சந்தோஷமும், திறமையும் குறைந்து போகும் நேரத்தில் உன் சந்தோஷத்தையும், திறமையையுமன்றி நீ வேலையில் உபயோகிக்கத்தக்க வேறெதுவும் உனக்கு இல்லையானால் உன் உத்தியோகம் ஒழியவேண்டியதே. திருச்சபையின் அழைப்பினால் உன்மேல் வைத்திருக்கிற உன் உத்தியோகத்தின் கடமையை நீ மீறினால் தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டிய உன்னுடைய உள்ளான கடமையையும் மீறினவனாவாய். கர்த்தரிடத்திலிருந்து நற்காலம் வருமட்டும் துர்க்காலத்திலும் அக்கடமையின் நினைப்புஉன்னைத் தாங்கும்.

(வேதசாஸ்திரியாவதற்கு லுத்தர் இட்ட ஆணையையும் அவருக்குப்பின் வந்த அநேக குருக்களின் அனுபோகத்தையும் ஒத்துப் பார்க்க).

3) தாழ்மை. திருச்சபையின் அழைப்பு இல்லாவிட்டால் உன் சொந்த இஷ்டத்தையும் உன் திறமையையும் உயர்வாக எண்ணி உன் ஊழிய பாத்தியம் அவைகளினாலே உண்டானதென்று எண்ணிக்கொள்ள வேண்டும். இப்போதோ உன்னைத் தாழ்த்தியே வைக்கவும், நீ சேவிக்கிற கிருபையின் எத்தனங்களையும் உன் நம்பிக்

கைக்கு ஒப்புவிக்கப்பட்ட உத்தியோகத்தையும் உயர்வாக எண்ணவும் நீ ஏவப்படுகிறாய். உன்னிலே அதிகாரப் பிரியத்துக்கு விரோதமாகப் போராட மனதானால் உனக்கு சபையின் அழைப்பிலே ஒரு ஆதரவு இருக்கிறது; அப்படிப்பட்ட பிரியத்தை வளர்க்க விரும்புகிறவர்களுக்கோ அழைப்பு இடம் கொடுக்காது.

2 தீமோ. 2, 2–ல் ஊழியத்துக்கடுத்த சரியான அழைப்பின் உண்மையான பாகங்கள் சுருக்கமும் தெளிவுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறன. அவைகளாவன: 1) சொந்த அழைப்பு a. "உண்மையுள்ள (விசுவாசமும் உண்மையுமுள்ள) மனுஷர்" b. "மற்றவர்களையும் போதிக்கச்சமர்த்தர்". போதிப்பதில் தங்களையும் போதிக்கிறார்கள், அதனால் நிலையான விர்த்தியையும் அடைகிறார்கள். 2) சரியான அதிகாரிகளிடமிருந்து ஊழியத்தைப் பெற்றுக் கொள்ளுதல். ஒரே வீட்டுப் பிள்ளைகளுக்குப் பரஸ்பர ஊழியம் உண்டு. அது சகோதர சிநேகத்திலும் சகோதர கடமையிலும் ஆதாரப்பட்டது. தாய் அவர்கள் எல்லாருக்கும் செய்யும் ஒரு ஊழியமும் உண்டு. அது தாயின் அன்பிலும் கடமையிலும் ஆதாரப்பட்டது. வீட்டின் ஐக்கியம் பாக்கியமாயிருக்க வேண்டுமானால் இந்த இரண்டு ஊழியங்களும் இருக்க வேண்டும்.

---

**18.** மூப்பானவர்கள் உன்மேல் கைகளை வைத்தபோதே உனக்குத் தீர்க்க தரிசனத்தால் கொடுக்கப்பட்டிருக்கிற உன்னிலுள்ள வரத்துக்கு அசதியாயிராதே. எல்லாவற்றிலும் உன்னுடைய தேறுதல் வெளியரங்கமாயிருக்கும்படிக்கு இவைகளையே சிந்தித்து, இவைகளிலே நிலைத்திரு. 1 தீமோ. 4, 14. 15.

---

அன்புள்ள கர்த்தராகிய தேவனே, நான் உம்முடைய பரிசுத்த சபையின் குருவாகப் பிரதிஷ்டை செய்யப்படும்படிக்கு என்னை அபிஷேகம் பண்ணப்போகிற நாள் இதோ சீக்கிரம் வரப்போகிறது. நான் அதை நினைக்கும் போது எனக்கு எவ்வளவு ஆனந்தக்களிப்பு! நான் உம்மை நோக்கிக் கெஞ்சிக் கேட்கவேண்டிய எத்தனையோ காரியம் இருக்கிறது. கர்த்தாவே, என்னுடைய பெரிய பிரதான ஆசாரியர் நிமித்தம் நான் பெற்றுக்கொள்ளப்போகிற ஊழியம் எனக்குச் சித்திக்கும்படி எனக்குத் துணை செய்யும். என் பாவத்திலிருந்தும் என் இளவயதின் பாவங்களிலிருந்தும் என்னைச் சுத்திகரியும். கர்த்தாவே, நான் அவைகளை நினைத்து அவைகளை உமக்கு முன்பாக குணப்பட்ட இருதயத்தோடு அறிக்கையிடும்போது தேவரீர் என்னுடைய ஞானஸ்நானமுதல் என் ஆசாரிய உடையை நான் கறைப்

படுத்தின எல்லாத்துக்கும் நான் நீங்க என்னைக் கழுவி நான் உமது பாக்கியமான உத்தியோகத்தின் பிரகாசமான வஸ்திரத்தை நல்மனச் சாட்சியோடு தரித்துக்கொள்ளத் தக்கதாக எனக்கு மன்னித்தருளும். உலகத்துக்கடுத்ததும் என் புத்தியைச் சிதற வைப்பதுமான சகல எண்ணங்களையும் என்னை விட்டுப் பேர்த்து உமக்கு முன்பாக என் ஆத்மத்தில் அமைச்சலும் வணக்கமும் உண்டாக்கியருளும் என் உள்ளம் உமது கிருபையின் மழைக்குக் காத்திருக்கிற வறண்ட நிலத்தைப்போல் இருப்பதாக! உமது விசுவாசிகளுடைய மன்றாட்டின் மூலமாயும் உமது ஊழியர் கைவைப்பினாலும் வேண்டிக்கொள்ளுவதையும் நினைப்பதையும் பார்க்க மேலானதை எனக்குத் தாரும்! நான் அத்தனை இளமையாகவும் அனுபோகமற்றவனாயுமிருக்கிறேனே. ஆயினும் நான் அத்தனை பெரிய வேலையில் பிரவேசித்து உமது மகிமைக்கென்றும் என் சகோதரரின் ரட்சிப்புக்கென்றும் நிலைத்திருக்க விரும்புகிறேன். ஆகையால் தேவரீர் இப்போது என் பேரில் உமது உத்தியோக பாரத்தைச் சுமத்தும்போது உமது உத்தியோகத்தின் ஆவியையும் தாரும். ஞானம், அறிவு என்றவைகளின் ஆவியும் ஆலோசனை பலம் என்றவைகளின் ஆவியும், அறிவு, கர்த்தருக்குப் பயப்படுதல் என்றவைகளின் ஆவியும் என்பேரில் இருக்கச் செய்தருளும், ஆண்டவரே! நான் உமது பரிசுத்த சபையில் ஆசாரியன் ஆக்கப்படுவதற்கு உமது ஆவியை அனுப்பும். சபையிலே உமது வார்த்தையைப் பேசவும் உமது சாக்கிரமெந்தைச் சரியாய்ப் பரிமாறவும் உமது சபையை அன்பிலே மேய்க்கவும் என் ஜீவனை அதற்காகத் தத்தம் பண்ணவும் கூடும்படி இந்த உமது ஆவியானவர் என்னை எப்போதும் ஆண்டு நடத்துவாராக! நான் வேண்டிக்கொள்வதைக் கேளும், கர்த்தாவே, தேவரீர் என் தேவன். இருந்தவரும் இருக்கிறவரும் நித்தியாநித்திய காலமாய் மெய்யான தேவனுமாயிருக்கிற பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவனே, நான் உம்மையே விசுவாசித்து அறிக்கையிடுவேன். ஆமேன்.

---

அழைப்பு குருவபிஷேகத்தில் இருபுறமும் பூரணமாகிறது. a) சபையினால் கிடைக்கிற அழைப்பு: குரு உத்தியோகம் சபையாளுகையை மட்டுமேயல்ல், முழு சபையையும் பொருத்தது. ஆதலால் இந்த உத்தியோகத்துக்கான அழைப்பு திருச்சபையின் பொதுவான விசுவாசச்செய்கையாகிய தேவாராதனையிலே கொடுக்கப்படும். b) அழைக்கப்பட்டேன் என்று குருவுக்கு உண்டாகும் நிச்சயம் தீமோத்தேயுவுக்குக் கிடைத்ததுபோல் ஒரு அசாதாரணமான கிருபைவரம் உனக்குக் கொடுக்கப்படாவிட்டாலும் சபையின் விசுவாசத்தினாலும் ஜெபத்தினாலும் உன்

விசுவாசத்தைப் பலப்படுத்தவும், உன் உத்தியோகத்தைச் செம்மையாய் நடத்தவும் தேவவரங்கள் உனக்குக் கொடுக்கப்பட முடியாது என்று எண்ணுவாயோ? நீ அறிந்துகொள்வதற்கும் நீ ஜெபிக்கும்படி தெரிந்துகொண்டதற்கும் மகா மேலாக உனக்குக்கொடுக்கிறார். இது எத்தனையோ குருமாரின் அனுபவம்.

ஆண்டவர் உன்னுடைய குருப்பட்டகாலத்தை உனக்கு ஆசீர்வாதமாக்கி, நீ எதிர்நோக்குகிற குருவூழியத்துக்கென்று அதை ஆசீர்வாதமுள்ள ஊற்று ஆக்குவாராக! ஜெபத்திலும் வேத ஆராய்ச்சியிலும் நிலைத்திரு (மத்.10;லூக்.10;நட.20,17; 2 கொரி. 3-6). பாவ சங்கீர்த்தனத்தை மறவாதே.

நமது முறைமைப் பிரகாரம் உத்தியோக ஒப்புக்கொடுத்தலைக் கைவைக்குதல் அவ்வளவாய்க் குறிக்கிறதில்லை. உத்தியோகத்தை ஒப்புக்கொடுத்த பிறகே கைவைக்குதல் இருக்கும். ஊழியன்மேல் ஆவியின் ஈவுகள் இறங்கிவரும்படிக் கெஞ்சுவதைக் குறிக்கும். 'கர்த்தாவே, உமது நாமத்தில் அவனைக்காரும். உமது சத்தியத்தில் அவனைப் பரிசுத்தமாக்கும். விசுவாசத்திலும் உம்மைச் சிநேகிக்கும் சிநேகத்திலும் அவனைப் பலப்படுத்தும். அவன் உம்முடைய அறுப்பிலே செம்மையான வேலையாளாயிருக்கும்படி உத்தியோகத்துக்குரிய வரங்களோடு உமது பரிசுத்த ஆவியை அவனுக்கு அனுப்பும்' என்று ஜெபிக்கிறோம். முந்த பரலோகத்தை நோக்கி ஏறெடுக்கப்பட்ட கைகள் இந்த ஜெபத்தால் பெற்றுக்கொண்ட ஞான ஈவோடு திரும்பி, அவைகளைப் பட்டம் பெறுகிறவர்மேல் வைக்கின்றன. அத்தியட்சரின் அபிஷேகத்துக்கென்று முன்னமே கையாடப்பட்ட முறைமையோடு வேறொரு முக்கியமான எண்ணம் சம்பந்தப்படும். பழைய உடன்படிக்கையின் காலத்தில் பலியிடப் படவேண்டிய பலிமிருகத்தின் தலைமேல் கை வைக்கப்பட்டது. கர்த்தருக்குச் சிறந்ததைப் பலியிட வேண்டும் என்று அதனால் குறிக்கப்பட்டது. அவ்வாறே திருச்சபை செய்கிறது. அது இந்தச் சொந்த மனப்பூர்வமான பலியில் தேவ ஊழியத்துக்கென்று தனக்கு உண்டானதில் சிறந்ததைப் பலியிடுகிறது. அதற்கிசைய சபையும் குருவபிஷேகத்தில்: 'அவனை எங்கள் கையிலிருந்து வாங்கிக் கொள்ளும்' என்று ஜெபிக்கிறது.

குருப்பட்டத்தில் நீ கவனிக்கவேண்டியதை அறிந்துகொள்: உன்னைப் பூரணமும் நற்பிரியமும் ஜீவனுமுள்ள பலியாக நிறுத்து. சபையின் பெரிய விசுவாசச்செய்கையையும் அறிந்துகொள்: சபை தெய்வகிருபைக்காகக் கெஞ்சுவதினால் தெய்வஊழியத்துக்குத் தனக்குண்டானதில் சிறந்ததைப் பலியிடுகிறது.

**19.** இது நிமித்தமாக நீ உன்மேலே நான் என் கைகளை வைத்ததினால் உன்னிலுண்டான பராபரனுடைய வரத்தை அனல்மூட்டி எழுப்ப உனக்கு நினைப்பூட்டுகிறேன். ஏனெனில் பராபரன் நமக்குப் பயத்தின் ஆவியை அல்ல, பலம், சிநேகம், சொஸ்தபுத்தியின் ஆவியைக் கொடுத்தார். 2 தீமோ. 1, 6 7.

அன்புள்ள கர்த்தராகிய தேவனே, உம்முடைய ஊழியத்தில் முன்னே ஊக்கமுடையவர்களாயிருந்து இப்போதோ சோம்பலும் அசமந்தமும் தளர்ச்சியுமுள்ளவர்களாய் உமது கிறிஸ்தவர்கள் நடுவே இருக்கிற எல்லாரையும் கிருபையாய் நோக்கிப் பாரும்! அவர்கள் ஆவியின் பலத்திலே புதிதாக்கப்படும்படிப் பரிசுத்த புத்திமதியினாலும் எழுப்புதலினாலும் அவர்களுக்குச் சகாயம் செய்ய வாரும்! விசேஷமாய் இந்நிலைமையிலிருக்கிற எல்லா மேய்ப்பரையும் போதகரையும் விசேஷமாய்க் கண்ணோக்கிப்பாரும். அவர்களை வருத்துகிற அநேக காரியங்களிருக்கிறபடியால் உமது ஆவி அவர்கள்மேல் தங்கி, அவர்கள் உமது உத்தியோகத்தில் வெகு அதிக சந்தோஷமாயிருந்து: 'உமக்குப் பின்னாக எங்களை இழும், நாங்கள் ஓடுவோம்' என்று அடிக்கடி அவர்கள் ஜெபித்த முந்தின காலத்தை அவர்களுக்குத் தாயடைவான அன்பினால் நினைப்பூட்டும். அவர்கள் உமது ஆவியில் எவ்வளவு பலமும் சந்தோஷமும் உடையவர்களாகவும், உம்மையும் உமது சபையையும் நேசிக்கும் நேசத்திலே எவ்வளவு உயிர்ப்புள்ளவர்களாகவும் இருந்தார்களென்பதை அவர்களுக்கு நினைப்பூட்டியருளும். அவர்கள் சரியாய்க் குணப்படவும் ஜெபிக்கவும் கூப்பிடவும் கடைசியிலே எல்லாவற்றையும் புதிதாக்குகிற உமக்குத் துதியையும் தோத்திரத்தையும் செலுத்தவும் கருத்தான ஆசை உடையவர்களாகும்படி அவர்களுக்குத் துணை செய்யும். ஆ, கர்த்தாவே, என் தேவனே, நான் என்னை நினைத்து எனக்காகவே ஜெபிக்கிறேன். நான் குருப்பட்டம் பெற்ற காலத்திலும் என் ஊழியத்தின் முதல் வருஷங்களிலும் என்னில் காணப்பட்டதுக்கு முற்றிலும் மாறானதை இப்போது என்னில் பார்க்கிறேனே. உன் முதல் சிநேகத்தை விட்டாயென்று உன்மேல் நமக்குக் குறை உண்டு என்று தேவரீர் எனக்குச் சொல்வதை வேதனையோடு உணருகிறேன். திரும்பும், கர்த்தாவே, என் பொக்கிஷத்தை எனக்குத் திரும்பத் தாரும். என் பாவங்களின்படியே என்னை நினையாமல், கிறிஸ்துவுக்குள்ளான உமது இரக்கத்தின்படியே என்னை நினைத்தருளும். என்னை வாதிக்கிறதும் என்னைத் தரித்திரனும் பிரயோஜனமற்றவனுமாக்குகிறதுமான அசமந்தமும் சோம்பலுமான வழக்கத்தின் பொல்லாத ஆவியைத் துரத்தியருளும். கர்த்தாவே, உமது ரட்சிப்புக்குக் காத்திருக்கி

றேன். சுத்த இருதயத்தை எனக்குச் சிருஷ்டியும்; ஒரு புதிய நிலைவரமான ஆவியை எனக்குத் தாரும்! தேவரீர் இப்போதும் என்னிலே காண்கிற உமது ஆவிக்குரிய ஜீவனின் சிறு பொறியை அது திரும்பவும் சுவாலையாய் எரியும்படி ஊதியருளும். தேவரீர் எங்களுக்குக் கொடுத்திருக்கிற ஆவி: பலம், சிநேகம், சொஸ்தபுத்தியின் ஆவியாயிருக்கிறபடியால், முற்காலத்தைப் போல நான் உம்மைத் துதிக்கும்படி ஒத்தாசை பண்ணும். நான் எனக்காகவும் என்னைப் போன்ற நிலையிலிருக்கிற எல்லாருக்காகவும் இயேசுவின் நாமத்தில் உம்மைநோக்கிக் கெஞ்சுகிறேன். ஆமேன்.

---

தீமோத்தேயு துவக்கத்தில் வைராக்கியமுடையவனும் வாலிப பலமும் விசுவாசமும் கிருபையின் வரங்களுமுடையவனுயிருந்த போது பவுல் தன் முதல் நிருபத்தைத் தன் பிரிய மாணுக்கனுகிய அவனுக்கு எழுதினுன். அது நம்பிக்கையும் அன்பும் நிறைந்த நிருபம். ஆயினும் அதன் பொருளைக் கவனிக்குமிடத்து தீமோத்தேயு ஒரு பலசாலியும் தன்னைக் காத்துக்கொள்ளக் கூடிய அவ்வளவு குணம் உடையவனுகவும் இருக்கவில்லை என்றும் அவனைப் பவுல் எச்சரிக்க அவசியம் இருந்தது என்றும் தோன்றுகிறது. இந்த நிருபம் இன்றைக்கும் விசேஷமாய் முதல் வருஷங்களின் மகிமையையும் மோசங்களையும் அனுபவிக்கிற குருக்களுக்குச் செல்லும். ஐயோ, மிகவும் சுருக்கமான காலமாகிய மூன்று வருஷங்களுக்குப் பின் பவுல் எழுதின இரண்டாம் நிருபத்தைப் பார்க்குமிடத்து தீமோத்தேயு தன் விசுவாச ஜீவியத்திலும் தன் ஊழியத்தைச் செய்வதிலும் முன்போல அவ்வளவு அனலுள்ளவனுயிருக்கக் காணேம். எபேசுச் சபை நடுவே எழும்பிய கஷ்டங்கள் ஒருவேளை அவன் பலத்துக்கு மிஞ்சியதாகக் காணப்பட்டிருக்கலாம்; அதிகப் போராட்டமும் உழைப்பும் இல்லாதிருக்கும்படி பல விஷயங்களில் அவன் இணங்கி அவைகள் போன போக்கிலேயே தானும் போக இடம் கொடுத்தான். ஆகையால் பவுல் இன்னம் நம்பிக்கையோடும் அன்போடும் ஆழ்ந்த உருக்கத்தோடும் அவனிலிருந்த தேவனுடைய வரத்தை அனல்மூட்டி எழுப்பவும், தேவன் நமக்குப் பயத்தின் ஆவியை அல்ல, பலம் சிநேகம் சொஸ்தபுத்தியின் ஆவியைக் கொடுத்தார் என்று அவனுக்கு நினைப்பூட்டவும் அவனுக்குத் திரும்பவும் எழுதிப் புத்திசொல்லுகிறுன். சில காலமாகத் தேவ ஊழியத்தில் இருந்திருக்கிறவர்களும், இதர மனுஷருக்கு ஒருவேளை கொஞ்சமேனும் தெரியாவிட்டாலும் தீமோத்தேயுவைப்போல் தங்களுக்கும் இருந்திருக்கிறது என்று அறிந்தவர்களுமாகிய குருக்களுக்கு இந்த நிருபம் விசேஷித்த விதமாய்ச் செல்லும்.

ஆ, அடிக்கடி அக்குறைவை மனுஷர் அதிகமாய் அறிவார்களே; அது எல்லாரும் பார்க்கும்படி இருக்குமே. இளமையும் வைராக்கியமுமாயிருந்த குரு பிற்காலத்தில் தன் பிள்ளைகளுக்காக மட்டுமே பணம் மீர்த்துவைப்பதில் கண்ணுயிருக்கிற குருவானதையும் காண்பார்கள்.

தன்னை அடக்கிக்கொள்ளுகிற தேர்ந்த மனுஷனில் முழுவதும் வாலிப வைராக்கியத்தின் முதல் நெருப்பு அவிந்திருக்குமானல், பலமும் வைராக்கியமும் அவனில் குறைந்துபோனதென்று முறையிடுவது அநியாயமே. நமக்குக் கொடுக்கப்பட்ட ஆவி தன்னை அடக்கி ஆளுகிற ஆவி. ஆயினும் அந்த ஆவியோடு பலமும் அன்பும் என்ற ஆவி இருக்கிறதா? இல்லாதிருந்தால் 'தன்னடக்கத்தின் ஆவி' நம்மிடத்தில் தேவனுலுண்டாகாத பயத்தின் ஆவிக்குக் கொடுக்கப்படும் ஒரு அழகான பெயரேயொழிய வேறல்ல.

"பலம், அன்பு, தன்னடக்கம்." இதோ தாயும் பிள்ளைகளும். நடுவில் இருப்பது தாய்; அது அன்பு. அதன் ஒருகையில் பலமும் மற்ற கையில் தன்னடக்கமும் இருக்கிறது. அன்பே தன்னடக்கத்தையும் உண்டாக்கும், அன்பே பலப்படுத்தும்.

உனக்கு அசாதாரணமான கிருபையின் வரங்கள் இல்லை. ஆயினும் உனக்குக் கிருபையின் வரங்கள் உண்டு. நீ விசுவாசிக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உன்னுடைய சுபாவ பலத்தையும் திறமையையும் சுத்திகரிக்கவும் பயனுள்ளதாக்கவும் உபயோகிக்கவும் துவக்கியிருக்கிறதே. உன் கர்த்தருக்கு நீ நெருங்கி நின்ற உன் குருவபிஷேகக்காலத்திலாவது இதிலே கொஞ்சம் உணர்ந்திருப்பாய். அதை நீ உன் உத்தியோகத்தின் முந்தின வருஷங்களிலும் உணர்ந்திருப்பாய்.

உன்னில் இருக்கிற கிருபைவரத்தை நீ எப்படி திரும்பவும் எழுப்புவாய்? முன்னுட்களை நினை, ஜெபத்தோடும் பாவ அறிக்கையோடும் கெஞ்சுதலோடும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபைக்குச் சமீபமாய் இரு. கிருபையிலிருந்து தான் கிருபை வரம் உண்டாகும்.

---

# IV. ஆசாரிய ஜீவியம்.

**20.** கண்காணியோ குற்றச்சாட்டில்லாதவனும், ஒரே பெண் சாதியின் புருஷனும் விழித்திருக்கிறவனும், சொஸ்தபுத்திமானும், இலக்கணனும், பரதேசிகள் சிநேகிதனும் போதகச் சமர்த்தனுமாயிருந்து, மதுபானப்பிரியன், வெட்டனவுக்காரன், இலச்சையான ஆதாயக்காரனுமாயிராமல், சாந்தனும் சண்டைபண்ணுதவனும், பண ஆசையற்றவனும், தன் சொந்த வீட்டுக்கு நல்முதலாளியும், பிள்ளைகளை எல்லாச் சீரோடுங்

கீழ்ப்படியப் பண்ணிக் கொண்டவனுமாயிருக்க வேண்டியது. ஒருவன் தன் சொந்த வீட்டுக்கு நல்முதலாளியாயிருக்க அறியாதிருந்தானேயா கில், பராபரனுடைய சபையை எப்படி விஜாரிப்பான். அவன் உப்பிப்போய், பிசாசு விழுந்த ஆக்கினையிலே விழாதபடி, புதியவனுயிருக்கவும் வேண் டாம். அவன் நிந்தனையிலும் பிசாசின் கண்ணியிலும் விழாதபடி, புறம்பான வர்களால் நற்சாட்சி பெற்றவனுமாயிருக்க வேண்டும். 1 தீமோ. 3, 2–7.

---

கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னையும் எல்லா கிறிஸ்த வர்களையும் அசுத்தத்துக்கு அல்ல பரிசுத்தத்துக்கு அழைத்திருக் கிறீர். நான் மனுஷர் நடுவே குற்றச்சாட்டில்லாமலும் கறைப்படா மலும் நடந்து உமது பரிசுத்த சுவிசேஷத்தைக் குறித்துப் பொல் லாப்பாய் எண்ண அவர்களுக்கு எந்தக்காரணமும் கொடாமல், இந்த வேலையைச் செய்ய உமது பரிசுத்த ஆவியின் கிருபையை எனக் குக் கொடுக்க வேண்டுமென்று உம்மை கெஞ்சுகிறேன். தேவரீர் பரிசுத்த ஞானஸ்நானத்திலே என்னில் நாட்டிய பரிசுத்தத்துக்கான உள்ளான ஆவல் என்னுள் சரியாய்ப் பலங்கொண்டு உள்ளேயும் புறம்பேயும், நன்னுளிலும் துன்னுளிலும், நற்கீர்த்தியிலும் தூர்க்கீர்த் தியிலும் தேவனுடைய ஊழியக்காரனுடைய உத்தம ஜீவியம் செய்ய என்னுடைய முழு ஜீவியத்தையும் பரிசுத்தத்தின் நியாயபிரமாணத் துக்கு ஒத்ததாக்கும். என்னுடைய சிந்தையின் நியாயப்பிரமாணத் துக்கு ஒத்ததாய் என்னுடைய மாமிசத்தை உருவாக்கும்படி பரி சுத்த பலத்தையும் திடாரிக்கத்தையும் எனக்குத் தாரும். அப்போது தான் என்றென்றைக்கும் இருக்க வேண்டிய புதியமனிதன் அதிகமதிக மாய் என் வார்த்தை மூலமாகவும் கிரியை மூலமாகவும் பிரகாசித்து என் சரீரத்தையும் கூட நற்பிரியமான பலியாக்குவான். கர்த்தாவே, நான் பேசுகிறபடி நடக்கிறேனு என்று வெகுபேர் என்னைப் பார்த் துக்கொண்டே இருக்கிறுர்களே, உமது சுவிசேஷத்தை குருவா கிய என் ஜீவியப்படி தீர்ப்பார்களே; ஆதலால் நான் மேலெழுச்சி யினுலாவது விடமாட்டேன் என்றிருக்கிற எந்த பாவத்தினுலாவது யாருக்கும் இடறல் உண்டாக்காமல், மெய்யான கிறிஸ்துமார்க்கத் துக்கு அனுசரணையாக நடந்துகொள்ளும்படி எனக்கு உதவிசெய்த ருளும் என்று கெஞ்சுகிறேன். ஆமேன்.

---

பவுல் இங்கே புறம்பான நடக்கைக்கு அடுத்த அப்பேர்ப்பட்ட லட்சணங்களை முக்கியமாய்ச் சொல்லும்போது அவைகளைக் கண் காணிகளுக்கென்றே சொல்லாமல், கண்காணிகளைத் தெரிந்தெடுக்க வேண்டிய தீமோத்தேயுவுக்கே தெரிவிக்கிறுனென்று நினைக்கலாம். அவர்களில் பார்க்கிறதும் அவர்களைப் பற்றிக் கேட்கிறதுமானவை களைக் கொண்டே அவர்களை நிதானித்து அறியவேண்டியது. எப்

படியாகிலும் குற்றச்சாட்டில்லாத ஜீவியத்தைப் பவுல் எவ்வளவு முக்கியப்படுத்துகிறான் என்பதைக் கவனி. கிறிஸ்தவ விசுவாசம் கிறிஸ்தவர்களைச் சுத்தமும் குற்றச்சாட்டில்லாததுமான ஜீவியத்துக்கு நடத்துகிறது என்பது கிறிஸ்து மார்க்கம் உண்மை என்பதற்குப் பலமான நியாயம். ஒரு நல்ல மரம் நல்ல கனிகளைக் கொடுக்கும். இதுவே பலமானதும் எல்லாருக்கும் விளங்கக் கூடியதுமான ரூபகாரம். இது கிடைக்கும் பட்சத்தில் கிறிஸ்துமார்க்கத்தை ரூபிக்கும்படியான அநேக முயற்சிகள் அனுவசியம்; இது அவசியமான ரூபகாரங்களுக்கு அதிக பலத்தையும் தரும். இந்த ரூபகாரங்கள் இல்லாதிருப்பதோ எதிரியின் கையில் பலத்த ஆயுதமாம். ஆதலால் சபையையும் அதன் ஊழியரையும் தற்காலத்தில் எதிர்க்கும் அநேகம் பேர் கிறிஸ்தவர்களின் குற்றமுள்ள ஜீவியத்தைச் சுட்டிக்காட்டுவதோடு ஆரம்பிக்கிறார்கள்.

உள்ளான அனுபவங்களைக் குறித்தும் ஆவிக்குரிய போராட்டங்களைக் குறித்தும் அதிகமாய்ப் பேசும் கிறிஸ்தவர்களில் சிலர் குற்றச்சாட்டில்லாமையைக் குறித்துப் போதுமானபடி கவலைப்படக் காணோம். அவர்கள் வார்த்தையைக் காப்பாற்றுவதில் முழு உண்மையைக் காணோம், பணவிஷயத்தில் நம்பப்படக்கூடாதவர்கள், சொந்த வீட்டாருக்குச் சந்தோஷமும் எழுப்புதலும் உண்டாக்குகிறதில்லை, அவர்களுடைய நாவு வெகு துடுக்கானது. அவர்கள் குற்றச்சாட்டில்லாதவர்களாகுமட்டும் பரலோககாரியங்களைக் குறித்துப் பேச வெட்கப்பட வேண்டும். அவர்களுக்குள்ள கிறிஸ்துமார்க்கம் ஒரு கிறிஸ்தவனுக்கு அடுத்த மகா சின்ன காரியத்தையும் செய்ய அவர்களுக்குப் பெலனளிக்காமல் போனால், கிறிஸ்து மார்க்கத்தில் மகா பெரியதும் இரகசியமுமான காரியங்களில் பாத்தியம் பாராட்டுவது எவ்வளவு வெட்கக்கேடும் இடறலுமாகும். மேய்ப்ப நிருபங்களிலெல்லாம் இந்த எண்ணங்களே ஒரு பலமான ஆழ்ந்த நீரோட்டம்போல் ஓடுகிறது. ஆதலால் இவை ஒரு குருவின் சொந்த ஆத்மாவுக்கும் அவன் சபையில் செய்யும் வேலைக்கும் அடுத்தது.

குருக்கள் மற்ற கிறிஸ்தவர்களைவிட பரிசுத்தராயிருக்க வேண்டுமென்று சொல்லக் கூடுமா? ஒரு பக்ஷத்தில் கூடாது என்று சொல்லலாம்; ஏனெனில் எல்லாக் கிறிஸ்தவர்களும் பூரண சற்குணத்தை நாடுவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறபடியால் விசேஷித்த குருத்துவப் பரிசுத்தம் கிடையாது. மறு பக்ஷத்தில் கூடும் என்று சொல்லலாம்; ஏனெனில் அவர்களுடைய உத்தியோகத்தின் வேலை அவர்களது பரிசுத்த ஜீவியத்துக்காக ஒரு உதவியும் ஆதாரமுமாயிருக்கிறது. இத்தகைய சிலாக்கியம் மற்றவர்களுக்கு அவ்வளவாய்க் கிடையாது. அத்தோடு மற்றவர்கள் காட்டும் முன்மாதிரியை விடத் தாங்கள்

காட்டும் முன்மாதிரி அநேகருக்குக் கேடாகவோ ஆசீர்வாதமாகவோ பலிக்கும் என்ற அறிவு அவனுக்கு ஒரு எச்சரிப்பாயிருக்கிறது. குருக்கள் பரிசுத்தத்தில் தேறினவர்களாயிருப்பதை மற்றவர்கள் எதிர்பார்க்காதிருக்கவும் தாங்கள் இக்கடமையை ஒத்துக்கொள்ளாதிருக்கவும் துவக்கினுல் அது பரிதாபமான நிலையாம். "மந்தைக்கு மாதிரிகளாயிருக்க வேண்டிய ஊழியத்தை தாங்களே ஒப்புக் கொண்டிருக்கிற அவர்கள் அதை ஒரு பாரமாக மதிக்காமலே அதற்குச் சந்தோஷத்தோடும் பயத்தோடும் உடன்பட வேண்டியதில்லையா?

மிகவும் சீர்குலைந்துபோன ஒரு தனிச்சபை எதினுல் அவ்வளவு சீர்கெட்டுப்போயிற்று என்று அதின் சரித்திரத்தை ஆராய்ந்துபார்த்தால் அதில் ஊன்றக்கட்டுதலுக்கென்று அறிய பெரிய பிரசங்கங்கள் செய்யப்பட்டிருந்தும் குற்றமற்ற ஜீவியமில்லாத ஒரு குருவோ சில குருக்களோ அதில் இருந்தார்கள் என்கிற பயங்கரமான விஷயம் எப்போதும் பிரத்தியக்ஷமாய் விளங்கும். குருவின் ஜீவியம் ஜனங்களின் சுவிசேஷம் என்னும் வார்த்யின் உண்மை அவனுடைய துர்நடக்கையில் தான் விசேஷமாய் விளங்கும். ஒரு குருவின் ஜீவியம் எவ்வளவு குற்றமற்றதாயிருந்தாலும் அது தன்னில் தான் சபையை ஒங்கி வளரச்செய்ய வல்லமையுள்ளதாயிராது. வாயும் ஜீவியமும் ஏகமாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலல்லவா அப்பிரசங்கம் ஒரு பலமான விதைபோல் இருக்கும். அது சீக்கிரம் முளைத்துக் கனி தராதபோதிலும் பிற்காலத்தில் வரும் வேலைக்காரர் அதை அறுப்பார்கள்.

---

**21.** கண்காணியோ குற்றச்சாட்டில்லாதவனும், ஒரே பெண்சாதியின் புருஷனும் விழித்திருக்கிறவனும், சொஸ்தபுத்திமானும், இலக்கணனும், பரதேசிகள் சிநேகிதனும், போதக சாமர்த்தனும் ... ஆயிருக்க வேண்டியது. 1 திமோ. 3, 2–4.

---

ஆண்டவராகிய தேவனே, உம்முடைய பிள்ளைகளின் சரியான ஆசாரிய நடக்கைக்குரிய ஒவ்வொரு விஷயத்திலும் குற்றச்சாட்டில்லாதவனுயிருக்க எவ்வளவு ஆசையாயிருக்கிறேன். தேவரீர் என் மனதிலே பதித்திருக்கிற, பரிசுத்தத்தின் மேலுள்ள நாட்டம்: இதிலே அப்பியாசித்திரு, அதிலே உன் பலத்தைக் கையாடு என்று இந்தக் கடமைகளில் ஒவ்வொன்றையும் நினைப்பூட்டுகிறது என்று எப்போதும் கவனிக்கிறேன். எனக்கு வயது ஆக, ஆக, நான் ஏதோ என் ஜீவனுக்கடுத்த இந்த அந்த சின்ன காரியத்தில் கீழ்ப்படியாமலும் அசட்டையாகவும் போனபோதெல்லாம் நான் முழுவதும் களைப்படைந்து தரித்திரனுனேன் என்று பார்க்கிறேன். தேவ

ரீர் எனக்குக் கொடுத்த பரிசுத்தத்தின் ஆவியையும் என் முழு உள்ளத்தையும் துக்கப்படுத்தினேன் என்று உணருகிறேன். ஆதலால் நான் ஏற்கனவே உம்மிடத்தில் கெஞ்சினது போல் இப்போது திரும்பவும் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன்: நான் ஆவியின் பிரகாரம் ஒரு பெரிய சிற்பாசாரிக்கு ஒப்பாயிருக்கத் துணை செய்யும். அவனுக்குத் தேவரீர் அழகும் பூரணமுமான உருவங்களைச் செய்யத் திறமை கொடுத்திருக்கிறீர். அவன் தான் செய்யப்போகிற சாயலைக் கொஞ்சம் கொஞ்சமாக கடினமான கல்லிலே உருவாக்குகிறானே, தேவரீர் பர்வதத்திலே அவனுக்குக் காட்டிய பிரகாரம் ஒவ்வொரு விஷயத்திலும் செய்ய அவன் தன் முழு பலத்தையும் சுறுசுறுப்பையும் செலவிடுகிறான். கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் உமது நேசகுமாரனுடைய மெய்யான ஜீவனுள்ள சாயலை என் ஞானஸ்நானத்தில் என்னில் பதித்தீர். அவர் திரும்ப வந்து தம்முடையவர்களைக் கூட்டிக்கொண்டு போகுமட்டும் இந்த என் ஜீவியத்தைப் படிப்படியாய் அவருடைய சாயலுக்கு ஒப்பாக்கும்படி துணை செய்யும். தேவரீர் இந்த பரிசுத்தமும் பெரியதுமான வேலையைக் கொடுத்திருக்கிறபடியால் என்னைப் பலப்படுத்தி என்றென்றைக்கும் இருக்கிற புதிய மனிதனை நான் உருவாக்குவதே எல்லாவற்றுக்கும் மேலாக என் வேலை என்று எண்ண எனக்குத் துணை செய்யும். இவ்வேலையில் ஒவ்வொரு சிறு காரியத்திலும் கூட எனக்குத் துணை செய்யும். கர்த்தாவே, நான் பூரணமானதை செய்யத்தக்கதாக சிறு காரியத்திலேயே எனக்குத் துணை செய்யும். ஆமேன்.

---

"ஒரே பெண்சாதியின் புருஷன்": இது விவாகமார்க்கத்தின் உண்மையையும் முழு பரிசுத்த கற்பையும் குறிக்கும். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவன் ஸ்திரீகள் நடுவே செய்ய வேண்டிய வேலை அநேகம் இருக்கிறது. அவன் தன்னுடைய ஆவியின் துப்புரவைக் காத்துக்கொள்வானாக! அவனுடைய முழு ஜீவியத்திலும் மக்தலாவூர் மரியாளுக்கு: "என்னைத் தொடாதே" என்று இயேசு நாதர் சொன்னதை மனதில் வைப்பானாக! இது விஷயத்தில்தான் மகா ஆழ்ந்ததும் நிர்ப்பந்தமுமான விழுகுதல் உண்டு.

"விழித்திருக்கிறவனும்": உன் சொந்த ஜீவியத்தின் மேலேயும் உன் சபையின் நிலைமையின் மேலேயும் திறந்த தெளிவான கண்களோடு இரு. உண்மையைப் பார்க்கப் பிரியப்படாத ஒரு சோதனை உண்டு.

"சொஸ்தபுத்திமானும்": இதைப் பூர்வத்தார் புத்திசாலித்தனம், தைரியம், நியாயம், நீதி இவைகளோடு கடைசிப் புருஷலட்சணமாக மதித்தார்கள். ஒரு மனுஷனுக்குள் இருக்கும் பலமான

மட்டுத்திட்டம் என்று பொருள்படும். அவன் நடுநிலையைக் கண்டு கொண்டவன். அவன் முழு ஜீவியமும் இதனால் ஒழுங்குப்படுகிறது. இது விசேஷித்த வைராக்கியமே இல்லாதவர்களின் இலட்சணம் அல்ல. இவர்கள் ஒருபோதும் அத்துமீறி நடக்கிறதில்லை. தேவையான ஒரே காரியத்திலே சிந்தையைச் செலுத்தித் தங்கள் முழு ஜீவியத்தையும் அந்த ஊழியத்துக்கென்றே உபயோகிக்கிறவர்களின் இலட்சணம் அது. அது அப்பியாசப்பட்ட தேர்ந்த கிறிஸ்தவர்களின் லட்சணம். அது வெகுகால அப்பியாசத்தால் வெளிக்குவரும் லட்சணம். மூந்த மூந்த மேய்ப்ப நிருபங்களில்தான் பவுல் அதைக் குறித்து அதிகமாய்ச் சொல்லுகிறார்.

''இலக்கணனும்'': உள்ளத்தில் இயற்கையாகவே உற்பத்தியாகும் மரியாதையும் மேன்மையுமான கோலம். அதற்கெதிராக ஒருவன் தன் பாழான ஆத்மத்தின் தன்மையைப் புறம்பான நடக்கையினால் மறைக்கும்படி அதைச் சும்மா காட்டினால் மனுஷர் அதைக் கண்டு வெறுப்படைவார்கள். உள்ளான ஜீவியத்திலிருந்து பிரகாசிக்கும் இலக்கணக்குணம் சில குருக்களின் ஆத்மவிஜாரணையில் பலன் செய்கிறது. அவரைக் ''கண்டால் கலி தீரும்'' என்பார்.

''பரதேசிகள் சிநேகிதன்'': பரதேசிகளைச் சேர்த்துக்கொள்ள மறவாதேயுங்கள்; ஏனெனில் அதினால் சிலர் அறியாமல் தேவதூதரைச் சேர்த்துக் கொண்டதுண்டு (எபி. 13, 2; 1 மோ. 18, 8; 19, 2).

''போதகச்சமர்த்தன்'': தான் படித்திருக்கிற சத்தியத்தை மற்றவர்களுக்குச் சொல்லுகிற சுபாவ வரத்தைப் பற்றி மாத்திரம் இவ்விடத்தில் பேச்சு இல்லை. சத்தியத்தில் ஜீவிக்க மற்றவர்களை ஏவுகிற ஓராளவாய்ப் பலமான விசுவாசஜீவியத்தோடு சம்பந்தப்பட்ட ஆச்சரியமான ஞான சக்தியைக் குறித்தும் பேச்சு உண்டு அதின்படி 'சுவிசேஷத்தினால் பிள்ளைகளைப் பெறுவதைக் குறித்தும்' கெர்ப்ப வேதனைப்படுவதைக் குறித்தும்' வேதத்தில் சொல்லியிருக்கிறது.

''மதுப்பானப் பிரியனாயிராமல்'': நீ சபைகுருவாக உலகத்தார் செய்யும் பெரிய விருந்துகளுக்குப் போகக் கடமைப்பட்டால் உன்னைக் குறித்துக் கவனிப்பாயிரு. மதுபானச்சூடு கொண்ட முகங்களோடு குருக்கள் அவர்கள் நடுவே இருந்ததையும் கண்டவர்கள் உண்டு. தற்காலத்தில் சுவாதீனமுள்ள பூரணமான மதுவிலக்கு ஒருவேளை பிரயோஜனமாயிருக்கலாம் (1கொரி. 7, 26; 8, 13). ஆயினும் சங்கங்களோடும் கட்டுப்படுத்தும் நோம்புகளோடும் உனக்குச் சம்பந்தமே வேண்டாம் ( 1தீமோ. 4, 14; யோ. 2, 1; மத். 26, 27; மத். 11, 19). நீ விடுதலையுள்ளவனாய் இருக்க வேண்டும்.

''வெட்டனவுக்காரனாயிராமல்'': சிற்சில நேரத்தில் அடக்க

முடியாத மூரட்டுத்தனம் உன்னில் எழும்புவது உனக்குத் தெரியும். கட்டுக்கு நீங்கலாக விரும்பும் மிருகம் அது.

**22.** கண்காணியோவெனில் குற்றச்சாட்டில்லாதவனும்...இலச்சையான ஆதாயக்காரனுமாய் இராமல், சாந்தனும் சண்டை பண்ணாதவனும் பண ஆசையற்றவனும்...ஆயிருக்கவேண்டியது. 1 தீமோ. 3, 2– 4.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, தேவனுடைய பரிசுத்தரே, தேவரீர் பூமியில் செய்த முழுவேலையிலும் சுயநயமின்றி தம்மையே ஒப்புக்கொடுக்கும் அன்பு நிறைந்த நல்லவராகவும் சுத்தராகவும் உம்மைக்காட்டியிருக்கிறீர். பூமியிலுள்ள உமது சபையை இப்போதும் பயங்கரமாய்க் கெடுத்துப்போடும் சகல கறைகளும் நீங்க அதைச் சுத்திகரியும். அது மென்மேலும் உமக்கு ஒப்பாகும்படிக்கு மாமிசத்திலும் ஆவியிலுமுண்டான சகல கறையும் நீங்கத் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளும்படியான வைராக்கியத்தை அடைய உமது பரிசுத்த ஆவியை அனுப்பும். அவரால் உமது சபையிலே ஊழியரான ஒரு பரிசுத்த ஜாதி ஏற்படுவார்களே. தேவரீருடைய வீட்டிலே சுயநயம் பாராமல், தங்களை ஒப்புக்கொடுக்கும் அன்பு நிறைந்தவர்களாய் எப்படி சஞ்சரித்து, நன்றும் சுத்தமுமாய் மாறவேண்டும் என்பதைத் தேவரீடத்தில் அவர்கள் கற்றுக்கொள்ளுவார்களே. முற்காலத்தைப் பார்க்க உமது நாமத்தைச் சுமப்பது இந்தக் கடைசிக் காலங்களில் மிகவும் கஷ்டமாய்ப்போயிற்று. உமது கிறிஸ்தவர்களெல்லாம் உமது பயத்திலும் சிநேகத்திலும் ஜீவிக்கும்படி உதவிசெய்யும். அப்போது அவர்களைக் குறித்துப் பொல்லாப்பானதைப் பேச விரும்பினாலும் உலகம் வெட்கப்பட்டுப்போய் உமது சுவிசேஷத் தண்டை இழுக்கப்படுவார்களே. உமது ஊழியருடைய வாயிலும் ஜீவியத்திலும் சுவிசேஷமும் அதன் கனிகளும் நிறையக் காணப்படுவதினால் அவர்கள் நல்ல முன்மாதிரிகளாயிருப்பதற்கு அவர்களுக்குத் துணைபுரியும். அப்படி அவர்களைக் குறித்துப் புறமதஸ்தர் வலிய நற்சாட்சி கொடுப்பதோடு உமது சபையார் அவர்களைக் குறித்து நம்பிக்கைகொண்டு அவர்களைச் சந்தோஷத்தோடு பின்பற்றுவார்கள். ஆமேன்.

“இலச்சையான ஆதாயப்பிரியனாயிராமல், சாந்தனும் சண்டை பண்ணாதவனும் பணஆசையற்றவனும்”. இந்த நாலு வார்த்தைகள் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளதாயிருப்பது தெளிவு. சுயநலம் கருதாமையைக் குறித்தே இவைகள் பேசும். இலவசமான கிருபையாகிய சொல்லிமுடியாத ஈவைப் பிரசங்கிக்கிறவர்கள் ஆதாயத்தினி

மித்தமே அன்றுடகப் பிழைப்புக்கென்றே இவ்வேலை செய்வார்களானால், அவர்கள் சொந்த வாக்கையே மறுத்துக் கெடுத்துப்போட வேறெதுவும் தேவை இல்லை. இந்த இடறல் தலைமுறை தலைமுறையாய் நிற்கிற இடறல். கூடியமட்டும் சுயநயமற்ற குருக்களின் பகுதியைக் கூட இது வருத்துகிறது.

கிறிஸ்துவினிமித்தம் சுவிசேஷத்துக்கு ஊழியம் செய்யாதவர்கள் அன்றுடக அப்பத்தினிமித்தம் சுவிசேஷத்துக்கு ஊழியராயிருப்பார்கள். இதனால் எத்தனையான இடறல்கள் உண்டாகின்றன! உத்தம ஊழியருக்குங் கூட இவ்விஷயத்தில் வெகுவான சோதனைகளுண்டு; அவர்கள் உதவிசெய்ய வேண்டிய வெகுபேர் இருப்பார்களே. ஆயினும் உதாரத்வ சுவிசேஷம் உதாரத்வ இருதயத்தையும் உதாரத்வ கரத்தையும் கொடுக்கும். ஆதலால் கொடுப்பதில் கிறிஸ்துவின் உத்தம ஊழியரைப் பார்க்க உற்சாகமுள்ளவர்களையும் சந்தோஷமுள்ளவர்களையும் காண்பது அரிது. மற்றவர்களைப்போல அவ்வளவு அதிகமாய் நீ கொடுக்கக் கூடாவிட்டாலும் நீ கொடுக்கிற அந்தச் சொற்பமும் அன்பாலும் மனப் பூர்வத்தாலும் மனமுவந்த இரக்கத்தாலும் நீ கொடுக்கக் கூடியவனாயிருக்கிறாய் என்று உன்னைத் தேற்றிக்கொள்.

உன் மட்டில் சகல பொல்லாப்பான தோற்றத்தையும் அருவரு. பற்பல ஏற்பாடுகளில் பொல்லாப்பாய்க் காணப்படுகிற சகலத்துக்கும் விரோதமாக நீ செய்யக் கூடியதைச் செய்யப் பார். பூர்வசபையில் ஞானஸ்நானம், அடக்கம் முதலான சமயங்களில் மத். 10, 8 பிரகாரம் குருவுக்குக் கொடுக்கப்படும் உற்சாகமான காணிக்கைகள் வெகு கண்டிப்பாய் விலக்கப்பட்டன. ஐந்தாம் நூற்றாண்டு முதல் உற்சாகக் காணிக்கைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டது; கட்டாயம் பண்ணுதல் மட்டும் விலக்கப்பட்டது. இது வரவர கூட்டுச்சம்பளமும் பாத்தியமுமாயிற்று. 1875ம் வருஷமுதல் மிச்சமான ஜெர்மன் லுத்தரன் தேசங்களில் இந்த வரி நீக்கப்பட்டது அல்லது மிகவும் குறைக்கப்பட்டது. அதற்குப் பதிலாகக் குருக்களுக்குச் சபை பொக்கிஷத்திலிருந்து ஒரு உதவிச்சம்பளம் அளிக்கப்பட்டது.

தெய்வ ஊழியர் வெகு விசை படவேண்டிய தங்கள் கஷ்டங்களைச் சற்று இலகுவாகும்படியான ஒரு மனச்சந்தோஷம் அவர்கள் பெற வேண்டுமென்று ரோத்தே (R. Rothe) என்பவன் விரும்புகிறான்.

குருமார் தங்கள் வயிற்றுக்கவலைகளின் நடுவே சந்தோஷத்தையும், பெலனையும், திருப்பணிக்குரிய திறமையையும் பாதுகாத்துக் கொள்வது எவ்வளவு கஷ்டமானது. அவ்வயிற்றுக் கவலைகள் அவர்களை அதிகமதிகமாக மலைத்துப்போகும்படி செய்கின்றன;

அவைகள் சபைகளின் ஜீவியத்தையும் அவைகளுடையதையும் நாசப் படுத்தக் கூடியவைகள். "இவைகள் எல்லாம் உங்களுக்குத் தேவை என்று உங்கள் பரமபிதா அறிவார்" என்பதினால் உற்பத்தியாகும் மனச்சந்தோஷம் குருமாரின் வயிற்றுக்கவலைகளினூடேயும் ஒழிந்து போகாது. தற்சமயம் இருப்பதைவிட தாராளச் சிந்தையுள்ள உத்தம சபைகள் தெய்வ ஊழியரின் உண்மையான பிரயாசையினால் எழும்பினால், அச்சபையார் குருமார் தங்கள் வேலையை இடையூறின்றி செய்யத்தக்கதாக அவர்களுக்கு தகுந்த ஜீவனம்சமளிப்பதைத் தங்கள் சிலாக்கியமாகமட்டுமல்ல, தங்கள் கண்ணிய கடமையாகவும் எண்ணுவர்.

"தன் சொந்த வீட்டுக்கு நல்ல முதலாளியும்". குடும்பமும் ஒரு சிறு சபை தான். ஆகையால் குரு வீட்டெஜமானைகத் தன் வீட்டில் செய்யும் வேலையைக் கொண்டே அவன் சபையிலே செய்யக் கூடிய தேவ ஊழியத்தைக் குறித்து லூக். 16, 10 ன்படி யூகிப்பது நியாயம். இதையல்லாமலும் குருவும் அவர் மனைவியும் செய்யும் குடும்ப ஜீவியமும் அவர்களுடைய பிள்ளைகளின் இலட்சணமும் நடக்கையும் மறைந்து கிடக்க முடியாது; எவ்வித முன்மாதிரி கொடுக்கப்படுகிறதென்று பார்க்க குருவீட்டின் மேலே அநேகரின் கண்கள் வைக்கப்பட்டிருக்கும். குருவீட்டினின்று எத்தனையோ ஆசீர்வாதம் சபைகளின் பேரில் பாய்ந்தோடியிருக்கிறது; ஆயினும் எத்தனையோ இடறலும் இருந்திருக்கிறது. ஒரு சபையான் குருவீட்டுக்கும் தேவாலயத்துக்கும் சமீபமாய்க் குடியிருந்தால் அவன் தேவனுக்குத் தூரமாயிருப்பான் என்று ஒருவன் வற்புறுத்திச்சொன்னனும்.

"அவன் புதியவனுயுமிருக்க வேண்டாம்". அவன் இன்னும் சிலுவையினால் நொறுங்குண்டுதலுக்குப் புதியவனுயிருத்தலால் அவன் இன்னும் பக்குவமடையாதவன். முந்த கிறிஸ்துவைப் பின்செல்வதாகிய தாழ்மையின் பரிசுத்த பள்ளிக்கூடத்திலே சிலகாலம் இருந்தவனே போதிக்கவும் வழிகாட்டியாயிருக்கவும் கூடியவன். ஆதலால் போதகர் அதிக இளமையானவர்களாயிருக்கக் கூடாது. வாலிப குருக்களைக் குறித்து லேயே (Loehe) என்பவனின் அபிப்பிராயம் என்னவென்றால்: அவர்களைவிடத் தற்பெருமையுள்ள சந்ததி கிடையாது. சகல பலன்களும் தங்களுடைய பலன்களென்பார்கள். அவர்கள் காண்கிற சர்வ நன்மையையும் தங்கள் முயற்சியோடு சம்பந்தப்படுத்தியே வைக்கிறார்கள். அவர்களுடைய வாலிப வயதிலே ஏற்கனவே எல்லாம் தெரியுமாம். பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்டது மட்டுமல்ல, அனுபோகத்தாலேயே தெரியும் என்று அவர்கள் சொல்வது நகைப்புக்கிடமானதல்லவா? என்பதே

"புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனுயுமிருக்க வேண்டும்". குருக்கள் உத்தியோகத்திற்கு வருமுன்னேயே குற்றச்சாட்டில்லாதவர்களாயிருந்திருக்க வேண்டும். மனம்போன போக்கிலே தன் வாலிப காலத்தைப் பின்னிட்டதை ஒரு குரு நினைக்கவேண்டியதாயிருந்தால் அது கசப்பானதே. பிறத்தியாரும் அதை மறக்க முடியாதிருந்து, 'அந்த குரு புதிய மனுஷனுனர் என்பதை நம்ப மாட்டோம்' என்று சொல்வதினுல் அவனுக்கு தன்னுடைய வேலையில் இப்படி ஏற்படும் தடையை உணர்வது அவனுக்கு வேதனையான கஷ்டங்களுக்கு வழியாகி, அவனை தைரியமற்று சோர்ந்துபோகும் படியான சோதனைக்குட்படுத்தும்.

---

**23.** வாலவயது இச்சைகளையோ நீ விலகியோடி, கர்த்தரைச் சுத்த இருதயத்தால் தொழுகிறவர்களோடு நீதியையும் விசுவாசத்தையும் சிநேகத்தையும் சமாதானத்தையும் பின்தொடர்ந்துபோ. புத்தியும் கல்வியும் இல்லாத தர்க்கங்களோ சண்டைகளைச் செனிப்பிக்குமென்று அறிந்து, அவைகளைச் சேர ஒட்டாதிரு. கர்த்தரின் ஊழியக்காரன் சண்டை பண்ணுமல் எல்லாருக்கும் சாந்தமுள்ளவனும் போதகசமர்த்தனும் பொல்லாரைச் சகிக்கிறவனுமாயிருந்து, எதிர்ச்சிந்தைக்காரருக்குப் பராபரன் சத்தியத்தை அறிய குணப்படுதலைத் தருவாரோ என்றும்... மெத்தனவுடனே அவர்களை உபதேசிக்க வேண்டியது. 2 தீமோ. 2, 22-26.

---

அன்புள்ள கர்த்தராகிய கடவுளே, எங்களில் ஒவ்வொருவனும் எவ்வளவாகச் சத்தியவானுயிருப்பானே அவ்வளவாகச் சத்தியத்தை அறிவான், அவன் சத்தியத்தில் எவ்வளவாக வளர்ந்து தேறுவானே அவ்வளவாக சத்தியத்தின் அறிவிலே தேறுவான் என்பது நீர் உம்முடைய மனுஷரைச் சிருஷ்டித்ததின் கருத்து என்று எனக்குத் தெரியும். எனக்குள்ளும் சத்தியத்தைப்பற்றிய ஆழ்ந்த அறிவு உண்டாகி நான் பிறத்தியாருக்கு இரட்சிப்பின் பாதையைப் போதிக்கச் சமர்த்தனுக விரும்புகிறேன். ஆதலால் தேவரீர் உமது பரிசுத்த ஆவியால் என் கர்த்தராகிய இயேசுவைப் பற்றும் விசுவாசத்திலே என்னைப் பலப்படுத்தும். பரிசுத்த ஜீவியத்துக்கு அடுத்த சகல விஷயத்திலும் என்னிடத்தில் மாயமற்ற கீழ்ப்படிதலும் தேர்ச்சியும் காணப்படும்படி என் சித்தத்தைச் சுத்திகரியும். கர்த்தாவே, எனக்குச் சகாயம் செய்யும். நான் என் சொந்த ஜீவியத்தில் வெதுவெதுப்பாயிருந்து எனக்கின்பமான பாவங்களால் நான் மேற்கொள்ளப்பட்ட போதெல்லாம் உம்மைப் பற்றிய என் சிந்தனை சிதறினதையும் சபையில் செய்யும் என் பிரசங்கமும் வியாதியஸ்தரின் படுக்கையண்டை நான் பேசும் வார்த்தைகளும் சத்து சாரமற்றவையாயிருப்பதையும் வெகு வேதனை

யோடு பலவிசை கவனித்திருக்கிறேன். அசுத்த இருதயங்களையும் உதடுகளையும் தண்டிப்பதற்கென்று தேவரீர் வைத்திருக்கிற அப்படிப்பட்ட சாபத்தை என்னைவிட்டு விலக்கி, நான் உமது வசனத்தின் இரகசியத்தை ஆழ்ந்து அறிந்து தாராளமாகவும் தடையில்லாமலும் அதைப்பற்றி என் சபையிலே சாட்சி கொடுக்கத் தக்கதாக விசுவாசத்தின் கீழ்ப்படிதலிலே நல்மனச்சாட்சி உடையவனாயிருக்கும்படி தயவுசெய்தருளும். உயிர்ப்பிக்கும் உமது பரிசுத்த வசனம் சீர்கலங்காததாக என் உள்ளத்தின் வழியாகவும் என் சொற்கள் மூலமாயும் போய் உமது சபையை ஊன்றக்கட்டத்தக்கதாக, தேவரீர் என் ஆத்மாவை உயிர்ப்பித்து என்னை பரிசுத்தனாக்கியருளும். ஆமேன்.

---

குருவின் சொந்த ஆத்மம் விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் தேர்ச்சி பெறுவதோடு பலன் தரும் சீரானதோர் போதகத்தொழில் எவ்வளவு அதிகமாய்ச் சம்பந்தப்படுகிறது என்பதை இவ்வாக்கியமும் வேறுவாக்கியங்களும் தெளிவாய்க் காட்டும் (1தீமோ. 3, 1முதல்; 4, 16). இவ்வாக்கியங்களிலே ஒரு போதகனுடைய செய்கையும் திறமையும் அவனுடைய சொந்த கிறிஸ்தவ இலட்சணங்களின் வரிசையிலேயே காட்டப்படுகிறது. ஒரு குரு நீதி, விசுவாசம், சிநேகம், சமாதானமாகிய இவற்றைப் பின்தொடருவதிலும் மெத்தனவிலும் பொல்லாப்பைச் சகிப்பதிலும் எவ்வளவு திறமை உடையவனாயிருப்பானோ அதே அளவாக அவன் வீணான போதகச்சண்டைகளுக்கே தன்னை ஒப்புக்கொடுத்துவிடாமல், எண்ணத்திலும் நடக்கையிலும் மறுதலித்தவர்கள் நடுவே உழைக்க வேண்டிய கஷ்டமான வேலையாகிய போதகத் தொழிலிலும் திறமையுள்ளவனாயிருப்பான். இதுவே நிச்சயமும் தேவனுக்குப் பிரீதியும் நீடித்துப் பலன் தரக்கூடியதுமான வழியாயிருக்கிறது.

மறுபக்கத்திலோ சொந்த ஜீவியத்தில் கவனிக்கப்படக் கூடிய குறைவுகள் உள்ள சில குருக்கள் சபையாரின் உள்ளங்களைக் கவரும் ஆச்சரியமான வரம் பெற்றவர்களும் சித்தியுற்றோராய்த் தோன்றுகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்கள் விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் நிலைத்திருந்தும் அவர்களின் சுபாவத்தில் மற்றவர்களைப் பார்க்க அதிகமாய்ப் போராட வேண்டிய பெரிய கஷ்டங்கள் இருக்கும் என்று அவர்களில் சிலரைப் பற்றி நினைக்கலாம். வேறே சிலருக்கு, அவர்களைப் பாவத்தையும் கிருபையையும் பலமாய் அநுபவிக்கச் செய்யும் ஞான ஜீவன் இருந்தும் அந்த ஜீவன் இன்னம் உறுதியான சன்மார்க்கத்தை உண்டாக்கினதில்லை என்று நினைக்கலாம். அவர்கள் பெரும்பாலும் எழுப்புதலான பிரசங்கம் செய்யக் கூடியவர்கள் என்பது ஆச்சரியமானதல்ல. ஆயினுமோ பழைய மனுஷன் எந்

தப் போதகனுக்குள் ஆளுகை செய்ய இடம் பெறுகிருனே, அவன் தரும் மகிமையான கனிகளில் அனேகம் சொத்தையாயிருக்காமலி ருக்க முடியாதென்று காணலாம். ஏனென்றால் தெய்வ வசனம் தன் அசுத்தமும் பொல்லாததுமான இருதயத்திலே சும்மா போகும்படி அவன் விட்டுவிட்டுத் தனக்குக் கெடுதியை உண்டாக்கிக் கொள்வதி னுலே தன்னுலானமட்டும் தெய்வ வசனத்தின் பலத்தைக் குறைத்து அதன் கிரியையும் தடுக்கிறவனுய் இருக்கிருன்.

கிறிஸ்துவின் ஜீவன் உன்னில் பலமாய் வேலைசெய்து உன்னை உருவாக்கின காலங்களில் நீ போதகனுய் எவ்வளவு பல மும் சந்தோஷமுமாய் இருந்தாய் என்பதையும் ஆவிக்குரிய பலன்க ளைக் கொடுக்கிறவனும் ஞானப்பிள்ளைகளைப் பெறக் கூடியவனுமாயி ருந்தாய் என்பதையும் நினைத்துக்கொள். இதற்கு எதிர்மாருன வெகு அனுபோகங்கள் உன் ஜீவியத்தில் இருந்திருந்தால் ஒருவேளை அவைகளையும் நினைத்துக்கொள். இவைகளில் நிலைத்துக்கொண்டிரு. உன்பேரிலும் உன்போதகத்தின்பேரிலும் கவனிப்பாயிரு. ஏனெ னில் "இப்படிச் செய்தாயானுல், உன்னையும் உன்னைக் கேட்கிறவர் களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்" (1 தீமோ. 4, 6).

"சண்டைபண்ணுதவனும், எல்லாருக்கும் அன்பு பாராட்டுகிற வனுமாயிருந்து" இவ்வசனத்தை வையப்படுகிறபோது பதிலுக்கு வையாமலும் பாடு படுகிறபோது மிரட்டாமலுமிருந்த" (லூக் 23, 34). கர்த்தருக்கு வேலைக்காரனுகிய நீ கவனிக்கவேண்டியதல் லவா?

ஆயினும் சமயாசமயங்களில் அவர் "எரிச்சல்அடைந்தார்" என்று இயேசுவைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. பொல்லாப்பையும் பொல் லாதவர்களையும் கண்டிக்க அவர் தமது வாயை எவ்வளவாய்த் திறந்தார்!

அவரை ஆத்திரத்தோடு எழுப்பினது என்னவென்ருல் அவர் கண்ட பக்திப்பெருமையும், பக்திவேஷமும், பரிசுத்த ஸ்தலத்தின் குலைச்சலும் தான். பாவிகளையும் ஆயக்காரரையும் மெத்தனவாய் நடத் தினுர். நாமோ அதற்கு எதிர்மாருய் நடக்கச் சார்பாய் இருக்கிருேம். பொல்லாப்புக்கு விரோதமாய் கோபப்படாமல் எல்லாவற்றையும் மெழுகப்பார்க்கிறவன் கேவலமான குருவே. கோபமாயிருக்க வேண் டிய சமயங்களில் கோபிக்காமலிருப்பது பாவத்தைச் சீர்திருத்த இஷ் டப்படாதிருப்பதற்குச் சமம் என்று அகுஸ்தீன் (Augustine) என்ப வன் சொன்னுன்.

மன்னிக்கிற அன்பைக் கூறுகிற சுவிசேஷத்தின் ஊழியனுகிய குரு சண்டைக்காரனுயிராமல் எல்லாரிடத்தும் பக்ஷமுடையவனுயி ருப்பதே அவன் தன்மைக்கு உரியது. அனேக ஜனங்களால் தொந்

தரவுபடும் குருக்கள் தங்களைக் காணவருகிறவர்களுக்கு ஒருவித மான வெறுப்பைக் காண்பிக்கிறதுண்டு. அதனால் தங்களண்டை வருகிற பயங்காளிகளையும் மேன்மையான சுபாவமுடையவர்களை யும் நெருங்கிவரத் தடைசெய்கிறார்கள். இப்படிப்பட்ட சுபாவத் தின் துவக்கமும் காணப்படாதபடிக் காத்துக்கொள். சுய ஆவிக் காரரோடு பேசும் போது உன்னை விசேஷமாய்க் காத்துக்கொள். இல்லாவிட்டால் இப்பேர்ப்பட்டவர்களோடு செய்யும் சம்பாஷணை கள் மனச்சாட்சியை எழுப்பக்கூடிய ஆழ்ந்த சம்பாஷணைகளாகாமல் பயனற்றதும் கசப்புமான தர்க்கங்களாகும். பலவகைக் கட்சிக்கார ரோடு பேசும் போதும் உன்னைக் காத்துக்கொள். அவர்கள் தாங்கள் சபையை விட்டுவிடுவதைத் தெரிவிக்கும் சமயங்களில் தங்களைக் குறித்தே நிச்சயமுடையவர்களாயும் சுய புத்தியைச் சார்ந்தவர்களா யும் தங்களை மகா தெளிவான நியாயங்களுக்குப் புறம்பாக்கிக்கொள் ளும் போது பொறுமையற்றுப்போகவும் ஆத்திரப்படவும் சோதனை வரும். அவர்களிடத்தும் அன்பாயிரு, அவர்கள் உன் சபையை விட்டுவிட்டாலும் அவர்கள் ஒரு கிறிஸ்தவ குருவாக உன்னை அறி யட்டும். அவர்களுக்காக நீ செய்யக் கூடியதிலெல்லாம் சிறந்தது இதுவே. அவர்களோடு பிற்பாடு நீ செய்யக் கூடிய சகவாசத்துக்கு ஒரு ஆதாரமாயிருக்கும். அவர்களில் பெரும்பான்மையோர் அறி யாதவர்களும் உத்தம இருதயத்தாரும் என்று எண்ணு.

"ஆத்மவிசாரிப்புக்காரன் தன்னண்டை வருகிற ஒவ்வொரு மனுஷனையும் நித்திய ஜீவனுக்கு ஆயத்தப்பட வேண்டியவனாகப் பார்க்கிறான். அவனுக்கும் ஒரு பரிசுத்தவானுக்கும் ஒரு வித்தியாச முமில்லை. அவர்கள் சீராகத் துவக்குகிற ஆச்சரியமான காலத்தி லும் நேரத்திலுமே வித்தியாசம். ஜீவனுள்ள ஒவ்வொருவனுக்கும் இந்தக்காலமும் நேரமும் வரக் கூடும். இதை அறிந்திருக்கும் எந்த ஆத்மவிசாரிப்புக்காரனும் எந்தப்பாவத்தையும் நன்மை என்று சொல் லாமலும், எந்தப் பாவத்துக்கும் போக்குச்சொல்லாமலுமிருந்தும், ஜெபிக்கிற அன்பின் நிறைவால் ஒவ்வொரு பாவியைக் குறித்தும் நம்பிக்கை உடையவனாய் ஒவ்வொரு பாவியையும் நடத்துவான். கண்டிப்பான பிரசங்கம் எதிர்பார்க்கப்பட்ட சந்தர்ப்பத்தில் யாரும் நினையாத மௌனமும் மகா கண்டிப்பும் தண்டிப்பும் பலன் தரும் என்று அபிப்பிராயப்பட்ட இடத்தில் யாரும் எதிர்பாராத அன்பான சந்திப்பும், மனுஷருடைய நம்பிக்கையை எல்லாம் இழந்துபோன வர்களுக்குள் வெகுவிசை பலன் செய்திருக்கிறது" என்று லேயெ (Löhe) என்கிற குரு சொல்லுகிறான்.

**24.** ஒருவனும் உன் இளமையைக் கனவீனம் பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும் நடக்கையிலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. 1 தீமோ. 4, 12.

---

கர்த்தராகிய பராபரனே, தேவரீரை நெடுங்காலமாய் அறிந்து, சிநேகித்து, உம்மோடே மூப்படைந்தவர்களாகிய வெகு பேருக்கு முன்பாக வயதிலும் அனுபோகத்திலும் இளமையானவனாகிய அடியேன் உமது வார்த்தையைப் பிரசங்கிக்க வேண்டியது எவ்வளவு அதிசயமாயிருக்கிறது! நான் தேவரீருடைய வீட்டில் நடந்துகொள்வதற்கும் என் இளமையினிமித்தம் என்னைக் காத்துக் கொள்வதற்கும் அவசியமான முன்ஜாக்கிரதையும் யோசனையும் எனக்கு இல்லையே என்று அடிக்கடி எவ்வளவு வெட்கப்படவேண்டியவனாயிருக்கிறேன்! உமது சபையிலே உமக்கு ஊழியஞ் செய்வதிலேயே என் சிந்தை இருக்கிறது என்றும் என் ஊழியத்தினால் தேவரீர் மகிமைப்படுகிறீர் என்றும் அறிகிற கர்த்தாவே, இயேசுநாதர் நிமித்தம் எனக்கு எல்லாவற்றையும் மன்னித்து உறுதியும் தைரியமுமான ஆவியைத் தந்து எனக்குச் சகாயம்செய்யும். நான் இளவயதின் குறைவுகளில் நிலைத்திராமல் பலம், அக்கினி, நம்பிக்கை ஆகிய இளவயதின் நல்லறிகுறிகளைக் காப்பாற்றுவேனாக! எனக்கு அனுபோகத்திலும், நித்திய ஜீவனின் இரகசியத்துக்கென்று அப்பியாசிக்கப்பட வேண்டிய சிந்தையிலும் குறைவதைத் தேவரீர் வாக்குத்தத்தம் பண்ணின பிரகாரம் தொடர்ந்து, நீர் துவக்கியதைப் பூரணப்படுத்த எனக்கு மென்மேலும் உதவிசெய்தருளும். எல்லாவற்றிற்கும் மேலாக இம்மட்டும் என்னைத் தேவரீர் நடத்திவந்திருக்கிற கிருபையின் அளவுக்குத் தக்கதாக நான் நேர்மையாய் ஜீவிக்கவும் உண்மையாய் உழைக்கவும், இனியும் அதிகமாய் தேவரீர் எனக்குக் கொடுப்பதை நான் தடைசெய்யாமலிருக்கவும் எனக்குச் சகாயம் செய்தருளும். ஆமேன்.

---

பவுல் இதை எழுதும் போது தீமோத்தேயு ஏறக்குறைய 40 வயதாயிருந்தான். நமது வாலிபத்தின் பாவங்கள் முடிந்துவிட்டதென்று வெகு சீக்கிரத்திலே எண்ணிவிடக் கூடாது. பெரும்பாலர் பின்னாகத்தான் முதிர்ந்தவர்களாகிறார்கள்.

இளமையின் பொருட்டு கனவீனம் செய்யப்படும் காரணங்களாவன: 1) எனக்கு முன் சபையில் நன்மையானதொன்றுமே இருந்ததில்லை; முன் இருந்த குருக்களும் உபயோகமற்றவர்கள்; நான்தான் சகலத்தையும் செம்மையும் சீருமாக்க வேண்டும் என்கிற எண்ணம். 2) புதிது புதிதாக அநேக விஷயங்கள் துவக்கப்பட்டு வரவர கவனிக்கப்படாமல்போவது; அது ஒரு ஊரில் அநேக வீடுகள்

கட்டத் துவக்கி முடிக்காமல் அரைகுறையாய் விடுவது போலாகும். 3) முதிர்ந்தவர்கள் போலும் அனுபோகஸ்தர் போலும் பிரசங்கித்து ஊழியத்தைப் புதிதாய் துவக்கியிருந்தும் முதியோருக்குரிய மரியாதையை எதிர்பார்ப்பது. 4) நடக்கையிலும் வார்த்தையிலும், விசேஷமாகச் சிநேகிதரோடு செய்யும் சகவாசத்திலும் முன்ஜாக்கிரதை அற்றவனுயிருப்பது.

5) இன்னொரு காரணம் வாலிபனுயிருந்தும் பலவித சந்தேகங்களும் தாக்ஷண்யமும் நிறைந்து வைராக்கியமற்றவனுயிருப்பது. அது ஒரு வாலிபனுக்குத்தகாது. அவன் விஷயம் பின்னல் எவ்வாறாகும்? யாரண்டையில் தான் பலத்தையும் காரியங்களை ஆரம்பிக்கும் திறமையையும் தேடிப்போகலாம்? "வாலிபரின் அலங்காரம் அவர்கள் வீரியம்" (வாக். 20, 29). சண்டையில் நின்று ஜெயிப்பது விசேஷமாய் அவர்களுக்குரியது. "வாலிபரே, பலவான்களாயிருக்கிறீர்களென்றும் தெய்வவசனம் உங்களில் தரித்திருக்கிறதென்றும், பொல்லாங்கனை வென்றீர்கள் என்றும் உங்களுக்கு எழுதினேன்" (1 யோ. 2, 14). அவ்வாறு ஒரு வாலிபகுரு வழிகாட்டும் திறமையில்லாமல் குளிர்ந்துபோய் பலமற்றிருப்பது இயற்கைக்கு விரோதமும் அருவருப்புமான காட்சியாம். அதைவிட ஒருவன் பெரிய தப்பிதத்தைச் செய்வதும் மேலாயிருக்கும்.

இவ்விடத்திலும் வேறு பல வாக்கியங்களிலும் (1 பேது. 5, 3; தீத்து 2, 7; பிலி. 3, 17) ஒரு குரு தன் ஜீவியத்தில் மாதிரியாயிருக்க வேண்டும் என்கிற கடமை குறித்திருக்கிறது. ஆயினும் ஏதோ ஒரு விசேஷித்ததும் தனக்கே உண்டாக்கிக் கொண்டதுமான குருத்துவ பரிசுத்தத்தோடு இது சம்பந்தப்படாது. ஆதலால் சில புரொட்டெஸ்தாந்த வேதசாஸ்திரிகளுக்கு இக்கடமை பிடிக்காதிருப்பதற்கு ஒரு விதமான நியாயமிருக்கிறதென்று ஒத்துக்கொள்ளலாம். என்றாலும், யாருக்கு அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவனிடம் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது என்ற வாக்கோடு இக்கடமை பொருந்தும்.

ரோத்தே (R. Rothe) என்பவனுடைய பின் வரும் கருத்துகள் நாம் சற்று ஆலோசிக்கத்தக்கதும் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமாம்: குருமார் மாதிரிகளாயிருக்க வேண்டும்; அவர்கள் ஜீவியத்தில் சுவிசேஷம் காணப்படக் கூடிய விதமாய் பதிந்திருக்க வேண்டும். அவ்வாறு சபை சுவிசேஷத்தை அறியவும் விசுவாசிக்கவும் சிநேகிக்கவும் படிக்க வேண்டும். ஆகையால் ஒரு பிரத்தியேகமான குரு ஊழியம் ஏற்பட்டிருக்கிறது. உலகத்தோடு சம்பந்தப்பட்ட வேலையிலே இருக்கிற மனுஷனுக்குள் கிறிஸ்தவ ஜீவன் ஒரே சீராய் ஊடுருவிப்பாய்வது கஷ்டமே. அது மனுஷ ஜீவியத்தைக்

கிறிஸ்தவ ஆவிக்கேற்ற மெதுவான இணக்கமுள்ள பதார்த்தமாக மாற்ற முடியாது. இதைச் சாத்தியமாக்குவதற்கென்றே குரு ஊழியம் உலக அலுவல்களுக்கு நீங்கலாக்கப்பட்டிருக்கிறது. ஆவி நிறைந்த மனுஷனிடத்திலிருந்து அடுத்தவரை அசையச் செய்யும் ஆயிரம் விதமான வல்லமை புறப்படும். அவனுக்குள்ளிருக்கும் பரிசுத்த கிளர்ச்சி அவனறியாமலே ஒரு தற்செயலான சந்திப்பினாலேயோ அனுதின ஜீவியத்தின் அலுவல்கள் நடுவே பேசப்பட்ட ஒரு வார்த்தையினாலேயோ கவனிக்கப் படத்தக்க வல்லமையோடு அடுத்தவருக்குள் நாட்டப்படுகிறது. ஏனென்றால் அவன் யாராக இருக்கிறானோ, அவ்வாறே எப்போதும் இருக்கிறான், மற்றவர்களைப் பார்க்க சொற்பமான வரங்களுள்ள அநேக குருக்கள் தங்கள் சபைகளில் பெரிதான வைகளை நடப்பித்தவர்களாகவும் யாரும் அவிக்கக் கூடாதநெருப்பை மூட்டினவர்களாகவும் நாம் காணக் கூடியதாயிருப்பதும் இந்த விதமாகத்தான்.

---

**25.** நான் அப்போதே அதைப் பிடித்தவன், அல்லது அப்போதே முற்றுந் தேறினவனென்று சொல்லாமல், நான் கிறிஸ்து இயேசுவினாலே பிடியுண்டபடியால், அதைப் பிடித்துக்கொள்ள ஆசையாய்ப் பின்தொடருகிறேன். சகோதரரே, என்னை நானே அதைப் பிடித்துக்கொண்டவனென்று எண்ணாமல், ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளைத் தாவி, கிறிஸ்து இயேசுவுக்குள் பராபரன் அழைத்த மேலான அழைப்பின் பந்தயத்தையே இலக்காகத் தொடருகிறேன். ஆகையால் தேறின யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக் கடவோம். நீங்கள் ஒரு காரியத்திலே வேறுசிந்தையாயிருந்தால், அதையும் பராபரன் உங்களுக்குத் தெரிவிப்பார் ஆனால் நாம் வந்து சேர்ந்த அதே பிரமாணத்தில்தானே நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருக்கக் கடவோம். பிலி. 3, 12-16.

---

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, பராபரனுடைய குமாரனே, மனுஷனுடைய குமாரனே, மரணத்துக்கு நேராய்ப் போகும் பாதையில் நாங்கள் ஓடும்போது தேவரீர் எங்களை உமது பலமும் பரிசுத்தமுமான கரங்களினால் பிடித்து குணப்படுத்தி, எங்கள் முகங்களையும் பாதங்களையும் தேவரீரண்டையில் இருக்கிற நித்திய ஜீவகிரீடத்தின் பேரிலும் பரிசுத்தத்தின் பேரிலும் மகிமையின் பேரிலும் திருப்பினதற்காகத் தேவரீருக்குத் துதியையும் தோத்திரத்தையும் செலுத்துகிறோம். கர்த்தராகிய இயேசுவே, தேவரீர் எங்களைப் பிடித்ததினால் நாங்கள் பாக்கியசாலிகள்; நாங்கள் சன்மார்க்க முயற்சியில் இன்னும் மிகவும் பிந்தியிருப்பவர்களாயிருப்பதினால் கவலைகள் நிறைந்து கிடக்கிறோம். தாழ்வுகளிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம், எங்கள் ஜெபத்தைக் கேளும்; நாங்கள் இலக்கைப் பிடித்துக்கொண்ட

தாக நினைத்து எங்கள் ஓட்டத்தை நிறுத்தி ஒருக்காலும் அமர்ந்து போகாதிருக்க எங்களைப் போதித்தருளும். எங்களுடைய இந்தப் பயணகாலத்திலே எப்போதும் நிலையாய் எங்கள் கண்களை இலக்கின் பேரில் நாட்டம்வைத்து தீவிரித்து ஓடவும் உம்மிடத்தில் இருக்கும் புதியவைகளைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு நாங்கள் இம்மட்டும் அடைந்தவைகளை ஒன்றுமற்றதாக எண்ணவும் தேவரீர் உள்மனுஷனின் பிரகாரம் எங்களை வல்லமையாய்ப் பலப்படுத்தியருளும். கர்த்தாவே, உம்மிலே நித்திய ஜீவனின் துவக்கத்தைப் பெற்றிருக்கிற நாங்கள் முடிவையும் அடையத்தக்கதாக, தேவரீரை எங்கள் ஜீவியத்தின் முக்கிய பொருளென்று வல்லமையாய் நல்ல தியானிப்போடு இடையறாமல் வாஞ்சிக்கும் வாஞ்சையினாலும் பரிசுத்த அசைவினாலும் எங்கள் ஆத்மாவை நிரப்பியருளும். பூரணமான மனுஷகுமாரனும் தேவகுமாரனுமாகிய தேவரீர் உமது பிதாவின் வலபாகத்தில் வீற்றிருந்து உமது சகோதரரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீர். உமது மூலமாய்த் தேவரீரைக் கிட்டிச்சேர்ந்த பிறகு அவர்களுக்குக் கிரீடம் தரிப்பிக்கிறீர். தேவரீருக்கே நித்தியாநித்திய காலமாய்ச் சகல கனமும் உண்டாவதாக. ஆமேன்.

---

பவுல் எல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய் உழைத்தான். அவன் முதிர்ந்தவனானான். தன் சொந்த விஷயத்தைக் கவனித்தால் பிரிந்து போவது அவனுக்குத் தாவிலை. ரோமாபுரியில் தன் பாதங்களை அசைக்க முடியாதபடி சங்கிலியால் கட்டுண்டு கிடக்கிறான். ஆயினும் அவன் பந்தய ஓட்டக்காரன்போல இளைப்பாற்றி தேடாமல் ஓடுகிறவன். ஊக்கத்தோடு முன்னேறிச் செல்லுகிறவன். அவனைக் காணும் இக்காட்சி நமது ஆத்மாவைக் கவர்ந்துகொள்கிறது. அப்போஸ்தலனின் இவ்வார்த்தை ஒருவேளை குருக்களுக்கு மகா அருமையான வார்த்தைகளில் ஒன்றாயினும் அவர்கள் அதைப்பிரசங்கத்துக்கென்று தெரிந்துகொள்ளத் துணிந்தது அபூர்வம். தெரிந்திருப்பினும் அவர்கள் அதைக் குறித்துக் கூசாமல் பேச முடியாது. ஏனெனில் மேற்சொல்லிய அப்போஸ்தலனின் வார்த்தையை வாசிப்போன் கிறிஸ்தவ சிந்தையின் ஆழத்தை அறிந்து தன்னையேபற்றிய சிந்தையும் ஜெபமும் நிறைந்தவனாகிறான்.

கிறிஸ்தவ சிந்தை இரு பங்குள்ளது: கிறிஸ்துவினால் பிடிபடுவது முந்தினது; அது ஒருவனுக்குக் கிடைத்திருக்கும் ஜீவனுள்ள துவக்கத்தின் நிலைமை. இலக்கைப் பிடிக்கப் பின்தொடருவது பிந்தினது; அது இலக்கை இன்னம் பிடியாத நிலைமை அல்லது துவக்கியும் இன்னம் பூரணமடையாத நிலைமையாம். தொகுத்துச் சொன்னால்: கிறிஸ்தவ சிந்தை முன்னாக இருப்பதை நம்பிக்கையிலே தாவுகிற பரிசுத்த கிளர்ச்சியே.

கிறிஸ்தவர்களாகிய நமக்குள்ள ஒன்றான பாக்கியம் இதுவே. இயல்பான மனுஷ ஜீவியத்துக்கும் மனுஷர் உயர்வான மாதிரிகளாக் வைக்கும் பல இலக்குகள் உண்டு. இவைகளில் ஒன்றின் பேரில் ஒருவன் அன்பு வைத்து, நஷ்டங்களும் தாழ்வுகளும் உண்டானாலும் தன் கடைசி மூச்சு மட்டாக தன் காலங்களில் எல்லாம் அதை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பானானால் நாம் அதை மகா மேன்மையானதாய் மதிக்கிறோம். ஆயினும் இயற்கையான மனுஷ ஜீவியத்தின் நிர்ப்பந்தம் என்னவெனில்: அதன் உயர்ந்த இலக்குகள் அதற்குப் புறம்பாகவும், மேலாகவும், முன்பாகவும் இருப்பினும் அவைகள் அதற்குள் ஒரு உயிர் சக்தியுமற்றிருக்கின்றன. ஆகையால் அவனுடைய பாக்கியம் ஒருவன் சொப்பனத்தில் அழகான நல்ல படங்களைப் பார்த்து அவைகளை நோக்கி ஓடுகையில் அவைகளுக்குத் தான் அதிக தூரம் இருக்கிறதாக நினைக்கும் அத்தகைய அவநம்பிக்கையில் விழுந்து அவைகளைப் பிடிக்கத் தாவுகையில் அவைகள் கைநழுவித் துண்டுதுண்டாய்ப்போகிறது போலாகும். அது பாக்கியமா? கிறிஸ்தவர்களுக்கு வேறு ஒன்றான பாக்கியமொன்று உண்டு. அது என்னவெனில் சகல மனுஷரின் இலக்குகளின் பூரணமானவரும் இந்த இலக்குகளையெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவருமானவர் நமக்குப் பரனாகமட்டுமல்ல, நமக்கு அபரனாகிய மனுஷ குமாரனாயிருப்பதே. அவர் அவர்களுக்கு மேலாகமட்டுமல்ல, முன்பாகமட்டுமல்ல (அதாவது நாம் அவருக்குப் பின்னாக ஓடி நான் எப்படி பரலோகத்துக்கு ஏறுவேன் என்று அங்கலாய்க்க வேண்டியவண்ணமாக அல்ல), அவர்கள் நடுவிலும் அவர்களுக்குள்ளும் ஜீவனுள்ளவராகவும் ஆள்தன்மை உடையவராகவும் வல்லமையுடையவராகவும் பிரசன்னமாயிருக்கிறார். ஞானஸ்நானம், வசனம், பரிசுத்த இராப்போசனமாகிய திருச் செய்கைகளைக்கொண்டு அவர் தமது ஜீவனை தம்முடையவர்களில் வைத்திருக்கிறார். அவர்களை நோக்கி: பாக்கியசாலிகளே, நீங்கள் அதைப் பிடித்துக்கொள்ளும்படியாக ஓடுங்கள்; பூரணமானதைப் பின்தொடருங்கள்; நீங்கள் கடைசியிலே முழுவதும் அதைப் பிடிப்பீர்கள் என்று சொல்லலாம்.

இதுவே கிறிஸ்தவர்களின் பாக்கியம்; அது அவர்கள் தன்மையுமாயிருக்கிறது. அது அவர்கள் புதிய சுபாவமுமாயிருக்கிறது. நான் கிறிஸ்து இயேசுவினால் பிடியுண்டபடியால் அதைப் பிடித்துக்கொள்ள ஆசையாய்ப் பின்தொடருகிறேன் என்று பவுல் சொன்னபடி அவர்கள் செய்யாமலிருக்க முடியாது. பூரணமானவர் அவர்களைத் தொட்டார், அவர்களைப் பிடித்தார், அவர்களுக்குள் தமது சொந்த ஜீவனை நாட்டினார்; ஆகையால் அவர்கள் அவரைப் பின்தொடரவும் தீவரித்துப்போகவும் கூடிய மனுஷரானார்கள். கிறிஸ்துவால் ஏவப்பட்டுக்

கிறிஸ்துவை நாடித் தேடுகிறார்கள். அது அவர்களுடைய ஸ்வாதீன நாட்டமாயிற்று. அவரை நாடித்தேட ஓய்ந்தால் தங்களைத் தாங்களே மறுதலிப்பவர்களாவார்கள். மேலும் அத்தன்மை அவர்களுடைய பரிசுத்த கடைமையுமாயிற்று. அவர்கள் தங்கள் இயற்கையின் பிரமாணத்தை இஷ்டம்போல அடக்கமுடியாமல் அதற்கு அடங்க வேண்டியவர்கள். ஆகையால் அவர்கள் தங்கள் மாமிசத்தினால் அப்பின்தொடருவதில் அசடரும் தளர்ந்தவர்களுமாயிருக்கும்போது அந்த உள்ளானபிரமாணந்தான் அவர்களை நல்வழியில் நடத்தும் ஒரு புறம்பான கட்டளையாயிருக்கிறது. ஆதலால் தான் பரிசுத்த வேதமும் ஓடுங்கள், பின்தொடருங்கள், தேடுங்கள், கேளுங்கள் என்னும் தெளிவும் பலமுமான ஏவல்வினைகள், பிரமாணங்கள், தெளிவும் பலமுமான கட்டளைகள், புத்திமதிமதிகள், எச்சரிப்புகள், உற்சாகப்படுத்துதல்கள் முதலானவைகளினால் நிறைந்திருக்கிறது. கிறிஸ்தவர்கள் கட்டளைகளை விரும்புகிறார்களே. கட்டளை கொடாமலிருப்பவர்களுக்கு நன்றியறிந்தவர்களுமாயிரார்கள். ஏனென்றால் தங்கள் உள்ளத்தின் பெலவீனத்துக்குட்படாத தெளிவும் சுத்தமுமாய்த் தங்களுக்குக் கிடைத்த புறம்பான கட்டளைகள்தான் தங்கள் சொந்த இயற்கையின் பிரமாணத்தைத்திரும்பவும் அறிந்து கொள்ளவும் அதைக் கைக்கொள்ளவும் உதவி செய்தன என்று அவர்கள் அடிக்கடி கண்டுகொண்டிருக்கிறார்கள்.

சிலருடைய பரிதபிக்கப்படத்தக்க நிலைமை என்னவெனில் அவர்களுக்குப் பாவத்தையும் கிருபையையும் பற்றிய ஏதோ அனுபோகம் வந்திருக்கலாம், கிறிஸ்தவ ஜீவியமும் ஆரம்பித்திருக்கலாம்; இதனாலோ இளைப்பாறுதலுக்கு இடங்கொடுத்து பெற்றுக்கொண்டவைகளிலே அமர்ந்து தங்கள் கிறிஸ்தவ நிலைமை உறுதியாயிற்று என்று எண்ணுவார்கள் இவர்களது சன்மார்க்க விர்த்தி அவர்களுக்குள் சொற்பமாயிருந்துகொண்டேயிருக்கும்; இன்னம் மீதியாயிருக்கிற பழைய மனுஷன் அவர்களில் வருஷா வருஷம் மாறாமல் இருப்பான். பாவங்கள் மனதுக்கு அதிககஷ்டமுண்டாக்கித் தெரியவரும்போது பாவமன்னிப்பினால் அவர்கள் அவற்றை மூடப் பிரயாசப்படுவார்கள். ஆயினும் பழையபடி இளைப்பாற்றிக்கு இடங்கொடுத்துப் பழைய நிலைமையிலேயே நிற்பார்கள். இது தேர்ச்சியற்ற கிறிஸ்தவ சன்மார்க்கம்; இருபக்கச் சார்பானதும் அரைகுறையானதுமாம். கிறிஸ்துவினால் பிடிக்கப்பட மனமுண்டு; பிடித்துக்கொள்ள ஆசையாய்ப் பின் தொடரவேண்டும் என்ற மனமில்லை. ஆகையால் நமது நடுவே பரிசுத்த ஜீவியம் செய்கிறவர்கள் சொற்பம். கிறிஸ்துவின் சாயலாய்த் தேர்ச்சி அடைகிறவர்கள் சொற்பம். உள்ளும் புறம்புமாய் இங்கும் அங்கும் அசைவுடையவர்களோ அநே

கம். ஆதலால் தங்கள் சொந்த கிறிஸ்தவ நிலைமையைக் குறித்துச் சந்தேகம் நிறைந்த அநேகர் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட கிறிஸ்தவர்களைக் குறித்து வேதம் சொல்லுகிறது எவ்வளவு சொற்பம்! அது கவனிக்கத்தக்கது. அச்சந்தேகங்கள் எழும்புவது ஆச்சரியமல்ல: ஒருவன் தானிருக்கும் நிலையிலேயே திருப்திகொண்டவனாய்ப் பரிசுத்தமாக்குதலின் வேலையை அசட்டை பண்ணுகிறான். அவன் தான் அடைந்ததை மறந்துபோனதினால் பூரணமாகிறதற்காக அவன் போராடுவதைக் காணோம்; ஆயினும் அவன் கிறிஸ்துவின் ஜீவியத்தின் முதல் பலனை ஏற்றுக்கொண்டவன்தான்; ஆதலின் நீ எப்படி கிறிஸ்தவனாயிருக்கலாம் என்று அவனுடைய துன் மனச்சாட்சி அவனுக்குள்ளேயே அவனைக் குற்றஞ்சாட்டுகிறது.

ஆ, எவ்வளவு கொஞ்சம் நீ ஓடிவந்திருக்கிறாய்? இன்னம் உன் இலக்கை அடையாமல் வெகு தூரம் மட்டும் வந்தும் உனக்கு என்ன பயன்? ஒருபயனுமில்லை. ஆதலால் நீ வந்திருப்பது கொஞ்சமோ அதிகமோ, நீ உன் கிறிஸ்தவ ஜீவியம் உன் வேலையினாலும் போராட்டத்தினாலும் அடைந்தவைகள், கிறிஸ்துவுக்குள்ளாக உனக்கு வந்த சந்தோஷ துக்கங்களும், 'பின்னானை' இவ்வெல்லாவற்றையும் மறப்பதே உனக்கடுத்தது. அவைகளின் மேல் சார்ந்திருக்கவும் உன்பேரிலேயே சந்தோஷப்பட்டுக்கொள்ளவும், அவற்றிலேயே இளைப்பாறுதலைத் தேடவும் அவை உனக்குச் சோதனையை வருவிக்குமளவும் அவை இல்லாதன போலவே இருக்கட்டும். அவற்றையெல்லாம் நீ தொகுத்து சொல்ல வேண்டுமானால்: இப்போது நான் பரிசுத்தமும், யோசனையும், பலமுமான நாட்டத்தோடு 'முன்னானதுகளை,' அதாவது என் ஜீவியத்தின் பிரதான பொருளாகிய பூரணமானதை நாட நான் அவரைப் பிடித்தேன் என்று அல்ல, கிறிஸ்து என்னைப் பிடித்தார் என்பாயாக. இதுவே வயதுக்கு வந்த வளர்ச்சி பெற்ற உறுதியான கிறிஸ்தவ சன்மார்க்கம்.

ஒரு கிறிஸ்தவன் இருக்கிறவன் அல்ல, ஆகிறவனே என்று மத்திபகாலத்தில் மற்றவர்களைப்பாக்கிலும் அதிகமாய் பவுலின் ஆவி உடையவனாகிய பெர்னார்து (Bernhard) என்கிற சந்நியாசி சொல்லுகிறான். அதேமாதிரி புதியகாலத்துப் பவுலாகிய லுத்தரும் ஒரு கிறிஸ்தவன் இருக்கிறவன் அல்ல, ஆகிறவனே என்கிறான். ஆகையால் நீ ஏற்கனவே கிறிஸ்தவனாயிருந்தாலும், நீ இன்னம் கிறிஸ்தவனல்ல, நீ அப்படி ஆவதை நாடவேண்டும் என்று எண்ணுவதே உனக்கு அடுத்தது.

நம்மில் எத்தனைபேர் பூரணராயிருக்கிறார்களோ அவர்கள் அதே சிந்தையுள்ளவர்களாயுமிருப்பார்கள். எம்மாதிரி விநோத பூரணம்! எவ்வளவு பூரணமானவர்களானாலும் தாங்கள் பூரணமாயிருப்பதை

மறுத்து எப்போதும் பூரணமானவரால் பிடியுண்டு பூரணமானதை நாடிப்போவதே அவர்கள் பூரணத்துவம். கிறிஸ்தவ சன்மார்க்கத்தின் விளக்கு எரியுமட்டும் இது நிச்சயமாகவே பூரணம்.

வயதிலும் அனுபோகத்திலும் பலத்திலும் உங்களுக்கிருக்கிற பல விதமான குறைவுகளை ஆண்டவர் உங்களுக்கு வெளிப்படுத்தி அவைகளை நீக்க உங்களுக்குத் துணைசெய்வாராக. நமது ஓட்டத்தில் நாம் அடைந்த தேர்ச்சிக்கும் நாம் கிறிஸ்தவ ஜீவியத்தில் ஏறின படிக்கும் தக்கதாகக் கிறிஸ்துவினால் பிடியுண்டு முன்னானதுகளைத் தாவவேண்டிய சிந்தையை நமது ஜீவியத்தின் முக்கியமான பிரமாணமாய் மதிப்போமாக.

நாம் குருக்கள் என்பதை மறந்து, நாம் கிறிஸ்தவர்கள் என்பதையோ நினைத்துக்கொண்டிருப்பது எவ்வளவு நன்மையும் அவசியமுமானது. நாம் குருக்களாக யிருப்பதினாலேயே அன்றி கிறிஸ்தவர்களாயிருப்பதினாலேயே இரட்சிக்கப்படுகிறோம். உனக்குப் பிரியமானால் கிறிஸ்தவ சிந்தை சரியான குருவின்சிந்தை என்றும் சொல்லலாம். ஒரு குருவின் விசேஷித்த வேலையில் இந்தக் கிறிஸ்தவ சிந்தை எவ்வாறு கிரமமாய் வளர்ந்து உருவடையுமோ அவ்வாறே அவனுடைய குருதன்மையும் குருவேலையும் உருவடையும்.

# V. நற் போர்.

**26.** *நீ இயேசு கிறிஸ்துவினுடைய நற்சேவகனாய்த் தீங்கனுபவி. தன்னைச் சேவகம் எழுதிக்கொண்டவனுக்கு ஏற்றிருக்க வேண்டுமென்று தண்டிலே சேவிக்கிற ஒருவனும் பிழைப்பின் சோலிகளில் சிக்கிக்கொள்ளான். 2. தீமோ. 2, 3–5.*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, எங்கள் இரட்சிப்பை நிறைவேற்றவும் தேவரீருக்கென்று பூமியில் ஒரு சபையை ஏற்படுத்தவும் நீர் எந்தப் பாடுகளுக்கும் உம்மை விலக்கிக்கொள்ளாமல் சிலுவையின் மரணபரியந்தம் போராடினீர். உமக்காகவும் உம்முடைய சுவிசேஷத்துக்காகவும் சரியாய்ப் போராடும்படி உமது கிறிஸ்தவர்கள் யாவருக்கும் சகாயம்செய்யும். அவர்களைப் பரிசுத்த திடாரிக்கத்தால் நிரப்பும். அவர்கள் மகா உச்சித விஷயத்துக்காகப் போராடுகிறவர்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்தும். அவர்கள் பூலோகத்தில் உபத்திரவத்தை அனுபவிக்க வேண்டுமானால் அதைச்சந்தோஷத்தோடு சகிக்கும்படி அவர்களைப் பலப்படுத்தும். விசேஷமாய் எங்களை உமது உதவிமேய்ப்பராக யுத்தத்தில் முன்னே போகும்படி

எங்களை அழைத்திருக்கிற கர்த்தாவே, எங்களுக்கு ஒத்தாசை செய்து, பரிசுத்த யுத்தத்திலே முன்னே செல்லும்படி எங்களை நடத்தியருளும். நாங்கள் சாங்கோபாங்கமும் சமாதானமுமாக ஜீவிப்பதின் காரணம் வீரத்துவமான ஆவி எங்களுக்குள் பலவீனமானதும் எங்கள் மாமிசம் தீங்கனுபவிக்க இடந் தராமலிருப்பதுந் தான் என்று அறிவது அடிக்கடி எங்கள் உள்ளத்துக்கு பாரமாயிருக்கிறது. உமது சுவிசேஷம் அநேகரால் அறிக்கையிடப்படுகிற இக்காலத்திலும் உலகமானது எப்போதும் எங்கும் அதே மாதிரியாகவே இருக்கிறது. நாங்கள் தேவனற்றதும் பொல்லாப்பானதும் மிகவும் அரைகுறையானதும் ஈரர்த்தம் கொடுப்பதுமான நடத்தையைப் பார்க்கிறோம்: அத்தோடு சமாதானமாயிருப்பது ஒருபோதும் எங்களுக்கு அடாது; அத்தோடு போராடுவதே உமது ஊழியராகிய எங்களுக்கு அடுத்தது; ஆதலின், ஆண்டவரே, பயங்காளித்தனத்தின் எல்லா ஆவியையும் எங்களை விட்டு அகற்றி, உம்மிலும் உமது பலத்தின் வல்லமையிலும் எங்களைப் பலப்படுத்தி, தற்காலத்தில் ஒவ்வொருவனும் தன் தன் சபையிலும், எலலாரும் உமது திருச்சபையிலும் தீரமாய்ப் போராட உதவிசெய்தருளும். அக்கிரமத்தின் வல்லமைகள் பெரிதாகத் தோன்றுகிற கஷ்டமும் பயங்கரமுமான காலம் எங்களுக்கு முன் வந்தால் உமது மேய்ப்பர் தைரியமாய் மந்தைக்கு முன் போகவும் மகா கொடுமையான தாக்குதல்களிலும் தாங்கள் எதிர்த்துநிற்கவும், அவர்களுடைய அழைப்புக்குத் தக்கவாறு உமது சுவிசேஷத்தினிமித்தம் சந்தோஷமாய்த் தீங்கனுபவிக்கவும் அவர்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமேன்.

---

ஒரு பல்லவிபோல 'தீங்கனுபவி' என்பது தீமோத்தேயுவுக்கு எழுதிய இந்த சுருக்கமான இரண்டாம் நிருபத்தில் நாலுமுறை சொல்லப்படுகிறது (1, 8; 2, 3; 2, 24; 4, 5. ஒத்துப்பார் 3, 12). பவுல் இதைச் சொந்த அனுபோகத்தினால் எழுதுகிறான். ஏனென்றால் அவன் இரண்டாம் முறை ரோமாபுரியில் சங்கிலியால் கட்டுண்டு கிடக்கிறான். எல்லாராலும் கைவிடப்பட்டான்; அவனுக்கு எதிராளிகள் அநேகர். மரணத்துக்குப் போகும் போக்கோடு தான் சிறைச்சாலையிலிருந்து வெளியேறுவான். தீமோத்தேயுவுக்கு எழுதின 2-ம் நிருபம் ஏதோ இருண்டதும் திடனழிந்ததுமான மனதோடு எழுதியிருக்கிறதாகத் தோன்றுகிறதில்லை. அதற்கு மாறாக விசுவாசத்தின் சந்தோஷத்தையும் ஜெயத்தின் நிச்சயத்தையும் அதில் காண்கிறோம். அத்தோடு உலகத்தின் நிர்ப்பந்தத்தை ஆழ்ந்துபார்த்து அதன் கசப்பான பாத்திரத்தைக் குடித்த ஒரு வயோதிபனுடைய வியாகுலத்தையும் மிகுந்த உருக்கத்தையும் அதில் பார்ப்போமானால்,

அவன் அதைத் தீமோத்தேயுவின் நிலைமையை நினைத்து எழுதுகிறான். தீமோத்தேயு பிழைப்பின் சோலிகளில் சிக்கிக்கொண்டிருந்தபடியாலும், சிலுவைக்கு அஞ்சின கோழையாய்ப்போனபடியாலும் தன் மேய்ப்ப ஊழியத்தின் சரியான நடப்பிக்குதலில் பாடுகளின் பயம் பிரவேசிக்க இடங் கொடுத்தபடியாலும் பவுல் இந்நிருபத்தை எழுதவேண்டியதாயிற்று. ஆ, பிரியமுள்ள தீமோத்தேயுவே, இதுவரைக்கும் உன்னைப் பின்செல்லுகிறவர்கள் அநேகர் உண்டு; நீ கிறிஸ்துவின் நற்சேவகனைத் தீங்கனுபவி என்று பவுல் நாலுமுறை அவர்களுக்கும் சொல்லுவது அத்தியாவசியம்.

"தீங்கனுபவி": இது ஒரு அதிசயமான கட்டளை. அதை ஒரு சம்பந்தமில்லாமல் கேட்கும் போது நாம் ஆச்சரியப்படவும் பிரமிக்கவும் வேண்டியது. கிறிஸ்துவுக்காகப் போராடுவதற்கும் பாடுபடுவதற்கும் அவசியமானதும் நீங்கக் கூடாததுமான சம்பந்தமிருக்கிறதென்பதை அது காட்டுகிறது. கிறிஸ்துவுக்காக நீ போராடு என்றோ, நீ தீங்கனுபவி என்றோ புத்தி சொல்லலாம். போராடுவதற்கான புத்திமதி எவ்வளவு உத்தமமோ அவ்வாறே பாடுபடுகிறதற்கான புத்திமதியும் உத்தமம். 'என்னோடு பாடுபடு' என்று இங்கேயும் 1, 8-லும் உபயோகித்திருக்கிற சொல்லுக்கு அதே பொருள் உண்டு, அதாவது நம் எல்லாருக்கும் அப்படி நடக்கத் தான் வேண்டும் என்பதே.

ஐரோப்பாவிலுள்ள வடநாட்டுத் திருச்சபையிலே கீர்க்கேகார்ட் (Kierkegaard) என்பவன் இதைப் பலமாய் எடுத்துக் காட்டி, அச்சபையின் குருமாருக்கு விரோதமாக இதை மிக பெரிய குறைவென்று காட்டினான். அதற்கு நாங்கள் சமாதானகாலத்துக்கும் சண்டைக்காலத்துக்கும் கிறிஸ்துவின் சபையில் வித்தியாசம் இருக்கிறதென்றும் நாம் அதற்குப் பக்குவமானவர்களானபோது ஆண்டவரால் குறிக்கப்பட்ட வேளை வருமட்டும் உபத்திரவத்தை வருவித்துக்கொள்ளக் கூடாதென்றும் நியாயம் சொன்னதோடு எங்களுடைய குரு உத்தியோகம் கிறிஸ்துவின் போர்வீரனுக்குரிய பாடுகளில்லாமல் முழுவதும் இருக்கிறதில்லை என்பதுபோல் ஒருவேளை நினைத்துக்கொண்டோம். ஆயினும் குற்றம்பிடித்தவனுடைய வார்த்தை எங்கள் மனச்சாட்சியிலே ஒரு முள்ளைப்போல் தைத்திருக்கிறது. தீரமாய் வலது இடதுபக்கத்தாயுதங்களைத் தரித்திருக்கிற தெய்வீக திடாரிக்கத்தைக் குறித்து நாங்கள் எங்களை உயர்த்திப் பேசத் துணிவில்லாமல்போயிற்று. ஒரு ராஜ்யசபை (State Church) குரு பிழைப்பின் சோலிகளில் அதிகமாகச் சிக்குண்டிருப்பதையும் தன்னை வேலைக்கு அமர்த்தின ஆண்டவரைப் பிரியப்படுத்துவது லேசல்ல என்பதையும் வேதனையோடு காண்கிறோம்.

நொர்வே தேசத்து குருக்களுக்கு சென்ற நூற்றுண்டின் துவக்கமுதல் கசப்பான ஞாபகமுண்டு; அதை மறப்பதற்கு அவர்கள் முயலுவதில்லை. புதிதாய் எழும்பின ஞான ஜீவியத்துக்குரிய அசைவுக்கு அவர்கள் தலைவர்களாக நின்றவர்களல்ல; கிறிஸ்துவின் உத்தம சேவகர்களாகப் பாடனுபவித்தவர்கள் அவர்கள் அல்ல; குருக்களல்லாத சாதாரண மனிதற்கே இந்தக் கனம் சேரவேண்டியது. பொதுவாய்க் குருக்கள் இதிலே பிந்தினவர்களே. அவர்கள் அதன்பின் எவ்வளவு உண்மையையும் வைராக்கியத்தையும் காட்டினாலும் அவர்களுடைய முந்தின நிர்விசாரத்தன்மையை அதனால் மறக்கச்செய்ய முடியாதென்று நாம் பலவிதத்திலும் கவனிக்கிறோம். "மேய்ப்பனை வெட்டுவோம், அப்போது ஆடுகள் சிதறடிக்கப்படும்" என்ற பூர்வ வார்த்தையின்படி இரகசியமாக அல்ல, பகிரங்கமாகக் கிறிஸ்துமார்க்கத்தைப் புதிதாக எதிர்க்கிறவர்கள் குருக்களின் பேரிலேயே பாணம் தொடுக்கிறார்கள். மந்தையின் தலைவராக தங்கள் சரியான தானத்தில் குருக்கள் திரும்பவும் இருப்பதை இது காட்டும்; ஆண்டவருக்குத் தோத்திரம்! எதிராளிகளுக்கு இது நன்றாய் விளங்கும். நொர்வே குருக்களுக்கு மேன்மையான காலம் வருமென்று இன்னமும் எதிர்பார்க்கலாம். தேவஸ்மரணையற்ற கல்வியோடு அவிசுவாசமும் சேர்ந்து எதிர்த்துத் தாக்கும்போது, அவர்கள் எவ்வளவு காலம் முன்னணியில் நிற்பார்களோ அவ்வளவுக்கு அதிகமாய்ப் பயங்கரமான அசைவுகளையெல்லாம் தடுக்க வேண்டியதாகும். ஆகையால் "நீயும் கிறிஸ்துவின் நற்சேவகனாய்த் தீங்கனுபவி" என்பது அவர்களுக்குச்செல்லும்.

---

**27.** போராடுகிறவன் எல்லாவற்றிலும் இச்சை அடக்கமாயிருக்கிறான்; அவர்களோ அழிவுள்ள கிரீடத்தையும் நாமோ அழிவற்றதையும் பெறும்படிக்குத் தானே. 1 கொரி. 9, 25.

---

கர்த்தராகிய பராபரனே, தேவரீர் உமது கிறிஸ்தவர்களுக்கு எல்லாக் காரியங்களையும் ஏராளமாய் அனுபவிக்கக் கொடுக்கிறீர். பூமி, மனுஷீகம், அதன் மகிமை, அதன் சந்தோஷம் முதலியவைகளெல்லாம் உங்களுடையது என்று உம்முடைய அப்போஸ்தலனைக் கொண்டு தெரிவித்திருக்கிறீர். பாவம் ஒன்றையே எங்களுக்கு அடாததாக விலக்கிக் கிறிஸ்து இயேசுவின் மாதிரிப்படிப் பரிபூரணமான மனுஷீக ஜீவியம் செய்ய எங்களுக்கு உத்தரவு கொடுத்திருப்பதற்காக நாங்கள் தேவரீருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் எங்களிலிருக்கிற விடுதலைக்காக உம்மைத் துதிக்கிறோம். தேவரீர் சிருஷ்டித்து மீட்டுப் பரிசுத்தமாக்கினவற்றையாவது அல்லது மனுஷ ஜீவியத்தின் யாதாமொரு பங்கையாவது நாங்கள் ஒருபோ

தும் தீதாய் உபயோகிக்காதபடி எங்களுக்கு அனுக்கிரகம் செய்யும். அன்புள்ள கர்த்தாவே, எங்கள் கண்களுக்கு முன்பாக நாங்கள் ஒன்றை வைத்திருக்க விரும்புகிறோம்; அதைத்தேவரீர் கொடுக்கச் சித்தமாயிருக்கிறீர். நாங்கள் பல காரியங்களினாலும் அலைசடிப்படாமல் தேவையான 'ஒன்றே' எங்களிலும் எங்கள் மூலமாகவும் ஆளுகை செய்யும்படியாய் எல்லாக் காரியங்களிலும் அடக்கமாயிருக்க விரும்புகிறோம். எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சமாவது எங்களுக்கு இருக்கவேண்டுமென்று மற்ற விஷயங்களிலே விரும்புகிறதுபோல் கிறிஸ்து மார்க்கத்திலும் கொஞ்சம் உடையவர்களாயிருக்க வேண்டுமென்கிற விருப்பம் தற்காலத்தில் எங்களுக்கிருக்கிற மோசம். மனுஷ ஜீவியத்தில் எங்களை மேற்கொண்டு எங்கள் ஆத்மங்களைச் சிதறப்பண்ணக் கூடிய அநேக விஷயங்களுண்டு என்று நாங்கள் உணருகிறோம். அவைகளில் நாங்கள் ஞானவிரதம் பண்ணுகிறவர்கள் போல் அடக்கமுள்ளவர்களாயிருப்பதற்கு நாங்கள் கிறிஸ்துவுக்குள்ளான எங்கள் விடுதலையை உபயோகிக்கத் துணைசெய்தருளும். அதனால் கிறிஸ்துவின் ஜீவன் எங்களுக்குள் ஆழ்ந்துபோய் இப்பிரதான விஷயம் எங்களுக்குப் பிரதான விஷயமாகவே இருக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம். சுய அடக்கத்தினால் நாங்கள் எங்களுக்கோ மற்றவர்களுக்கோ அங்கசேதனம் செய்யப்பட்டவர்களாகத் தோன்றும் பக்ஷத்தில் உமது ராஜ்யத்தில் ஒருவனும் ஒற்றைக் கண்ணனும் நொண்டியாயும் நிலைத்திராமல் நாங்கள் படிப்படியாக தேவரீர் விரும்பிய பூரணராவோம் என்கிற மகிழ்ச்சியுள்ள அறிவை எங்களுக்குப் பெரிதாக்கியருளும். ஆமேன்.

---

கிறிஸ்தவ சொஸ்தபுத்தி ரோமானித்தாரின் சந்நியாசத்துக்கும் பியத்திஸ்தரின் ஒடுக்க மனதுக்கும் எதிரானது. படிப்பு, சாஸ்திரம், கைத்தொழில், ஆளுகை, தேசத்தின் வாழ்வு முதலிய மனிதருக்குரிய இவ்வெல்லாவற்றையும் தனக்குச் சொந்தமாக எண்ணிப் பரிசுத்தப்படுத்துவதே கிறிஸ்துமார்க்கத்தின் வேலை என்பது ஒரு மகத்துவமும் சந்தோஷமுமான சத்தியம் என்று உணர்ந்தவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்குக் கிறிஸ்தவ சொஸ்தபுத்தி இருக்காது. நான் கிறிஸ்தவன், ஆதலால் மனுஷனுக்குரியதொன்றையும் எனக்கு அன்னியமாக மதியேன் என்ற ஒரு பூர்வீக லத்தீன் சொல் இதைக் குறிக்கிறது. உன்னுடைய அனுதாபமும் அன்பும் இவைகளிலே இராவிட்டால் நீ அவைகளுக்கு விலகியிருப்பது வெறுப்பல்ல. அவைகள் உனக்குச் சமுசயமானவையும் தீங்கானவையுமானால் நீ அவைகளை விட்டுவிடுவது கொஞ்சமேனும் வெறுப்பல்ல.

கொடுக்கப்பட்டதிலும் பிரியமுள்ளதிலும் ஒருவன் ஒரு பாகத்தை ஒப்புவித்துத் தனக்கு பூமியிலே ஒற்றுமையும் செம்மையுமான

மனுஷ ஜீவியத்தைச் சார்ந்தவற்றிலும் சுவாதீன சித்தத்தோடு எல்லை அல்லது திட்டம் செய்துகொள்வதே கிறிஸ்தவ சொஸ்தபுத்தியாம். ஒரு கிறிஸ்தவன் தன் சொந்த ஜீவியம் அகன்றுபோகாமல், தனக்குள்ளேயே ஒன்று சேர்ந்து ஆழ்ந்ததாகிறதற்காக இந்தத் தன் சொந்த கிறிஸ்தவ ஜீவியத்தின் நிமித்தமே மட்டுத்திட்டமுடையவனாயிருக்கிறான். சுவாதீனமான எல்லைப்படுத்தலே பலமுள்ளது; பார்வைக்குமட்டுமல்ல, மேற்பூச்சாவுமல்ல, வாஸ்தவமாகவே அந்தந்த காலத்துக்குக் கூடுமானமட்டும் அவன் தன் சொந்த ஜீவியத்தைக் கிறிஸ்துமயமாக்கவும், அடுத்தவர் ஜீவியத்தையும் தன் சபையையும் வசப்படுத்தவும் கூடிய நிலையிலிருக்கிறான். தன்னை அடக்கும் சொஸ்தபுத்தி கிறிஸ்தவன் பூமிக்கு உப்பாயிருக்கும் கடமையைச் சேர்ந்தது என்று அனுபோகத்தினால் அறிகிறோம்.

ஞான உயிர் பலமாய் வேலை செய்ய ஆரம்பிக்கும் காலங்களில் மனுஷர் தங்களை அடக்கும் சொஸ்தபுத்தியை வற்புறுத்துவது அவ்வளவு அவசியமில்லை, அது தானே அவர்களில் உற்பத்தியாகும். துவக்கினதைத் தொடர்ந்து நடப்பிக்கும் காலங்களிலோ ஞான உயிர் பலமற்றுப்போகும் மோசத்திலிருக்கிறது. அதற்கிசைய அமர்ந்த ஒரே போங்கான சுபாவமுடையவனுக்குத் தன்னை அடக்கும் சொஸ்தபுத்தி விசேஷமாய் தேவை. சொஸ்தபுத்தியைத் தனக்குள்ளே வளர்ப்பதற்குக் குருவுக்கு இன்னொரு முகாந்தரம் உண்டு; அது பின்வருமாறு: தெய்வபக்திக்கும் சன்மார்க்கத்துக்குமடுத்த ஜீவியத்தில் ஜனத்துக்கு ஊழியம் செய்வது அவன் ஜீவிய கடமையல்லவா? பலத்தையும் சுறுசுறுப்பையும் பல விஷயங்களில் கையாடுவது குருவல்லாத கிறிஸ்தவர்களுக்குக் கடமையும் புகழ்ச்சிக்குரியதுமாயிருக்கலாம். திரு ஊழியத்தைப் பெற்றிருக்கிற இவனோ அப்படிப் பல விஷயங்களில் சுறுசுறுப்பைக் காட்டுவதினால் தன் ஊழியத்துக்கே உண்மையற்றவனாவான். கிறிஸ்துவும் அவர் ஆவியும் திருச்சபையின் நடுவிலும் ஜனத்தின் நடுவிலும் மூட்டிய பரிசுத்த அக்கினியைப் பூமியிலே காக்கவேண்டிய ஆலயகாவல்காரனாயிருப்பவன் குரு; அது அவியாமல் ஓங்கி எரியும்படிக்கு அதை ஊதிக்கொண்டிருப்பதும் வளர்ப்பதும் அவன் வேலை. அது எங்கே எரியுமோ அங்கே அது தானே அனலையும் வெளிச்சத்தையும் பரவச்செய்து சகல மனுஷீக ஜீவிய நிலைக்கும் மகா சிறந்ததையும் அவசியமானதையும் அளிக்கிறது. அதற்கு மாறாக தேவ ஊழியன் தான் மகா சிறந்த நோக்கமுடையவனாயிருந்தும் தன் ஊழியத்தின் நெருப்புக்காப்பாலே பல காரியங்களைச் சீராக்கவும் ஒழுங்குப்படுத்தவும் பலவித அலுவலில் முயல்வானாகில் அக்கினி மங்கிப்போய் வரவர இருண்டே போகும். நமது

கர்த்தராகிய இயேசுவும் தமது ஜாதியார் வைராக்கியத்தோடும் அரசியற் சுதந்தரத்துக்காகச் செய்த சோதனை நிறைந்த போராட்டத்தில் பங்குபெறவில்லை. அவரை அதிலே இழுக்கவேண்டுமென்று சிலர் விரும்பிய போது தேவஞானத்தோடு தம்மை அதற்கு நீங்கலாக்கிக்கொண்டார் (மத். 22, 21. லூக். 12, 14 ஐ ஒத்துப்பார்க்க). மனிதனின் குணம் முழுவதும் மாறுமானால் மற்றவைகள் வரவரப் பின்னே தொடர்ந்து ஒழுங்குபட்டுப்போகும் என்று அவர் அறிந்ததினால் அவர் தமது பிரதான அன்பின் கிரியையில் வழுவாமல் நிலைநின்றார்.

உத்தம தேவ ஊழியன் தன் உத்தியோகத்தின் பொருட்டு எப்போதும் தன் வரங்களில் சிலவற்றைத் தியாகம்செய்ய வேண்டியவனாயிருக்கிறான். ஒருவனுக்குச் சித்திரவேலைக்கு அடுத்த ஒரு வரமிருக்கலாம், மற்றவனுக்குச் சாஸ்திர ஆராச்சிக்கான வாஞ்சை இருக்கலாம், வேறொருவனுக்கு அன்றாடகப் பிழைப்புக்கு அடுத்ததும் ஜன சமுதாயத்துக்குரியதும் ராஜ்யத்தின் நலத்துக்குரியதுமான கரிசனமும் கவலையுமிருக்கலாம். இவைகளையெல்லாம் குருக்கள் புதைத்திருக்க நேரிடுவதால் அவர்களது வீடுகளில் அவ்விதமான அநேக சின்ன கல்லறைகளிருக்குமெனப் பாவிக்கலாம், அது அக்கரையல்ல. ஆனால் பராபரன் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறதும் வேலைக்கென்றிருக்க வேண்டியதுமான அன்பும் சிந்தையும் அசமந்தத்திலும் உயிரற்ற தினவேலையிலும் போக்கடிக்கப்பட்டுப் பாழானதினால் குரு எல்லாவற்றிற்கு முடிவாகக் 'கவைக்குதவாத குருவானால் எவ்வளவு பரிதாபமாயிருக்கும்'. ஆனால் உற்சாகத்தோடு சகல பலத்தையும் திரு உத்தியோகத்துக்கென்றே சேர்க்கும்படி மேற்கூறிய தியாகத்தை நிறைவேற்றினால் ஒன்றும் நஷ்டமாகாது. சரியான ஒவ்வொரு மனுஷஜீவியத்தின் சில அரும்புகள் இவ்வுலகில் அல்ல, மறு உலகில் மட்டும் மலர்வதுபோல குருவின் ஜீவியத்திலுள்ள அரும்புகளெல்லாம் இக்காலத்தில் மலராதிருந்தாலும் பிற்காலத்திலே உயிரடைந்து மலரும்.

---

**28.** பவுலே, நீ பிதற்றுகிறாய்; அதிக எழுத்துக்களின் படிப்பு உனக்குப் பைத்தியம் உண்டாக்குகிறது. அப். 26, 24.

அவன் பிசாசை உடையவனாய்ப் பிதற்றுகிறான்; ஏன் அவனைக் கேட்கிறீர்கள். யோ. 10, 20.

அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, தேவரீர் கிருபையோடும் உண்மையோடும் இப் பூமியில் சஞ்சரித்த போது உம்மைப் பற்றி என்ன வார்த்தைகள் சொல்லப்படாதிருந்தது! என்னென்ன வார்த்

தைகளைத் தேவரீர் கேட்கவேண்டியதாயிற்று. அப்படி இருக்கையில் உம்முடைய சாட்சிகளும் உம்மை உலகத்தில் பிரஸ்தாபிக்கும் போது அவர்கள் சும்மா விடப்படுகிறதில்லை என்பது ஓர் ஆச்சரியமா? உம்முடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அறிவித்து உம்மிடத்தில் நித்திய ஜீவனின் வசனங்கள் உண்டென்று உம்மைக் குறித்தே பூமியிலுள்ள உம்முடைய மெய்யான சபை சொல்லும் போது அவர்கள் புத்திகெட்ட கும்பாக எண்ணப்படுகிறதும் ஆச்சரியமா? புத்திமான்களும் சுயநீதிக்காரருமுள்ள உலகத்தின் கண்களிலே அவைகள் மதியீனமும் பைத்தியமும் தான். கர்த்தராகிய இயேசுவே, தேவரீருக்கு வந்த நிந்தைப்பெயர்களை எங்களுக்கும் கொடுப்பது எங்களுக்கு ஒரு மகிமையே. தேவரீரைக் குறித்துப் பேசின மாதிரி எங்களைக் குறித்தும் உலகம் தீதாய்ப் பேசுவதை நாங்கள் எங்களுக்கு நற்சாட்சியாகப் பாவிக்கிறோம்; கிருபையும் உண்மையும் அன்புமான சுவிசேஷம் என்ற தெய்வீக பைத்தியத்தினால் எங்கள் இருதயங்களை நிரப்பியருளும்! தேவரீர் எங்களில் நாட்டிய உமது பரிசுத்த சாயலுக்கொப்பாக எங்கள் ஜீவியத்தை உருவாக்கியருளும். இந்த ஜீவியத்தினால் உலகத்தார் உம்மை எண்ணியதுபோல் எங்களையும் மதியீனரும் பிதற்றுகிறவர்களுமாக எண்ணினும் அதற்காக வருந்தோம். உலகத்தார் அனேக கிறிஸ்தவர்களை அவர்கள் பாவத்தினிமித்தம் மதியீனரென்று இகழுகிறதுபோல் அவர்கள் எங்களையும் இகழ ஒட்டாதேயும். தேவரீர் உமது ஊழியனாகிய பவுலையும் இந்நாள்மட்டும் வேறநேகரையும் தாங்கியதுபோல, எங்களையும் தாங்கி நடத்தியருளும். அன்புள்ள கர்த்தாவே, உமக்கே கனமும் புகழ்ச்சியும் வணக்கமும் நித்தியமாயிருப்பதாக! ஆமேன்.

"வேதசாஸ்திரிகளின் வைராக்கியம்" என்ற சொல்லை நாம் அடிக்கடி கேட்கிறதுண்டு. இச்சொல்லில் இரண்டுவிஷயங்கள் அடங்கியிருக்கின்றன. முதல் விஷயம் மேன்மையும் அழியாததுமான ஒரு பொருள். அது கசப்பாயினும் சுகத்துக்கானது. இரண்டாவது விஷயம் போலியும் சுய தோற்றுதலுமான ஒரு பொருள். அது கசப்பும் விஷமுமானது. இப்படிப்பட்ட வைராக்கியத்தை அனுபவிக்க வேண்டியவன் அதன் கசப்பு எத்தனை என்பதாக உணர்ந்தறிவான். அதை மெலாங்தோன் (Melanchthon) என்பவனும் உணர்ந்தறிய வேண்டிய ஒருகாலம் இருந்தது. அவன் தன்னோடு இன்னும் அநேகரை அனுசாரிகளாக்கும்பொருட்டு பிரதான போதனைகளை மாற்றினான். அப்படிச் செய்கையில் அவன் மனதிலே உறுதியும் பலவீனமும் கலந்திருந்தது. அவனிலுள்ள இந்த ஆச்சரியமான மனோநிலை உண்மையுற்றதோ உண்மையற்றதோ என்று தீர்ப்பது மற்றவர்களுக்கு இலே

சல்ல. எப்படியாகிலும் பிற்பாடு வேதசாஸ்திரிகளுடைய மூர்க்க மான வைராக்கியம் அக்கால வேதசாஸ்திரிகளுக்குள் மகா பெரியவ ஞகிய இவன்மேல் ஒரு புசல்போல் மோதி நுட்பமான ஆவியும் மெத் தனவான சிந்தையும் உண்மையுள்ள பத்தியுமுடையவனுகிய இவ னேக் கொஞ்சம் குறைய நொறுக்கிற்று. அப்பொழுது அவன் சகல சங்கடங்களுக்கும் வேதசாஸ்திரிகளுடைய வைராக்கியத்துக்கும் நீங் கலாய்ப் பிரிந்துபோய்த் தெய்வ குமாரனைக் காண ஆவல் கொண் டான். பிற்காலத்தில் வேதசாஸ்திரிகளின் வைராக்கியம் குறை வடைந்தது என்று சொல்ல முடியாது. இவ்வார்த்தை மிச்சமாய்ச் சத்தியத்தின் சத்துருக்களினுலும் அத்தோடு சிநேகிதராலும் கூட உபயோகிக்கப்பட்டது.

இச்சொல்லிலுள்ள மேன்மையும் அழியாமையுமுள்ள பொருள் என்னவென்ருல் அது பவுலே ஏவின அதே ஆவியே. அந்த ஆவி யைக்கொண்டு பவுல்அபோஸ்தலன்: "நாங்களும் அல்லது வானத் திலிருந்து வருகிற ஒரு தூதனும் நாங்கள் உங்களுக்கு அறிவித்த சுவி சேஷத்தையேயல்லாமல் வேருெரு சுவிசேஷத்தை உங்களுக்கு அறிவித்தால் சபிக்கப்பட்டவனு யிருக்கக்கடவான்" என்று சொல்ல வில்லையா? எவ்வளவு உயர்வும் நிச்சயமுமான எந்தக் காரியத்தோடும் இசைந்துபோக வேண்டியதல்லாததும், அதுவே மற்றெல்லாவற் றையும் புதுப்பித்துத் தனக்கு இசையச்செய்ய வேண்டியதுமான சுவி சேஷமாகக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உறுதியாய்ப் பிடிக்கிற பிடியே அது. இந்த ஆவியுடையவன் ஒருவாறு பிதற்றுகிறுன் என்று சொல்லலாம். அவன் மற்றவர்களுடைய மதசம்பந்தமான கொள் கைகளையும் உணர்ச்சிகளையும் சரியென்று ஒத்துக்கொள்ளாததினுல் அவன் பிதற்றுதல் இரக்கமற்ற பிதற்றுதல் என்றும் தோன்றக் கூடும். விசேஷமாய் அன்பின் அப்போஸ்தலன் பூர்வகாலமுதல் முக்கிய வேதசாஸ்திரி (அல்லது "தெய்வசாஸ்திரி," Theologian) என்ற பெயரைப் பெற்ற யோவான் அதற்கு அடிக்கடி வல்லமையாய்ச் சாட்சி கொடுக்கிறுன். அதைப்பற்றிய அவனுடைய சில வார்த்தைகளா வன: "மாமிசத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுத எந்த ஆவியும் பராபரனுடையதல்ல"; "இயேசு பராபரனுடைய குமாரன் என்பதை எவன் அறிக்கைபண்ணுகிறுனே, அவனில் பரா பரன் நிலேத்திருக்கிருர், பராபரனில் அவனும் நிலேத்திருக்கிறுன்"; "இயேசு என்கிறவர் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனே ஒழிய, பின்னே ஆர் பொய்யன்" என்பவைகளே. ஏற்கனவே பூர்வ அஞ்ஞானிகள் இப்பேர்பட்ட அறிக்கைகளினுல் கிறிஸ்து மார்க்கத் தைப் பிதற்றுதலாகத் தீர்த்தார்கள். அதைப்பற்றி "கிறிஸ்தவர்கள் மற்ற மார்க்கங்களே அங்கீகரியாததைச் சகிக்கக் முடியாது; அவர்கள்

மற்றவர்களை மதித்தாலொழிய அவர்கள் உயிரோடிருப்பது நியாய மாகாது'' என்று பூர்வக் கிறிஸ்தவர்களுக்கு விரோதியாகிய கெல்சு (Celsus) சொல்லுகிறான்.

அப்போஸ்தலர் நடபடி 26-ம் அதிகாரத்தில் நாம் காண்கிறபடி பவுல் பெஸ்துவுக்கும் அகிரிப்பாவுக்கும் முன்பாக நின்றபோது புத்திக் கூர்மையானதும் சாஸ்திரத்துக்கடுத்ததுமான விஷயங்களையல்ல, இருட்டிலிருந்து வெளிச்சத்துக்குத் திரும்புவதைப் பற்றியும், பாடு பட்டு மரித்தோர் உயிர்த்தெழுதலில் முதலாளியாகி, யூதருக்கும் புறஜாதிகளுக்கும் வெளிச்சம் தெரிவிக்கவேண்டிய கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளும் விசுவாசத்தைப் பற்றியும் பேசினான். அச்சமயத் தில் "பவுலே, நீ பிதற்றுகிறாய்: அதிக எழுத்துக்களின் படிப்பு உனக்குப் பைத்தியம் உண்டாக்குகிறது'' என்று பெஸ்து மகா சத் தத்துடனே சொன்னான். அதிக படிப்பை அதாவது அனேகர் இழிவாய் நினைக்கிற வேதசாஸ்திரத்தைப் பெஸ்து அப்பொழுது பழித்தானல்லவா? அது தற்காலத்தார் செய்வதற்கொத்ததல்லவா? உலகம் இன்னமும் அவ்வாறே.

மெய்த் திருச்சபை முழுவதும் வீராவேசம்கொண்ட ஒரு குடும் பம். அதற்குள் வெளியே இருக்கிற எல்லாருடைய பார்வையிலும் இலேசாய் வெறுப்புண்டாக்கும் அந்நியமானதும் ஆராய்ந்து முடியா ததும் ஆழ்ந்துபார்க்கக் கூடாததுமான ஒரு ஆவி இருக்கிறது. அவர் பிசாசை உடையவராயிருக்கிறார், தன்னை மறந்திருக்கிறார் என்று அனேகர் சொல்லியும் அவரில் நித்திய ஜீவனுடைய வசனங்கள் உண் டாயிருக்கிறது என்று பத்திவைராக்கியமுள்ள கிறிஸ்தவர்கள் நிச்ச யித்து அவருடைய வார்த்தையை அசையா நிலைவரமாய்ப் பிடிக்கும் பிடியே இரகசியமான காரியம். கிறிஸ்தவர்களின் ஆவி அவர்கள் வழி காட்டிகளிடத்தும் சண்டைக்கு முன்நிற்பவர்களிடத்தும் பலமாயி ருக்கிறதாக விளங்குகிறபடியால் வேதசாஸ்திரத்தின் பிதற்றுதலைக் குறித்து நியாயத்தோடு பேசப்படுகிறது. இந்த இகழ்ச்சிவார்த்தைக்கு அதன் மேன்மையைக் குறித்துச் சந்தேகிக்காத சகல கிறிஸ்தவர் களும் கொடுக்கிற பிரத்தியுத்தாரம் என்னவெனில் தன் பொதுவும் மேன்மையும் அழியாததுமான சுதந்தரத்தைச் சந்தோஷமாய் அனுப விக்கிறவர்களாக அதன் மேன்மையைக் குறித்துச் சந்தேகிக்காமல் பரஸ்பர நேசமாய் ஒருவருக்கொருவர் கைகுலுக்குதலே.

வேதசாஸ்திரிகளின் பிதற்றுதலில் உள்ள கசப்பும் விஷமும் என்னவெனில் புத்திவிஞ்ஞானமே, அறிவின் மேட்டிமையே; அது சுய பிரீதியோடு தர்க்கிக்கும் புத்தியாக அல்லது தவறற்ற நியாயம் வாதிக்கும் கணிதசாஸ்திர ஆவியாகவும் எழும்பினாலும் போலி அறிவை வளர்த்து மேலுக்கு மட்டுமே நின்று தன்னைப் பிரஸ்தாபப்

படுத்தி, மேன்மையானதையும் அழிவற்றதையும் மறைத்து அனேகருக்கு இப்படிப்பட்ட விபரீத ருசியுள்ள ஜீவனை வெறுக்கும் வெறுப்பை உண்டாக்கிறதனால் அது மகா மோசம். இதிலிருந்தே மரணத்தின் வழியாய் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று மெலாங்தோன் மனதார ஆசித்தான்-

புத்திவிஞ்ஞானத்தில் முக்கியமானதென்னவென்றால் மனுஷனுக்குச் சொந்தமானதும் அப்பியாசத்தினாலும் எண்ணத்தினாலும் விர்த்தியானதுமான சாமர்த்தியம் தான். இதைக்கொண்டு மனுஷன் யுக்தியும் பலவந்தமும் உறுதியுமான முடிவுக்கு வரவும், காரணக்காரியங்களையும் ஒரு பலமான வலையாகப் பின்னவும் பிரயாசப்படுகிறான். இந்த வலையில் வேண்டுமென்றோ தெரியாமலோ அவன் பிறத்தியாருடைய எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் பிடிக்கக் கூடும். எவ்வளவுக்கு நெருங்கி அது பின்னியிருக்குமோ பிடிப்பது அவ்வளவுக்கு இலேசாகும். இந்த வரம் மறுக்கப்பட்டாலோ, கஷ்டத்தோடு பின்னின அவ்வலை ஒருவேளை முரடான கையினாலே கிழிக்கப்பட்டாலோ அதைச் சகித்துக்கொள்வது கஷ்டமே. ஏனென்றால் அது அவன் சொந்தப் பிள்ளைகளைக் கொன்றுபோட்டது போலாகும்; அவன் "பிதற்றி" உடனே சத்தம் போடுகிறான். எதிரிகள் எவ்விதமும் பரிசுத்தமானதல்லாத நியாயவாதமுயற்சியிலும் நியாயத்தோரணையான கணிதசாஸ்திரத்திலும் கைவைத்திருந்தாலும் அவன் தெய்வவிஷயத்தைத் தன் நெசவிலே உபயோகித்தபடியால் அவர்களை எளிதில் பரிசுத்தமான ஒரு காரியத்தில் பிரயோகித்தவர்களாகப் பாவித்து நடத்திச் சபிக்கிறான். ஆதலால் அடிக்கடி வேதசாஸ்திர தர்க்கம் சாமான்ய பத்திரிகைகளின் தர்க்கம் போலவே ஆவியிலும் போங்கிலும் காணப்படுகிறது.

லூத்தர் பெரும்பான்மையோரைவிட தெளிந்த யோசனையுடையவனும் புத்திக்கூர்மையுள்ளவனுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும் அவன் செய்த ஞான போராட்டங்களில் அவனுக்குரிய இந்த விசேஷவரங்கள் அவனுக்கு முக்கியமானவைகளாகத் தோன்றவில்லை என்று உணர்ந்தறிகிறோம். அவனுடைய பக்தி நிறைந்த ஜீவியத்தில் காணப்பட்ட விசுவாச அதிசயமே அவன் சத்தியத்தைக் காப்பதிலும் விஸ்தரிப்பதிலும் உண்டான போராட்டங்களில் முக்கியமாயிருந்தது. இவ்விசுவாசம் உலக ஆவியின் அறிகுறியாகிய பிசகான சுயாதீனத்தை அவனுடைய புத்திக்கூர்மையினின்று நீக்கிவிட்டது. அவன் முரட்டுத்தனமாய்ப் பேசின போதிலும் அற்பத்தனத்துக்கும் மனவேதனை உண்டாக்கும் தன்மைக்கும் சண்டைசெய்யும் குணத்துக்கும் விலகினவனாயிருந்தான். அதினால் தான் அது ஆவிக்குரிய போராட்டமாயிற்று.

கிறிஸ்துமார்க்கம் சித்தியடைய வேண்டுமானால் அது ஆவிகளின் போராட்டமில்லாமல் முடியாது. ஒவ்வொரு ஆவியும் தன் மார்க்கத்தின் பலத்திலும் அனலிலும் போராடட்டும். ஆனால் அது மனித உள்ளத்தில் ஆழ்ந்து பதியவேண்டும். கிறிஸ்துமார்க்கம் மேலெழுச்சியாயிராமல் ஆழத்தில் பதிந்து போர்செய்தாலொழிய ஜெயமடையாது. அது வெறும் புத்திக்கூர்மையினாலே நடக்கிற போராட்டமாயிருந்தால் போதாது. அப்பேர்பட்ட போராட்டத்தில் ஒரு காரியமும் நடக்காது என்று கூடயிருக்கிறவர்கள் கரகோஷம் செய்து போராடுகிறவர்களைப் புகழ்ந்து பேசுவதினால் அறியலாம். உண்மையான போராட்டத்திலோ ஜனங்கள் அமர்ந்திருந்து ஆவிகளின் இந்தப் போரில் ஆவியின்பிரகாரம் பங்கடைவார்கள்.

பவுல் அப்போஸ்தலனுக்கு நாம் வேதசாஸ்திரியென்ற விசேஷித்த பேரைக் கொடுப்பது நமக்கு நியாயமாய்த் தோன்றினாலும் அந்தப் பேர் ஆதிகால்ம் முதற்கொண்டு யோவான் அப்போஸ்தலனுக்கே கொடுக்கப்பட்டதென்பது கவனிக்கத்தக்கது.

---

**29.** பின்பு அவர் சீஷரிடம் வந்து, அவர்கள் நித்திரை செய்கிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடு விழித்திருக்க முடியாதோ? நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம் செய்யுங்கள்: ஆவி உற்சாகமுள்ளது தான், மாமிசமோ பலமற்றிருக்கிறது என்றார் (மத். 26, 40மு.).

சீமோனே, சீமோனே, இதோ! கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல், சாத்தான் உங்களைப் புடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக ஜெபித்தேன். நீ குணப்பட்டபின் உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். லூக். 22, 31மு.

---

கர்த்தராகிய இயேசுவே, நீர் தாமே ஓர் காலத்தில் பாவ மனுஷசாயலிலே இப்பூதலத்தில் வந்து சஞ்சரித்தீர், பாடுபட்டீர், நீரும் சோதிக்கப்பட்டீர். ஆதலால் சோதிக்கப்படுகிறவர்களுக்கு நீர் உதவிசெய்யக்கூடும். உம்முடைய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் உமது சிறிய ஊழியர்களாகிய நாங்கள் எங்கள் சோதனைகளில் நிலைநின்று, எல்லாவற்றிலும் ஜெயங்கொள்ளும்படி நீர் எங்கள் மேல் பரிதபித்து, வல்லமையாய் எங்களுக்கு ஒத்தாசை செய்யும் என்று உம்மை பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆ! கர்த்தாவே, இந்த உலகத்தின் பிரபுவுக்கு உம்மிடத்தில் ஒன்றுமில்லை; எங்களிடத்திலோ அவனுக்கு அதிகம்; நாங்கள் அவனைக் கருத்தும் கவனமுமாய் எதிர்க்கிறதுமில்லை. ஆகையினால் எங்களில் ஒருவன் தன்னை உயர்த்திப் பெருமை என்ற

பாவத்தில் விழுகிறான்; இன்னொருவன் தன் ஊழியத்திலே சோம்பேறியும் அனலற்றவனுமாயிருக்கிறான்; வேறொருவன் உள்ளத்தில் உண்மையற்றுப்போய் இரண்டகம் படைத்த மாய்மாலக்காரனாகிறான். இதெல்லாவற்றையும் நீர் எங்களிடத்தில் அடிக்கடி கண்டு விசனப்படவேண்டியது. ஆ! கர்த்தாவே, ஐயோ! இவை எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் எங்களிடத்திலும் இருக்கிறதை அறிகிறோமே. ஆகையால் மற்றவர்களைவிட அதிகமாய் உமது ஒத்தாசையைத் தேடவேண்டியவர்களாகிய நாங்கள் உம்மிடத்தில் வந்து உமது சபையின் நடுவில் உமக்கு முன்பாக முழங்கால்படியிடுகிறோம்; எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். சாத்தான் உம்முடைய சுவிசேஷத்துக்கு விரோதமாகச் செய்யும் சதிகளை நாங்கள் தெளிவாய் அறிந்துகொள்ளும்படிக்கும் அவன் மற்றவர்களுக்கு முன்பாக உம்முடைய ஊழியர்களை என் கெடுக்கப் பார்க்கிறான் என்பதை நாங்கள் பயபக்தியோடு உணர்ந்துகொள்ளும்படிக்கும் எங்களை விழிப்புள்ளவர்களாக்கும். ஜெபம் பண்ண எங்களைப் போதியும். சாத்தான் எங்களை வழிதப்பப்பண்ணப் பார்க்கிறானே; வெளிச்சத் தூதனின் வேஷத்தில் வந்து எங்களை மோசம் பண்ணப் பார்க்கிறானே! இவை எல்லாவற்றிலும் நாங்கள் ஜெபம் பண்ணித் தைரியமாய்ப் போராடி நிற்க எங்களைப் படிப்பியும். நீரே எங்களுக்காக ஜெபம் பண்ணும். எங்கள் சகோதரராகிய நீர் பிதாவின் வலபாகத்தில் இருந்துகொண்டு பரிந்து பேசும் மத்தியஸ்தராயிருக்கிறீரே; எங்கள் விசுவாசம் ஒழிந்துபோகாதபடி எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். எங்கள் சகோதரரை இந்த உலகத்தில் பலப்படுத்தும்படி எங்களில் ஒவ்வொருவனும் தன் தன் பாவத்தையும் சோதனையின் முகாந்தரத்தையும் விட்டு, மனந்திரும்பிச் சுத்தவான்களாகும்படி எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். நீர் எங்கள் அடைக்கலமானவர். கர்த்தாவே, உம்மையே நம்பியிருக்கிறோம். நாங்கள் சாகாமல் பிழைத்து, உமது செயல்களை விபரிப்போம். உன்னதத்திலிருந்து வரும் பலத்தினால் எங்களை நிரப்பும். உமது ஜீவனால் எங்களைப் பிழைப்பூட்டும்; உமது இரட்சிப்பினால் எங்களைச் சந்தோஷப்படுத்தும். நீர் என் தேவன், என் சோதனைகளில் நான் உம்மைப் புகழுவேன்; என் தேவனே, நான் உம்மை உயர்த்துவேன். ஆமேன்.

---

தன்னை உயர்த்தும் தற்பொழிவு: சுவாமியாயிருப்பது இன்பம். தங்கள் சபைகுருவைத் தங்களுக்குச் சுவாமி யாக்கிக்கொள்ள மனதுள்ள சபையார் எப்போதும் இருப்பார்கள். விசேஷமாய் அவருக்குச் சிறந்த வரங்கள் உண்டாயிருந்தால் இப்படி நடக்கிறது. வைராக்கியமுள்ளவரையும் பல வேலைகளை

நடத்துகிறவரையும் அமர்ந்த சாந்தகுணமுள்ளவரையும், சுக துக்கங்களில் காட்டும் அனுதாப உணர்ச்சியுள்ளவரையும் அல்லது இளந்தையாயிருக்கிறவரையும் ஜனங்கள் இவ்வாறு சுவாமியாக்குவதுண்டு. சுவாமியாயிருப்பது இன்புமானது. அது மோசமுமாயிருக்கிறது. இந்த மோசத்தில் பேர்பெற்ற ஞான வழிகாட்டிகள் ஒன்றில் அகப்பட்டுக்கொண்டார்கள் அல்லது தாங்களும் தங்களைப் பின்சென்றவர்களும் வேதனையை உண்டுபண்ணும் காயங்களை அடைந்தார்கள்.

ஒருவேளை, ஒருவன் எல்லாப் புகழ்ச்சியையும் வேண்டாம் என்று சொல்லித் தள்ளலாம்; ஒருவன் தன் மனத்தாழ்மைக்காகப் புகழப்பட்டு, புகழ்ச்சியின் வார்த்தையைக்கேட்டு, மௌனத்திலே உள்ளத்திலே சந்தோஷப்படலாம். தன்னுடைய ஆத்மத்துக்குள்ளே இந்தப் பெருமையை வளர்க்கலாம். தன்பேரில் குற்றச்சாட்டாய்ச் சொல்லப்படும் வாஸ்தவமான குற்றங்களைக் கேட்டு மனவேதனை அடையலாம். என்னைப் பலவந்தப்படுத்தப் பார்க்கிறார்கள் என்றும் சொல்லலாம். என்னைச் சாதாரண மனுஷனாக அல்லது வசனத்தைப் பிரசங்கிக்கும் குருவாக ஜனங்கள் புகழும் புகழ்ச்சியையோ சொல்லும் குற்றச்சாட்டையோ எந்த மனதோடு ஏற்றுக்கொள்வேன் என்பதை ஆராயும்போது மனுஷ ஜீவியம் எவ்வளவு நிர்பந்தமும் கேவலமுமாயிருக்கிறது என்று உணருகிறதுபோல் வேறெதிலும் அவ்வளவு ஆழ்ந்து உணர்ந்தறிவது கிடையாது.

நீ உண்மையாய் வேலைசெய்ய மனதாயிருந்த போதிலும், ஒன்றும் செய்து முடிக்கவில்லை என்று நீ அடிக்கடி கசந்தழுது முறையிடுவது தற்பெருமை அல்லவா. சபை அசைவின்றி தூக்க நிலைமையிலிருக்கிறது; உனக்கு நன்றி செலுத்தாமலும், உன் வேலையை நன்கு மதிக்காமலும் இருக்கிறதைப் பார்க்கிறாயே; நீ திருப்தியற்று மனங்களைத்துப்போய், எல்லாம் நன்றாய் இருக்கக் கூடிய வேறொரு இடத்துக்கு மாற்றப்பட ஆசைவைக்கிறாய். நீ இப்படி எண்ணுவது சுத்தப் பிசகு. ஏனென்றால் உன் தற்பெருமையை நீ விட்டுவிடாமல் கூடவே கொண்டுபோனால், புதிய இடத்திலும் எல்லாம் முன்போலவே இருக்கும்.

பெருமை குருமாரிடத்தில் அல்லாமல் வேறெங்கும் அவ்வளவு அவலட்சணமான ரூபம் எடுத்துக்கொள்ளாது. அவ்வாறே பக்தியுள்ள மனத்தாழ்மை அவர்களிடத்திலன்றி வேறெங்கும் அவ்வளவு அழகும் ஜெயம் சிறந்ததுமாய்க் காணப்படாது. ஏனென்றால் மனத்தாழ்மையை அப்பியாசிப்பதற்குக் குருமாருக்கு அதிக சமயம் உண்டு. தற்பெருமை யென்னும் ஆபத்தில் உனக்கு உதவிசெய்ய ஆண்டவர் நீ தெளிவாய்ப் பார்க்கக்கூடிய அன்போடும் ஞானத்தோடும் எவ்வளவு கவலையாயிருக்கிறார் என்கிறதை நீ கவனிக்கவில்லையா? நன்

ருய்ச் சித்திப்பெற்ற ஒரு பிரசங்கத்துக்குப்பின் குறைவுள்ள பிரசங்கம் செய்ய நேரிடும். அல்லது ஒருவன் நீ கொடுத்த நல் யோசனையைப் பற்றிப் புகழ்ந்து பேசினபின் இன்னொருவன் உன்னைப் பற்றிக் கசப்பாய்ப் பேசவோ பின்புறணி சொல்லவோ ஆரம்பிப்பான். அல்லது ஒரு ஆத்மத்தின் நிலையை நேர்த்தியாய் அறிந்தோ ஒரு பெலவீனனுக்கு நல்ல வழியைக் காட்டியோ ஆத்ம விசாரணையில் ஒரு சமயம் நல்ல சித்திபெற்றிருக்க இன்னொரு சமயத்தில் முற்றிலும் தவறிக் காரியத்தைக் கெடுத்துவிட்டு வெட்கத்துக்குள்ளானாய்; இது மனிதர் எவ்வளவு பிசகிப்போகக் கூடியவர்களென்று காட்டுகிறது. அல்லது விசேஷமாய்த் தன்னை உயர்த்தும் ஒவ்வொரு மதிமயக்கத்துக்குப் பின் உள்ளான வெறுமையும் ஆவிக்குரிய எளிமைத்தனமும் சக்தியின்மையும் தோன்றுகின்றன; இதனால் ஒருவன் தன் ஊழியத்தைப் பிரயோஜனமின்றி நடத்தினான் என்கிற உணர்வு உண்டாகும். இப்படி எல்லாம் அன்பினால் நம்மைத் தாழ்த்திக்கொண்டேயிருக்கிறதற்காக கர்த்தரைப் போதுமானபடி ஸ்தோத்திரிக்கிறவன் யார்.

வழக்க ஆசாரம்: ஞானஸ்நானத்திலே நித்திய ஜீவனுக்குட்படுத்துகிறதே தவ இரக்கத்தின் எவ்வளவு மகத்துவமான ஊழியத்தை நாம் நடப்பிக்கிறோமென்று நினைத்தால், அதை ஒரு கைத்தொழிலாக மாத்திரம் நடப்பிப்பது நமக்கு எவ்வளவு அசாத்தியமாயிருக்கும். நாம் தேவாராதனைக்குரிய ஜெபத்தை நடத்துவதினால் கிறிஸ்துவின் சபையிலே, மகா பரிசுத்த ஜெப ஸ்தலத்திலே பெரிதும் பயன் கொடுக்கக் கூடியதுமான ஊழியத்தில் நிற்கிறோமென்று நாம் அறிந்தால் அதை பயபக்தியின்றி மட மடவென்று ஜெபித்தல் நமக்கு அசாத்தியமாயிருக்கும்.

வியாதிக்காரரின் படுக்கையண்டை உட்கார்ந்திருந்து ஆத்மாக்களின் அறிக்கைகளையும், சில சமயங்களில் கேவலமும் பயங்கரமுமான அறிக்கைகளையும் கேட்டுக் கேட்டு மனுஷரை மரிக்கப் பார்த்துப் பார்த்து மனம் மழுங்கிப் போய்விடுகிறதுண்டென்று நாம் துவக்கத்தில் ஒருக்காலும் நினைக்காதிருந்தும், அது உண்டு என்பது வசனத்தோடு ஒத்துக்கொள்ள வேண்டியது. நீ இப்படி மனங் களைத்துப் போய்ப் பார்த்துக்கொண்டிருக்கிற பீடையினால் ஒருவிதமான வெறுப்படையும் போது என்னச் செய்யப்போகிறாய்; அல்லது நீ பாடுபடுகிறவர்களை அனுதாபமில்லாத வைத்தியனைப்போல் அனலற்றவனாகப் போய்ப்பார்ப்பதனால் உன் ஆத்ம விசாரணை பங்கமடையும் என்று நீ கவனிக்கும்போது என்னச் செய்யப் போவாய்? அனேகரை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய துக்கங்களிலும் சந்தோஷங்களிலும் பங்குபெறத் தக்கதான (ரோ. 12, 15). விசாலமான

மனதைக் கொடுக்கும்படி சகலருக்கும் அன்பு பாராட்டக் கூடிய விரிவான இருதயமுள்ள ஆண்டவரிடத்தில் நீ ஜெபித்துக் கேட்கவேண்டும். அப்படிச்செய்தால் தான், நீ சரியான தகப்பனடைவான ஆத்ம கவலையை நடப்பிக்கவும், ஆவியின் பிரகாரமாய்ப் பிள்ளைகளை ஜெனிப்பிக்கவும்முடியும். இந்த மனவிசாலம் இல்லாவிட்டால் நீ அநேகம் துக்கம் நிறைந்த காட்சிகளுக்கும் தகப்பனுக்குரிய வேதனைகளுக்கும் நன்றாய் தப்பியிருக்கலாம்; ஆனாலோ ஆசீர்வதிக்கப்பட்ட தெய்வ ஊழியத்துக்கு விலகிப்போகிறவனுமாயிருப்பாய். நீ இவ்வாறு உன்னண்டை ஏற்றுக்கொள்ளுகிற ஒவ்வொரு ஆத்மாவும் அதன் ஜீவியமும் உன் ஜீவியத்தோடு ஐக்கியப்படுவதால் உன் ஜீவியம் நித்திய காலத்துக்கென்றும் ஐசுவரியம் நிறைந்ததாகும்.

வைத்திய சாஸ்திர போங்கிலிருப்பதுபோலவே தேவ ஊழியத்திலும் ஓரளவான பழக்கம் சந்தேகமின்றி அவசியமானதும் பிரயோஜனமுள்ளதும் மனிதனுக்கு ஒரு நல்ல தேவ வரமுமாயிருக்கிறது. அது இல்லாவிட்டால் பாவத்தினாலும், பலவித கஷ்டங்களினாலும், மரணத்தினாலும் எப்போதும் நமக்குண்டாகிற உணர்ச்சிகளைத் தாங்குவது மிகவும் கஷ்டம், நமக்குத் தேவையான தெளிந்த புத்தியும் இல்லாமல்போகும். நமக்கு உண்டாகும் மோசம் இதிலே அதிகமாயிருக்கிறதில்லை, பழக்கம் அன்புதாழ்ச்சியினால் நமது உணர்ச்சிகளை மழுங்கச் செய்கிறதிலேயே பெரிய மோசம் உண்டு. ஏனெனில் அதினால் நாம் அனுதாபசக்தியை இழந்துவிடுகிறோம்.

கேவலமான இருமனநிலை: தான் அனுபவியாததும், தன்னிடமில்லாததுமான காரியங்களைப்பற்றி ஒருவன் பிரசங்கிப்பது பிரசங்கியின் உண்மையில்லாத குணத்தைக் காட்டுகிறதென்று எப்போதும் சொல்லமுடியாது. ஒருவன் மன உற்சாகமில்லாமலிருந்தாலும் கிறிஸ்தவ சந்தோஷத்தைப்பற்றி முழு உண்மையோடு பிரசங்கிக்கலாம். இப்படிச் செய்கையில் அவன் பறந்துபோகிற உணர்ச்சியைக்கொண்டு பிரசங்கியாமல் ஆத்மத்திற்குரிய ஜீவிய ஆதார விஷயங்களினின்றும் பேசுகிறான். தான் அறிக்கையிடும் சுவிசேஷத்திற்கேற்பத் தன் மனதை உயரக் கொண்டுவருவானாக. வெக்செல்ஸ் (Wexels)என்ற போதகன் மனச் சஞ்சலமுள்ளவனும், சோதனைகள் போராட்டங்கள் நடுவே அடிக்கடி தவிக்கிறவனுமாயினும், அவன் எப்படி அவ்வளவு சந்தோஷமும் நம்பிக்கையும் ஆறுதலும் நிறைந்த பிரசங்கங்கள் செய்யக்கூடியவனாயிருந்தானென்று அவனைக் கேட்க, அவன்: "நான் எனக்கே பிரசங்கம் செய்துகொள்ளுகிறேன் என்று உங்களுக்கு விளங்கவில்லையா" என்று சற்று விசனத்தோடு பதிலுரைத்தான்.

ஆயினும் ஒருவன் விசுவாசத்தையும் அதற்குரிய போராட்டத்தையும் குறித்துப் பேசவேண்டுமானால், அதினுடைய ஆரம்ப காரியங்களையாகிலும் அவன் அனுபவித்திராதிருந்தால் அவன் அதைப் பற்றிப் பேச நியாயமில்லை. தெய்வீக மனஸ்தாபம் இன்னதென்று தானே அறியாதவன் பாவத்தின் கசப்பைப் பற்றிப் பேசத் தகுதியற்றவன். பரிசுத்தமாகுதலில் தேற முயற்சி செய்யாதவன் பரிசுத்தமாகுதலைப்பற்றிப் போதனை செய்ய ஏற்றவனல்ல. எத்தனையோ குருக்கள் இப்படித்தண்டிக்கப்படத்தக்க விதமாய்ச் சுவிசேஷத்தோடு விளையாடிப் படிப்படியாய் உண்மைத் தன்மையை இழந்துவிட்டதினால் அதிகமதிகமாய் மனமழுங்கிப்போனவர்களும் குணப்படுதலுக்குத் தகாதவர்களுமாவதே அவர்கள் தண்டிக்கப்படும் தண்டனை.

தன்னைப் பற்றியும் தன் அனுபோகத்தில் கண்ட காரியங்களைப்பற்றியும் தன் அனுபோகத்துக்கு மிஞ்சினதை எந்த சரியான குருவும் பிரசங்கத்தில் முற்றிலும் பேசாமலிருக்க முடியுமா? அவனும் அவனுடைய ஜீவியமுமல்ல, கிறிஸ்துவும் அவருடைய ஜீவியமுமே பிரசங்கங்களின் முக்கிய பொருளாக வேண்டியவை. இவ்வித இருநிலை அவனுடைய குரு ஜீவிய ஒழுங்கோடு சம்பந்தப்பட்டவை. அவன் அதில் தான் மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கும் பொருளுக்கும், அதைப்பற்றித் தன் ஜீவியத்தில் தான் குறைவான அளவாக உணர்ந்துகொண்டதற்குமுள்ள ஒவ்வாமையை அதிக வேதனையோடு எப்போதும் உணருவான். உனக்கே சொந்தமான காரியங்களுக்கும், நீ இது வரையிலும் தேவவசனத்திலிருந்தும் பிறரிடமிருந்தும் இரவல் வாங்கினவைகளுக்குள்ள வித்தியாசத்தை முந்த கவனித்துக்கொள்வாயாக. இரண்டாவதாக உன் சொந்த ஜீவிய அனுபோகத்துக்கு மிஞ்சினவைகளைப் பற்றிப் பேசுவதில் அதிக ஜாக்கிரதையாயிரு. ஆத்மக்கவலையில் தேவவார்த்தையும், தேவ நடத்துதலும் உன்னை நடத்தினாலன்றி, உனக்கு உள்ளதற்குமேல் பேசாதே. அதிக அனுபோகமும், ஆவிக்குரிய உணர்ச்சியும் உனக்கிருப்பதாக மற்றவர்கள்முன் ஒரு தோற்றத்தை உண்டுபண்ணப் பிரயாசப்படாதே. சுயவெறுப்பில் ஒரு பெரிய அப்பியாசமும், ஒரு நல்ல மனச்சாட்சிக்கான உரைகல்லும் இவ்விஷயத்தில் இருக்கிறதென்று சொல்லலாம். வாலிபகுருமார் இன்னம் தங்களுக்குள் எவரும் ஒரு பலமான எழுப்புதலுண்டானதாகக் கண்டுகொள்ளாதிருந்தாலும், தாங்கள் விசுவாச ஜீவியத்தில் குழந்தைப் பருவத்தின் முதலடிகளை இப்போது தான் எடுத்துவைக்க ஆரம்பித்தபோதிலும் தங்களை வல்லமையுள்ள பிரசங்கிகளாகப் பாவித்துக் கெட்டுப்போகிறார்கள். இது ஆவிக்குரிய முன்னேற்றத்தைக் கெடுப்பதும், கனி கொடுக்காத ஜீவியத்தை விளைவிக்கும் பொல்லாப்பான தகாத இரு

மனநிலையாகும். அவர்கள் தங்களுக்குத் தெரியாமலே, தங்கள் மனோ பாவனையில் கர்த்தர் தாங்கள் பின்னால் அடைய வேண்டுமென்று கருதின தேர்ச்சியை முன்னர் அடைய முயன்று தங்களை உண்மை யுள்ள மனநிலைக்கும் மனோபாவனையான மனநிலைக்குமுள்ள வித்தி யாசமறியக்கூடாத உண்மையில்லாமையின் குழப்பத்துக்கு ஆளாக் கிக்கொள்ளுகிறார்கள்.

இதின் பலனைக் வெளிப்படையான இருமனநிலை ஏற்பட்டு விடுகிறது. இப்படியாகப் படிப்படியாகத் தங்கள் ஊழியத்தை நடத் துவதில் ஒரு போங்கான ஆளாகவும், தங்கள் சொந்த ஜீவியத்தில் வேறு போங்கான ஆளாகவும் இருக்கப் பழக்கப்படுகிறார்கள். அநேகர் இதைக் கவனித்துக்கொண்டு தங்கள் குருவை ஞாயிற்றுக்கிழமை களில் வல்லமையும், பக்தியும், அனலும், அபிஷேகமும் உள்ள ஆளா கவும், மற்ற நாட்களில் மிச்சமான ஜனங்களைப்போல் அடிக்கடி கண் ணால் பார்க்கக்கூடிய பெரிய குறைவுகளும், உலக நோக்கங்களு முள்ள சாதாரண மனுஷனாகவும் பார்க்கிறார்கள். இதினால் ஞாயிற் றுக்கிழமைகளில் குரு போதிப்பதைத் தங்கள் உள்ளங்களில் முழு பக்தியாய் ஏற்றுக்கொள்ளாமல், அதில் சிலவற்றையோ பெரும் பாகத்தையோ அவரைப்போல் விட்டுவிடலாமென்னும் எண்ணம் ஜனங்களுக்குள் படிப்படியாக உண்டாகும். இவ்விதமாய்க் குரு வினுடைய சொந்த ஜீவியத்துக்கும் சபையாரின் ஜீவியத்துக்கும் நேரிடக்கூடிய அழிவுக்கேதுவான மோசம் அதிகம். இது நேரிடா தபடி உண்மை, நேர்மை என்னும் சுகுணங்களை ஜீவியத்தில் அப்பி யாசித்து இருமனஜீவியத்தை அகற்றிப் பலவீனமான ஆரம்ப கிறிஸ் தவ ஜீவியம்போல் இருந்தாலும், எக்காலத்திலும் உண்மையுள்ள கிறி ஸ்தவனும் குருவுமாக விளங்க உண்மையாய் முயற்சிசெய்வது அவ சியம்.

---

**30.** மோசேயோவென்றால்: ஆ, ஆண்டவரே! நீர் அனுப்பச் சித் தமாயிருக்கிற ஆரையாகிலும் அனுப்புமேன் என்றான். 2 மோ. 4, 13.

எங்களால் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் ஆர்; கர்த்தருடைய புயம் ஆருக்கு வெளிப்பட்டது? ஏசா. 53, 1.

வருகிறவர் நீர் தானோ அல்லது வேறொருவருக்குக் காத்திருப்போ மோ? மத். 11, 3.

---

கர்த்தாவாகிய பராபரனே, என் இரட்சகரே, நீர் என்மேலி ரங்கி, சாத்தான் எனக்குக் கெடுதி செய்யாதபடி அவனை என்னை விட்டுத் துரத்தியருளும். இதோ நீர் என் பொறுப்புக்கு ஒப்புக் கொடுத்த ஊழியம் என் பலவீனத்தோள்களின்மேல் பெரிய பார

மாயிருக்கிறது. என் ஆத்மா எல்லாக் குறைவினுலும், பெருமூச்சினுலும் களைத்துத் தவித்திருக்கிறது. கர்த்தாவே, வேறே யாரையாகிலும் அனுப்பும், இனி என்னுல் முடியாது என்று சொல்ல விரும்புகிறேன். ஆண்டவரே, எனக்கு ஒத்தாசை செய்யும். எனக்கு நீர் ஒப்புக்கொடுத்தது உம்முடைய வேலை, அது உமது மகிமைக்கும் உமது ராஜ்யத்துக்கும் அடுத்தது. ஆதலால் நீர் என்னைத் தூளிலிருந்து தூக்கியருளும். என் பலவீனத்தில் உமது பலம் வல்லமையாய் விளங்குவதாக. கர்த்தாவே, என்னை உமக்கே ஒப்புவிக்கிறேன். எனக்கு இரங்கியருளும். ஆமேன்.

---

ஒரு சாதாரண குருவுக்கு வரும் சோதனைகள் அநேகமாய் அவருக்குள்ள தற்பெருமை, வழக்க ஆசாரம், விசேஷமாய் இருமனநிலை இவைகளோடு சம்பந்தப்பட்டிருக்கும். சில காலத்துக்குப் பிறகு ஏதோ ஒரு காரியத்தால் அசைக்கப்பட்டுத் தான் பிரசங்கிக்கிற பரிசுத்த சுவிசேஷத்தின் வெளிச்சத்தில் தன் உள்ளான ஜீவியம், நடக்கை என்றவற்றின் பிசகான நிலையை அறியத்தக்கதாக விழித்துக்கொள்ளுகிறுன். இப்படியாக அவன் நல்லவனுயிருந்தாலும் தானிருக்கும் ஊழியத்தில் தன்னை இருநாக்குள்ள மாயக்காரனும், கடவுளுக்கும் மனுஷருக்கும் முன்பாக ஒரு மோசக்காரனுமாயிருக்கிறதாக மிகவும் தெளிவாய்க் கண்டு பரிதபிக்கிறுன். ஒருவேளை தேவராஜ்யத்திற்காக அதிக சுறுசுறுப்பாய் உழைத்து, அதினுல் மேலெழுச்சியாய் வேலைசெய்யும் அதிகமான சோதனைகளுக்குள்ளான குருவுங்கூட இந்நிலைமைக்குட்படுவது சகஜம். அருமை சகோதரனே, நீ மனமடிவாகி, உன்னுல் கூடியமட்டும் உன்னை நீயே ஆறுதல் படுத்திக்கொள்ள முயற்சி செய்யாதே. இதற்கு மாருகக் கடவுளுக்கு முன் உன் பாவங்களை அறிக்கையிட்டு உன் ஆத்மாவைச் சுத்திகரித்துக்கொள்ளப் பார். பாவசங்கீர்த்தனத்துக்குப் போய் அங்கே உன் ஆண்டவர் உன் ஆத்மாவைச் சுத்திகரிக்க அவரைக் கேள். இதற்காக உனக்கு நல்ல வழிகாட்டியிருக்கக் கூடிய ஒரு உடன் சகோதரனைத் தெரிந்துகொள். பாவ அறிக்கை செய்வதாலும், மன்னிப்பைப் பெறுவதாலும் நீ மண்ணிலிருந்து உயர்த்தப்படக் கூடும். நீ மன இடுக்கத்தை அனுபவிக்கும் காலங்கள் உன்னையும் உன் ஊழியத்தையும் சுத்திகரித்துப் புதிதாக்கும் காலங்களாகும்.

எலியாவைப் போல் அல்லது யோவான் ஸ்நானகனைப்போல் துன்பங்களைச் சகிக்கக் கூடிய ஆவியின் அக்கினி, கர்த்தரின் மகிமைக்காகப் பக்தி வைராக்கியம் நமக்குப் போதுமானபடி இருக்கிறதென்று நம்மில் யார் சொல்லக் கூடும்? நாம் ஒருவேளை நமக்குண்டாயிருக்கும் குறைவுகளினுலும் இக்கட்டுகளினுலும் களைத்து மனச்

சோர்வடைந்து சபையிலே மிகச் சொற்பமாய்ப் பலன்செய்து, உலகத்திலே அதிகமாய் அசட்டை செய்யப்படுகிற தேவவசனத்தில் இடறலடையக் கூடிய சோதனைக்கு வந்திருக்கக் கூடியவர்களாயிருக் கிறோம். ஆனால் கர்த்தருடைய மகிமைக்குண்டான பங்கம் ஆரை அதிகமாய் விசனத்துக்குள்ளாக்கும்? அவருடைய அன்பு அசட்டை செய்யப்பட்டு, அவருடைய நாமம் இப்பூமியிலே பரிசுத்த குலைச்சலாவதினாலேயே யாருக்கு ஆத்திரமும், மனக்கலக்கமு முண்டாகிறது? ஆ, சோதனைக்குள்ளாயிருக்கும் சகோதரரே! சந்தேகத்துக்குள்ளான விசுவாசிகளே! நீங்கள் கர்த்தருடைய சபையிலும் அவருடைய ஊழியருக்குள்ளும் எங்கே சிதறியிருந்தாலும் ஆறுதலடையுங்கள். இன்னும் பாகாலுக்கு முழங்கால் முடக்காதிருக்கிற 7000 பேர் இருக்கிறார்களென்பதைக் கர்த்தர் உங்களுக்கு வெளிப்படுத்துவார். அவர் யோவானுக்குக் காட்டினது போல் உங்களுக்கும் தமது அன்பின் அதிசயத்தை விளக்கிக் காட்டி உங்களைச் சீர்படுத்துவார். நீங்கள் அவனைப்போல் சரியான நிலைக்கு வந்து கடைசியாக எல்லா ஜனத்துக்கும் முன்பாக அவனைப்போல் கர்த்தரால் புகழ்ச்சி பெறுவீர்கள்.

அடிக்கடி ஒரு குருவுக்கு அசுத்தமுள்ள தற்கால போங்கின் சோதனை உண்டாகலாம்; அவனுடைய ஆத்ம விசாரணை வேலையில் இவ்வித எண்ணங்களுள்ள ஆட்களைச் சந்திக்கலாம். அவன் தற்காலத்து விபரீத எண்ணங்களால் உண்டாகும் கொடிய நோய்க்குத் தகுந்த வைத்தியனாக விளங்கும்படி அதைப்பற்றிய பல நூல்களைப் படிக்க நேரிடும். அப்படிச் செய்வதில் அவன் தன்னையறியாமலே அதிலுள்ள நஞ்சையும் உட்கொள்ளக் கூடும். அன்றியும் கிறிஸ்து மார்க்கத்துக்குள் நுழைந்திருக்கிற மாய்மாலத்தை அவன் மற்றவர்களைவிட அதிகமாய்ப் பார்த்து அறிகிறான். இதெல்லாம் தொத்து வியாதிபோல் வேலைசெயது வரவர உள்ளுக்குள்ளான சந்தேகங்களையும், மனக்களைப்பையும், பலவீனத்தையும் உண்டாக்கக் கூடும். இதற்கு வேண்டிய சரியான உதவி கடவுளோடு நெருங்கிய ஜீவியம் செய்வதாலும், கிறிஸ்துவின் வல்லமை அன்பு என்றவைகளின் அனுபவத்தினாலுமே வரும். ஒரு குருவின் ஊழியமே அவனை தன் காலத்தின் சோதனைக்கு உட்படுத்துவது போல அச்சோதனையினின்றும் நீங்கக் கூடிய வழிக்குத் துணைசெய்யும். எப்படியெனில் விசுவாசத்தை விட்டுவிட்டு, தற்காலத்து ஆவிக்குத் தங்களை ஒப்புக் கொடுப்பதால் அநேகருக்கு உண்டாகும் நிர்ப்பந்தத்தைக் குரு பல திருஷ்டாந்தங்களால் அறிவான். இந்த விபரீதகாலத்தில் சகோதரராகிய புருஷரே, நாங்கள் செய்ய வேண்டியது என்னவென்று எத்தனையோபேர் கேட்கத் துவக்கியதையும் அவன் மற்றவர்களைவிட

நன்றாய் அறிவான். கிறிஸ்துவின் சுவிசேஷம் இருதயத்தை மாற்றவும், ஒரு வீட்டைப் புதிதாக்கி அதை ஒரு சமாதானஸ்தலமாக்கவும் மனுஷனால் கூடாத காரியங்களை ஒரு சபையிலே நடப்பிக்கவும் கூடுமென்பதைப் பல விதத்திலே மற்றவர்களைப் பார்க்கிலும் நன்றாய்ப் பார்த்தறிகிறான்.

---

**31.** விசுவாசத்தின் நற்போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பிடித்துக்கொள்; அதற்கு நீ அழைக்கப்பட்டவனும் அநேகஞ் சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாமே. 1 தீமோ. 6, 12.

முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். மத். 24, 13.

அன்புள்ள ஆண்டவரே, உம்மை அறியவும் நேசிக்கவும் தொடங்கிப் பரிசுத்த போராட்டத்தில் சரியான பக்கத்தில் நின்று, உமது கொடியை என்மேல் பார்க்கிறவனாகிய நான் எப்போதும் ஜெபிக்க வேண்டிய ஒரு விசேஷித்த காரியம் இருக்கிறதென்று உணருகிறேன். அது நான் தைரியத்தோடு எனக்குக் குறிக்கப்பட்ட இடத்தில் ஓடிப்போகாமல் நிலைத்திருந்து நாங்களெல்லாரும் உமது மூலமாய் நித்திய ஜீவனில் பூரண சமாதானத்தைக் கண்டு பிடிக்கும் மட்டும் நான் உமது சேனையோடு முன்னேறவும் தேவையான மனவுறுதியின் வரத்தை எனக்குக் கிருபையாய் அளிக்க வேண்டுமென்பதே. நான் வேண்டுகிறபடி என் ஜெபத்தைக் கேட்டு, எளிதில் களைப்படைகிற எனக்கு அசையாத நிலவரத்தைத் தாரும்; எருசலேமுக்கு நேராக உமது முகத்தை உறுதியாய்த் திருப்பின நிலவரத்தின் ஆண்டவரே, பயங்காளியாகிய என்னை உமது பயமில்லாத மாதிரிப்படி உருவாக்கியருளும். கர்த்தாவே, முடிவு மட்டும் உறுதியாயிருந்து பாக்கியம் பெற முழு ஆத்மாவினாலும் வாஞ்சிக்கிறேன். நன்றாய்த் துவக்கியிருப்பது நலம் தான். போராட்டமெல்லாம் முடித்து உம்மோடும் உம்முடையவர்கள் எல்லாரோடும் மோட்சவீட்டில் சமாதானம் அனுபவிப்பதோ இன்னும் நல்லது. ஆதலால் இப்பூமியிலுள்ள உமது ஊழியரில் மிகவும் அற்பமானவர்களோடு தேவரீர் இருக்க எப்படி வாக்களித்தீரோ, அவ்வாறே உமது பரிசுத்தாவியானவரைக்கொண்டு என்னோடு வாசம் பண்ணியருளும். நான் விசுவாசத்தைக் கைகொண்டு, என் ஓட்டத்தை முடித்துப் போராட்டத்தில் ஜெயிக்கும் படியாக என் ஆத்மாவை உமது ஜீவனாலும், உமது வல்லமையினாலும் சந்தோஷத்தாலும் நிரப்பியருளும். பிதாவின் வல பாகத்தில் வீற்றிருக்கிறவரே, நான் என் இலக்கை எப்போதும் என் கண்முன் வைத்து, உறுதியுள்ள ஆவியைக் கொண்டு உம்மோடு நெருங்கிய ஐக்கியமாகும்படி என் கண்களையும் என் இருதயத்தையும் உமது புற

மாகத் திருப்பியருளும். கர்த்தாவே, எனக்கு ஒத்தாசை செய்யும்! என் சொந்த பரிசுத்தமாகுதலிலும், என் ஊழியத்தைச் செய்வதிலும், அனுதினமும் உமது சபையிலே நான் செய்ய நீர் எனக்குக் குறித்திருக்கிற பெரிய காரியங்களிலும், சிறிய காரியங்களிலும், நீர் என்மேல் வர விடுகிற கஷ்டங்களிலும், இடுக்கண்களிலும், நோவிலும், என் கடைசிப் போராட்டத்திலும் உறுதியாயிருக்கத் துணை செய்தருளும். ஆமேன்.

---

தீமோத்தேயுவுக்கெழுதின நிருபத்திலிருந் தெடுக்கப்பட்ட இவ் வேத வசனத்தில் நிலைவரத்திற்காக எவ்வளவு சிறந்த ஆதாரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளாவன: 1) நிகழ்காலத்தைப் பார்த்தால் நீ செய்கிற போராட்டம் விசுவாசத்தின் நல்ல போராட்டம் என்பதும், 2) எதிர்காலத்தைப் பார்த்தால்: நீ பிடித்துக் கொள்ள வேண்டியது நித்திய ஜீவன் என்பதும், 3) இறந்தகாலத்தைப் பார்த்தால்: a) ஞானஸ்நானத்தால் கடவுள் உன்னை அழைத்தது முதற்கொண்டு உனக்கு சாமர்த்தியம் கொடுத்தார் என்பதும், b) நீ அநேகஞ் சாட்சிகளுக்கு முன்பாகச் செய்த நல்லறிக்கையினால் நீ உன்னைப் பரிசுத்த கடமைக்கென்று பிரதிஷ்டை செய்தாய் என்பதும் தான்.

முடிவு பரியந்தம் நிலைநிற்க மனமுள்ளவன் முந்தமுந்த நிலைவரத்தின் ஊற்றிலிருந்து மொள்ளவேண்டும். அந்த ஊற்றோ தமது கிருபை எத்தனங்களால் நமக்குச் சமீபமாயிருக்கிற கிறிஸ்துவே. நாம் நமது ஞானஸ்நானத்தையும், ஞானஸ்நான அறிக்கையையும் நம் ஜீவிய உபயோகத்திற்குக் கொண்டுவந்து எப்போதும் நம் ஜீவியத்தின் ஆரம்பமாக அதையே திரும்பிப் பார்க்கவேண்டும். இந்த ஞானஸ்நான உபயோகத்தில் தேறியிருக்கிறோமென்று நாம் சொல்லக் கூடுமா? நாம் சுறுசுறுப்பாய்த் தேவவசனத்தைக் கேட்டுப் படித்து நம் இருதயத்திலே பாதுகாத்து நம் எல்லா நடபடிக்கைகளிலும் போராட்டங்களிலும் அதையே அப்பியாசிக்க வேண்டும். நாம் அடிக்கடி கர்த்தருடைய இராப்போசனத்தில் பங்குபெற்று கிறிஸ்துவினுடைய திருச் சரீரம் இரத்தம் என்பவற்றைத் தரும் சாக்கிரமெந்தை அனுபவிக்க வேண்டும். ஒரே வார்த்தையில் சொன்னால் கர்த்தருடைய ஐக்கியத்தினால் தான் நிலைவரம் உண்டாகும். இப்படி உண்டாகும் நிலைவரமே முடிவு பரியந்தமிருக்கும்.

தங்கள் ஊழியத்தினாலேயே குருமார் வசனத்தை எப்போதும் உபயோகிக்க வேண்டியவர்கள். அதினால் அவர்கள் சபையின் மற்ற அவயவங்களுக்கு மேல் பாக்கியசாலிகளெனத் தோன்றலாம். ஆயினும் ஒரு முக்கியமான விஷயத்திலே அவர்கள் மற்றவர்களைப் பார்க்

கிலும் நிற்பாக்கியர். வேதவசனத்தைப் பிரசங்கிக்கக் கேட்பதற்கு அவர்களுக்குச் சொற்ப சந்தர்ப்பங்கள் தான் கிடைக்கும். ஆதலால் அவர்கள் மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகையில் தங்களுக்கே பிரசங்கித்துக்கொள்வது மிகவும் அவசியம். தங்கள் கோயிலிலாகிலும், வேறு கோயிலிலாகிலும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் உடனூழியருடைய பிரசங்கத்தொட்டியின் கீழ் உட்கார்ந்து அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்பது அவர்களுக்கு எவ்வளவோ அவசியமாயிருக்கும். காரியம் இப்படியிருந்தும், சில குருமாருக்கு மற்றவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்க ஆசையும் மனமும் இல்லாமற் போவதற்கு என்ன காரணமோ?

லுத்தரன் சபையிலே குருமார் தங்களுக்குத் தாங்களே இராப்போசனங் கொடுத்துக் கொள்ளலாமோ என்கிற கேள்வி திரும்பத் திரும்ப கேட்கப்படுவதற்கு முக்கிய காரணம் என்னவெனில் பரிசுத்த இராப்போசனத்தில் பங்குபெறுவோரின் தொகை அதிகரிப்பது சபையின் உள்ளான வளர்த்திக்கு அடையாளமாயிருக்க யாவரும் அடிக்கடி பங்குபெறப் போதுமான தருணங்கள் இருக்கையில் குருமார் மாத்திரம் அதில் சேர தடைபடுவது நியாயமாயிருக்க முடியாதென்பதே. இந்நிலைமை சபையின் உள்ளான வளர்த்தியும் கிறிஸ்தவர்களுடைய மன உறுதியும் அதிகமாகுங் காலங்களில் விசேஷமாய் அநியாயமாயிருக்கத் தோன்றலாம். அது அசாத்தியம் என்பதற்கு மிச்சமான சபைகளிலுள்ள வழக்கம் அத்தாட்சி.

தங்களுடைய வாலிப காலத்தில் ஆவி நிறைந்து, சுறுசுறுப்பாகவும், வைராக்கியமாகவும் உழைத்து சபையில் பலன் பெற்ற குருமாரில் பலர் பிற்காலத்தில் படிப்படியாய் ஊக்கம் குறைந்துபோய்த் தங்களுடைய சொந்த ஜீவியத்திலும் ஊழியத்திலும் நசித்துப்போன ஒரு பரிதாப நிலைக்கு வந்ததுண்டு. அவர்கள் தங்கள் வழக்கமான வேலைகளை ஒழுங்காய்ச் செய்வதனாலுங் கூட இந்நிலையை மறைத்து வைக்க முடியாமல் போயிற்று. அப்படிப்பட்டவர்களைத் தவிரத் தங்கள் முழு ஜீவிய ஊழியத்திலும் உறுதியாய் முன்னேறிச் சென்று உழைத்து இன்னும் நமக்கு முன்மாதிரியாயிருக்கக் கூடிய குருமார் இருந்ததற்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். வருஷங்கள் செல்லச்செல்ல அவர்கள் செய்யும் பிரசங்கம் இன்னும் ஆழ்ந்த கருத்தும் தெளிவுள்ளதுமானது. அவர்களுடைய ஆத்ம விசாரணையும் இன்னும் ஞானமும் அன்பும் நிறைந்ததானது. அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தில் செய்த முழு ஊழியமும் அவர்கள் நரைத்த கிழவராகையிலும் உயிர்ப்புள்ளதாயிருந்தது. ஷெல்லிங் (Schelling) என்ற சாஸ்திரி வயது முதிர்ந்த ஸ்தெவன்ஸ் (Steffens) என்பவனைப் பற்றி: "அவர் தம் இளமைப்பருவத்தில் மரித்தார்" என்று சொன்ன வாசகத்தை

இப்படிப்பட்ட குருமாருடைய கல்லறையின் முன் சொல்லியிருக்கலாம். அவர்கள் தங்களை எப்போதும் ஆரம்ப ஊழியராக எண்ணிக்கொண்டதே அவர்களுடைய விர்த்தியின் உள்ளான இரகசியம் என்று சொல்லலாம். இதினால் அவர்கள் தங்கள் ஊழியத்தின் துவக்கக்காலத்தில் தங்களுக்கு விசேஷித்த வல்லமையுண்டு என்பதுபோல் நடிக்காதபடி பாதுகாக்கப் பட்டார்கள். இதனால் பிற்காலத்திலும் அவர்களின் உறுதிக்கும் தேற்சிக்கும் தடை ஏற்படாதிருந்தது. அவர்கள் எவ்வளவுக்கு உள்ளான வளர்த்தியும் பலனும் அடைந்து தங்கள் ஊழியத்தில் தேறினவர்களானார்களோ, அவ்வளவுக்குத் தங்கள் ஊழியத்தில் இன்னுமிருக்கும் குறைவுகளை உணர்ந்து, குறைவை நிறைவாக்கக் கூடிய கிருபையைத் தேடிப் பெற்றுக்கொண்டார்கள். இப்படியாக அவர்கள் வயது ஏறஏற வாலிபர்களாகவே இருந்தார்கள்; அல்லது அப்போஸ்தலனுடைய வார்த்தையில் சொன்னால், அவர்கள் கிறிஸ்து இயேசுவினால் பிடியுண்டபடியால் அதைப் பிடித்துக்கொள்ள ஆசையாய் பின் தொடர்ந்தார்கள்.

---

# VI. கர்த்தருடைய சபை என் சபை.

**32.** உங்களிலுள்ள மூப்பரை உடன்மூப்பனும் கிறிஸ்துவினுடைய பாடுகளின் சாட்சியும் வெளிப்படப்போகிற மகிமையின் பங்காளனுமாகிய நான் எச்சரிக்கிறதாவது: உங்களிடத்திலுள்ள பராபரனுடைய மந்தையை நீங்கள் கட்டாயத்தினால் அல்ல, மனப்பூர்வத்தினாலேயும், இலச்சையான ஆதாயப் பிரியத்தினால் அல்ல, உற்சாக மனதினாலேயும், சுதந்தரங்களை ஆண்டுகொள்ளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவுங் கண்காணித்து மேயுங்கள். 1 பேது. 5, 1-3.

என் குழந்தைகளே, கிறிஸ்து உங்களில் உருவேற்படும் மட்டும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப் படுகிறேன். கலா. 4, 19.

---

அன்புள்ள கர்த்தராகிய பராபரனே, குருவும் மேய்ப்பனுமாக நான் உம்மிடத்தில் ஒப்புக்கொண்ட சபை உமது குமாரனுடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினால் இவ்வுலகத்திலிருந்து நீர் உமக்கென்று சம்பாதித்த உமது சபையாயிருப்பதை நீர் எனக்கு அடிக்கடி நினைப்பூட்டுகிறீர். அற்பனும் மறதியுள்ளவனுமான உம்முடைய ஊழியனாகிய நான் எல்லாக் காலத்திலும் உம்மை என் கண்களின் முன்னும் இருதயத்திலும் வைத்து இச்சபையை உம்முடைய சபையாகப் பார்த்து, அதில் வேலை செய்யவும் எனக்கு ஒத்தாசை செய்த

ருளும். இங்கே என் எல்லா ஊழியத்தையும் சந்தோஷமாய் முழு மனதோடு செய்ய என்னை ஏவும். கர்த்தாவே, நான் உமது சபையில் கட்டாயத்தினால் ஊழியம் செய்யலாமோ? நான் உம்முடைய ஆதாயத்தையன்றி உமது சபையில் வேறெந்த ஆதாயத்தையும், தேடாமலும் உமது ஆளுகையையன்றி வேறெந்த ஆளுகையையும் ஏற்படுத்தாமலுமிருப்பேனாக. நான் எந்தக் கேவலமான விதத்திலாகிலும் உமது சபையை என் சபையாக்கி, அதை வசப்படுத்தி அதில் ஆளுகை செய்யும் பெரிய பாவத்துக்குட்படாதபடி சகல வித உள்ளான புத்தி போதனையினாலும் என்னைப் பாதுகாத்தருளும். அது உம்முடைய சபையாயினும் நீர் எனக்குக் கொடுத்த பாத்தியத்தின்படி இச்சபையை என்சபை என்றழைத்து, அன்பினால் இதற்கு என்னைத் தத்தம்பண்ணி இதை எனக்குச் சொந்தமாக்கி இதற்காக உழைத்து இதை மேய்க்க எனக்கு இடங் கொடுத்தருளும். அன்புள்ள கர்த்தாவே, எல்லாவற்றிற்கும் மேலாக உமது ஜீவ ஆவியினால் என்னை உமது ஊழியத்துக்குத் தகுதியுள்ளவனாக்கி, நான் எவ்விதத்திலாகிலும் இந்தச் சபைக்குஆவிக்கடுத்த காரியங்களில் ஒரு தகப்பனாய் விளங்கி சபையாரை இன்பத்திலும் துன்பத்திலும் சுவிசேஷத்தின் மூலமாய் உமக்குப் பிள்ளைகளாக்கக் கூடிய சொல்லிமுடியாத கிருபையை எனக்கு அளிக்கும்படியாக வேண்டுகிறேன். கர்த்தாவே, உம்மையே நம்பியிருக்கிறேன், எனக்கு ஒத்தாசை செய்தருளும். ஆமேன்.

---

அப்போஸ்தலர் தங்கள் சபைகளைக் குறித்துப் பேசாமலும் மூப்பருக்குச் சபைகளைக் குறித்து எழுதும் போது அவைகளை "உங்கள்" சபைகள் என்றழைக்காமலும், முன் சொன்ன வாக்கியத்திலிருக்கிறபடி அதைப் "பராபரனுடைய மந்தை" என்று சுட்டிக்காட்டுகிறார்கள். இவ்வார்த்தையினால் கிறிஸ்தவ சபை குருமாரின் பார்வையில் மதிப்புள்ளதாகும். ஆதலால் சபையை அவர்கள் மதிப்போடும் அன்போடும் பார்க்கவும் மகா பரிசுத்தமான கடமைகளை அதற்குச் செய்யவும் உத்தரவாதமுள்ளவர்களென்று விளங்கும். இக்காலத்தில் அநேகமாய் முழு ஜாதியும் ஒரு சபையாக இருக்கும். ஆதலால் இவ்வார்த்தைகள் சபைக்குத் தகுதியுள்ளவையோ, அவ்விதமாய்நாம் சபைகளை மதிப்போடு பார்ப்பது அவசியமோ என்று நமக்குள் சந்தேகமுண்டாகலாம்; இவ்வித கலப்பான சபைகளைக் குறித்துப் பலவிதமாய் யோசிக்கவும் பேசவும் நாம் சோதிக்கப்படுவதுண்டு. என்றாலும் அவர்களெல்லாரும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்கள் என்பதையும், அவர்களெல்லாரும் பரிசுத்த ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்பதையும், அவர்களுக்குள் மெய்யான ஜீவ

னுள்ள சபை இருந்துகொண்டு, புளித்த மாவின் தன்மையுடையதாய் அவர்களைப் பரிசுத்தமாக்குகிறது என்பதையும் நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். கொரிந்து சபையைப் போல் குறைவுள்ள ஒரு சபைக்குப் பவுல் அப்போஸ்தலன் எழுதும் போதெல்லாம் வேண்டுமென்றே சபையின் மேன்மையான நிலையைக் குறிக்கும் வார்த்தைகளையே எடுத்துரைக்கிறார். ("கொரிந்துவிலுள்ள பராபரனுடைய சபையாருக்கு" 1கொரி. 1, 2; "நீங்கள் பராபரனுடைய பண்ணையும் பராபரனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்." 1கொரி. 3, 9; "நீங்கள் பராபரனுடைய தெய்வாலயமாயிருக்கிறீர்கள் என்று அறியீர்களோ" 1 கொரி. 3, 16; 5, 19ஆ). இதிலே ஒரு ஞானமுள்ள போதனுமுறையும் அடங்கியிருக்கிறது. எப்படியெனில் அவனுடைய எல்லா வார்த்தைகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி இடமுண்டாகி, அவன் கடுமையான வார்த்தைகளையும் உபயோகித்து பலன் வரத் தக்கதாக அவர்களைக் கடிந்துகொள்ளக் கூடியதாயிற்று. அவமதிப்போடும் நம்பிக்கையின்றியும் தங்கள் சபைகளைப் பார்க்கிற குருமாரால் விளையும் நன்மைகள் அதிகமல்ல.

"என்னுடைய சபை" என்னும் தற்காலத்தில் அடிக்கடி உபயோகத்திலுள்ள பதம் அநேகமாய்க் குருமார் மந்தையின் மேல் அதிகாரத்தைத் தேடினதோடு வெட்கமான லாபத்துக்கென்று கையாடின ஆவி ஆளுகைக்கு வந்த காலங்களில் உற்பத்தியாயிற்று. ஆயினும் இவ்வாளுகைக் குணம் நீங்கினல் "என்னுடைய சபை" என்னும் பதம் கவனிக்கத்தக்கதும் நல்ல அர்த்தம் நிறைந்ததுமாகும். பாத்தியத்தின்படி அது "என் சபை" அதாவது அதற்கு ஊழியம் செய்வதும், அதை நடத்துவதும் என் கடமை; நான் அதை நேசிக்கிறபடியாலும் அது "என் சபை". "என் குழந்தைகளே, கிறிஸ்து உங்களில் உருவேற்படும் மட்டும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப் படுகிறேன்" என்று சொன்ன அப்போஸ்தலனுடைய மனம் எனக்கு இருக்க வேண்டும்(கலா. 4, 19 ஒத்துப்பார்; 1கொரி. 4, 15. 16). இந்த அர்த்தத்தில் நாம் "என் சபை" என்கிறபதத்தை எப்போதும் உபயோகித்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும்.

ஒவ்வொரு தனிச்சபையும் முழுத்திருச்சபை அமைப்பில் எவ்வளவு முக்கியம் என்பதை மனதில் வைத்தால் தனிச்சபைகளைத் தனிகுருவின் ஆளுகைக்கு ஒப்புவிப்பது ஒரு அருமையான காரியமென்று விளங்குகிறது. தனிச்சபையிலேயே தனித்த ஆட்கள் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகிப் பூரண ஐக்கியமாகி பொதுவாய் எல்லாவற்றையும் கர்த்தரிடமிருந்து வாங்கி ஒருவரோடொருவர் பகிர்ந்துகொடுத்துத் தங்களையே அவருக்கு ஒப்புக்கொடுக்க இடமுண்டு. இப்படித் தனித்த கிறிஸ்தவனுக்கும் முழுதிருச் சபைக்கு

மிடையில் தனிசபை நின்றுகொள்வது அத்தியாவசியமும் தகுதியுமா யிருக்கும். ஏனெனில் இதிலொழிய நிறைவாகா ஆன்மசரீர ஆள்தத் துவ ஐக்கியம் வேறெவ்விடத்திலும் இருக்காது.

**33.** நீங்கள் உங்கள் மேலும் மந்தை அனைத்தின் மேலுங் கவனிப் பாயிருங்கள். அப். 20, 28.

உங்கள் வழிகாட்டிகளுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; ஏனென் றால் அவர்கள் உங்கள் ஆத்மாக்களுக்காகக் கணக்கு ஒப்புவிப்பவர்களாய் விழித்திருக்கிறார்கள். இதை அவர்கள் பெருமூச்சு விட்டுச் செய்யாமல், சந் தோஷத்தோடே செய்யப் பாருங்கள் ,ஏனென்றால் அது உங்களுக்கு நல்ல தல்ல. எபி. 13, 17.

கர்த்தாவே, நீர் எனக்கு ஒப்புக்கொடுத்த சபையைச் சரியாய்க் கவனித்து, அதிலுள்ள ஆத்மாக்களின் மேல் விழிப்புள்ளவனா யிருக் கத்தக்கதாக, என் இருதயத்தை விழிப்புள்ளதும், என் கண்களைத் தெளிவுள்ளதுமாக்கும். அப்போது நான் என் சபையின் ஆவிக் குரியநிலைமையில் அவர்களுக்கு உள்ளது எது,இல்லாதது எது என்று அறிந்துணர்ந்து ஒரு சபையின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவி செய்வ தென்று அறிந்துகொள்ளும்படி அசமந்தத்தின் ஆவியை யெல்லாம் என்னைவிட்டு நீக்கி, சரியான மேய்ப்பஞானத்தினால் என்னைப் பிர காசிப்பியும். கர்த்தாவே, தங்கள் சபைகளின் நிலைமையையும் தங்கள் சபை அவயவங்களின் நிலைமையையும் நினைத்துக்கொண்டேயிருக் கவும் தங்கள் இருதயத்தில் அதைப் பதியச்செய்து, இவ்வாறு காரியத் தைச் செய்துமுடிக்க வேண்டிய வழிவகைகளைக் கண்டுபிடிக்கவும் விரும்புகிற சில குருக்களைக் கண்டிருக்கிறேன். நீர் என்னை அப்ப டிப்பட்ட மேய்ப்பனாக்கி, அவ்வித மேய்ப்ப இருதயத்தை எனக்குத் தாரும். அதற்கு இரகசியமான ஊற்றாகிய அன்பில் நான் பங்கு பெற உதவி செய்தருளும். ஆத்மாக்களுக்காக நான் கொடுக்க வேண் டிய கணக்கை எனக்கு நினைப்பூட்டி என்னை விழிப்புள்ள ஒரு தகுந்த காவல்காரனாக்கியருளும். ஆமேன்.

கர்த்தர் தாமே அந்தந்த வெவ்வேறான சபைகளின் வித்தியாச மான நிலைமையை நன்றாயறிந்திருக்கிறாரென்பதை அறிவிப்பின் ஆக மத்தில் ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களின் மூலமாயறிய லாம். அந்தந்தத் தனிச்சபையின் மேய்ப்பனும் தன் சபையின் நிலைமை யை அறியப் பிரயாசப்பட்டு ஆண்டவரிடமிருந்தே அதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது விளங்கும் ("எபேசு, (சிமிர்னா ஆகிய) சபை யின் தூதனுக்கு எழுது"). சபைகளுக்கு ஆண்டவரிடத்திலிருந்து

சீர்திருத்தலையோ, கண்டிப்பையோ, புகழ்ச்சியையோ, புத்திமதியையோ கொண்டுவருவதற்கு அதினால் அவன் ஏற்றவனும் சாமர்த்தியமுள்ளவனுமாகிறான். முழு மந்தையையும் கவனித்து ஆத்மாக்களின் மேல் விழிப்புள்ளவனாயிருக்க விரும்புகிற குருமாருக்கு இந்த ஏழு நிருபங்களைத் தியானிப்பது மிகவும் பிரயோஜனம். மேலும் அப்போஸ்தலர்மார் அந்தந்த சபைக்கு எழுதின நிருபங்களைப் பார்த்தால் அவர்கள் எவ்வளவு யோசனையோடும் ஜெபத்தோடும் சபைகளின் ஆத்மநிலையைக் கவனித்திருக்கிறார்களென்று தெரியும். மற்றபடி சபைகளுக்கு அவ்வளவு துணை செய்திருக்க முடியாது.

எந்தச் சபையின் நிலைமையும் வேறொரு சபையின் நிலைமைக்கும் முற்றிலும் ஒத்ததல்ல. ஒன்றுக்கொன்று சமீபமான சபைகளிலேயும் வித்தியாசமுண்டு. குருவானவர் தன் சபையின் உள்ளான நிலையை நன்றாய் அறிந்துகொள்ளும்படி முயற்சி செய்ய வேண்டும். அச்சபையின் கிறிஸ்தவ ஜீவியம், அதின் வளர்த்தி, அதற்கிருக்கும் சோதனைகள், கெடுதிகள், நற்குணங்கள் இவைகளை யெல்லாம் அறிய வேண்டும். சபையின் ஜன சமூகநிலை, பிழைப்பு, படிப்பு, பழக்க வழக்கங்கள், இவைகளையும் அறியும்படி முயல வேண்டும். குரு அப்படி முழு மந்தையின் மேலும் கவனம் வைப்பதிலிருந்து பிறக்கும் பிரசங்கம் கேட்போரின் தலைக்குமேல் போகாமல் சரியான நேரத்தில் சொல்லப்படும் நல்வார்த்தையைப் போல், உயிர்ப்புள்ளதாகவும், ஜீவியத்தை யொட்டினதுமாயிருந்து, நல்ல பலனைக் கொடுக்கிறது. அவ்வறிவினால் ஒரு குரு, தன் மந்தையின் மேல் வைக்கும் விசேஷித்த ஆத்மகவலை, முழு சபைக்கும் நன்மையாகப் பலிக்கிறது. தனி ஆட்களினிடம் ஆத்மவிசாரணையிலும் பலன் செய்கிறது. ஏனென்றால் தனி ஆத்மா நல்லதாகவோ கெட்டதாகவோ சபையிலுள்ள ஆவியினாலும் முழு தேசத்தில் பலமாய் அசைவாடிக்கொண்டிருக்கிற ஆவியினாலும் ஏவப்படும்.

எப்போதும் தங்கள் சபைகளின் காரியங்களைத் தங்கள் இருதயத்தில் சுமந்துகொண்டிருக்கிற குருக்களைப் பார்ப்பது நமக்கு வெட்கம் உண்டாக்குவதோடு உற்சாகத்தையும் உண்டாக்கி நம்மைப் பலப்படுத்தும் விஷயம்.

சபைவீடுகளைச் சந்திப்பதினால் விளையும் முக்கிய லாபம் ஏதென்றால் இவ்வித சந்திப்பில் குரு தன் சபையார் அனைவரையும் நன்றாய் அறியவும், சபையாரைப் பிறகு பல விஷயங்களில் நடத்தக் கூடும்படி அவர்களோடு தனக்கு ஒரு நெருங்கிய சம்பந்தம் ஏற்படவும் இது ஒரு எத்தனமாவதே. எவர்களைச் சந்திக்கக் கூடுமோ, கூடாதோ என்று ஒவ்வொரு குருவும் அந்தந்த தருணங்களில் யோசிப்பது உசிதம்.

"கணக்கு ஒப்புவிப்பவர்களாய்": "இவ்வார்த்தைகளைப் பார்த்து என் ஆத்மா எப்போதும் பயப்படுகிறது. இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவனுடைய அதாவது ஒரு சகோதரனுடைய மனச்சாட்சியைப் புண்படுத்துகிறவனுடைய கழுத்தில் ஒரு ஏந்திரக்கல் கட்டப்பட்டு அவன் சமுத்திரத்தின் ஆழத்தில் தள்ளப்படுவது நலமாயிருந்தால், ஒருவரையல்ல, இருவரையல்ல, அநேகரை இடறல்படுத்தினவர்களின் கதியென்ன!" என்று கிறிசோஸ்தமு (Chrysostom) சொல்லுகிறான்.

---

**34.** நான் எப்படியும் சிலரை இரட்சிப்பதற்கு எல்லாருக்கும் எல்லாம் ஆனேன். 1 கொரி. 9,22.

இவ்விதமாக இந்தச் சிறியரிலொருவன் கெட்டுப்போகப் பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவுக்குச் சித்தமில்லை. மத். 18, 14.

---

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் யாவருக்கும் ஊழியஞ் செய்ய ஒருபோதும் வெட்கப்படாமல் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலராகிய உமது சொந்த ஜனத்தார் எப்போதும் உம்மிடம் வர இடங்கொடுத்து, மற்றவர்களிடமிருந்தது போல் உமது சீஷரிடம் உண்மையான மேய்ப்ப அன்பைக் காட்டிப் பரிசேயனையும் ஆயக்காரனையும் ஏற்றுக்கொண்டு, எல்லாருக்கும் கடமைப்பட்டவராக விளங்கின சற்குருவே, நானும் என்னுடைய சிறிய கூட்டமாகிய சபையில் தெரிந்துகொள்ளப்பட்ட சிலருக்கு மாத்திரம் ஊழியம் செய்து மற்றவர்களைக் கைவிட்டுவிடாமல் அனைவரையும் என் சபையின் அவயவங்களாக மதித்து, அனைவரையும் ஐக்கியப்படுத்தி அவர்களை ஆதாயப்படுத்த எனக்கு உதவிசெய்யும். தூரப் பார்வையற்ற மனுஷர் சரியாய் அறிந்துகொள்ளாத என்னுடைய சபையிலிருக்கிற உமது உண்மையுள்ள சீஷர் கூட்டத்தாருக்கும் உலகத்தார் பாவிகளும் ஆயக்காரரும் என்று கடினமாய் நியாயந்தீர்த்தாலும் நல்ல மேய்ப்பராகிய நீர் வனாந்தரத்திலே காணாமற்போன ஆட்டைத் தேடிக் கண்டு பிடித்து, உமது தோள்களின் மேல் சுமந்து கொண்டுபோன அவர்களுக்கும் நான் விசேஷித்த ஊக்கத்தோடும் அன்போடும் ஊழியம் செய்யத் துணை செய்தருளும். ஆமேன்.

---

சபையாருக்கெல்லாம் நீ சொந்தம் என்று லேயெ (Loehe) சொல்லுகிறான். தன் சபையாரில் சிலபேரைச் சேர்ந்துக்கொண்டு மற்றவர்களை அசட்டை செய்வது ஒரு குருவுக்கு கிரமமேயல்ல. அவர்கள் எல்லாரும் ஞானஸ்நானத்திலும் திடப்படுத்தலிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, குருவின் கவலைக்கு ஆண்டவராலும் சபையா

ஆவணக்காப்பக

லும் ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள். எல்லாருக்கும் நீ உரிமையுள்ளவன், நீ அவர்கள் எல்லாருக்கும் உன் அன்பைக் காட்டி ஊழியஞ் செய்யக் கடமைப்பட்டவனென்பது ஒரு சபையிலே நேர்மையுள்ள உத்தம கிறிஸ்தவர்களாய் விளங்கி, குருவின் இருதயத்தில் அருமையாய் மதிக்கப்படும் ஒரு கூட்டத்தார் ஒவ்வொரு சபையிலும் இருப்பதினாலும் பரம மேய்ப்பர் காணாமற்போன ஆடு, காணாமற்போன வெள்ளிக்காசு, கெட்ட குமாரனைப் பற்றிய உவமைகளைக் கொண்டும் அனேகமாய்த் தமது சொந்த முன்மாதிரியைக் கொண்டும் கெட்டுப்போனவர்களையுங் கூட மேய்ப்பர்களின் கரிசனமான கவலைக்கு ஒப்புவித்ததினாலும் உனக்குத் தெளிவாய் விளங்கும்.

தன் சபையில் கிறிஸ்தவ ஜீவிய ஊக்கமுடையவர்களாய் விளங்குகிற கிறிஸ்தவர்களிடத்திலும் போதுமான குறைகளிருந்தாலும், அவர்களிடமே அதிகப் பற்றுள்ளவராய் இருப்பது சகஜமென்று யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அது ஆவியிலே ஒற்றுமையுள்ளவர்களுக்கு இயல்பு. தன் சபையாரில் உயிர்ப்புஉள்ளவர்கள் என்று பேர்பெற்றவர்களிடம் அன்புவைக்கிறதற்குப் பதிலாக அவர்களை ஒருவிதமான வெறுப்போடு பார்ப்பது இயற்கைக்கு விரோதமும் அவனைப் பற்றிச் சந்தேகம் உண்டாகக் கூடியதுமாயிருக்கிறது. அவர்களால் குரு ஆவிக்குரிய பலமும், ஊக்கமும் பெற்றுப் பல பேரின் நம்பிக்கைக்குரியவனுமாவதினால் அவர்கள் குருவின் சொந்த ஜீவியத்திலும் ஊழியத்திலும் அதிக உதவியாயிருக்கக் கூடும். அது போல் அவன் அவர்கள் தங்களிடத்தில் வேளாவேளைகளில் காணப்படும் பெருந்தன்மையற்ற எண்ணங்களினின்று தேறினவர்களும் சபைக்குரிய ஜீவியத்தில் சரியாய்ப் பங்குபெற்றவர்களுமாவதற்குத் தனக்குச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் அவர்களுடைய குறைவுகளை அன்புடன் எடுத்துச் சொல்லுவதால் அவனும் அவர்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கக் கூடும்.

ஒரு குரு சபைக்குள்ளிருக்கும் இப்படிப்பட்ட கூட்டம் ஒன்றில் அகப்பட்டுக்கொண்டால், அல்லது அவன்தானே தன் அபிப்பிராயத்தின்படி நல்ல கிறிஸ்தவர்களாயிருக்கிறவர்களைத் தனக்கே சார்பாயிருக்கும் ஒரு சிறு சபையாக்கினால், அது சபைக்கு மோசமாக முடியும். இவ்வித கூட்டம் ஒன்றுக்கு அவன் தலைவனாய்த் தோன்றினாலும், அல்லது அக்கூட்டத்துக்கு அவன் அடிமையாயிருந்தாலும் இரண்டும் மூடத்தனமான நிலையே. இந்தக் கட்சியார் தங்கள் மனோபாவனையைப் பெரிதாக்கி, தங்களுக்குப் பிரியமான காரியங்களில் பிடிவாதம் சாதித்து, குருவையும் தங்களைப்போலாக்கப் பார்ப்பார்கள். இப்படி அவன் அவர்களுக்கும், அவர்கள் அவனுக்கும் பிரயோசனமற்ற நிலைமையில் உட்படக் கூடும். இவர்களுடைய பட்ச

தாபத்துக்குத் தூரமாயிருக்கிறவர்களில் ஒருவேளை ஒரு கட்சியிலும் சேராத வல்லமையுள்ள உத்தம கிறிஸ்தவர்களுமிருக்கலாம். அவர்கள் குருவைச் சமரசசமநிலைத் தவறிப்போனவனாகவும், தங்களுக்கு அந்நியமாய்ப் போனவனாகவும் எண்ணக் கூடும். அவன் அவர்களிடம் தகுந்த ஊழியஞ் செய்யக் கூடாதபடிக்குத் தடை ஏற்படுகிறது. அவனே தன்னோடும் தன் கட்சியாரோடும் சேராதவர்களை அவநம்பிக்கையோடும் பிரியமில்லாமலும் பார்க்கக் கூடிய சோதனைக்கு ஆளாகிவிடுகிறான்.

"ஏனெனில் நான் எல்லாருக்கும் நீங்கலாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்வதற்கு, என்னைத்தானே எல்லாருக்கும் ஊழியக்காரனாக்கினேன்" (1 கொரி. 9, 19) என்று பவுல் கட்சிப் பிரிவினைகளுள்ள கொரிந்து சபையாருக்குச் சொன்னது ஆழ்ந்த கருத்துள்ள வார்த்தை.

ஒரு மெய்யான குரு பரிசுத்த ராப்போஜனத்தில் பங்குபெறும் சபையாரைத் தவிரத் தன் சபைக்குள் வேறொரு சிறுசபையை அறியான். அவர்கள் தான் பரிசுத்தமாகுதலை ஆரம்பித்து அதில் மென்மேலும் வளர வேண்டியவர்கள். அவன் தாங்களே உண்டாக்கிக் கொண்ட அறிகுறிகளுள்ள சிலருக்காக அல்ல, தன் சொந்த அபிப்பிராயங்களைப் போஷிக்கும் ஒரு கிளர்ச்சிக்காக அல்ல, தனக்கென்றுமல்ல, தன் சபை ஒரே ஐக்கியமான சபையாய் வளரவே தன் சபையாரைச் சேர்த்துக்கொள்வான்: இவ்வேலையின் கடைசியான இலக்கு சபை முழுவதும் இராப்போஜனத்தில் ஆண்டவரோடு ஐக்கியமாயிருப்பதே என்பது தெளிவாம்.

ஒரு குரு "வேண்டாமென்று விலக்க" வேண்டிய சில சபையாருமுண்டு என்பதை மறக்கக்கூடாது. இனிமையும் பக்தியுமாய்த் தொனிக்கும் பேச்சோடுவரும் வீண் அலப்பிகளான பெண்கள் (1 தீமோ. 5, 11 ழ்ஐ), தெய்வபக்தியை ஆதாயத் தொழிலென்று எண்ணுகிறவர்கள் (1 தீமோ. 6, 5), இரண்டொருவிசை புத்தி சொல்லியும் திரும்பாத வேதப் புரட்டனாகிய மனுஷன் (தீத்து 3, 10) இப்பேர்ப்பட்டவர்களை விலக்கவேண்டும். எல்லாருக்காகவும் செலவழிக்கவேண்டிய காலத்தையும் பலத்தையும் வீணாக்குகிற இவ்வகையான மனுஷரை வேண்டாமென்று விலக்க வேண்டும்.

சகலருக்கும் ஊழியம் செய்வதற்காக வேண்டிய நமது நேரத்திற்கும் பலத்துக்கும் உண்மையில் ஒரு அளவு உண்டு. இந்த அளவைக் கர்த்தர் விரும்புவதைவிட அதிகமாக நாம் குறைத்துக்கொள்ள வேண்டாம்.

**35.** ஒரு தாதி தன்னுடைய பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல் உங்கள் நடுவிலே மெதுவாயிருந்தோம். இப்படி நீங்கள் எங்களுக்குப் பிரியரான படியினாலே நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, உங்களுக்குப் பராபரனுடைய சுவிசேஷத்தை மாத்திரமல்ல, எங்கள் ஆத்மங்களையும் பகிர்ந்துகொடுக்க இதமிய மனதாயிருந்தோம். 1 தெச. 2; 7 மு.

ஆண்டவர் சொல்லுகிறதேதெனில்: தங்களைத் தானே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ. மந்தையை மேய்ப்பர் மேய்க்க வேண்டாமோ, எசேக். 34, 2.

---

அன்புள்ள கர்த்தராகிய பராபரனே, சபையிலே செய்கிற என்னுடைய ஊழியமே என் ஜீவியத்தின் முக்கிய காரியமாயிருக்க எனக்கு ஒத்தாசை செய்யும். லௌகிக காரியங்களிலே என்னுடைய பலத்தையும் அன்பையும் செலவிடாமல், நான் என்னையும் எனக்குள்ளதையும் சபையிலே உம்முடைய ஊழியத்திற்கென்று செலவிட என்னைத் தற்காத்துப் போதியும். கர்த்தாவே, தங்களைத் தானே மேய்த்துத் தங்கள் மனம் போல் பிழைத்த இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு நீர் ஐயோகூறினதைப் பற்றி நான் அஞ்சுகிறேன். என் சோதனைகளில் என்னோடிரும்; நான் என் புத்தியைச் சிதற விட்டு, என் பலனை வீணுக்குகையில் என்னைத் திருப்பியருளும். மேய்ப்பர் மந்தையை மேய்க்க வேண்டியவர்களாமே என்னும் வார்த்தையை எனக்கு இன்னும் அதிகமாய் பெரிதும் அருமையுமாக்கியருளும். நான் இந்த என் சபையிலே அப்படிப்பட்ட சரியான மேய்ப்பனாய் விளங்க எனக்கு உதவி செய்யும். நான் இங்கே என் முழு பலத்தையும் செலவிட்டு, உமது கிருபையின் சக்தியினால் செய்ய வேண்டியதைச் செய்யவும் துணை செய்யும். வல்லமை, ஒழுங்கு என்றவைகளின் தேவனாகிய கர்த்தாவே, நான் நீளத்திலும் அகலத்திலும் சுற்றித் திரியாமல், என்னால் கூடியமட்டும் சுறுசுறுப்புள்ளவனும் கனிகளுள்ளவனுமாக விளங்க உறுதியான எல்லைகளுள்ள இவ்வளவு சிறிய வேலைஸ்தலத்தைக் கொடுத்ததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். உமது திருச்சபையிலுள்ள இந்த சிறு ஸ்தலத்திலே நான் உம்மைத் துதிக்கிறேன். நீர் இங்கே என்னை ஆசீர்வதித்து, நான் ஆசீர்வாதமாக விளங்கத் துணைபுரியும். ஆமேன்.

---

ஒரு குரு தன் குடும்பஜீவியத்தின் சந்தோஷத்தை விட்டுவிடுவதினாலோ, தன் படிப்பு, முசிப்பாறுதல், தேசாபிமானத்துக்குரிய விருப்பங்கள் முதலியவைகளை விட்டுவிடுவதினாலோ அவனுக்கு அவனுடைய ஊழியமே ஜீவியத்தின் முக்கிய காரியமாகிறதென்று நினைக்கக்கூடாது. இப்படி விட்டுவிடுவதினால் அவன் அநேகமாய்

கிறிஸ்தவத் தன்மையுள்ள மெய்யான மனுஷ ஜீவியம் செய்வதில் குறைவடைபவனுவதேயன்றி வேறல்ல. பராபரனுடைய சுவிசேஷத்தை மாத்திரமல்ல, தன்னுடைய சொந்த ஜீவனையும் சபையின் ஆத்மாக்களுக்காகப் பகிர்ந்துகொடுக்க மனதாயிருந்த அப்போஸ்தலனை ஏவின தெய்வீக அன்பைத் தனக்குள் உண்டாக்கும்படி ஆண்டவரைக்கேட்டு, இப்படி அன்பு நிறைந்தவனுவதினுலேயே அவனுக்கு அவன் ஊழியம் மகா முக்கியமான காரியமாகும். மேற்சொன்ன காரியத்தையும் வேண்டாமென்று தள்ளவும், இயற்கைக்குரிய விஷயங்களை ஆவிக்குரிய காரியங்களுக்கு கீழ்படுத்தவும், இயற்கைக்குரியவை இலேசாய் மனுஷனை ஆளக்கூடியவை என்று அறிந்து அவ்வாளுகைக்குட்படாதபடி ஜாக்கிரதையாயிருக்கவும் இந்த அன்பு அவனை ஏவிவிடுகிறது.

ஒரு சாதாரண குருவுக்கு அவன் தன் சபையில் செய்யும் வேலையே அவனுடைய ஜீவியத்தின் முக்கிய காரியமாயிருக்க வேண்டியது. ஆதலால் சாதரணமாய் ஒரு குருவை அபிஷேகம் செய்வது குறிக்கப்பட்ட ஒரு சபையில் ஊழியஞ் செய்வதற்கென்றே. தனிச்சபைக்குரிய எல்லை குருவின் மனதைக் குறிக்கப்பட்ட ஒரேயொரு கடமையில் செலுத்தி, அவனுடைய எல்லா சக்திகளையும் நற்பிரயோசனப்படுத்துவதினுல் அது கபடற்ற ஊழியனுக்குச் சொல்லிமுடியாத பிரயோசனமுள்ளது. உன்னுடைய ஜீவியத்தின் முக்கிய வேலை இங்கேயே இருக்க வேண்டுமென்னும் சத்தத்தை அது அவன் காதில் தொனிக்கச்செய்கிறது. அதனுல் பலவித ஐக்கிய சங்கங்களின் வேலையால் தன் முக்கிய வேலையிலிருந்து இழுப்புண்டு போகக் கூடிய இக் காலத்தில் ஒரு குரு சில நல்ல கிறிஸ்தவ வேலைகளில் ஒரு வேளை தான் நினைக்கும் அளவில் பங்கு பெறத் தடுக்கப்படுவான். தன்னுடைய வேலையின் எல்லையைத் தாண்டி, இன்னெருவருடைய வேலையில் அவன் தலையிடாதபடி அவன் இதினுல் தடுக்கப் படுகிறுன். அந்நிய காரியங்களில் தலையிடுவது தன்னில் தான் அடாத காரியம் (1 பேது. 4, 15). தன்மேல் வைக்கப்பட்ட பாரத்துக்கு மேல் அதிகம் சுமக்கக் கூடுமென்று எண்ணுவது அகந்தை. அப்படி ஊக்கத்தோடும் பலத்தோடும் உழைத்தும் தன் பொறுப்பிலிருக்கும் வேலையைத் திருப்திகரமாய்ச் செய்ய முடியாது என்று காண வேண்டியதில்லையா? வேறு சபையின் அவயவங்களுக்கு ஊழியஞ் செய்யச் சபைச் சட்டங்கள் சில குறிக்கப்பட்ட அளவுக்குள்ளாகக் குருவுக்கு இடங்கொடுத்திருக்கும் இடங்களில் கூட அதை அவன் எளிதில் செய்ய முடியாது. ஆயினும் அதிக கண்டிப்பான சட்டங்களுள்ள ரோமைச் சபையிலே சபையார் விசேஷித்த பாவ – அறிக்கை செய்யத் தங்களுக்குப் பிரியமான குருவைத் தெரிந்து கொள்ளும் சிலாக்

கியமுண்டு. ஏனெனில் இது விசேஷித்த நம்பிக்கையைப் பெர்றுத்தது.

இவ்விதமாய் உன்னைச் சுற்றிலும் ஒரு எல்லை வரையப்பட்டிருப்பதைக் குறித்து மனச்சோர்வடையாதே. பெரிய அமைப்புக்குப் பிரயோஜனமாயிருக்க முடியவில்லையே என்று பயப்படாதே. நமது கர்த்தராகிய கிறிஸ்துவும் தம் ஊழியத்தில் அதிக நெருக்கமான ஒரு எல்லைக்குள்ளே இருந்துவிட்டார்; என்றாலும் எண்ண முடியாத பல வழிகளில் அவருடைய ஜீவியம் எல்லாருக்காகவும் கனி தந்தது. அதிலே அவருக்குக் கீழாக மேய்ப்ப ஊழியஞ் செய்யும் உனக்கும் ஒரு வாக்குத்தத்தம் அடங்கியிருக்கிறது.

மேலும் கர்த்தர் தாம் செய்த எந்தக் காரியத்தையும் அரை குறையாய்ச் செய்யாமல் பூரணமாய்ச் செய்தார். அவருடைய வாய் அல்ல அவர் இருதயமே பேசினது, அவருடைய கையல்ல அவருடைய உள்ளமே வேலை செய்தது. பேதுருவை நடத்தியதிலும் சரி, யூதாவை நடத்தியதிலும் சரி அவர் கடைசிமட்டும் தமக்கு உண்மையாகவேயிருந்து துவக்கினதை விட்டுவிடாமல் செய்துமுடித்தார். நீயும் செய்யயும்படி உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற எந்த வேலையையும் உன் முழு பலத்தையும் உபயோகித்துச் செய். அது நெருக்கமான எல்லைக்குள் அடங்கின காரியமாயிருந்தால் அதை ஆழ்ந்த உட்கருத்தோடு செய். நீ பின்னால் தொடர்ந்து செய்யாமல் விட்டுவிடக் கூடிய பல காரியங்களைச் செய்யத் தொடங்காதே. சுகப்பட்ட ஒரு வியாதிக்காரனிடத்திலோ, தங்கள் பிள்ளையின் மரணத்தினால் நித்தியத்தைப் பற்றிய நினைவுகளடைந்த தாய்த் தகப்பன்மாரிடமோ, நீ ஏழுதரம் வீணாய் உதவிசெய்யப் பார்த்த ஒரு குடிகாரனிடத்திலோ, உனக்குத் தன் இருதயத்தை ஒருதரந் திறந்து பாவ அறிக்கை செய்த சபையானிடமோ, நீ துவக்கின வேலையை விட்டுவிடாதே. இக்காரியங்களை உன் மனதின் ஆழத்தில் வைத்துவைத்து சமயம் வாய்க்கும்போது மறுபடியும் எடுத்துக்கொள்.

---

**36.** இயேசுவோ எல்லாரையும் அறிந்தபடியினாலே, நம்பிக்கையாய் அவர்களுடனே இணங்கினதில்லை. ஒரு மனுஷனைக் குறித்து ஒருவன் சாட்சிகொடுக்க அவருக்குத் தேவையாயிருந்ததில்லை; ஏனெனில் மனுஷனுக்குள் என்ன இருந்ததென்று அவரே அறிந்திருந்தார். யோ. 2, 24. 25.

வேறொருவனுக்கு ஆவிகளின் வித்தியாசங்களை நிதானிக்குதலும். 1 கொரி. 12, 10.

---

எல்லாரையும் பூரணமாயறிந்த அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, எல்லாருடைய இருதயமும் உமக்கு முன்பாகத் திறந்த புஸ்த

கம் போலிருக்கிறதே. நானும் ஆவிகளின் வித்தியாசங்களை நிதானித்து, மனுஷனுக்குள்ளிருப்பது என்னவென்று அறிந்துகொள்வதற்காக உமது மாசற்ற பரிசுத்தத்திலும், உள்ளான அன்பிலும் எனக்குப் பங்களிக்க உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவரையிலும் என் ஊழியத்தில் அடிக்கடி தவறிப்போனதினால் கெடுதி விளைவித்திருக்கிற எனக்கு ஒத்தாசை செய்து ஆத்மாக்களின் இரகசியங்களை அறிந்துகொள்ள என் கண்களைத் திறந்தருளும். அன்புள்ள கர்த்தாவே, எனக்கு ஒத்தாசை செய்யும். என்னை நான் அறிந்தமட்டில் புதிதான காரியங்களை அறிய வேண்டுமென்கிற ஆசையினாலுமல்ல, நான் என் பார்வையிலும் பிறருடைய பார்வையிலும் பெரியவனாய்த் தோன்ற வேண்டுமென்கிற எண்ணத்திலுமல்ல, உமது சுவிசேஷத்துக்காக நன்றாய் உழைக்கவும் என் சபைக்கு அதிகப் பிரயோஜனமுள்ளவனாய் விளங்கவுமே இப்படி ஜெபிக்கிறேன். நீர் மனுஷருக்கு முன் உம்மை மறைத்து, அவர்களுடனே இணங்காதிருந்தது போல் நானும் என்னைத் தற்காத்துக்கொள்ளக் கூடும்படிக்கு ஆவிகளின் வித்தியாசங்களை நிதானிக்கவும் பரிசுத்த அறிவோடு மனுஷர்களை அறியவும் உமது ஆவியினால் என்னைப் போதிவியும். நான் அவர்களிடம் நெருங்கி வந்து, நீர் எப்படி எல்லாருக்கும் ஒத்தாசை செய்து எல்லாரையும் இரட்சிக்கக் கூடியவராயிருந்தீரோ, அவ்வாறே என் சபையிலே ஜீவனோடும் உமது வார்த்தையின் இரட்சண்ய வல்லமையோடும் நன்றாய் உதவி செய்வதற்கு அவ்வறிவை எனக்குப் பூரணமாய் தாரும். ஆமேன்.

---

ஒரு சரியான மேய்ப்பனுக்கு மனுஷரை அறியும் அறிவு மிகவும் அவசியம். அவன் அதை எப்படி அடையக் கூடும்? நீ மற்றவர்களை அறிந்துகொள்ள வேண்டுமானால் உன்னையே அறிந்துகொள் என்னும் முதுமொழி சரியான வார்த்தை. தன் இருதயத்திலிருக்கும் கெடுதியை உண்மையாகவும் பாரபட்சமின்றியும் கண்டறிந்து கொண்டு, அதை மறைத்துத் தன்னை மோசம் போக்காமலிருக்கிறவன் மற்றவர்களிடத்திலும் பாவத்தின் மோசமான வழிகளை அனேகமாய் கண்டுணருவான். தேவகிருபை தன்னுள்ளத்திலே வேலை செய்ய இடங்கொடுக்கிறவனே வர வர மற்றவர்களிடத்திலும் தேவ கிருபையின் வழிகளைக் காண்பான். ஆயினும் மனுஷரைச் சரியாய் அறிந்துகொள்வதும் சரியான மேய்ப்பஞானம் அடைவதுமாகிய இவ்விஷயத்தில் ஒரு பெரிய மோசமுமுண்டு. அதென்னவெனில் எல்லாரையும் ஒரே அளவுகோலால் ஒரு புறம்பான போங்கிலே நிதானித்து, தன் சொந்த மனோபாவனைக்கு அவர்கள் குறைவாய்த் தோன்றுகையில் அதிருப்தியடைவதுந்தான்.

மேலும் பரிசுத்த தேவவசனம் மனுஷசுபாவத்தின் உள்ளான அந்தரங்கங்களை வெளியாக்கி, மனுஷர் பாவத்திற்கும் கிருபைக்கும் இடங்கொடுக்கும் பலவித நிலைகளைத் தெளிவாய்க் காட்டுகிறபடியால் அதுவே மனுஷர் அறிய உதவும் சரியான அளவுகோல் என்பது சரி. ஆகையால் மனுஷரைக் குணமாக்கும்படி நீ அவர்களை அறிய விரும்பினுல், மனுஷசுபாவத்தை முழுவதும் அறிந்து அவர்களைக் குணப்படுத்தக் கூடிய அவருடைய வசனத்தில் நீ அமிழ்ந்திப்போவாயாக.

மனுஷரை அறிந்துகொள்ளுவதற்கு அவர்களோடு நெருங்கிப் பழகவும் வேண்டுமென்று சொல்லுவார்கள். இதின் சம்பந்தமாக நன்ருய் கவனிக்க வேண்டியது என்ன வென்ருல், அனேக மனுஷரோடு அற்பக் காரியங்களில் ஒன்று கூடி அவர்களோடு மேற் பூச்சான சம்பந்தம் வைப்பது மனுஷரைப் பற்றிய சரியான அறிவை அதிகமாக்காமல் அதைக் கெடுத்துவிடக் கூடும் என்பதே. இதற்கு மாருகச் சிலரோடு மாத்திரம் பலமும் ஆழ்ந்ததுமான சகவாசம் வைத்து அவர்களை ஆவிக்குரிய சொந்தக்காரராக்கிக்கொள்ள வேண்டும்.

அதின் மூலமாய் ஒரு மேய்ப்பனுக்கிருக்க வேண்டிய மனுஷரைப்பற்றிய அறிவின் உள்ளான இரகசியத்திற்கு வரலாம். தேவ ஆவியினுலும் அனலான அன்பினுலும் நாம் பரிசுத்தமாவதே இவ்வறிவுக்கு முக்கிய ஆதாரம். நாம் நித்திய மோட்ச பாக்கியத்துக்குள் பிரவேசித்துப் பரிசுத்தத்திலும் அன்பிலும் பூரண நிலையை அடையும்போது, ஒருவரை ஒருவர் யாதொரு குறைவுமின்றி இருதயத்தின் ஆழத்தின் பரியந்தமும் அறிந்துகொள்வோம். ஒரு மனுஷனைக் குறித்து ஒருவன் சாட்சி கொடுக்க அவருக்குத் தேவையாயிருந்ததில்லை; ஏனெனில் மனுஷனுக்குள் என்ன இருந்ததென்று அவரே அறிந்திருந்தாரென்று நமது கர்த்தராகிய இயேசுவைப் பற்றிச் சொல்லப்படும் வார்த்தைகள், அவர் ஊழியக்காரன் ரூபெடுக்கையில் அவர் கழற்றிப்போட்ட தெய்வீக சர்வ ஞானத்தைக் குறிக்காமல், தமது பரிசுத்தத்தாலும் உள்ளான அன்பினுலும் அவர் மனுஷ இருதயத்தின் ஆழத்தை இயற்கையாய் அறிந்துகொண்ட அவருடைய பூரண மனுஷீகத் தன்மையைக் குறிக்கும். ஒரு குரு படிப்படியாய் இதற்கொத்த தன்மையை அடைய வேண்டும். அவன் சத்தியத்தின் ஆவியானவருடைய பாடசாலையில் படித்து கர்த்தருக்கென்று மனுஷ ஆத்மாக்களைக் கரிசனமான அன்போடு தேடும்போது அனுபோகத்தினுலும் படிப்பினுலும் உறுதிப்பட்ட மனுஷ சுபாவ அறிவை அடைவான். அப்படிப்பட்ட அறிவை சரியான அளவாய் அடைந்தவன் பற்பல விஷயங்களில் புத்திக் குழம்பிநிற்கிற சில மனேசாஸ்திரப் பண்டிதரைவிட புத்தி நிதானமாயிருப்பான்.

ஆத்மவிசாரணை செய்யும் பிரிய சகோதரனே, நாம் நம்முடைய ஆத்மத்தைக் கிறிஸ்துவின் அன்பினால் இன்னம் நிரப்ப விரும்புகிறோமல்லவா? அது நம்மைச் சந்தோஷமுள்ளவர்களும், தைரியசாலிகளும், கிரியையில் பெருகினவர்களுமாக்குகிறது. அது ஒரு மனுஷனுடைய சரியான நிலைமையை நாம் அறிந்துகொள்ளவும், அதற்கு ஏற்ற உதவியை நாம் அவனுக்குச் செய்யவும் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கும். அன்பினால் ஏவப்பட்டு ஒரு மனுஷனோடு சகவாசம் பண்ணுகிற எவனும் அவனை வசப்படுத்தி நடத்தக்கூடும்.

---

**37.** உங்களில் நற்கிரியையைத் துவக்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் மட்டாக முடிய நடத்திவருவார் என்கிறதையே நம்பியிருக்கிறேன். என் கட்டுகளிலும், நான் சுவிசேஷத்துக்காக உத்தரவு சொல்வி அதைத் திடப்படுத்துகிறதிலும், நீங்கள் அனைவரும் என்னோடே கூடக் கிருபையில் ஐக்கியமாயிருக்கிறவர்களென்று உங்களை நான் என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிற படியினாலே இப்படி உங்களெல்லாரையுங் குறித்து நினைக்கிறது எனக்கு நியாயமாயிருக்கிறது. பிலி. 1, 6 மு.

சிநேகம் எல்லாவற்றையும் ஒத்துக்கொள்ளுகிறது, எல்லாவற்றையும் நம்புகிறது, எல்லாவற்றையும் சகிக்கிறது. 1 கொரி. 13, 7.

---

கர்த்தராகிய இயேசுவே, ஒரு சிறு கடுகுவிதையை அற்பமும் எளியதுமான நிலத்தில் விதைத்து, அதில் ஆகாசத்தின் பறவைகள் வந்தடையத் தக்கதான மரமாகுமென்று காத்திருந்த தேவரீர் எவ்வளவோ நம்பிக்கையோடு வேலைசெய்யக் கூடியவராயிருந்தீர்! நீர் மனுஷ ஆத்மாக்களிடம் மிகுந்த நம்பிக்கையோடு உழைத்து உமது சீஷர் உம்மைக் கொண்டு அடைய வேண்டிய பெரிய இலக்கின் நிமித்தம் நீர் அவர்களுடைய மந்தபுத்தியைக் கவனிக்காமல் அவர்களைப் பூரண அன்போடு ஆயத்தப்படுத்தினீர். எங்களுடைய நம்பிக்கையாயிருக்கிற தேவரீர், இந்த உம்முடைய திரு ஊழியத்தில் நாங்களும் சாமர்த்தியராகும்பொருட்டு நம்பிக்கையுடையவர்களாகும் வித்தையை எங்களுக்குப் போதிவியும். நாங்கள் உலகத்திலுள்ள உமது சபையில் நம்பிக்கையோடு உழைப்பதற்குப் பதிலாக அதன் கேவலமான நிலைமையைப் பார்த்து அடிக்கடி மனச்சோர்வடைந்து முறையிடவும் குற்றஞ்சாட்டவும் மனதுள்ளவர்களாயிருந்தோமென்று வெட்கத்தோடு அறிக்கையிட வேண்டியவர்களாயிருக்கிறோம். கர்த்தாவே, நாங்கள் அதனால் உமது பரிசுத்த நாமத்தையும் உமது வல்லமையுள்ள வார்த்தையையும் கேவலமாக்குகிறோமென்று உணர்ந்து, எங்கள் விசுவாசம் உலகத்தை ஜெயிக்கத்தக்க பலமுள்ளதல்ல என்றும் அறிக்கையிட்டு

மனந்தளர்ந்திருக்கையில், நீர் எங்களை இந்தப் பள்ளத்தாக்கிலிருந்து சந்தோஷத்துக்கும் நம்பிக்கைக்கும் கொண்டுவந்து சேர்த்தருளும். இந்தக் கஷ்டம் நிறைந்த காலத்தில் நாங்கள் உமது திருச்சபையின் ஜீவனையும் மகிமையையும் காண எங்கள் கண்களைத் திறந்தருளும். நீர் நட்ட மரம் வெகு பலமாய் வளர்வதையும் அதின் கிளைகள் உலகமெங்கும் ஓங்கிப் பரம்புவதையும் நாங்கள் காணக் கிருபை செய்யும். நீர் எங்கள் வாயில் கொடுத்த ஜீவவார்த்தையில் நம்பிக்கை வைத்து உமது சபையின் ஊழியரில் ஒவ்வொருவரும் தைரியத்தோடும், நம்பிக்கையோடும், மனுஷர் மேல் வைக்கும் அன்போடும் இவ்வூழியத்தைச் செய்யத் துணைபுரியும். நீர் எங்கள் நம்பிக்கைக்கு ஒப்புக்கொடுத்த ஒவ்வொரு ஆத்மாவைப் பற்றியும் நம்பிக்கையுள்ளவர்களாய், யாவருக்கும் உதவி செய்யும்படி சுறுசுறுப்பும் சாமர்த்தியமுமாய் உழைக்க ஒத்தாசை செய்யும். கர்த்தாவே, ஜெயம் உம்முடையதே; உண்மை அழியாது, நன்மை ஒழியாது. சாத்தானே தோல்வியடைவான். பொய்அழியும், பொல்லாப்பு ஒழியும். இப்பூமியில் நீர் இன்னும் பெரிய ஜெயமடைந்து, உமது தீர்க்கதரிசன வார்த்தைகளின்படிஉமது சபைக்கு முன் ஒருபோதுமிராத வண்ணம் பூத்தோங்கும் காலங்களையும் ஈவாகக் கட்டளையிடுவீர். கடைசித் துன்பத்துக்குப் பின்னும் உமது மகிமையின் ராஜ்யத்தை வெளிப்படுத்தி, உமது சபையின் ஏக்கத்தை ஒப்பில்லாத வண்ணம் நிறைவேற்றுவீர். ஆசீர்வதிக்கப்பட்ட மனுஷ குமாரனே, தேவமைந்தனே, நீர் பிதாவோடும் பரிசுத்தாவியோடும் என்றென்றைக்கும் பிழைத்து ஆண்டுகொண்டிருக்கிறீர். ஆமேன்.

---

காலத்தின் பொல்லாப்பு மென்மேலும் அதிகரிக்கிறதென்றும், இக்காலத்தில் விளங்கும் பயங்கரமான அவிசுவாசம், உதட்டுக் கிறிஸ்துமார்க்கம், வழக்கக் கிறிஸ்துமார்க்கம், பிசாசு உலகத்திலும் ஆத்மாக்களுக்குள்ளும் மூட்டி விட்டிருக்கும் துன்மார்க்கமாகிய அவியாத அக்கினியைப் பற்றி ஒன்றும் அறியாமல், எல்லாம் தானாய் முன்னேறிவருகிறது என்று உலகத்தார் வீணாய் எண்ணிக்கொண்டு நம்புகிறதை பார்க்கையில், இவ்வித பொல்லாப்பு அதிகமாய்ப் பரம்புகிறதென்றும், துன்நாட்கள் நெருங்குகிறதென்றும் அங்கலாய்த்துப் பேசுவது கிறிஸ்தவனுக்கு ஏற்ற காரியம் போல் நமக்கு அடிக்கடி தோன்றுகிறது.

முன் சொன்னவைகளைப் பற்றித் துக்கத்தோடு பேசுவது மெய்யாகவே கிறிஸ்தவனுக்கு இயற்கை. ஆனால் இந்த இயற்கையான எண்ணங்களைப் பார்க்கிலும் அதிகமாய்க் கிறிஸ்தவனுக்கு ஏற்றகாரி

யம் ஒன்று உண்டு. அது யாதெனில் உலகத்தின் நிலைமையையும் ஆத்மாக்களின் நிலைமையையும் அனுபவத்தால் நன்றாய் அறிந்தும் அவநம்பிக்கைக்குள்ளாகாமல், ஆவியின் அதிசயத்தால் சபையில் உண்டாகக் கூடிய உயிர்ப்பை எதிர்பார்த்திருக்கும் நம்பிக்கையே. இது மனுஷசக்திக்கு மிஞ்சின அற்பவிசுவாசமும் தற்சிநேகமுமுள்ள இருதயத்தைப் புதுப்பிக்கும் பரிசுத்தாவியின் வேலையே. பரிசுத்த ஆவியின் வல்லமையை அநுபவித்து மனுஷரை நேசிக்கும் அன்பினால் நிறைந்தவன் எவனும் அந்த ஆவியானவர் மற்றவர்களையும் சத்தியத்திற்கென்று ஆதாயப்படுத்தவும் அவர்களை அதில் காக்கவும் பாக்கியமான வழியில் நடத்தவும் கூடும் என்பதையும் நம்புவான்.

பவுல் பிலிப்பியிலுள்ள சபையின் மேல் மிதமிஞ்சின நம்பிக்கை வைத்திருந்ததாகத் தோன்றுகிறது. நமது சபையைக் குறித்துத் தாழ்ந்த விதமாய் நினைக்கவும் பேசவும் வழக்கப்பட்டிருக்கிற நாம் இவ்விஷயத்தில் அவனைக் குறித்து ஆச்சரியப்பட வேண்டும். இயேசு கிறிஸ்து அவர்களுக்குள் துவக்கின நற்கிரியை அவர் நாள் மட்டாக முடிய நடக்கும் என்கிற பூரண நிச்சயம் உடையவனாய் இருந்தான். அப்படி எண்ணினது தம்முடைய கடமை என்றும் அவன் சொன்னான். அப்படிச் சொன்னது வெறும் பேச்சு மாத்திரமா? முந்த அவனுடைய அவ்வளவு அசாதாரணமான நம்பிக்கைக்கு ஆதாரமென்னவென்று பார்த்து, அந்த ஆதாரத்தின்மேல் நாமும் நம்பிக்கை வைக்கப் படித்துக் கொள்வோமானால் நல்லது. ஆண்டவர் மேல் அவன் வைத்திருந்த நம்பிக்கையே அவனை அவ்வளவு நிச்சயமுள்ளவனாக்கிற்று. துவக்கின அவரே அதை முடிய நடத்துவார் என்கிற நன்னம்பிக்கை அது. சபையின் மேல் அவனுக்கிருந்த அன்பு அவனுடைய நம்பிக்கையை ஒரு கடமையாக்கிற்று; "உங்களை நான் என் இருதயத்தில் தரித்துக்கொண்டிருக்கிறபடியினாலே, இப்படி உங்கள் எல்லாரையுங் குறித்து நினைக்கிறது எனக்கு நியாயமாயிருக்கிறது" என்று அவன் சொல்லுகிறான்.

எல்லாச் சபைகளும் பிலிப்பி சபையைப் போன்றவையல்ல. ஒரு சபையிலே: எங்கே பார்த்தாலும் ஆவிக்குரிய காரியங்களில் நிர்விசாரமும், தங்கள் ஜீவியத்தில் சுய திருப்தி, வழக்கக் கிறிஸ்துமார்க்கம் முதலியவற்றைக் காணும்போது ஒரு குருவுக்கு மனவேதனையும் சோர்வும் எப்படி உண்டாகாமலிருக்கக் கூடும்? இவ்வித போராட்டங்களிலே நிமிர்ந்து நின்று, விடிவெள்ளி உதிக்குமட்டும் மன உறுதியாயிருக்க முடியாத குருவை எளிதில் குற்றமாய் நிர்ணயிப்பது அறியாமையே. இதற்கு மாறாக நமது நாட்டிலே அநேக கஷ்டங்களின் நடுவிலே உழைக்கிற பல குருமாருக்காகவும் நமது முழு

இருதயத்தாலும் கடவுளை நோக்கி ஜெபிப்பது நியாயம். நம்மால் இயன்றமட்டும் அவர்கள் உள்ளங்களைச் சந்தோஷப்படுத்தி அவருடைய கைகளைப் பலப்படுத்துவது நமது மேல் விழுந்த கடன். அந்த குருமார் இன்னம் தங்கள் நம்பிக்கையை விட்டுவிடாதிருக்க அவர்களுக்கு ஜெப உதவி செய்யுங்கள். ஏனெனில் அப்போஸ்தலன் சொல்லுகிற அதே காரியங்கள் அவர்களிடத்திலும் உண்டு. பராபரன் அவர்களுடைய சபையிலும் ஒரு நற்கிரியையை ஆரம்பித்திருக்கிறார். அவர்களும் தங்களுடைய போங்கிலே தங்களுடைய சபையைத் தங்கள் இருதயத்தில் சுமக்கிறார்கள். அவர்கள் தங்கள் நம்பிக்கையை விட்டுவிடாதிருக்க அவர்களைப் பலப்படுத்துங்கள். ஒரு போதும் மோசம் போக்காத சத்திய வேதம்: "நம்பிக்கை வெட்கமடையாது" என்று சொல்லுகிறது.

பெரிய பவுல் அப்போஸ்தலன்முதல் தற்காலத்தில் எல்லாரிலும் அற்பமான கிராமகுரு வரையிலுமுள்ளவர்களில், விசுவாசத்தாலும் சிநேகத்தாலும் பிறந்த அந்த நம்பிக்கை யாருக்குண்டோ அவர்களே கர்த்தருடைய ராஜ்யத்துக்குப் பிரயோசனமான ஊழியத்தைச் செய்தவர்களாவார்கள். யோசனையும் புத்தியுமுள்ளவர்கள் இந்த நம்பிக்கையைப் புத்திக்கு விரோதமும் மிதமிஞ்சினதுமான நம்பிக்கை என்பது கவனித்ததில்லை. நம்பிக்கையில்லாத உலகம் அதினால் ஆச்சரியப்பட்டு அவர்களைப்பற்றிக் கேள்வி கேட்கவும் கவனிப்புள்ளவர்களாயிருக்கவும் ஆரம்பித்தது. அவர்கள் நம்பிக்கை அவர்களைச் சுற்றிலும் தீயைப்போல் பற்றி எரிந்து அவர்களுக்கு உடன்ஊழியர் உண்டாக இடம்பண்ணிற்று. அவர்கள் நம்பிக்கை அவர்களுடைய வார்த்தைகளுக்கு வழியை ஆயத்தம் பண்ணிற்று. பவுல் விசேஷித்த நம்பிக்கையோடு தன் நிருபத்தைத் துவக்கினதிற்குப் பின் பிலிப்பியருக்குச் சொல்ல வேண்டியதெல்லாவற்றையும் சொல்லக் கூடியதாயிற்று.

அந்த நம்பிக்கை இல்லாமல் புலம்புவதும் முறுமுறுப்பதுமே அதிக பலவீனமான கிறிஸ்தவ ஜீவியத்துக்கு அடையாளம்.

பாவத்தில் விழுந்த ஒரு ஆயக்காரனோடும் பாவியோடும் நீ பேசின பின்பு சமயாசமயங்களில் அவனைப் பார்த்து: உன்னைப் பற்றி நாங்கள் நம்பிக்கையோடிருக்கிறோம், உன்னிடம் நாங்கள் அதிகம் எதிர்பார்க்கிறோம், பரமண்டலங்களிலிருக்கும் கடவுளும், அவருடைய பரிசுத்த தூதரும், பூமியிலுள்ள அவரது சபையும் அதின் ஊழியனாகிய நானும் உன்னைப்பற்றி நல்ல நம்பிக்கையோடிருக்கிறோம், நாங்கள் உன்னிடம் அதிகம் எதிர்பார்க்கிறோம் என்று சொல்லு.

# VII. பணி.

**38.** *நாங்கள் சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். 1 கொரி. 1, 23.*

*எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவி தங்களுக்கு விளம்பக்கொடுத்தபடி மறுபாஷைகளிலே பேசத் துவக்கினார்கள். அப். 2, 4.*

---

கர்த்தாவே, எனக்கு இருக்கிற அறிவை நான் மனத்தாழ்மையோடு என் சபையின் ஊன்றக்கட்டுதலுக்கென்று உபயோகிப்பதற்கு எனக்கு விவேகமான புத்தியை இரக்கமாய்த் தாரும். நான் உப்பிப்போகிறவனாய் என்னை என் சகோதாருக்கு மேலானவனுக்காதபடி நீர் என்னை ஒரு சாந்தமும் விவேகமுமுள்ள நாவலனுக்கும். நான் என் வசனத்தினாலும் என்னுடைய முன்மாதிரியினாலும் நல்லோருக்கு அவர்கள் இன்னம் அதிக நல்லோராக வேண்டுமென்று புத்திமதி கூறும்படியாகவும் மாறுபாடான வழியில் நடக்கிறவர்களை உமது செம்மையான பாதைக்குத் திருப்பியழைக்கும்படியாகவும் நீர் ஊன்றக்கட்டும் வார்த்தைகளையும் மெய்யாய் ஆற்றி தேற்றக்கூடிய பேச்சையும், நன்றாய்ப் புத்திசொல்லும் சொற்களையும் உம்முடைய ஆவியானவரைக் கொண்டு எனக்கு அளிக்க வேண்டுமென்று உம்மைக் கெஞ்சிக்கேட்கிறேன். தேவரீர் உமது அடியானுக்குக் கொடுத்த வார்த்தைகள் கேட்கிறவர்களுடைய மனதில் பாயும் கூர்மையுள்ள ஈட்டிகளாகவும், அதில் தேவபயத்தின் நெருப்பையும் அன்பின் அனலான சுவாலையையும் எரியப்பண்ணும் அம்புகளாகவும் விளங்க அருள்புரிவீராக (பிரசங்கத்துக்கு முன் அம்புரோசியு (Ambrosius) செய்துவந்த ஜெபம்).

கர்த்தாவாகிய கடவுளே, நீர் என்னை உமது சபையிலே ஒரு கண்காணியும் மேய்ப்பனுமாக நியமித்தீர். இந்த பெரிதும் பாரமுமான வேலையைச் சரியாய் நடத்த நான் எவ்வளவு சாமர்த்தியக் குறைவுள்ளவனென்பதை நீர் பார்க்கிறீர். உமது ஆலோசனை எனக்கு இல்லாதிருந்தால், அதை ஏற்சனவே நாசமாக்கிவிட்டிருப்பேன். ஆதலால் நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். நான் என் வாயையும், நாவையும் இருதயத்தையும், அதற்கே திருப்புவேன், நான் ஜனத்தைப் போதிப்பேன், நான் உமது வார்த்தையையே எப்போதும் கற்று, அதிலே தரித்து, அதைச் சுறுசுறுப்பாய்த் தியானிப்பேன். என்னை உமது ஊழியத்திற்கான கருவியாய் உபயோகித்தருளும், என்னை மாத்திரம் கைவிடாதேயும். நான் தனித்திருப்பேனானால் இலேசாய்க் காரியத்தைக் கெடுத்துப் போடுவேன் (Luther).

அன்புள்ள கர்த்தராகிய கடவுளே, உமது சுவிசேஷத்திற்காக ஊழியம் செய்ய எங்களை அழைத்திருக்கிறீரே; சிலுவையிலறையுண்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாங்களெல்லோரும் ஒரே வாயினாலே பிரசங்கிக்கவும், இந்தப் பிரசங்கமே ஞானஸ்நானம் பெற்றவர்கள் கூடிவருகிற கோயில்களெங்கும் அவர்களுடைய செவிகளிலும் இருதயத்திலும் தொனிக்க எங்களெல்லாருக்கும் ஒரே நாவைக் கொடுத்தருளும். நீர் எங்களுக்குக் கொடுத்த கிருபையின் அளவுக்குத் தக்கதாகவும், நீர் இயற்கையாய் எங்களுக்குத் தந்த வரங்களுக்குத் தகுந்த வண்ணமாகவும் புதிய நாவை ஒவ்வொருவருக்கும் தந்தருளும். நாங்கள் உம்முடைய நித்திய சுவிசேஷத்தை எங்களுக்குப் பழையதாய்ப் போனதாகத் தோன்றும் போதனையாக அல்ல, ஆத்மாக்களுக்குப் புதிதும், உற்சாகத்தை யுண்டாக்கத்தக்கதுமான சத்தியமாகப் பிரசங்கிக்க எங்கள் நாவைப் பரிசுத்தமாக்கியருளும். ஆமேன்.

---

கேட்போருடைய கண்களுக்கு முன்பாகக் கிறிஸ்துவை அவருடைய பரிசுத்தத்திலும், மகிமையிலும், அன்பிலும் வரைந்து விபரிப்பதே பிரசங்கமாகும். கிறிஸ்து சிலுவையின் மரணபரியந்தமும் தம்மைத் தாழ்த்தின போது எவ்வளவு பரிசுத்தமும் மகிமையும் அன்புமுள்ளவராயிருந்தாரென்பதும், தமது பிதாவின் வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டு ஜீவனுள்ளவராய்த் தமது சபையில் எப்படி பிரசன்னமாயிருக்கிறார் என்பதும் அதில் காட்டப்பட வேண்டும். தமது ஆவியின் வேலையைக் கிறிஸ்து ஒரே வார்த்தையில் அடக்கி, "அவர் என்னை மகிமைப்படுத்துவார்" என்கிறார் (யோ. 16, 14). தேவாவியானவர் வேலை செய்கிற பிரசங்கத்தின் நோக்கத்தை எடுத்துக்காட்டியிருக்கிறார். அவருடைய மகிமையைக் காட்டுவதே பிரசங்கத்தின் நோக்கம். இந்த அதிசயமான மகிமையை இவ்வார்த்தையினாலே உலகம் அறிந்துகொள்ளாமல் அவரை எப்போதும் புதிதாய்ச் சிலுவையிலறைகிறது (1 கொரி. 2, 8). நேர்மையானவர்களோ இந்த வெளிப்படுத்தலின் மூலமாய் விசுவாசத்துக்கு வருகிறார்கள். இதைக் குறித்து யோவான் கிருபையும் உண்மையும் நிறைந்த அவருடைய மகிமையைக் கண்டோம் என்று வணக்கத்தோடு சொல்லுகிறான். நீ உன் பிரசங்கத்தில் அதிகமாய் விசுவாசத்தையும், அதின் தடைகளையும், போராட்டங்களையும், அடையாளங்களையும் பற்றி எவ்வளவாய்ப் பேசியும் கிறிஸ்துவினுடைய மகிமையை வெளிப்படுத்தாதிருந்தால் அது பலனற்றுப்போகும்; ஏனெனில் இந்த மகிமையின் வெளிப்பாடுதானே விசுவாசத்தை உண்டாக்கும்.

ஒரு குருவைக் குறித்துச் சொல்லக் கூடிய சிறந்த காரியம் யாதெனில்: அவன் கிறிஸ்துவின் படத்தைச் சரியாய் வரைகிறான் என்பதே.

நீ கெட்டுப்போனவன்; கர்த்தராகிய கிறிஸ்துவை விசுவாசி; அப்போது இரட்சிக்கப்படுவாய் என்கிற ஒரு பிரசங்கப்போங்கு அதிகமாய் எங்கும் வழங்கப்படுகிறது. இதின் ஒவ்வொரு பங்கும் சத்தியமே; கிறிஸ்துவுக்காகக் கொடுக்கும் சாட்சிக்கு ஒவ்வொன்றும் இன்றியமையாததுதான். ஆயினும் இந்தப் போங்கில் செய்யப்படும் பிரசங்கம் பூரணமாகாததும், சாரமும் பலமுமற்ற கிறிஸ்தவ விசுவாசத்தை உண்டாக்குவதுமாயிருக்கலாம். பிரசங்கி கெட்டுப்போன நம் நிலையை விசுவாசத்துக்கு முக்கிய முகாந்தரமாக்குகிற போதெல்லாம் ஏற்படும் பலன் இதுதான். இப்போங்கின்படி மனுஷன் தன் நிமித்தமாகவே அதாவது ஆக்கினைத் தீர்ப்புக்குத் தப்புவித்துக்கொள்ளவே கிறிஸ்துவை விசுவாசிக்கிறான். இத்தகைய விசுவாசம் ஓர் விதமாக ஒப்புக்கொள்ளக் கூடியதாயினும், இது காரியத்தின் உட்பொருளும் தன்மையும் நடுநாயகமுமல்ல. கிருபையும் உண்மையும் நிறைந்த, பிதாவுக்கு ஒரே பேறானவரின் மகிமையிலுள்ள கிறிஸ்துவே நமது விசுவாசத்தின் ஆதார உட்பொருள். விசுவாசத்தைத் துவக்குகிறவரும் பூர்த்தியாக்குகிறவரும் அவரே. எதிர்க்க முடியாவண்ணம் ஆத்மாக்களைத் தம்மண்டைக்கு அழைத்து, தம்மைத் தவிர ஒரு பொருளையும் விரும்பாதிருக்கும் வண்ணம் அவர்களைத் தம்மண்டை மனப்பூர்வமாய்த் தரித்திருக்கச்செய்கிற அவரே, கிருபையும் உண்மையுமாயிருக்கிறார் என்று ஒப்புக்கொள்வதினால் மாத்திரம், அதாவது அவர் நிமித்தமே, ஒருவன் அவரை விசுவாசித்தால் ஒழிய, அவன் விசுவாசம் விசுவாசமேயல்ல. ஆதலால் பிரசங்கிக்கப்பட வேண்டியவர் கிறிஸ்துவே, வார்த்தையினாலும் ஆவியினாலும் மகிமைப்படுத்தப்பட வேண்டியவர் அவரே. விசுவாசத்துக்கு முக்கிய பொருள் அவர்தான். ஆத்மாக்களை அவர் தமது சொல்லிமுடியாத மகிமையால் தமக்கென்று வசப்படுத்த முடியாதேபோனால் வேறெதனால் முடியும்?

போதுமானதாகப் பயத்தை உண்டாக்கும் வண்ணம் பிரசங்கிக்கிறேனோ என்று நீ அஞ்சுவது நல்ல காரியம். மெய்யான பய பக்தியை உண்டாக்கும் வழி யாதெனில், கிறிஸ்துவை அவருடைய பரிசுத்தத்திலும் மகிமையிலும் அன்பிலும் எல்லாரும் அறிந்துகொள்ளத் தக்கதாகப் பிரசங்கி; அப்போது எல்லாரும் அவரை ஏற்றுக்கொள்ளாமல் போவதே நித்திய கேடாகும் என்று உணர்ந்து பயப்படுவார்கள்.

நாம் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். ஏனெனில் அவர் பஸ்கா ஆடாகச் சிலுவையில் தாழ்த்தப்பட்

டதிலன்றி வேறெங்கும் ஆவிக்குரிய கண்களுக்கு கிறிஸ்துவினுடைய மகிமை தெளிவாய்ப் பிரகாசிக்காது. அதற்கு எதிராக, யூதருக்கு இடறலும் கிரேக்கருக்குப் பைத்தியமுமாகிய அவர் லௌகீகக் கண்களுக்குச் சிலுவையில்தான் அறியப்பட முடியாதவராய் இருக்கிறார். அப்போஸ்தலமார் கிறிஸ்துவின் மகிமையை இலேசாய்க் காட்டும்படி முதலில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள். அதிலிருந்து சிலுவைப்பிரசங்கத்துக்கு வந்தார்கள். கடைசியாக தம் சபையில் பிரசன்னமாயிருக்கிற ஆண்டவரைப் பிரசங்கித்தபோது அவரைச் சிலுவையிலறையுண்டவராகவும் காட்டினார்கள்.

ஒவ்வொரு பிரசங்கியும் தனக்கு இயற்கையாகவும், தான் சொந்தமாக்கிக்கொண்ட தேவகிருபையினாலும் தனக்கேற்பட்ட போங்கின்படி சுவிசேஷத்தைத் தன் இருதயத்தில் அனுபவித்து அதை வெளியிடுவான். அப்படிச் செய்தால்தான் அவனுடைய பிரசங்கம் புதிதாகவும் உற்சாகத்தோடும் அவன் வாயிலிருந்து புறப்படும். ஒரு சபையில் ஆவிக்குரிய ஒரு பலத்த அசைவு உண்டான பிறகு திட்டமான ஒரு பிரசங்கபோங்கும், பிரசங்கபாஷையும் உண்டாகும். அது சீக்கிரமாய்ப் பழையதாகி கேட்போர் மனதைக் கவர்ச்சி செய்ய முடியாததாகும். அப்போங்கு பெரியோர் முறைமையினால் உறுதியாய்ப்போனதினால் பிரசங்கி அதை ஜீரணிக்காமல் உபயோகிக்கும் மோசத்துக்குள்ளாவான். இது பிரசங்கிக்கு அடாதது; மேலும் சுவிசேஷம் பழையதாய்ப்போன ஒரு செய்தியாக, மனுஷருடைய மனதைக் கவராதவிதமாய்ப் பிரசங்கிக்கப்படுவது சுவிசேஷத்தின் உள்ளான தன்மைக்கு விரோதமாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட பிரசங்கி தன் சாதுரியத்தைக் காட்டுவதினாலும் சிறு கதைகளைக் கூடச் சேர்ப்பதினாலும் காரியம் ஆகாது. சுவிசேஷம் பிரசங்கியின் இருதயத்தில் மறுபடியும் பிறந்து ஜீரணிக்கப்படுவதனால் மாத்திரம் ஒரு புதிய நாவையளிக்கும்.

லுத்தரன் சபைகள் தங்கள் உற்பத்தியின் பிரகாரம் அநேகமாய்ப் பவுலின் பேச்சுப்போங்கை அனுசரிப்பார்கள். ஆயினும் அவைகளில் யோவானையும் பேதுருவையும் யாக்கோபையும் போல் பேசுகிறவர்களும் இல்லாதிருந்தால் நலமாயிருக்காது.

சில நல்ல பிரசங்கிகள் சில அல்லது பல தனித்த ஆத்மாக்களை மாத்திரம் ஆதாயப்படுத்தக் கூடிய வண்ணம் பிரசங்கிக்க, வேறு சிலர் தங்கள் பிரசங்கத்தைக் கேட்கிற தனி ஆத்மாக்கள் தேவாராதனையிலும், ஊழியத்திலும் ஒன்றாய் நிலைத்திருக்கிற ஒரு சபை உண்டாகத் தக்கதாகப் பிரசங்கிக்கக் கூடும். இதற்குக் காரணமென்ன?

உனக்கு எப்படிப் பேசப் பிரியமோ, எப்படி நீ நடத்தப்படுகிறாயோ, அப்படியேபேசு. எப்படியாகிலும் நீ கிறிஸ்துவின் மகிமையை

உணர்ந்துகொள்ளப் பிரயாசப்படு. குணப்படுதலின் பிரசங்கியாயிரு; சபையிலுள்ள விசுவாசிகளின் ஊன்றக்கட்டுதலுக்கென்று பிரசங்கி. பவுல், யோவான், பேதுரு, யாக்கோபு என்றவர்களின் பேச்சுப் போங்கை உபயோகி. கிறிஸ்துவின் மகிமையைப் பற்றிக்கொள்ள பிரயாசப்படுகிறவனாய் நீ நடத்தப்படுகிறபடி பிரசங்கி. அதினால் தேவனுடைய சபையில் ஒரு பலன் உண்டாகும்.

---

**39.** *ஒன்றை நான் கர்த்தரிடத்திலே கேட்டேன்; அதையே தேடுவேன்; நான் கர்த்தருடைய இன்பத்தைப் பார்த்து, அவருடைய தெய்வாலயத்தில் ஆராயும்படி நான் என் ஜீவனுள்ள நாள் எல்லாம் கர்த்தருடைய வீட்டிலே தங்குவதைத் தானே. சங். 27, 4.*

*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அன்னியோன்னியத்திலும் அப்பம் பிட்கிறதிலும் செபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அப். 2, 42.*

---

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நீர் இந்த என்னுடைய சபை உம்முடைய அலங்காரமான தேவாராதனையில் உம்மண்டைக் கூடி வரவும், அங்கே அவர்களை உமது பரிசுத்த வார்த்தையினாலும், உமது சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தினாலும் அவர்கள் திருப்தியாகும்படிப் போஷிக்கவும், அவர்களுடைய தாழ்மையான ஸ்தோத்திரப்பலிகளைக் கிருபையாய் ஏற்றுக்கொண்டு அவைகளை ஒரு அருமையான காரியமாக மதிக்கவும் அவர்களை அழைத்திருக்கிறீரே. நான் சபைக்காகவும் எனக்காகவும் வேண்டுதல் செய்கிறேன். ஆவியிலும் உண்மையிலும் எங்கள் தேவாராதனை நடக்கவும், எங்கே இரண்டு பேராவது மூன்று பேராவது உம்முடைய நாமத்திலே கூடியிருக்கிறார்களோ அங்கே நீர் பிரசன்னமாயிருந்து அவர்களை ஆசீர்வதிக்கிறீர் என்பதை அவர்கள் கண்டுணரவுந் தக்கதாக நீர் எங்கள் தேவாராதனையை உமது சத்தியத்தின் ஆவியினாலே நிரப்பியருளும். நாங்கள் திறந்த மனதோடு நித்திய ஜீவனின் வார்த்தைகளைக் கேட்கவும், உமது பரிசுத்த அப்போஸ்தலருடைய போதனையினால் சத்தியத்தில் வளர்ந்துதேறவும் அதிகமதிகமாய்த் துணைசெய்யும். உம்முடைய விலையேறப்பெற்ற சாக்கிரமெந்தில் நாங்கள் உம்மை அனுபவித்து அதில் நீர் சிலுவையில் இட்ட பலியையும் உம்முடைய ஜீவனையும் உமது நற்குணங்களையும் அடைய எங்களுக்கு உதவிபுரியும். அன்புள்ள கர்த்தாவே, உம்மிடமிருந்து எல்லாவற்றையும் பெற்றுக்கொண்ட நாங்கள் குணப்படுதல் என்கிற உப்போடும் ஜெபம் ஸ்தோத்திரம் என்ற தூபவர்க்கத்தோடும் மெய்ப்பாக்கியத்திற்குரிய அறிக்கையாகிய கனியோடும் உம்மால் பிதாவுக்குப் பிரிய

மான பூரண பலியை எங்கள் இருதயங்களிலிருந்து உமக்குக் கொண்டுவர ஒத்தாசைசெய்யும். இப்படியே நீர் எங்களிலும் நாங்கள் உம்மிலுமாக, உமது மூலமாய் நாம் ஒன்றாயிருக்கும் பிரியமான ஐக்கியம் எங்கள் தேவாராதனைகளில் விளங்கும்; அதனால் நாங்கள் இரட்சிப்பின் சந்தோஷத்தையும் வரப்போகிற புது பூமியின் வல்லமையையும் ருசித்து, எங்கள் ஜீவியகாலமெல்லாம் உமது தேவாலயத்திலே உமது மகிமையைப் புகழுவோம்.

கர்த்தாவாகிய கடவுளே, நான் குருவாயிருந்து தேவாராதனை நடத்துகிற இச்சபையைச் சீக்கிரம் ஒரு மெய்யான சபையாக்கும். மிச்சமானவர்கள் வழக்கத்தையொட்டித்தான் கோயிலுக்கு வருகிறதும் பக்தியுள்ளவர்கள் இங்குமங்கும் சிதறியே உட்கார்ந்திருக்கிறதும் எவ்வளவு கேவலம்; கர்த்தாவே, என்மேல் இரங்கி, இது சம்பந்தமான என் குற்றத்தை மன்னியும். என் சபையின் மேலிரங்கி, சபையாரை உம்முடைய இரக்கத்தின்படி புதுப்பியும். உயிரற்றவர்களுக்கு ஜீவன் தாரும். உமது வார்த்தையையும் ஏற்பாடுகளையும் ஒரு நல்ல ஆவியின் ஐக்கியத்தினால் அலங்கரித்தருளும். அறிக்கையிலும் ஸ்தோத்திரத்திலும் ஒரு உயிருள்ள சபையின் சத்தம் அவர்களிடமிருந்து புறப்படுவதாக. எங்கள் தேவாராதனை எங்களுக்குப் புதிய ஆசீர்வாதங்கள் வரும் பரிசுத்த எத்தனமாகக் கிருபைசெய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

---

சங். 27, 4 இன் பிந்தின வார்த்தைகளை லுத்தர்: "கர்த்தருடைய அலங்காரமான தேவாராதனையைப் பார்க்கும்படி" என்று மொழிபெயர்த்திருக்கிறான். நமது தமிழ் மொழிபெயர்ப்பைப் பார்க்கிலும் லுத்தருடைய மொழிபெயர்ப்பு சற்று விரிவானதும் வல்லமையுள்ளதும், மனதை எழுப்பிவிடக் கூடியதுமாயிருக்கிறது. பரிசுத்த தேவாராதனையில் "கர்த்தருடைய இன்பத்தைப்" பார்ப்பது போல வேறெங்கும் அதை அவ்வளவு நேர்த்தியாய்ப் பார்க்க முடியாது. அங்கேதான் தம் வார்த்தைகளிலும் தம் சாக்கிரமெந்துகளிலும் கர்த்தர் ஜீவனுள்ளவராய்ப் பிரசன்னமாயிருக்கிறார். அங்கேதான் அவருடைய சபை ஒரே இருதயத்தோடும் ஒரே நாவோடும் தன் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கூடிவருகிறது.

நமது பாட்டு வானத்துக்கு ஏறி நம்மை ஆண்டவரண்டை உயர்த்தினபோதும், ஆவியினால் பேசுகிற வாயின் மூலமாய்க் கர்த்தருடைய வார்த்தை நம்மண்டை இறங்கிவந்து அவருடைய பலமான அக்கினியோடோ, மெதுவான இரைச்சலோடோ நம்மைத் தொட்டபோதும், கர்த்தருடைய இராப்போசனத்திலே மனுப்

புத்திரரில் மகா அழகானவருடைய சமுகத்தில் ஏகோபிதமான அறிக்கையோடும் துதியோடும் நமது மேல் ஒரே ஆவியின் வல்லமையை உணர்ந்தவர்களாயிருக்கும் போதும் இந்த ஜீவியத்தின் மேன்மையை சில வேளைகளில் ஒருவாறு ருசித்திருப்போம். அதை அனுபோகத்தினாலறியாவிட்டாலும், அதற்காகப் படும் வாஞ்சையாலாகிலும் அறிகிறோமல்லவா? அதற்காக நாம் உட்கருத்தாகவும், வாஞ்சையோடும் ஜெபிக்கிறவர்களாகவும், உழைக்கிறவர்களாகவும், வாஞ்சையோடு எதிர்ப்பார்க்கிறவர்களாகவுமிருந்தால் அதில் நாம் பங்கு பெற மாட்டோமா?

“ஒன்றை நான் கர்த்தரிடத்திலே கேட்டேன். அதையே தேடுவேன். நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய வீட்டிலே தங்குவதைத் தானே” என்னும் வார்த்தை எல்லாருக்கும் முந்தி ஒரு குருவுக்குப் பொருந்தும். அவன் மற்றவர்களைக் கர்த்தருடைய வீட்டிலே நடத்தி அங்குள்ள இன்பமான காரியங்களை அவர்களுக்குக் காட்டப் பிரயாசப்படும்போது எளிதில் தானே பலங்குன்றி, களைத்துப்போய்த் தான் ஒன்றும் பார்க்க முடியாமற் போவதுண்டு. அது சரியல்ல; வீட்டின் தலைவன் அவனல்ல, கர்த்தரே. தேவாராதனை தமது ஊழியருக்கு வெறும் வேலையும் கஷ்டமுமாயிருக்க அவர் விரும்புகிறதில்லை. தம்மோடும் சபையோடும் இருக்கும் ஐக்கியத்திலிருந்துண்டாகும் பரிசுத்த வல்லமைக்கும் அமைதியான ஆத்ம இளைப்பாறுதலுக்கும் அவர் அவனை விலக்கி வைக்கிறதில்லை. அவன் மாத்திரம் அதுக்குத் தன்னை விலக்கிவைக்காதிருப்பானாக!

ஒரு உயிருள்ள மனுஷனுக்கு மூச்சும் நாடியும் இருப்பதுபோல், சபையின் உயிருள்ள நிலைக்கு முந்தினதும் முக்யமுமான காரியம் தேவாராதனை என்பதற்கு நடபடி 2, 41. 42 லடங்கிய வசனங்களே சிறந்த சாட்சியாகும். ஞானஸ்நானத்தினால் சேர்த்துக்கொள்ளப்பட்ட 3000 பேர் கொண்ட ஓர் சபை உண்டானதைப் பற்றி 41-ம் வசனம் பேசினபின், 42-ம் வசனம் இடையில் ஒன்றும் சொல்லாமல், உடனே தேவாராதனையை அதன் முக்கிய பங்குகளுடன் எடுத்துரைக்கிறது.

ஒரு சபையிலே தேவாராதனை சம்பந்தமாகக் காட்டப்படும் நிர்விசாரத்திற்கும் அசட்டைக்கும் ஒருபோதும் சரியான நியாயம் சொல்ல முடியாது. தனி ஆத்மாக்கள் அறைவீட்டிலே செய்யும் தியானம், குடும்ப ஜெபம், பக்திக் கூட்டங்கள் ஊக்கமான ஊழிய முயற்சி முதலிய காரியங்கள் ஒருபோதும் தேவாராதனைக்கு ஈடாகாது. இவ்வித காரியங்களிலிருந்து தனிக் கிறிஸ்தவர்களோ கிறிஸ்தவ சங்கங்களோ உற்பத்தியாகக் கூடுமானாலும் கிறிஸ்தவ சபை அதினால் உண்டாகாது. ஒரு சபைக்கு மூச்சுபோலும், நாடிபோலுமிருக்கும்

காரியங்கள் நான்கு: அப்போஸ்தலருடைய உபதேசம், அந்நியோந்நியம், அப்பம் பிட்குதல், ஜெபம். சபையின் தேவாராதனையில்லாதவர்களுக்கு இந்நான்கு காரியங்களில் சிலதில், திருஷ்டாந்தமாக அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், ஜெபத்திலும் பங்கு பெறலாம். ஆயினும் கிறிஸ்துவின் சபையில் துவக்கமுதற்கொண்டு ஐக்கியத்தின் சிறந்த நன்மையாய் விளங்கின இராப்போசனத்தை இழப்பார்கள். அவர்கள் ஒரு சார்பான அபிப்பிராயங்களுள்ள தங்களுடைய பெரிய அல்லது சிறிய கட்சிகளின் தனிப்போங்கை விட்டுப் பரஸ்பரமாய் ஒருவரை ஒருவர் நெருங்கி ஒரே இருதயமும், ஒரே ஆத்மமுமாக ஊன்றக்கட்டப்படுவதற்கும் திடப்படுத்தப்படுவதற்குமான அந்நியோன்னியத்தை நழுவவிடுவார்கள். அவர்களிடம் முழுக் காரியமுமில்லாதிருக்க, அதற்குரிய பகுதிகளுங் கூட அவர்களிடம் சரியாயிராது. மூச்சும், நாடியும் தடைப்படுவதுபோலாகிவிடுகிறது. ஆதலால் சபையையும், தேவாராதனையையும் விட்டுத் தன்னைப் பிரித்துக்கொண்ட கிறிஸ்தவர்களுடைய ஜீவியம் உள்ளாகவே குறைவுள்ளதும் சுகமற்றதுமாகிவிடுகிறது. இதற்கு மாறாக எங்கே தேவாராதனை அதிமுக்கியமான காரியமாக எண்ணப்படுகிறதோ அங்கே சபைக்குரிய ஜீவியம் ஒழுங்கும், அன்பும், வல்லமையுமுள்ளதாய் வளருகிறது.

தேவாராதனைக்காக ஜனங்களைக் கூட்டிச் சேர்த்து, அதை வல்லமையாகவும், அலங்காரமாகவும் நடத்துவதைவிட முக்கியமான வேலை ஒரு குருவுக்கில்லை. இக்கடமையைச் செய்வதற்கு அவன் முதல்முதல் தன்னையே ஆயத்தப்படுத்த வேண்டும். அவன் படிப்படியாகவும் அதற்குத் தகுதியுள்ளவனாவான்.

---

## 40.

உங்களிடத்திலுள்ள பராபரனுடைய மந்தையை நீங்கள் கண்காணித்து மேயுங்கள். 1 பேது. 5, 2.

நான் அவனவனுக்குக் கண்ணீர்களுடனே புத்திசொல்ல ஓயாதிருந்தேன். அப். 20, 31.

---

அன்புள்ள கர்த்தராகிய கடவுளே, உமது மந்தையை மேய்க்கவும் கவனிக்கவும் நீர் எனக்குக் கட்டளை கொடுத்ததற்காக உம்மை முழுமனதாலும் ஸ்தோத்திரிக்கிறேன். இப்பூமியிலே இதைவிடப் பெரியதும் சந்தோஷம் நிறைந்ததுமான வேலையைக் கண்டுபிடிக்க முடியாதென்று எனக்குத் தெரியும். இவ்வேலையிலே நான் உண்மையுள்ளவனாயிருக்க நீர் எனக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்று என் முழு இருதயத்தாலும் கெஞ்சிக்கேட்கிறேன். இவ்வேலையோ என் சக்திக்கு மிஞ்சின பாரமும் கடினமுமான காரியமாம். கர்த்

தாவே, நான் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தேவாராதனைகளிலும் மாத்திரம் உமது மந்தையைப் புல்லுள்ள ஸ்தலங்களுக்கும் அமர்ந்த தண்ணீர்களண்டைக்கும் நடத்தி அங்கே அவர்களுக்கு இளைப்பாற்றியை உண்டாக்குகிறவனாயிராமல், ஞாயிற்றுக்கிழமையில் அவர்கள் பெற்றுக்கொண்டதை வேலைநாட்களிலும் உலக ஜீவியத்தின் மோசங்கள் சோதனைகளின் நடுவே மனுஷ ஜீவியத்திற்குரிய கடமைகளிலும் கஷ்டங்களிலும் உமது கிறிஸ்தவர்கள் அப்பியாசித்து செய்து முடிக்க அவர்களை ஏவிவிட எனக்குத் துணைசெய்யும். நான் வாரத்தின் ஒரு நாளில் மாத்திரமல்ல மற்ற ஆறு நாட்களிலுங்கூட உமது மந்தைக்கு மேய்ப்பனாய் விளங்க வேண்டுமென்று நீர் விரும்புகிறீர். அதற்கு வேண்டிய அன்பையும் ஞானத்தையும் எனக்குத் தாரும். அதற்குரிய சரியான எத்தனங்களையும் வழிகளையும் எனக்குப் போதியும். என் சபையார்களுடைய வேலைகளிலும் சோதனைகளிலும் அவர்களுக்கு உதவிசெய்து, இக்கட்டை அனுபவிக்கும் சபையின் ஒவ்வொரு அவயவத்திற்கும் நான் ஒரு சரியான ஆத்மவிசாரணைக்காரனாயிருக்க என் இருதயத்தைப் பலப்படுத்தி என் கண்களை விழிப்புள்ளதாக்கும். வேலை எனக்கு மட்டுக்குமிஞ்சினதாயிருக்கிறது, என்றால் தாங்கமுடியவில்லை என்று நினைக்கையில் நான் உணர்ச்சியுள்ள மனச்சாட்சியோடு என்னால் செய்யக் கூடியதையும், நான் செய்ய வேண்டுமென்று நீர் விரும்புவதையும் செய்ய எனக்கு ஒத்தாசை செய்யும். எனக்கு வேண்டிய சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தந்து, நானல்ல உமது குமாரனும் உமது ஆவியுமே மேய்ப்பரும் ஆத்ம விசாரணைக்காரருமாயிருக்கிறார்களென்று அறிந்துகொள்ள எனக்கு உதவிபுரியும். ஆமேன்.

---

கர்த்தருடைய நாளில் தேவாராதனையில் செய்யப்படுவதும் பொதுவான கிறிஸ்தவ ஜீவியத்தில் ஏற்படக் கூடிய தேவைகளில் உதவிசெய்ய விரும்புவதுமான மேய்ப்பவிசாரணை ஒன்றுண்டு. இதையன்றி விசேஷித்த மேய்ப்பவிசாரணை ஒன்றிருக்கிறது. இதின்படி சபைக்கும் அதின் அவயவங்களுக்கும் வாரத்தின் மற்ற நாட்களில் அவர்கள் வேலையிலும் போராட்டங்களிலும் கிறிஸ்தவ ஜீவியத்திலும் சபை ஜீவியத்திலும் உண்டாகும் பற்பலவிதமான சோதனைகளில் குரு உதவியாயிருக்கக் கவலைப்படுவான். இவ்விரண்டு விசாரணைகள் சபையினிமித்தம் ஒன்றுக்கொன்று உதவியாயிருக்க வேண்டும். சபையாரிடம் அவன் செய்யும் வேலை ஆராதனைக்காக, விசேஷமாய்ப் பிரசங்கத்துக்காக உதவும் என்பதைக் கவனிக்க வேண்டியது.

ஒரு பக்கத்தில் விசேஷித்த மேய்ப்பவிசாரணை முழுச்சபையின் சம்பந்தமாயிருக்கிறது; அதன் முழு ஜீவியத்தையும் அதன் ஆவியையும் நடத்தப் பார்க்கிறது. இதின்படி பாவசங்கீர்த்தனம் விவாகம் அடக்கம் சபையின் கண்டனை தண்டனை முதலிய முறைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளில் ஒவ்வொன்றும் மதிப்பு பெற்று ஒழுங்காய் நடந்தால் சபை வெகுவாய்ப் பலப்படக்கூடும். இவைகள் மதிக்கப்படாமல் கெட்டாலோ சபைக்குப் பெருத்த நஷ்டமுண்டாகும். மேலும் சபைக்குள்ளும் புறம்பேயும் இருக்கிற உலகசிந்தையுள்ள பலர் சபையின் முழு ஜீவியத்தையும் எப்போதும் கெடுக்கப் பார்க்கிறார்கள். அத்துடன் பிரிவினைசிந்தையுள்ளவர்களும் கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்களும் தேவாராதனையை அசட்டை பண்ணுகிறவர்களும் உண்டு. அவர்களால் கலகசிந்தையும் இடறலுந்தான் உண்டாகக் கூடும். அவர்கள் சபையாரைத் தங்கள் சார்பாய் இழுக்கப்பார்க்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் மாறாகச் சபையில் வசனத்தை இன்னும் அதிக நிறைவாகப் போதிக்கும் கடமை தற்காலத்தில் விசேஷித்த மேய்ப்பவிசாரணைக்கடுத்தது. அன்றியும் சபைக்குள்ளே ஏழைகள், வியாதிக்காரர், கெட்டுப்போனவர்களுமுண்டு; அவர்களுக்காக ஒரு ஒழுங்கான ஆத்மவிசாரணை அவசியம். மேய்ப்பவிசாரணையைப் பற்றி முன் பல சந்தர்ப்பங்களில் பார்த்தபடி இவ்விஷயங்களிலும் குருவுக்குச் சில சபையாரும் உதவிசெய்ய வேண்டும். சபையிலுள்ள முக்கிய அவயவங்களும் தலைவர்களும் சபையின் நன்மைக்கென்று உற்சாகமாகக் குருவுக்குப் பக்கத்துணையாயிருந்து உதவி செய்வது அவசியம். ஒரு சபைக்கு அளிக்கப்பட்ட வரங்கள் உபயோகத்துக்கு வராதிருந்தால் அச்சபையின் சுகத்துக்குப் பங்கம்.

மறுபக்கத்தில் விசேஷித்த மேய்ப்பவிசாரணை சபையின் தனித்த ஆத்மாக்களிடம் செய்யப்படும். நெருங்கிய அர்த்தத்தில் அதுதான் ஆத்மவிசாரணை. கிறிஸ்துவின் ஐக்கியத்துக்கு முற்றிலும் புறம்பாகி இனி தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ளக்கூடாத கெட்டுப்போய்த் தவறின ஆத்மாக்களுண்டு. அவர்களுக்கு விசேஷித்த உதவி தேவை.

பாவம் துன்பம் தவறிப்போகுதல் என்பவைகள் நம்மெல்லாரிடத்திலும் உண்டு. ஆதலின் எல்லாருக்கும் விசேஷித்த உதவி தேவையில்லையா? ரோமான்சபை அவ்விதமாய் எண்ணிச் சபையின் அவயவங்கள் எல்லாம் கட்டாயமாய்த் தனிப் பாவசங்கீர்த்தனத்தில் பங்கு பெற வேண்டுமென்கிற ஒழுங்கை விசேஷித்த ஆத்மவிசாரணைக்கென்று ஏற்படுத்தியிருக்கிறது. சுவிசேஷசபை தன் தன்மைக்கு இசைவாய் இவ்விஷயத்தை வேறு விதமாய்ப் பார்க்கிறது. கிறிஸ்தவர்களுக்கு ஆத்மாவில் இருக்கக்கூடிய ஒரு சுகமுண்டு. அது

மோக்ஷத்தில் பூரணமாயிருக்கும்; இப்போதோ துவக்க நிலைமையிலிருக்கிறது. அதைக் கிறிஸ்துவின் ஐக்கியத்திலும் அவர் சபையின் ஐக்கியத்திலும் காப்பாற்றிக்கொள்ளலாம். இதின் உறுதிக்கும் வளர்த்திக்கும் ஒரு விசேஷித்த உதவி தேவையில்லை. உதவிசெய்ய எத்தனித்தால் ஒரு வேளை கெடுதி நேரிடலாம். சுகமுள்ளவர்களுக்குக் கிறிஸ்துவிலும் அவருடைய சபையிலும் போதுமான உதவி கிடைக்கும். அவர்கள் சுயாதீனமாய்த் தங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்திப் போராடுவது அவர்களுடைய கிறிஸ்துமார்க்க நிலையின் மேன்மைக்குரியது. அது மாத்திரமல்ல அது அவர்களுக்கும் சபைக்கும் பிரயோசனமுமாகிறது. பொதுவாக ஆத்மவிசாரணையின் நோக்கத்தில் சுவிசேஷ சபைக்கும் ரோமான் சபைக்கும் வித்தியாசமுண்டு. ரோமான் சபையில் குருமார் ஆத்மாக்களைத் தங்களுக்குக் கீழாகக் குழந்தைகளைப்போல் வைத்து நடத்திக் காப்பாற்றப் பார்க்கிறார்கள். சுவிசேஷ சபையிலோ ஆத்மாக்கள் அவ்வித கட்டுப்பாடில்லாமல் ஆண்டவருடைய ஐக்கியத்திலும் அவருடைய சபையின் ஐக்கியத்திலும் திருப்தியடையத் தக்கதாய்க் கிறிஸ்துவுக்குள் சுகமும் சுயாதீனமுமாயிருப்பதே நோக்கம்.

ஒரு குருவின் கண்களுக்கு முன்பாக எவ்வளவு திரளான ஆத்மாக்கள் கடந்துபோகிறார்கள். களைப்போடும், பாவப் பாரத்தோடும், ஏங்கலோடும், நம்பிக்கையோடும், நடுக்கத்தோடும் இலக்கை நோக்கி ஓடுகிறார்கள். எல்லாரும் அந்த இலக்கை நோக்கிக் கடந்து சரீரத்தைக் களைந்துபோட்டு மறைந்துபோகிறார்கள். தேவனுடைய சமூகத்தில் நிற்கப்போகிற அவர்களை நீ பார்க்கிறாய். அவர்கள் உன்னிடத்தில் கொஞ்சம் இளைப்பாறுதல் அடைய உன் ஆத்மத்தை அவர்களுக்கு விரிவாக்கி, உன் வாயைத் திறந்து நித்திய ஜீவனின் வார்த்தைகளை அவர்களுக்குச்சொல்லு. அவைகள் அற்ப ஈவாயினும் அது அவர்களுக்கும் உனக்கும் பிரயோசனமாயிற்று.

"உங்களில் அவனவனுக்குப் புத்தி சொல்ல ஓயாதிருந்தேன்". ஆத்ம விசாரணையின் முக்கியபாகம் புத்திசொல்லுதலே. அதனால் ஆத்ம விசாரணை வல்லமையுள்ள ஒரு எத்தனமாகும். தன் ஆத்ம விசாரணையில் குரு சந்திக்கும் மனுஷர் ஒன்றும் எழுதியிராத வெறும் தாள்கள்போலிருக்கிறவர்களல்ல; ஆண்டவர் ஞானஸ்நானமுதல் அவர்கள் ஜீவியம் முழுவதிலும் அவர்களைப் பலவிதமாய் நடத்தித் தமதுவசனத்தின் போதனையை பலனுள்ள எழுத்துக்களால் அவர்கள் இருதயங்களில் வரைந்து வைத்திருக்கிறார். இருதயங்களில் இப்படி அமர்ந்து கிடக்கிற பழைய வசனத்தோடு இப்போது புதிதாய்க் கிடைக்கும் வசனம் சேர்ந்து அவர்கள் சுகமாகுதலுக்குப் பிரயோச

னமாய்ப் பலிக்கவேண்டும். ஆத்மவியாதிகளை நீக்கக் கூடுமென்றே ஆத்மவிசாரணைக்காரன் புத்திசொல்ல ஓயாதிருப்பான்.

---

**41.** என் ஆடுகளை மேய். யோ. 21, 15.

வாலிபரே, பொல்லாங்களை வென்றீர்களென்று உங்களுக்கு எழுது கிறேன். 1 யோ. 2, 13.

---

கர்த்தாவாகிய கடவுளே, உம்மண்டைக்குச் சேர்ந்துக்கொள்ளும் பிள்ளைகளின் மூலமாய் உம்முடைய சபையை எக்காலத்திலும் புதுப்பித்து அவர்களுக்கு இளமைப்பருவத்தையும் பலத்தையும் அளிக்கிறீரே. ஞானஸ்நானத்தில் நான் அவர்களது பாலக முகத்தில் விழித்ததிலிருந்து அவர்கள் பரிசுத்த இராப்போசனவிருந்தில் மூழங் காற்படியிட்டுத் தேறின சபையின் அவயவங்களுடைய தொகையில் அவர்கள் சேரத் தகுதியுள்ளவர்களாகும் வரையில் நான் மெய்யன் போடு அவர்களைத் தொடர்ந்து வர எனக்கு உதவிசெய்யும். மறுபிறப்பின் சாக்கிரமெந்து எனக்கும் உமது கிறிஸ்தவர்களெல்லாருக்கும் பெரிதும் அருமையுமாயிருக்கவும், நான் அதைப் பரிசுத்த சந்தோஷத்தோடு கையாடவும் கிருபைசெய்யும். ஞானத்தாய்த் தகப்பன்மாரின் பரிசுத்த கடமைகள், வீடுகளில் நடந்தேறிவர வேண்டிய கிறிஸ்தவ பிள்ளைவளர்ப்பு, உமது சபையைச் சேர்ந்த பள்ளிக்கூடங்கள், அவைகளின் உபாத்திமார் எடுக்கும் பிரயாசையாகிய இவையெல்லாம் ஞானஸ்நானம் பெற்ற உமது பிள்ளைகளுக்குப் பிரயோசனமாக முடிய நானும் என் சபையாரும் கவலைப்படும்படிக்கான தகுந்த மனதைத் தாரும். அருமைக் கர்த்தாவே, உமது பரிசுத்த இராப் போசனத்துக்கு ஆயத்தம் செய்துகொள்ளப் பிள்ளைகள் என்னண்டை வரும்போது ஒரே எண்ணத்தோடு என்னால் செய்யக் கூடியதையெல்லாம் அவர்களுக்குச் செய்ய உதவிபுரியும். நான் ஒரு தகப்பனுடைய வேலையைச் செய்யும்படிக்கு எனக்கு தகப்பனின் சிந்தையைத் தாரும். என் ஊழியத்தினால் இளைஞரின் இருதயங்கள் பற்றியெரிந்திருக்கும்படிககும் அவர்கள் என்றைக்கும் உம் மண்டை நிலைத்திருக்கத் தக்கதாக ஞானஸ்நான உடன்படிக்கையில் திடப்படுத்தப்பட்டு உமது இராப்போசன பீடத்தண்டை சபையின் ஐக்கியத்தில் சேரும்படிக்கும் உமது ஆவியின் பலம் என்மேலும், உமது வார்த்தையின் அனல் என் உதடுகள் மேலும் இருப்பதாக. கர்த்தாவே, இக்காலத்தில் உமது ஜனத்துக்கு வாலிபருடைய பலமும் உற்சாகமும் எவ்வளவாய்த் தேவை! வளருகிற இவர்கள் உலகத்தில் உமது கொடியைச் சுமந்துபோகத் தங்கள்

தகப்பன்மாரைப் பார்க்கிலும் பலசாலிகளாய் விளங்கத் துணை செய்யும். விடியற்காலத்தின் பனியைப்போல் உமது இளைஞர் பரிசுத்த அலங்காரத்தோடு உம்மண்டை வருவார்களாக. ஆமேன்.

---

சில குருமாருக்கு ஞானஸ்நானஞ் செய்விப்பது அவர்களுடைய மகா அருமையான வேலைகளிலொன்று; அவர்கள் அதை மற்றவர்களினிடம் விடப் பிரியப்பட மாட்டார்கள். ஏன் அப்படி எனறால்: கிறிஸ்தவ சபையிலே மற்றெல்லாக் காரியங்களும் தொடர்ச்சியானவைகள், ஞானஸ்நானமே துவக்கம்.

பீத்தர் ப்லாதெ (Peter Plade) என்பவனின் சந்திப்புப் புஸ்தகத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறது: "ஒரு குழந்தை ஞானஸ்நானம் பெறுகையில் நீங்கள் எல்லோரும் உங்கள் ஆசனங்களிலிருந்து எழுந்து, ஆண்களும் பெண்களும், கிழவரும் வாலிபருமாகிய அனைவரும் ஞானஸ்னனத் தொட்டியின் புறமாகப் பார்த்து, மகா உயர்ந்த சாக்கிரமெந்தாகிய ஞானஸ்நானத்தையும் அதைப் பெறும் சிறு குழந்தையையும் கனப்படுத்துவீர்களாக; எல்லாரும் கேட்கத் தக்கதாக குரு ஞானஸ்நானவார்த்தைகளை உரக்கச் சொல்வானாக. இயேசுவின் நாமம் சொல்லப்படுவதை நீங்கள் கேட்கையில் அவரவர் தங்கள் தங்கள் இடத்திலே முழங்கால்படியிட்டு ஆண்களும் பெண்களும், "வானத்திலும், பூமியிலும், பூமிக்குக் கீழும், நமது கர்த்தராகிய இயேசுவையன்றி இரட்சிப்பில்லை என்று அறிக்கையிடுவீர்களாக."

ஒரு குரு தாமே ஞானத்தாய்த்தகப்பன்மாருடைய பாத்தியதை கடமைகளைப் பற்றிய உயர்ந்த எண்ணமுடையவனும், அதைச் சபையாருக்குமுன் சரியாய் எடுத்துக் காட்டக் கூடியவனுமாயிருப்பது நன்மையும் விரும்பப்படத்தக்கதுமான காரியம். ஏனெனில் ஞானப் பெற்றோரின் ஏற்பாடு ஞானஸ்நானமென்னும் சாக்கிரமெந்துக்கும், குழந்தைகளின் ஞானஜீவிய வளர்த்திக்கும் ஒரு பாதுகாப்பு. அதினால் ஆட்டுக்குட்டிகளின் மேய்ப்ப வேலையில் ஒரு பகுதியை சபையானது தன் முதிர்ந்த அவயவங்களைக்கொண்டு நடத்துகிறது. இதினால் முதியோரும் இளைஞரும் பலபேர் சபையின் பரஸ்பர ஊழியத்தில் இணைக்கப்படுகிறார்கள். ஒரு சரீரத்தின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிற விதமாக அநேக சாதனங்கள் சபையில் இல்லாததால், அதில் இருக்கிற சாதனங்களில் ஒன்றையும் அனாவசியமென்று மெதுவாய் விட்டுவிடுவது சரியல்ல.

எல்லாப பிள்ளைகளும் படிக்க வேண்டிய சபைப்பள்ளிக்கூடங்களில் கிறிஸ்தவ உபாத்திமார் வேதபாட போதனையைச் சரிவர

நடத்தும்போது நமது இளைஞர் பிறகு திடப்படுத்தப்படுவதற்கும் சபையின் சரியான அவயவங்களாவதற்கும் இப்பள்ளிக்கூடங்களும் விசேஷித்த உதவி செய்யும் சாதனங்களாகும். குடும்பத்தலைவரையன்றி கிறிஸ்துவின் ஆவியும் ஊக்கமும் நிறைந்த உபாத்திமாரைவிட குருமாருக்குச் சிறந்த உதவிக்காரர்கள் கிடைப்பது அரிது. இவ்வுபாத்திமார் குருவோடு குருவின் வீட்டில் ஒன்ருய்க் கூடிவந்து தங்கள் எழுப்புதலுக்கென்று பக்தி விஷயங்களையும் போதக ஆதார விஷயங்களையும் கலந்து பேசுவது உத்தமம்.

சில குருமார் பள்ளிக்கூடத்து வேதபாடம் வெறும் அறிவைப் புகட்டும் பாடமென்று எண்ணி, தங்கள் திடப்படுத்தல் உபதேசமே தான் பிள்ளைகளை உயிர்ப்பிக்கும் பாடமென்று வற்புறுத்தினது புத்தியில்லாததும் பெருமையும் அழிம்புமான காரியமாம். அறிவை மாத்திரம் புகட்டின பள்ளிக்கூடத்தில் படித்திருந்து திடப்படுத்தல் வகுப்பிற்கு வந்தவர்கள் மனதில் ஞான உயிர்ப்பு உண்டாக்குவது அதிக கஷ்டம். அவர்களில் சிலர் அதிகம் கவனிக்கிறவர்களாகவும் கவரப்பட்டவர்களாகவும் விளங்கிஞலும், பெற்ற போதனை அவர்கள் மனதில் ஆழ்ந்து வேலை செய்யாதபடி கண்ணுக்குத் தெரியாத ஒரு சுவர் தடையாயிருக்கிறதுபோல் தோன்றும். இயேசுவானவர் தாம் கற்பித்ததெல்லாவற்றையும் அவர்களுக்குப் போதியுங்கள் என்று மாத்திரம் சொல்லாமல், நான் கற்பித்ததெல்லாவற்றையும் கைக்கொள்ள அவர்களைப் போதியுங்களென்று சொன்ன அவருடைய வார்த்தைகளை நாம் பள்ளிக்கூடங்களிலும் கோயில்களிலும் பின்பற்றுவது அவசியம். பயபக்தியுண்டாக்காத வேதோபதேசம் பிரயோசனமற்றதும், அதஞலே அநாவசியமுமாயிருக்கிறது. அறிவோடு பக்திவிர்த்தி யுண்டுபண்ணும் போதனையோ அத்தியாவசிமானதென்று எளிதில் அறிந்துகொள்ளலாம்.

திடப்படுத்தல்வகுப்புப் போதனையின் தன்மையைப்பற்றி ஹார்ம்ஸ் (Harms) என்கிற குரு நியாயமாய்ச் சொல்லுகிறதாவது: "நாம் போதிக்கையில் போதிப்பதைவிட செய்ய வேண்டியதென்னவென்ருல், ஊன்றக்கட்டவும் சுத்திகரிக்கவும் பிரதிஷ்டை பண்ணவும் ராஜரீக ஆசாரியராக்கவும், சிரசுக்கும் இருதயத்துக்கும் ஒரு சம்பந்தத்தை உண்டாக்கவும், பரிசுத்த ஆவியிஞலும் அக்கினியிஞலும் ஸ்நானம் பண்ணுவிக்கவும், ஞான அபிஷேகத்தின்மேலும் முத்தரிக்கப்படுவதின்மேலும் ஒரு ஆசையை எழுப்பவும் வேண்டும். பலவிதமான இந்தச் சங்கதிகளெல்லாம் ஒரே சங்கதிதான்; அதாவது பழைய மனுஷன் செத்துப்போகப் புதிய மனுஷன் உயிரோடெழுந்திருக்குதலே.

பள்ளிக்கூடத்திலே வேதபாட சம்பந்தமாய்ப் படித்த எல்லாவற்றையும், மறுபடியும் அவர்கள் திடப்படுத்தலுக்கென்று ஆயத்தப்படுகையில் திரும்பப் படிப்பது அவசியமோ என்பது சந்தேகம். இக்குறுகிய காலத்தில் அநேக விஷயங்களைப் படிக்கவைத்தால் இப்போதனையின் முக்கிய நோக்கம் இழந்துபோகப்படக் கூடும், படித்த பாடங்கள் உறுதியாய் மனதில் பதியவும் மாட்டாது. இங்கே படிப்பிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயங்களாவன: 1) ஞானஸ்நானமும் இராப்போசனமுமாகிய சாக்கிரமெந்துக்கள். பிள்ளைகளின் ஜீவியம் இவ்விரு காரியங்களுக்கும் ஊடே உள்ளது. 2) இப்போது இளைஞர் உட்பிரவேசிக்கிற கிறிஸ்தவ சன்மார்க்க ஜீவியத்தில் ஜெபம் தேவபக்தியின் அப்பியாசத்தை அனுசரிக்க ஏவும் போதனை. 3) இதில் மாத்திரமல்ல, சபையின் ஐக்கியத்திலும் அவர்கள் உட்பிரவேசிக்கிறபடியால், சபை ஜீவியத்தையும் அதற்கடுத்த பல செய்கைகளையும் விசேஷமாய் எல்லாவற்றின் நடுநாயகமாகிய தேவாராதனையையும் பற்றிய காரியங்கள். 4) கடைசியாக, திடப்படுத்தலின் ஆயத்த போதனையின் முக்கிய நோக்கமாகிய இராப்போசனத்தைப் பற்றிக் கற்பித்தபின் பாவசங்கீர்த்தனத்தைப் பற்றிய போதனை. இதற்கு உதவியாக ஒவ்வொருவரோடும் தனிமையாகச் செய்யும் சம்பாஷணை முக்கியமானது. அது மென்மேலும் வழங்கிவரும்.

நாம் பார்க்கிறபடி வாலிபரில் பெரும்பாலர் தங்கள் திடப்படுத்தலுக்குச் சிறிது காலத்துக்குப்பின் சபைஜீவியத்திலும் தேவாராதனையிலும் பங்குபெறுமல் நிர்விசாரிகளாவதுண்டு. அவர்கள் பிந்தி எப்பொழுதாகிலும் திரும்பிவந்தாலும், அதுவரையில் நாம் அவர்கள் நிமித்தம் மாத்திரம் ஆழ்ந்து துக்கிப்பதுந் தவிர, இதினுல் சபைக்கும் நஷ்டமேற்படுகிறதென்று பார்க்கிறேம்; சபை வயோதிபர்சபையாகும். அவர்கள் அநேக காரியங்களை அதிக மெதுவாகவும் தாமதமாகவும் செய்வார்கள். போராடி ஜெபிப்பதற்கு வாலிபருக்குரிய கிருபையின் வரங்கள் இல்லாமல்போகின்றன. காரியங்களைத் துவக்கும் துணிபு, பலம், தைரியம் முதலிய இலட்சணங்கள் அச்சபையில் குறைவுபடும். காரியங்களைக் கொடுப்பதற்கான வல்லமை பலவிதத்தில் தலைகாட்டி முன்னேறும் இக்காலத்தில், வாலிபர்களுடைய உதவி சபைகளுக்கு இருப்பது நல்லது. வயது முதிர்ந்தவர்களையும் வாலிபரையும் வெவ்வேருய்ப் பிரிக்கிற தற்காலப் போங்குக்குரிய பிரிவினை, காலமாறுதல் என்பவை மாத்திரம் இதற்குக் காரணமாகாது. வாலிபரை மோசமான வயதில் பாதுகாக்கும்படி ஒரு பலமான ஐக்கியஜீவியம் தேவை; அதுவோ அவர்களுக்குக் கிடைப்பது வெகு சொற்பம். சபையிலே ஐக்கிய உணர்ச்சியும், ஒத்துழைப்பும் குறைவாயும் தடைப்பட்டதாயுமியிருக்கிறது. சபையாரைச் செயலற்றிருக்கச் செய்வதும்

தற்கால வழக்கப்படி எழுப்புதலற்ற சிந்தனைசக்திக்குரிய பிரசங்கமுமுள்ள தேவாராதனை வாலிபரைக் கவர்ந்துகொள்ளாது. சபையின் நிலைமை உறுதிப்பட்டாலொழிய, பல விதமாய்ப் புகழ்ந்துகொள்ள வேண்டிய ஏற்பாடுகளாகிய திடப்படுத்தப்பட்டவர்கள் சங்கம், வாலிபர் சங்கம் முதலியவைகள் அதிகமான பலனை விளைவிக்க முடியாது.

---

**42.** *உங்களில் எந்த மனுஷனாகிலும் நூறு ஆடுடையவனாயிருந்து, அவைகளில் ஒன்றை இழந்தால், தொண்ணூற்றொன்பதையும் வனாந்தரத்தில் விட்டு, இழந்ததைக் கண்டுபிடிக்கும் மட்டும் அதைத் தேடிப்போகானோ.* லூக். 15, 4.

*நீங்கள் உலகம் எங்கும் போய்ச் சிருஷ்டியாயிருக்கிற யாவருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.* மாற். 16, 15.

நல்ல மேய்ப்பராகிய இயேசுவே, நீர் இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்தீரே. எனக்கும் இந்தச் சபையிலுள்ள அனைவருக்கும் உம்முடைய சிந்தையை அளித்து, வனாந்தரத்தில் காணாமல் போன ஆட்டைப்போல் எங்களுக்குள் காணாமற்போன எவனையும் நாங்கள் வெளியேபோய்த் தேடவும், அவர்களைக் கண்டுபிடித்து அவர்களைச் சபைக்குள் கொண்டுவந்து சேர்க்குமளவும் நாங்கள் களைத்துப் போகாதிருக்கவும் துணைசெய்தருளும். உமது உற்சாகமான அன்பினால் எங்கள் உள்ளத்தை விரிவாக்கியருளும். நாங்கள் விரிவாய்ப் பார்த்துச் சிதறடித்தலின் இக்காலத்தில் உம்மை விட்டுவிட்டு அவிசுவாசத்திலும் பலவீனத்திலும் பாவங்களிலும் இவ்வுலகத்தின் எல்லா அவஸ்தையிலும் கெட்டுப்போய்க் கிடக்கிற பேர்க்கிறிஸ்தவர்களைத் தேடுகிறவர்களோடு எங்கள் பலத்தையும் கூடச்சேர்த்து உழைக்கத் துணைபுரியும். உமது அன்பினால் எங்கள் உள்ளத்தை இன்னம் விரிவாக்கி, புறமதஸ்தரான எங்கள் சகோதரருக்கு நற்செய்தியை அனுப்பவும், அந்தகாரத்திலும் மரணநிழலிலுமிருப்பவர்களுக்குச் சுவிசேஷத்தின் பாக்கியமான வெளிச்சத்தைக் கொண்டுவரவும், அவர்களை ஒரே மந்தைக்கும் ஒரே மேய்ப்பரண்டைக்கும் அழைக்கவும் கெட்டுப்போனவர்களைத் தேடும் அன்பு எங்களிடம் குளிர்ந்துபோகாதிருக்கவும் எங்களுக்கு ஒத்தாசை செய்யும். பரஸ்பர அன்பினால் உம்முடையவர்களை ஐக்கியப்படுத்திச் சபையையும் கோயிலையும் எங்களை உறுதியாய்க் கட்டும் ஒரு கட்டாக்கியருளும். இந்தப் பாதுகாப்பான இடத்திலிருந்து நாங்கள் கெட்டுப்போனவர்களைத் தேட வெளியேபோய் அவர்களும் அதற்கு வர அவர்களைத் திருப்பி அதில் நாங்கள் அவர்களோடு சந்தோஷப்பட ஒத்தாசைபண்ணியருளும். ஆமேன்.

நீ கிறிஸ்தவ திருச்சபையையும் உன் உடன்கிறிஸ்தவர்களை யும் நேசித்து அவர்களுக்காக உழைக்கவும் உதவி செய்யவும் ஆயத்த மாயிருக்கிறேன் என்று நினைக்கிறாய். வனாந்தரத்திலே காணாமல் போயிருக்கும் ஆட்டைத் தேட உன் அன்பு விசாலமானாலன்றி உனக் குக் கிறிஸ்துவின் அன்பில்லை. ஏனென்றால் அவர் காணாமல்போன தைத் தேடவும் இரட்சிக்கவும் வந்தார். ஆதலால்தான் சீமை தேசத்திலே உள்மிசியோன்வேலை யென்றழைக்கப்படும் வேலை விசேஷித்த பிரகாரம் கிறிஸ்துவினுடைய சபைக்கும் அதன் குரு மாருக்கும் முக்கிய கடமை.

இந்த உள்மிசியோன் வேலை அதன் ஆரம்பகாலத்திலிருந்து இதுவரையிலும் மிச்சமாய்ச் சபையின் மூலமாய் அல்ல சுயாதீன சங் கங்களின் மூலமாய் நடந்துவந்திருக்கிறதற்குக் காரணம் என்ன வென்றால், திருச்சபையின் முழு அமைப்பும் தனிச்சபைகளின் அமைப்பும் கூட இவ்வேலையைச் செய்யக் கூடாத பலவீனமான நிலை மை தான். கெட்டுப்போனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும், வியாதிக்காரருக்காகக் கவலைப்படவும் வேண்டும் என்கிற கிறிஸ்து வின் அன்புள்ள சித்தம் நிறைவேற வேண்டுமானால் சாத்தியமான வழிகளில் எது சிறந்ததோ அவ்வழியில் இவ்வேலை நடக்கவேண் டும். அது சபையினாலே நடத்தப்படக் கூடுமானால் மிகவும் நல்லது. இப்படி முடியாதேபோனாலோ இந்த அவசியமான வேலை சங்கங்க ளைக்கொண்டு நடப்பது நல்லதுதான்; அல்லது காணாமல்போன ஆடு களைச் சபையினால், அதாவது உத்தமமான ஒழுங்கின்படி தேடிக் கண்டுபிடிக்க முடியாதிருந்தால் அவைகளைத் தேடாதிருப்பது நன்றோ?

உற்சாக அன்புள்ள மெய்க் கிறிஸ்தவ சபைகள் எங்கே மறுபடி யும் உண்டாகின்றனவோ அங்கே சபையார் இவ்வேலையை எடுத்துக் கொள்ள ஆரம்பிக்கிறார்கள். காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக் கும் மட்டாகத் தேடும் இவ்வேலையை ஒரு சங்கத்துக்கே ஒப்புவித்து விட்டிருக்க அவர்களுக்கு மனம் வராது. தவறிப்போன ஒரு சகோ தரனைச் சகோதரர் தேடிக்கொண்டுபோவது நல்ல காரியம்; அது ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்படும். ஒரு தாய் தன் பிள்ளைகளோடு சேர்ந்து இவ்வேலையைச் செய்யக் கூடுமானால் அது இன்னம் அதிக நல்லது. அதிலிருந்து சிறந்த உதவியும் மிகுந்த ஆசீர்வாதமும் பிறக்கும். சபையாகிய தாய் தன் பிள்ளைகளினுடைய இந்த நல்ல வேலையைப் பலவீனத்தாலும், சந்தேகத்தாலும் சரியென்று ஒப்புக் கொள்ள மனமில்லாமற்போவது பரிதாபமான காட்சி தான். அப் படியே இந்த நல்ல வேலையில் பிள்ளைகள் தாய்க்கு (சபைக்கு) பங் களிக்க மனமற்றிருப்பதும் சரியல்ல, தாய் அதிக வயது சென்றவளும்

வியாதிக்காரியுமாய் இருக்கிறுள் என்று சொல்லுவார்கள். காரியம் அப்படியில்லை. ஆண்டவருடைய கிருபையினல் அந்தத் தாய் மறு படியும் புதிய உற்சாகத்தையும் வாலிபதசையையும் அடைகிறுள். காணுமற்போனதை எப்போதும் தேடிக்கொண்டிருக்கிற இருவர் இருக்கிறுர்கள். அவர்கள் யாரென்றுல்: மேய்ப்பனும், ஸ்திரீயும் தான் (லூக், 15, 4. 8).

காணுமல்போனவர்களைத் தேடும் வேலை நம்முடைய நாட்க ளில் எவ்வளவு அவசியமாயிருக்கிறது. நமது சபைகளைப் பார்த்தால், அநேகர் இழக்கப்பட்டும் வனந்தரத்தில் கெட்டுப்போயுமிருக்கிறுர் கள். இதைப்பற்றிய பலத்த உத்தரவாதம் நமதுமேல் வைக்கப்பட் டிருக்கிறது. இவ்வேலையினல் எவ்வளவோ சந்தோஷம் நமக்குண் டாகிறது (லுக். 15, 6. 9). இச்சந்தோஷம் நமக்கு அதிகமாய்த் தேவை. இது ஜீவியத்தின் அலங்காரம்; இது பெரியகாரியங்களைச் செய்ய நம்மை ஏவி நமக்கு அதற்கான பலமளிக்கிறது.

ஒரு தனித்த கிறிஸ்தவன் தன் சொந்த எழுப்புதலுக்காக எப் போதும் பிரயாசப்பட்டு அதிலேயே கவலை செலுத்திக்கொண்டிருப் பது நல்லதல்ல. இவ்விதமாய் அடிக்கடி ஜீவியம் கெட்டுப்போய்ப் பலவீனமடைகிறதென்று காணலாம். இயற்கைபிரமாணத்தின் படி பார்த்தாலும், தேவாவியின் பிரமாணத்தின்படி பார்த்தாலும், மற்றவர்களுக்கென்று பிழைக்கிற தனித்த ஆத்மாக்களின் ஜீவியமே எழுப்புதலடைகிறது. ஒரு சபை எப்போதும் தன் சொந்த குறுகிய எல்லைக்குள்ளேயே பிழைத்துப் பொதுவான பரிசுத்த சபையின் ஒரு பகுதியாகிய தனக்குரிய கடமையை உணரும் உணர்ச்சியற்றிருந்தால் அதன் எழுப்புதலுக்கும் வளர்ச்சிக்கும் குறைவு ஏற்படுகிறது. தங்கள் சொந்த நன்மைக்காகக் கவலைப் படுகிறதினலேயே அச்சபை பலவீனமடையும். நம்முடைய கிறிஸ் தவ நிலை வளர்ச்சியற்றதும் பலவீனமானதுமென்று நாமெல்லோ ரும் அறிவோம். ஆயினும் ஏதோ ஒரு நல்ல நேரத்திலே மிசி யோன்வேலைக்கான அன்பு நமது சபையிலே வேர்விட்டு, ஐக் கியமற்றுப் பிரிந்து கிடந்த அநேக இருதயங்களைப் பொதுவான ஊழியத்திற்கென்றும், தேவராச்சியத்தின் பெரிய நோக்கத்திற் கென்றும் ஒன்ருக்கியிராவிட்டால் திருச்சபையின் நிலைமை என்ன மாயிருந்திருக்கும். மிசியோன்வேலைக்கு அவசியமான பெரிய பண த்தொகையையும், சுய வெறுப்போடு தங்களைப் பலிபோல் ஒப்புக் கொடுக்கும் ஆட்களையும் பற்றி சில வேளை சிலர் புலம்பக் கேட்டிருக் கிறேம். ஆயினும் நாம் நமது குறுகிய எல்லையிலிருந்து வெளியேறி வந்து, அதினல் ஒருவருக்கொருவர் நெருங்கிவர ஏவுதலடைந்து, சுய நாட்டிலும் மற்றவர்களுக்காக உழைக்க இப்படிப்பட்ட ஐக்கியத்தி

ஞல் எழுப்பிவிடப்பட்டு இருப்பதிஞல் நாம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் மிகுதி. இப்படியாக செலவுக்கும் வரவுக்குமுள்ள வித்தியாசத்தைப் பார்த்தால் மீதிவரவு எவ்வளவு அதிகம். கர்த்தருக்கும் மனுஷருக்கும் எல்லா நேரான வழிகளிலும் ஊழியம் செய்து, அவ்வூழியத்திஞல் முழு பூமியையும் நிரப்பப்போகிற தெய்வாலயக் கட்டடத்தை பூர்த்தியாக்க நம்முடைய சிறிய புதுக் கற்களைக் கொண்டுவந்து இவ்வாறு கர்த்தருடைய வருகையையும் எல்லாக் காரியங்களின் புதிதாக்குதலையும் துரிதப்படுத்துவதால் நமக்கு வரும் சந்தோஷத்தையும் கனத்தையும் பார்த்தாலோ நமது மீதிவரவு இன்னும் அதிகமாய்ப்போகும்.

---

**43.** உங்களுக்காக ஸ்தோத்திரம் பண்ண ஓயாதிருந்து, உங்களை என் ஜெபங்களில் நினைத்துக்கொண்டிருக்கிறேன். எபே. 1, 16.

ஆஞல் இவர்களுக்காக மாத்திரம் நான் வேண்டிக்கொள்ளாமல் இவர்கள் வார்த்தையிஞல் என்பேரில் விசுவாசிக்கப் போகிறவர்களுக்காகவும், அவர்கள் எல்லாரும் ஒன்ருயிருக்கவும், பிதாவே, நீர் என்னிலும் நான் உம்மிலும் இருக்கிறதுபோல் அவர்களும் நம்மிலே ஒன்ருயிருக்கவும், நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். யோவான் 17, 20. 21.

---

கர்த்தாவாகிய கடவுளே, நீர் என்னை உழைக்கும்படி வைத்த உமது சபைக்குக் கிடைத்திருக்கும் உம்முடைய எல்லாக் கிருபையின் சாதனங்களுக்காகவும் உம்மைத் துதிக்க எனக்குத் துணைசெய்தருளும். நான் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மைத் துதிக்க எனக்குப் போர்ந்த முகாந்தரமுண்டு. ஆயினும் என் குருட்டுத்தனத்திஞலும் கோழைத்தனத்திஞலும் நான் சரிவர நன்கு துதிக்கிறதில்லை. அதிஞல் நீர் எனக்கும் என்சபைக்கும் அதிகம் கொடுப்பதற்கு இடையூருயிருப்பவன் நானே. நான் என் சபைக்காக ஜெபிக்கவும், அதை எப்போதும் என் இருதயத்திலே சுமக்கவும், அதை உமது சமுகத்துக்கு முன் கொண்டுவரவும் எனக்குத் துணைசெய்யும். நான் இங்கே ஜெபிப்பதற்கான அநேக காரியங்களுண்டு. நாங்கள் குறைவுகளும்பிழைகளும்பாவங்களும் நிறைந்தவர்களாயிருக்கிருேம். ஜெபத்தைக் கேட்டு எங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் இயேசுவின் நாமத்தில் தருகிறவர் தேவரீரே. நீரே என்னை ஒரு ஜெபிக்கிற குருவாக்கி, நான் என்னுடைய பல அலுவல்களால் ஒன்றுக்கும் உதவாத பலனற்ற ஊழியஞய்ப் போகாதபடி தற்காரும். நான் ஜீவ ஊற்றண்டை தரிக்கவும் அதிலிருந்து எனக்காகவும் என் சபைக்காகவும் மொள்ளவும் உதவிசெய்யும். நான் என் சபைக்கு ஆசீர்வாதமாயிருக்கவும், அவர்களுக்கு ஊழியம் செய்யவும், போராட்

டங்களில் ஜெயிக்க அவர்களுக்கு உதவிசெய்யவும், அவர்களை வழி நடத்தவும் அவர்களுக்குப் பிரியமானவனாய் விளங்கவும் கூடும்படி என்னை ஒரு ஜெபிக்கிற குருவாக்கும். நான் அவர்களெல்லாருக்காகவும் ஜெபம்செய்ய எனக்குப் போதிவியும். எங்கள் பிரதான ஆசாரியராகிய உமது குமாரனுடைய வார்த்தைகளின்படி அவர்கள் உம்மிலும் அவரிலும் ஒன்றாயிருக்கவும், நீர் அவர்களிலும், அவர்கள் உம்மிலும் ஒன்றாயிருக்கவும், இவ்வாறு அவர்கள் எல்லாரும் இவ்வுலகத்திலிருந்து உம்மண்டை ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டு ஒரே கிறிஸ்தவ சபையாயிருக்கவும், உமக்கே சாட்சியும் மகிமையுமாகிய ஒரு கிறிஸ்தவ சபையாயிருக்கவும் கிருபைசெய்யும். உலகம் முழுவதும் இருக்கிற உமது திருச்சபைக்காகவும் என் கண்களை ஏறெடுத்து வேண்டிக்கொள்ளுகிறேன். உமது ஆவியானவரின் உள்ளேவுதலால் அவர்கள் உம்மில் ஒன்றாயிருக்கத் துணைசெய்யும். உமக்கு முன்பாகவும் உமது மகிமைக்கென்றும் அவர்களின் ஒருமை உலகத்துக்கு வெளிப்படவும், அதினால் உலகம் உம்மையும் நீர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கவும் இடம்பண்ணியருளும். ஆமேன்.

---

பவுல் அப்போஸ்தலன் 2 கொரிந்தியர், கலாத்தியர் நிருபங்கள் நீங்கலாக தன்னுடைய மற்ற நிருபங்களையெல்லாம் பராபரனை அவர்களுக்காக ஸ்தோத்திரிக்கிற ஸ்தோத்திரத்தோடு துவக்குகிறான். இந்த ஸ்தோத்திரத்தோடு ஜெபத்தையும் வேண்டுதலையும் இணைக்கிறான். அவன் தன் கண்ணால் புது விதைகள் முளைப்பதைக் கண்டு அதற்காக அவன் ஆண்டவரை ஸ்தோத்திரிப்பது எவ்வளவு இலேசாயிருந்திருக்குமென்றும், நமக்கோ, நமது கண்கள்முன் களைகள் செழிப்பாய் முளைப்பதைப் பார்க்கையில் ஸ்தோத்திரிப்பது எவ்வளவு கஷ்டமென்றும் நாம் தாராளமாய்ச் சொல்லக் கூடும். ஆயினும் நாம் அறிந்துகொள்வதைவிட அநேக காரியங்களுக்காக நாம் இப்போதும் ஸ்தோத்திரம் செலுத்தப் போர்ந்த முகாந்தரமுண்டு. நாம் இங்குமங்கும் எப்போதும் தெளிவாய்ப் பார்க்கிறபடி, தேவ வசனமும் அவருடைய சாக்கிரமெந்துகளும் நமது நடுவில் வீணாய்ப்போகாமல் சபையில் பலன்செய்து அவருடைய கிரியையைப் பூர்த்தியாக்கிவருகிறது. நாம் நன்றிசெலுத்தும் நிலைமைக்கு வரப் பிரயாசப்படவேண்டும். ஏனெனில் நாம் நன்றிகெட்டவர்களாகக் கூடாது; மேலும் அதினால் நாமும் நமது சபைகளும் அநேக நன்மைகளை இழந்துபோயிருப்போம். நன்றிசெலுத்துகிறவனுக்கு ஆண்டவர் அதிகம் கொடுக்கக்கூடும். நன்றியறிந்திருக்கிற ஒருவன் தாழ்மையும் சந்தோஷமுமுள்ளவனும் ஒரு குருவின் வேலையைச் செய்யச் சமர்த்தனுமாகிறான். நன்றியுள்ள ஸ்தோத்திரஜெபம் செய்ய மனம் வரா

தவனுக்கு அதற்குப்பதிலாக விண்ணப்பஜெபத்திற்கதிகமான நேரம் ஏற்படும். ஆவிக்குரிய காரியங்களில் உன் சபை எவ்வளவோ குறை வுள்ளதாகவும் உயிரற்றதாகவும் தோன்றுகிறது. அதில் சண்டைச் சச்சரவுகளும், கட்சிப்பிரிவினைகளும் இருக்கின்றன. அதில் கிறிஸ் துமார்க்கம் அதிக குறைவுள்ளதாகத் தோன்றுகிறது. ஆயினும் நீ தளர்ந்துபோகாமல், ஆண்டவருடைய அதிசயகிரியையைப் பார்க் கத் தக்கதாக நீ இக்காரியங்களையெல்லாம் ஜெபத்திலே அவரண்டை கொண்டுபோகவும், அவரிடம் உனக்கு வேண்டியவைகளைக் கேட்க வுங்கூடிய இன்பமான சிலாக்கியம் உனக்கு எப்போதும் இருக்கிறது. உன் வேலையினால் சபையிலே வெகு சொற்ப பலனுண்டாகிறதாகத் தோன்றும்போது, இதன் காரணம் குருவின் ஜெபக்குறைவுதான் சமயாசமயங்களில் அதற்குக் காரணமல்லவா? போஸ் (Boos) என்ற குரு, ஆண்டவர் தனக்குக் கொடுத்த ஜீவனுள்ள விசுவாசத்தையும், இப்பரிசுத்த வேலைக்குரிய சகல ஈவுகளையும் பலன்களையும் ஜெபத் தின் மூலமாய்ப் பெற்றுக்கொண்டேனென்று சொல்லுகிறான். எர் கன் மோ (Jörgen Moe) என்ற போதகன் ஏற்கனவே தன் வெஸ்ட் ரியின் ஒரு மூலையில் முழங்காற்படியிட்டு ஜெபம் செய்யாமல், ஒரு போதும் பிரசங்கத் தொட்டியின்மேல் ஏறினதில்லையாம். அவன் ஜெபத்தில் ஆண்டவரோடு பேசுகையில் அவர் முகம் எப்படிப் பிர காசித்தது என்பதையும், அவருடைய வார்த்தைகளில் ஜெபத்தின் வல்லமை விளங்கினதென்பதையும் நாங்கள் கவனித்திருக்கிறோம்.

வரம் மிகுந்த குருவாயிருப்பது நல்லது தான்; ஆயினும் எல்லா ரும் அப்படிப்பட்டவர்களாயிருக்க முடியாது. இதைப் பார்க்கிலும் ஒரு ஜெபிக்கிற குருவாயிருப்பது சபைக்கு அதிகப் பிரயோஜனமாயி ருக்கும். இது யாவருக்கும் சாத்தியமான காரியம்.

நான் குருவாக ஜெபிக்க வேண்டிய காரியங்களில் சிறந்ததும் கடைசியானதும் முக்கியமானதும் என்னவென்று கேட்டால், என் விசாரணைவட்டத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு மெய்யான சபை கூட்டிச் சேர்க்கப்பட வேண்டுமென்பதே அச்செபம். ஒரு குரு வேலை செய்யுமிடத்தில் விசுவாசவிஷயத்தில் கரிசனமுள்ள தனிக்கிறிஸ் தவர்களையோ, அல்லது அப்படிப்பட்டவர்களின் ஒரு சிறு கூட்டத் தையோ காணும்போது, அதற்காக எவ்வளவோ ஆண்டவருக்கு நன்றி செலுத்துவான். சில அல்லது பலதனி ஆத்மாக்களை இப்படிப் பட்டவர்களுடைய ஜீவியத்தில் மனுஷர் பார்க்கக் கூடியதுக்குமேல் அதிகமாய் ஆண்டவர் பார்க்கிறார் என்று அவன் நம்பக் கூடும். அதுவும் நன்றிசெலுத்துவதற்கானது. தன் வேலையினால் அறிவும் ஜீவனுமுள்ள கிறிஸ்தவ ஜீவியத்துக்குட்படுத்த, அல்லது ஒரு கிறிஸ் தவ கூட்டத்தைத் தெய்வாலயத்திற்குள் கொண்டுவந்து சேர்க்க ஒரு

குருவுக்குச் சிலாக்கியம் கிடைக்கும்போது, அவன் சந்தோஷத்திற் களவில்லை.

எல்லாவற்றிலும் பெரிய காரிய மென்னவெனில் ஆளோடல்ல கர்த்தருடைய வசனத்தோடும் சாக்கிரமெந்துகளோடும் நெருங்கிய சம்பந்தமுள்ளதாய் ஏகமான சந்தோஷத்தோடும் ஏகமான ஊழியத் தோடும் உலகத்துக்குமுன் ஏகமான சாட்சி கொடுக்கக்கூடிய சபை கள் உண்டாவதுதான். குரு அதைக் காட்டிலும் ஏதாயினும் பெரியதொன்றையும் நடப்பிக்கக் கூடுமோ! ஆயினும் அது இயல் பும் தெளிவுமான காரியம் என்று நியாயமாய்ச் சொல்லலாம். ஏனென் றால் கிறிஸ்துவின் ஆவி பிரவேசிக்க இடங்கொடுக்கிற யாவரையும் அவர் ஒன்றாக்குவது அவருக்கு இயல்பாய் உரியது. அதற்குத் தற்சி னேகத்தால் ஆளப்பட்ட நமது சுபாவத்தில் உண்டாகும் பலத்த தடைகளைப் பார்த்தாலும் அதினால் தனி ஆத்மாக்களுக்கு உண்டா கும் ஆசீர்வாதத்தைப் பார்த்தாலும் ஆத்மாக்களை ஒன்றாக்கும் வேலை எவ்வளவு பெரிதென்று அறியலாம். அதுதான் பெரிது என்பதற்கு இன்னுமொரு விசேஷித்த காரணமென்னவென்றால், ஆவியின் வேலையினால் உலகத்துக்குண்டாகும் நன்மைக்கு ஈடானதொன்று மில்லாததுதான்.

“அவர்களெல்லாரும் ஒன்றாயிருந்தால் நீர் என்னை அனுப்பின தை உலகம் விசுவாசிக்கும்” என்பதில் நமது ஆண்டவர் சொல்லி யிருக்கிற ஒற்றுமைதான் அவருடைய இலக்கும் ஜெபமுமாயிருக்கி றது; அவருடைய ஊழியரின் இலக்கும் ஜெபமும் அதுதான். அவர் களில் சிலர் அந்த ஒற்றுமையில் கொஞ்சத்தைப் பார்க்க சிலாக்கியம் பெறுவார்கள்; வேறு சிலர் பார்ப்பது அதிலும் கொஞ்சம், வேறுசில ரோ தங்கள் எண்ணத்தின்படி யாதொன்றும் பார்க்கிறதில்லை. பார்த் தாலும் பாராவிட்டாலும் அவர்கள் கர்த்தருக்குள் உழைக்கையில் அவர்களில் ஒருவரும் வீணாய் உழைக்கிறதில்லை. பின்வரும் வார்த்தை களால் அவர்கள் தங்களுக்குப் புத்திசொல்லிக்கொண்டு ஆறுதலடை வார்களாக.

கையைக் கலப்பையில் போட்டு,
நீ திரும்பிப்பார்க்காதே.
சோதோமின் இச்சையை விட்டு
நன்றாய் ஓடப்பார், முன்னே.
ஆழ உழுது விதைப்பாய்,
மண்ணிருந்தாலும் கெட்டியாய்,
நனைப்பாய் உன்கண்ணீரால்
பூரிப்பாய் நீ அறுப்பாய்.

184874
சென்னை-600 008

Printed at the Ev. Lutheran Mission Press, Tranquebar, 1932.

# அட்டவணை.


பக்கம்.

**I. தேவ ஊழியத்தை ஆண்டவர் ஏற்படுத்தியது.**

1. மத். 28, 18-20 — 1
2. எபே. 4, 11-14 — 3
3. அப். 20, 28 — 6
4. 1 கொரி. 4, 1-4 — 9
5. 2 கொரி. 5, 18-20 — 12
6. 1 கொரி. 12, 4-6 — 14

**II. தேவ ஊழியத்தின் மகிமையும் உத்தரவாதமும்.**

7. 2 கொரி. 3, 6-11 — 17
8. மல். 1. 2. 7-9 — 19
9. தானி. 12, 3 / 1 பேது. 5, 4 — 22
10. எசே. 3, 17-21 — 24
11. 1 கொரி. 3, 9 / 3 யோ. 4 — 28
12. 1 கொரி. 3, 11-17 — 31

**III. ஊழியனுடைய அழைப்பு.**

13. லூக். 5, 10 / யோ. 21, 15-17 — 34
14. 1 தீமோ. 4, 6 / 2 தீமோ. 3, 14-15 — 37
15. 1 தீமோ. 3, 14-15 / எபே. 1, 22-23 — 40
16. 1 தீமோ. 3, 1 — 44
17. 2 தீமோ. 2, 2 / தீத்து 1, 5 — 46
18. 1 தீமோ. 4, 14-15 — 48
19. 2 தீமோ. 1, 6-7 — 51

**IV. ஆசாரிய ஜீவியம்.**

20. 1 தீமோ. 3, 2-7 — 53
21. ,, 3, 2-4 — 56
22. ,, 3, 2-4 — 59
23. 2 தீமோ. 2, 22-25 — 62
24. 1 தீமோ. 4, 12 — 66
25. பிலி. 3, 12-16 — 68

பக்கம்.

**V. நற் போர்.**

26. 2 தீமோ. 2, 3-5 — 73
27. 1 கொரி. 9, 25 — 76
28. அப். 26, 24 / யோ. 10, 20 — 79
29. மத். 26, 40 ஆகி / லூக். 22, 31 ஆகி — 84
30. 2 மோ. 4, 13 / எசா. 53, 1 / மத். 11, 3 — 90
31. 1 தீமோ. 6, 12 / மத். 24, 13 — 93

**VI. கர்த்தரின் சபை-என் சபை.**

32. 1 பேது. 5, 1-3 / கலா. 4, 19 — 96
33. அப். 20, 28 / எபி. 13, 17 — 99
34. 1 கொரி. 9, 22 / மத். 18, 14 — 101
35. 1 தெச. 2, 7 ஆகி / எசேக். 34, 2 — 104
36. யோ. 2, 24-25 / 1 கொரி. 12, 10 — 106
37. பிலி. 1, 6 ஆகி / 1 கொரி. 13, 7 — 109

**VII. பணி.**

38. 1 கொரி. 1, 23 / அப். 2, 4 — 113
39. சங். 27, 4 / அப். 2, 42 — 117
40. 1 பேது. 5, 2 / அப். 20, 31 — 120
41. யோ. 21, 15 / 1 யோ. 2, 13 — 124
42. லூக். 15, 4 / மார். 16, 15 — 128
43. எபே. 1, 16 / யோ. 17, 20-21 — 131

184824
சென்னை-600 008

# இந்நூல் தியானங்களுக்கு ஆதாரமான வேதவாக்கியங்கள்.

(வேதாகமங்களின் வரிசைக் கிரமப்படி)


| | பக்கம். |
|---|---|
| 2 மோ. 4, 13 | 90 |
| சங். 27, 4 | 117 |
| ஏசா. 53, 1 | 90 |
| எசேக். 3, 17-21 | 24 |
| ,, 34, 2 | 104 |
| தானி. 12, 3 | 22 |
| மல். 2, 1. 2. 7-9 | 19 |
| மத். 11, 3 | 90 |
| ,, 18, 14 | 101 |
| ,, 24, 13 | 93 |
| ,, 26, 40 | 84 |
| ,, 28, 18-20 | 1 |
| மாற். 16, 15 | 128 |
| லூக். 5, 10 | 35 |
| ,, 15, 4 | 128 |
| ,, 22, 3-4 | 84 |
| யோ. 2, 24-25 | 106 |
| ,, 10, 20 | 79 |
| ,, 17, 20-21 | 131 |
| ,, 21, 15 | 124 |
| ,, 21, 15-17 | 34 |
| அப். 2, 4 | 113 |
| ,, 2, 42 | 117 |
| ,, 20, 28 | 6. 99 |
| ,, 20, 31 | 120 |
| ,, 26, 24 | 79 |
| 1 கொரி. 1, 23 | 113 |
| ,, 3, 9 | 28 |
| ,, 3, 11-17 | 31 |
| ,, 4, 1-4 | 9 |
| ,, 9, 22 | 101 |

| | பக்கம். |
|---|---|
| 1 கொரி. 9, 25 | 76 |
| ,, 12, 4-6 | 14 |
| ,, 12, 10 | 106 |
| ,, 13, 7 | 109 |
| 2 கொரி. 3, 6-11 | 17 |
| ,, 5, 18-20 | 12 |
| கலா. 4, 19 | 96 |
| எபே. 1, 16 | 131 |
| ,, 1, 22-23 | 40 |
| ,, 4, 11-14 | 3 |
| பிலி. 1, 6 ஜீஸ் | 109 |
| ,, 3, 12-16 | 68 |
| 1 தெச. 2, 7 ஜீஸ் | 104 |
| 1 தீமோ. 3, 1 | 44 |
| ,, 3, 2-4 | 56. 59 |
| ,, 3, 2-7 | 53 |
| ,, 3, 14-15 | 40 |
| ,, 4, 6 | 37 |
| ,, 4, 12 | 66 |
| ,, 4, 14-15 | 48 |
| ,, 6, 12 | 93 |
| 2 தீமோ. 1, 6-7 | 51 |
| ,, 2, 2 | 46 |
| ,, 2, 3-5 | 73 |
| ,, 2, 22-25 | 62 |
| ,, 3, 14-15 | 37 |
| தீத். 1, 5 | 46 |
| எபி. 13, 17 | 99 |
| 1 பேது. 5, 1-3 | 96 |
| ,, 5, 2 | 120 |
| ,, 5, 4 | 22 |
| 1 யோ. 2, 13 | 124 |
| 3 ,, 4. | 28 |